

உ

இராமாநந்தம் குருநாதா சரணம்
குருப்பிரம்மா குருவிஷ்னு குருதேவோ மகேஸ்வரா;
குருசாட்சாத் பரப்பிரம்மம் தஸ்மைம் குரவேநமஹ.




அவரவர் தமக்கும் உள்ள
ஆயுசும் தொழிலும் பொன்னும்
இவர்களின் வித்தை செல்வம்
எழில்மர ணங்கள் ஏழும்
தவமுடைய பிரம தேவன்
தனதுகைத் தொடங்கி முன்னஞ்
சிவனுடைய அருளி னாலே
கர்ப்பத்தில் நிச்ச யிப்பான்

(நீதிசாரம்)




ஓம் நம : சூர்யாய சோமாய
மங்களாய புதாய ச
குரு சுக்ர சனிப்யச்ச
இராஹவே கேதவே நம தத



# பாதசாரம் பலனளித்திடும் விகிதாச்சாரம் ஆதிபத்தியம் அறிவுறுத்திடும் ஆட்சி பலம்

ஆத்மாவாகிய உயிருக்கு சூரியன் அதிபதி. மனமாகிய உடலுக்கு சந்திரன் அதிபதி, சத்துவ குணத்திற்கும், உத்தியோகம், தொழிலுக்கும் செவ்வாய் அதிபதி. வித்தைக்கும், அறிவாற்றலுக்கும் புதன் அதிபதி, கௌரவம், புகழ், ஞானத்திற்கு குரு அதிபதி, வீரியத்திற்கும், களத்திரத்திற்கும் சுக்கிரன் அதிபதி, சேவை உழைப்பு, துக்கம் இவைகளுக்கு சனி அதிபதி, யோகத்துக்கு அதிபதி இராகு ஞானத்திற்கு அதிபதி கேது, இவைகள் நவக்கிரகங்களின் ஆதிபத்திய பலம் என அறிவுறுத்தப்படுகின்றன.

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், ஆகிய இராசிகள் இலக்கினமாக அமையும்பொழுது நவக்கிரக தேவதைகளில் இராகு கேது நீங்கலாக மற்ற ஏழு கிரகங்களுக்கு இலக்கினம் முதல் ஆதிபத்தியம் பலம் ஏற்படுகின்றன. இந்த ஆதிபத்திய பலத்தின் அடிப்படையில் தான் ஜாதகரின் எதிர்கால வாழ்க்கையில் சுபா சுப பலன்கள் அமைகின்றன. மேலும் எல்லா விதமான யோக பாவங்களுக்கும் அடிப்படை இந்த ஆதிபத்தியமே பிரதானமாகும் என்பது ஜோதிட விதி.

உதாரணமாக ஜெனன காலத்தில் மேஷத்தை இலக்கினமாகக் கொண்டு ஜெனனமானவர்களுக்கு சூரியன் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியாகவும், சந்திரன் சுகாதிபதியாகவும், செவ்வாய் இலக்கினாதிபதியாகவும் அஷ்டமாதிபதியாகவும், புதன் 3,6க்கு உடைய கிரகமாகவும், குரு பாக்கிய விரையாதிபதியாகவும், சுக்கிரன் தன சப்தமாதிபதியாகவும் சனி ஜீவன, இலாபதியாகவும் ஆதிபத்தியம் பலம் பெறுகின்றார்கள்.

இராகு, கேதுவுக்கு சொந்த விடுகள் இல்லாத காரணத்தால் இவர்கள் எந்த இராசியில் ஸ்தானம் பெறுகின்றார்களோ அந்த வீட்டின் அதிபதி கொடுக்கக் கூடிய நல்ல பலன்களையோ அல்லது கெட்ட பலன்களையோ கொடுக்கும் நிலையில் சஞ் சரிக்கின்றனர் என்பது ஜோதிட சித்தாந்தம். ஆதிபத்தியம் பலத்தின் அடிப்படையில் நவக்கிரக தேவதைகள் அங்கம் பெற்ற ஸ்தான பலத்தையும் அனுசரித்து தான் ஜாதகர்களுக்கு திசா புத்தி பலன்கள் அமைகின்றன. பாதசாரம் என்று சொல்லப்பட்டுள்ள எந்த நட்சத்திரத்தின் பாதத்தில் கிரகங்கள் நிற்கின்றனவோ அந்த நட்சத்திரத்தின் அதிபதியான கிரகத்தின் ஸ்தான பலத்தையொட்டியே பலன்கள் அமையும் என்ற விதியும், ஆதிபத்திய பலத்தை ஒட்டித் தான் பலன்கள் அமையும்.



மகர இலக்கின ஜாதகத்துக்கு சூரியன் அட்டமாதிபதியாகும். ஆனால் சூரியன், சந்திரன் ஆகிய இருவருக்கும் அட்டமாதிபத்தியம் இல்லை என்று ஜோதிட நூல்களில் சொல்லப்பட்ட போதிலும் இவர்கள் மாரகத்தைக் கொடுக்க மாட்டார்கள் என்பது தான் உண்மை. மற்றபடி சூரியன் எந்த ஸ்தானத்தில் எந்த நட்சத்திரத்தின் சாரத்தில் ஸ்தான பலம் பெற்று இருந்தபோதிலும்

குருவருள் ஜோதிடம்
ஜோதிடத் திறனாய்வு மாத இதழ்
அக்டோபர் 2015
ஸ்ரீ குரு: 7 அருள்: 5

ஆசிரியர் குழுமம்
ஆசிரியர், வெளியிடுபவர்
சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜு

கௌரவ ஆசிரியர்
"ஜோதிட கலைமாமணி"
டாக்டர் முருகடிமை துரைராஜ்

சிறப்பு ஆசிரியர்கள்
பண்டிட். காழியூர் நாராயணன்
டாக்டர் ஏ. சரவணன்

கௌரவ ஆலோசகர்
ஆத்தூர். மு. மாதேஸ்வரன்

★ ★ ★

துணை ஆசிரியர்கள்
ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
P.D. ஜெகதீஸ்வரன்
கும்பகோணம் எஸ். அன்பழகன்
கொடிக்கம்பம் எஸ்.பி. சோமசுந்தரம்
ஐய்யம்பாளையம் இரா. அருள்வேல்
சற்குருதாசன் கே. இராமமூர்த்தி

★ ★ ★ ★

ஒருங்கிணைப்பாளர்
திருவருள் பா. சுசீந்திரநாத்
தலைமை நிர்வாகி
எம்.எஸ். கிருஷ்ணா

ஜோதிடக் கட்டுரைகளின் கருத்துக்கள் அனைத்தும், கட்டுரையாளர்களின் கருத்துகளாகும். கட்டுரைகளைத் திருத்த, சுருக்க, தள்ளுபடி செய்ய ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

அனைத்துத் தொடர்புகளுக்கும்
அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்
நெ.18–67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
www.apsaraepublications.com
Ph. : 044-2811 6770
E-mail : apsarapublications@gmail.com

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு குருவருள் ஜோதிடம் நிர்வாகம் பொறுப்பல்ல.

Owned - Published by C. Raju at 18, (New No.67), P.V. Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai-600 014. a nd Printed by Mrs. R. Radha at Apsara Art Printers, 18, (New No.67), P.V.Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai-14. Editor : Sidhar Adimai Sri C. Raaju

அட்டையில்

**முப்பெரும் தேவியர்**

கஷ்ட நஷ்டம், பொருள் விரையம் ஸ்தான பேதம் முதலான இடமாற்றம், ஊர் மாற்றம் போன்ற வனவாச வாழ்க்கை ஏற்பட்டே தீருகின்றன என்பது தான் உண்மை.

தனுசு இலக்கினத்திற்கு பாக்கியாதிபதியான சூரியன் திசையில் ஒரு பிரபலமான இராஜயோக வாழ்க்கையும், சூரியன் திசை முடிந்து சந்திரன் திசை ஏற்பட்டதும், எதிர்பாராத பெரும்புயலாக கஷ்ட நஷ்டம், கோர்ட் வழக்கு, நிம்மதியற்ற வாழ்க்கை நிம்மதியற்ற மனநிலை முதலான சிரமங்கள் ஏற்பட்டு அதன் பிறகு படிப்படியாக நன்மைகளும் சுக சௌகரியங்களும், சுக ஜீவன வாழ்க்கையும் அமையும்.

கும்ப இலக்கினத்திற்கு புதன் அட்டமாதிபதி, இந்த புதன் திசை காலத்தில் சுய புத்தியில் பெரும் சோதனையும் ஏற்படத் தவறுவதில்லை. கும்ப இலக்கினம், விருச்சிக இலக்கினத்திற்கு புதன்அட்டமாதிபதியானாலும், அட்டமாதிபத்திய பலன்களை கொடுக்க மாட்டான் என்ற வாதமும், வீண் விதண்டா வாதமாக பொய்த்து விடுவதுடன் இந்த இரு இலக்கின ஜாதகர்களுக்கு புதன்திசை சுய புத்தி காலத்திலேயே அட்டமாதிபத்தியத்தின் கொடுமைகள் யாவும் நடப்பதால் ஜாதகன் இனிமேல் வாழ முடியுமா? என்ற நிலை ஏற்படுகின்றன. எந்த நட்சத்திரத்தின் சாரத்தில் இந்தக் கிரகம் நின்று இருந்தபோதிலும், ஆதிபத்தியத்தின் அடிப்படையில் தான் பலன்கள் அமைகின்றன. சூரியன் திசை காலத்தில் இராகு புத்தியும், சந்திரன் திசை காலத்தில் கேது புத்தியும், செவ்வாய் திசை காலத்தில் சனி புத்தியும், குரு திசை காலத்தில் சூரிய புத்தியும், சனி திசை காலத்தில் செவ்வாய் புத்தியும் புதன் திசை காலத்தில் செவ்வாய் புத்தி வரையிலும், கேது திசை காலத்தில் சூரிய புத்தியும் சுக்கிர திசை காலத்தில் சந்திரன் புத்தியும், சனி திசை காலத்தில் இராகு புத்தியும் பெரும்பாலான ஜாதகங்களுக்கு சுப பலன்கள் அமைவதில்லை. ஏதோ நூற்றுக்கு ஒன்றிரண்டு ஜாதகங்களுக்கு மட்டும் கிரக நிலையாலும் விதிவிலக்காகவும் ஒருசில நல்ல பலன்கள் தெய்வாதீனமாக அமைகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. இந்த சமயங்களில் பாதசாரம் என்ற நிலை அனுபவத்திற்கு ஒத்து வருவதில்லை என்பது அனுபவ ரீதியாகக் காணும் உண்மையாகும். இதனால்தான் பாதசாரம் அம்சம் என்பதெல்லாம் பார்க்கத் தேவையில்லை என்றும் அனுபவம் பெற்றோர் ஆராய்ந்து கூறுவர்.

இராசி, அம்சம், திரேக்காணம், பாவம், கிரக ஸ்புடம் செய்துக் கொண்ட போதிலும் இராசிகட்டத்தில் இலக்கினம் முதல் நவக்கிரகங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆதிபத்தியம் ஸ்தான பலம், பார்வை பலம் முதலியவற்றின் அடிப்படையில் தான் சுபா சுப பலன்களை ஆராய்ந்து பார்க்க இயலும். ஆகையால் ஆதிபத்திய பலமில்லாத கிரகம் சுப பலன்களை கொடுக்கும் கிரக நட்சத்திர பாதங்களில் சஞ்சரித்த போதிலும் எதிர்பார்க்கும் சுப பலன்கள் அமைவதில்லை.

ஜெனன காலத்தில் இலக்கினம் முதல் கிரகங்களுக்கு ஏற்பட்டுள்ள பலத்தையும், யோகம், கரணம், முதலிய பஞ்சாங்கம் என்ற பஞ்ச அங்கங்களையும் கணித்துக் கொண்டால்தான் எந்த கிரகம் சுப பலனைக் கொடுக்கும் எந்தக் கிரகத்தின் திசை காலத்தில் கஷ்ட, நஷ்டங்களைக் கொடுக்கும் என்பதை துல்லியமாக அறிந்துக் கொள்ள ஒரு தெளிவான வழிவகை கிடைக்கும்.

தொடர்ச்சி 6ஆம் பக்கம் காண்க...

உ
மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )

மகிழ்வித்து மகிழ்
Web : mahilvithumahil.com

No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ், லிட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில், 4 ரோடு, சேலம் – 636 009.

No. 3-A, சன்னிதானம், P. 54 விஷாகா அபார்ட்மெண்ட், 6th- அவென்யூ, அண்ணா நகர், சென்னை–40.

**Cell : 98427-10545, 93677-10545, பெங்களூர் : 90350-10545**



சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, **S. ராஜகுமார்**

**"அரிது அரிது ஜோதிடராய் ஆவது அரிது - அதனிலும் அறிது நல்ல குரு அமைவது அரிது"**
**"வாருங்கள் குரு-சிஷ்யர் உன்னத பந்தந்திற்கு"**

## ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி தேவதை உபாசனை ( வாக்கு கூற )

இக்கலையை திரிகால சக்தியை முற்றிலும் உணர்ந்த ஞானிகள், யோகிகள், மகான்கள் போன்றவர்கள் கிரகித்து வைத்திருக்கும் அபூர்வ சக்தி யட்சினி சக்தி. அப்படிப்பட்ட யட்சினி சக்தியானது பிரபஞ்ச சித்தரின் சித்தியாலும், சூட்சும ப்ரயோக முறைகளாலும் சைவ முறை பூஜை மேற்கொண்டு இந்த ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி சக்தியை பெற்றுக் கொள்ள முடியும். பல ஜோதிடர்கள், நாம் சென்று உட்கார்ந்த உடன் எதற்காக வந்திருக்கின்றோம் என மிக துல்லியமாக கூறுவது நமக்கு ஆச்சர்யமாக இருக்கும். நமக்கு ஏற்படும் எதிர்கால நிகழ்வுகளை நாமே அறிந்து கொள்ளவும் உங்களால் முடியும். நடக்க போவதை முன்கூட்டியே அறியவும், ஒருவர் செய்திருக்கும் மாந்ரீக கோளாறுகளை நாமே அறியவும் பயன்படும் ஒரு அரிய கலை. பொதுவாக இச்சக்தியை வாக்கு கூறுவதற்கும், ஜோதிடர்கள் ஜோதிட துறைக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள். ஆண்கள் மற்றும் பெண்கள் கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு உன்னதமான கலை. எந்தவித பயமும் இல்லாமல், குடும்பத்தில் இருந்து கொண்டு கற்றிடும் ஒரு அபூர்வ கலை ஆகும். இதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. இறை சக்தியை உணர வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் போதும்.

வாருங்கள், வித்தியாசமான அனுபவத்தை தீட்சையில் பெற்றிட, அபூர்வமான சக்தியை நீங்கள் பெற்றிட...

இன்னும் என்ன யோசனை? வாழ்வில் முன்னேறுவதற்கு?

பல ஜோதிடர்களை மாந்திரீகர்களை உருவாக்கிய பயிற்சி

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : **10.10.2015 சனிக்கிழமை** |
| இடம் | : **சேலம்.** |
| நேரம் | : **காலை 9.30 மணி முதல்** |
| சேவைக் கட்டணம் | : **ரூ. 7700/-** |

இதுவரை யாரும் அறிந்திடாத...

## சூட்சும உயர் சக்திகள்

ஒரு குறிப்பிட்ட வம்சாவளியில் இரகசியமாக கையாண்டு வந்த, உலகின் அதி சூட்சும இரகசியங்கள் தற்பொழுது பயிற்சி வடிவில்...

இக்கலையை தாங்கள் கற்பதன் மூலம் உங்களை கண்ட எதிரிகளும் விலகி ஓடுவர். வெளிநாடு செல்ல முயற்சி செய்தும் பலமுறை தோல்வி கண்டவர்கள், வெளிநாடு செல்லும் கனவை நனவாக்கும் பயிற்சி முறை. வாழ்வில் எல்லாம் இருந்தும் மன அமைதி இல்லையா? அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பணத்தினால் வாழ்வில் ஏற்படும் பலவித இன்னல்களை போக்கி, இழந்த பொருட்களை மீண்டும் பெறுவதற்கும், வாழ்வில் பல சறுக்கல்களை கண்ட நீங்கள் மற்றவர்கள் முன் தலைநிமிர்ந்து நின்றிடவும், ஜாதகத்தில் ஏற்படும் சகல தோஷங்களை பரிகாரம் இல்லாமல் உயர் சக்திகள் மூலம் தீர்த்திடவும், படிப்பில் மந்தமான நிலை, ஞாபக சக்தி குறைவான நிலை, தேர்வில் தோல்வி மேல் தோல்வி என இருப்பவர்களை வெற்றி படிக்கட்டில் ஏற்றிவிடும் ஒரு கலை. திருமண தடை விலகி ஓடிடும். மாந்ரீகத்தில் ஏற்பட்ட பாதிப்புகள், வாஸ்து கோளாறினால் ஏற்பட்ட பாதிப்புகள், இப்படி நீங்கள் வாழ்வில் முன்னேற எது தடையாக உள்ளதோ அதனை தவிடுபொடியாக்கி வாழ்வில் உயர இப்பயிற்சி வழிவகுக்கும்.

இனிப்பு என்றால் சுவை தெரியாது, சுவைத்து பார்த்தால் மட்டுமே சுவை தெரியும். பார்த்துக்கொண்டே இருந்தால் பலன் தெரியாது. கற்றுக் கொள்ளுங்கள். பிறகு நீங்களே பரிகாரம் சொல்வீர்கள் மற்றவர்களுக்கு.

வாருங்கள்...
இன்னும் நிறைய கற்பதற்கு

ஆண்கள், பெண்கள் கற்றிடும் சைவ முறை பூஜை

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : **11.10.2015 ஞாயிற்றுக்கிழமை** |
| இடம் | : **சேலம்.** |
| நேரம் | : **காலை 9.30 மணி முதல்** |
| சேவைக் கட்டணம் | : **ரூ. 5700/-** |

Card Accepted
MasterCard VISA

**இக்கலையை கற்க பிராப்தம் உள்ளவர்களுக்கே இது கண்ணில்படும்.**

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள். வாழ்வில் முன்னேற ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளவும்.

**சென்னையில் பயிற்சி : நாள் : 14.10.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**
**கோவையில் பயிற்சி : நாள் : 21.10.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**
**பெங்களூரில் பயிற்சி : நாள் : 28.10.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**

**தனிப்பட்ட முறையில் VIP களுக்கு பயிற்சி அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று கற்கலாம்.**

**தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.**

**பிரதி மாதம் சென்னை : 5, 15, 25. பெங்களூர் : 16, மலேசியா, சிங்கப்பூர் (Appointment Only)**

**வாருங்கள்... வித்தியாசமான சக்தியை உணர்ந்து பாருங்கள்... நீங்களே பிரமிப்பீர்கள்...**
**நல்லதிற்கு மட்டும் வாருங்கள், வாழ்வில் அனைத்தும் நல்லதாக மாறுவதை உணர்வீர்கள்**
**தோல்விக்கு சவால் விடு, முடிந்தால் என்னை தோற்கடி என்று...! - குருஜி ஐயா.**

திதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு திதிக்கும் சில இராசிகள் சூனிய இராசிகள் என்று கூறப்படும். இதே போல கரணம் என்று சொல்லும் கரணங்களின் சக்தியும் ஒரு ஜாதகத்தின் நன்மை தீமைகளுக்கு பெரிய காரணியாக அமைந்துள்ளன. இதனாலும் திதி சூனிய இராசி அதிபதிகளின் திசை சுகப்படுவது இல்லை என்பது ஜோதிட சாஸ்திரத்தின் முக்கியமான விதி முறைகளாகும். எனவே ஜாதகப் பலன் கூறுவதற்கு இதை அவசியம் கவனிக்க வேண்டும். கிரகங்கள் ஆட்சி உச்சம், நட்பு போன்ற பலம் பெற்று அமர்ந்து இருந்தாலும் கூட சில கிரகங்களின் திசை காலங்களில் கடுமையான சோதனைகளுக்கு ஆட்பட வேண்டிய நிர்பந்தம் அவசியம் ஏற்பட்டு விடுகிறது.

திதிகளின் சூனியம் எந்த இராசி சூனியமடைகின்றதோ அந்த பாவத்தின் பலன்கள் அற்பமாகி விடுகின்றன. கரணமும் நல்ல விதமாக அமையா விட்டால் சுப பலன் கொடுக்க வேண்டிய கிரகத்தின் திசையும் நல்ல பலன் கொடுக்காமல் பொய்த்து விடுகின்றன. திதி, கரணம், ஆகிய இரண்டும் ஒரு ஜாதகத்தின் எதிர்கால சுபா சுப பலன்களை நிர்ணயம் செய்து ஆதிபத்தியத்திற்கு இசைந்தபடி நல்ல பலன்களோ அல்லது கெட்ட பலன்களோ விதிப்படி வினையாற்றுகின்றன. ஆகவேதான் பாதசாரம் என்பது கூட ஆதிபத்திய பலத்தை மிஞ்சக் கூடியதல்ல என்பதும், ஆதிபத்தியத்தின் அடிப்படைப் பலத்தின் தன்மைக்கேற்றபடி தான் பாதசார பலம் அமையும் என்பதுதான் உண்மையிலும் உண்மை.

ஒரு கிரகம் அமர்ந்து இருக்கும் இராசியின் அதிபதியின் பலத்தை பொருத்தும் சில நல்ல பலன்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக நீச்சன் நின்ற இராசிநாதன் ஆட்சி உச்சம் எய்திடில் நீச்ச பங்க இராஜயோகம் என்று சொல்லப்படும் ஜோதிட சூத்திரம் இதை மெய்ப்பித்து காட்டுகிறது. இதேபோல் கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்ற ஜோதிட விதி முறையையும் ஏற்கத்தான் வேண்டும். இது போன்ற எண்ணற்ற சூட்சுமங்கள் ஜோதிடத்தில் பொதிந்து இருந்தாலும், அவற்றை கணக்கற்ற முறையில் ஆராய்ந்து பார்த்தால்தான் பாதசாரம் பலனளித்திடும் விகிதாச்சாரத்தையும், ஆதிபத்தியம் அறிவுறுத்திடும் ஆட்சி பலத்தையும் அறிந்துணர்ந்து ஜோதிடஞானத்தில் தீர்க்க தரிசியாக திகழ்ந்திட முடியும்.


சித்தர் அடிமை **ஸ்ரீ சி.இராஜ்**

**Cell : 97104 21880**





அகத்திய ஜோதிட விஞ்ஞானி

பி.எஸ். தேவராஜ்

**அகத்தியர் சித்தா மூலிகை மருத்துவம்**

முற்றிலும் மாறுபட்ட சித்த மருத்துவ முறையில் பத்தியம் இல்லாமல் குறைந்த கட்டணத்தில்.
50 ஆண்டு அனுபவம் மிக்க சித்த மருத்துவ மாமணி இரா.சுப்பிரமணியம் அவர்களால்
குறைந்த கட்டணத்தில் நிறைந்த மருத்துவம் சேவை புரிகிறார்.

**குடியை நிறுத்த!**



Dr.இரா. சுப்பிரமணியம்

அரசு பதிவு பெற்ற

மருத்துவர் பதிவு எண்: 1794

**குடிப்பவருக்கு தெரியாமல் கொடுக்கலாம்**

**கை, கால், மூட்டு வலிகளை முற்றாக நீக்கி உடலுக்கு உரம் சேர்த்து மேனி எழிலை மேம்படுத்த சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவமூலம், சொரியாசிஸ், நீரிழைவு, ஆண்மை குறைவு, ஆஸ்துமா. பெண்களுக்கு கர்ப்பபை கோளாறுகளை நீக்கி கர்ப்பம் தரிக்க சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

**ஆண்மை சக்தி பெருக, யாத்திரைக்கு இன்ப மாத்திரை ஒன்று ரூ.5/**

**பைல்ஸ் மற்றும் சர்க்கரை நோய்க்கு சிறப்பு சிகிச்சை**

**பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் நிரந்திர தீர்வு காணப்படும்.**

**நெ. 13, எ. முத்தையப்பர் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.**
**(பச்சையப்பன் கல்லூரி பின்புறம், நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)**

**போன்: 044 - 2668 0381. செல்: 99403 42800**

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் அங்காளஈஸ்வரி நமஹ





## சித்தர்கள் அருளிய தெய்வீக யந்த்ர, மந்த்ர, தந்த்ர, சித்தயோக பயிற்சிகள்

*வெற்றி நிச்சயம்!*

**இடம் : கொல்லிமலை** அரப்பளீஸ்வரர் கோவில்

**நாள் :** அக்டோபர் 24,25/2015 (சனி, ஞாயிறு)

பயிற்சியளிப்பவர் ஆன்மீக ஆசான் **ஸ்வாமி M.G.P** (30 வருட அனுபவ மற்றும் ஆராய்ச்சியாளர்)

18 வயதிற்கு மேற்பட்ட **ஆண்/பெண்** இருபாலரும் கலந்து கொள்ளலாம் பாதுகாப்பான இடவசதி உண்டு, ஜோதிடர்களுக்கு மேலும் ஒரு வரப்பிரசாதம், ஒருவர் ஜாதகத்தை கையில் வாங்கி பிரார்த்தனை செய்தவுடன் அதில் உள்ள நுட்பங்கள் அனைத்தும் உங்களுக்கு தெரியும் அளவிற்கு வாக்குபலிதம் ஏற்படும். கடுமையான நியம நிஷ்டைகள் இல்லை, இரண்டாவது நாள் ஜலபூஜையின்போது இறைசக்தியை நீங்கள் உணரலாம் )

1) ஓங்காரம் 2)கருட சித்து 3) வக்ரதுண்ட கணபதி 4) அஷ்ட விநாயகர் பூஜா முறை 5) நினைத்ததை தந்திடும் யந்த்ர மந்த்ர தந்த்ர பூஜா முறை 6) சஞ்சீவி மந்திரம் 7) மோகன வேலவன் மந்திரம் 8) மோகனம், வசியம், ஆகர்சனம், உஷ்சாடனம், ஸ்தம்பனம் யந்த்ர மந்த்ர பூஜா முறை 9) எதிரிகளை வெல்லும் வராகி மந்த்ரம் 10)பாமேஸ்வரி மந்த்ரம் 11) தேவதா வசிய, வேதாள வசிய மந்த்ர முறை 12) 100% அனைத்திலும் வெற்றி தரும் மஹா மந்திரம் 13) மோகன கணபதி 14)உச்சிஷ்ட கணபதி 15) பஞ்சமுக சக்திகளை ஆகர்சணம் செய்யும் பஞ்சமுக விஸ்வரூப ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் பூஜா முறை 16) கடன் தீர்ந்து செல்வம் தரும் ஸ்ரீ சொர்ண ஆகர்சன பைவர் மந்திரம் 17) காலனை வெல்லக்கூடிய காலபைரவர் மந்திரம் 18) 16 செல்வங்கள் தரும் லங்காஷ்டகம் 19) சித்தர்கள் சாபம் போக்கும் முறை 20)அசாதாரண சக்திகள் தரும் எவராலும் வெல்ல முடியாத அர்க்கள மந்திரம் 21) கோர்ட் வழக்குகளில் வெற்றி தரும் மங்கல சண்டிகா மந்திரம் 22) தட்சிணகாளி மந்திரம் 23) ஸ்ரீ நவதுர்கா மந்திரம் 24) ஸ்ரீ சுதர்சனம், ஸ்ரீ காயத்திரி மந்திரம் மற்றும் **ம்(80 விதமான தோசங்கள் நீக்கி யோகம் தரும் ஜல பூஜை நேரிடை பயிற்சி மட்டும்)** ஸ்வாமி.M.G.P. அவர்களால் மாணவர்களுக்காகவும் நாட்டு நலனுக்காகவும் கழுத்தளவு நீரில் நின்று ஓடும் நதி நீரில் நின்று இரண்டு மணி நேர ஜல பூஜை செய்யப்படும்.

**Web.panditmgp.com** **Flicker; swamymgp**

*பயிற்சியின் பலன்கள்*

**முன்பதிவு அவசியம். சுய விருப்பமுடையவர் மட்டும் கலந்து கொள்ளலாம்.**

1. நினைத்தது நிறைவேறும் 2) எதிரிகள் தானாகவே விலகிடுவர் 3) மற்றவர்கள் மனதில் உள்ளதை அறியலாம் 4) அரசாங்க, அரசியல் நன்மையும், உயர்பதவியும் அடையலாம். 5) தொழில் வசியம், ஜனவசியம், தேவதா வசியம் ஏற்படும் 6) மன அமைதியுடன் வடிய வாழ்க்கை 7) சகல செல்வங்களும் பெறலாம் 8) வாக்குபலிதம் உண்டாகம் 9) எத்தகைய தீய சக்திகளும் நெருங்காது. 10) தெய்வங்கள், தேவதைகளை நெருங்குவதற்கான கதவைத் திறக்கலாம். 11) அசாதாரணமான சக்திகளைப் பெறலாம், சகல தோசங்களும் விலகும். தேகத்தில் பிணிகள் அண்டாது. உத்தியோக உயர்வு பெறலாம். 12) 21 நாட்களில் உறுதியாக இரத்த அழுத்த நோய், சர்க்கரை நோய் கட்டுப்படும். 100% அனைத்திலும் வெற்றி பெறலாம். நாம் விரும்புபவர் நம்மை தேடி வருவர். உங்கள் கர்ம வினைகள் நீங்கி புதிய மனநிலையுடன் வெற்றி பெறக்கூடிய மனிதனாக உடல் அளவிலும், மன அளவிலும் வெற்றி வீரராக வீட்டிற்கு திரும்புவீர்கள் என்பது உறுதி, முறையாக பயிற்சி செய்தால் உங்களை யாராலும் வெல்ல முடியாத நிலை ஏற்பட்டு உங்கள் தொழில், வாழ்க்கையில், உறவுகளில் வெற்றியாளராக திகழ்வீர்கள் என்பது உறுதி!

தீராத நோய்களிலிருந்து விடுதலை பெறலாம். நீங்கள் விரும்பிய நபராக நீங்கள் மாறலாம்.உங்களுக்கு தேவையானது எதுவாயினும் பெறலாம்.
உங்களுக்கு தொல்லை தரும் நபர்களை சமாளித்து அடக்க முடியும். உங்களுடைய தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு விடை கிடைக்கும்.
நீங்கள் நினைத்ததை சாதிக்க முடியும். பொருளாதாரத்தில் உயர முடியும். நீங்கள் நினைத்த தலைமைப் பதவி அடையலாம்.
மற்றவர்களை கவரக்கூடிய தனிப்பட்ட காந்தசக்தி கிடைக்கும்.உறவுகளில் வெற்றி கிடைக்கும்.தேவையற்ற பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை பெறலாம்.
வாழ்வின் இலட்சியம் எதுவாயினும் அடையலாம். அனைத்து காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். ஞாபகசக்தி அதிகரிக்கும். கல்வியில் வெற்றி அடையலாம்.
குடும்ப வாழ்க்கையில் வெற்றி அடையலாம். செய்தொழிலில் வெற்றி அடையலாம். கடன் தொல்லைகளிலிருந்து விடுபடலாம்.

**இறையருளால் வெற்றி நிச்சயம்**
**வாருங்கள் வரவேற்கின்றோம்.**

**பயிற்சி காணிக்கை ரூ. 4,500**

**ரூ. 1,000/- செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்**
G.MUNEESWARAN, Dindigul என்ற பெயருக்கு மணியார்டர் அல்லது D.D.அனுப்பவும்.

தொடர்புக்கு **G.முனீஸ்வரன்**
**சர்வ சாஸ்திர வித்யா பீடம்**
34/20A, நாதன் காம்ப்ளக்ஸ், ஸ்கீம்ரோடு,
பஸ்டாண்டு, திண்டுக்கல்-624 003
**செல் : 9842140131, 8903551587**

**தீட்சைதரப்படும் ( நியதிக்கு உட்பட்டது)**

**பயிற்சியில் விலையில்லாமல் வழங்கப்படுபவை**

1. பயிற்சி புத்தகம் 90 Pages - ரூ. 3.000
2. ஸ்ரீ மகா மேரு (அ) 9 " x 9" கோல்டு பிளேட்டிங் ஸ்ரீ சக்கரம் எந்திரம் - ரூ. 2.000
(தெய்வ சன்னதியில் சக்தியூட்டப்பட்ட சர்வ சக்தி நிறைந்தது) (முன்பதிவு செய்பவர்க்கு மட்டும்)
3. ஸ்படிக மாலை ( தெய்வ சன்னதில் பூஜிக்கப்பட்டது) (முன்பதிவு செய்பவர்க்கு மட்டும்) - ரூ. 600
4. இரண்டு நாட்களுக்கு உணவு,டிபன் - ரூ. 300
5. தங்கும் வசதி - ரூ. 600
6. சுய ஜாதனம் பிரிண்ட் & பலன் (முன்பதிவு செய்பவர்க்கு மட்டும்) - ரூ. 1.000

**விலையில்லா பொருட்களின் (உத்தேச மதிப்பு)** 7,500

**தெய்வீக பொருட்கள் கிடைக்கும் கட்டணத்திற்கு உட்பட்டது.**

# உறுதியான பலன் உரைக்க அறுதியிடும்
# புலிப்பாணி ஜோதிடம் மூலநூல் இரகசியங்கள்-600

**1** (இது ஓர் அரிய அனுபவ ஆராய்ச்சி தொடர்)






புலிப்பாணி **மு.இளங்கோ**

செல்: 98943 85933


*ஜோதிடத்தில் ஆணித்தரமாக பலன்களை சொல்வதிற்கு புலிப்பாணி ஜோதிடத்தை 1993ஆம் ஆண்டில் எனக்கு கற்றுக் கொடுத்த மறைந்த தெய்வத்திரு தூத்துக்குடி மாவட்டம் சிவகளை ஊரைச் சேர்ந்த நாராயணன் பிள்ளை அவர்களுக்கு இந்த புலிப்பாணி ஜோதிட அனுபவ ஆய்வு தொடரை சமர்பிக்கிறேன். இவரே என்னுடைய ஜோதிட ஞானத்திற்கு குரு ஆவார்.*

காப்பு பாடல்: 1

**ஆதியெனும் பராபரத்தின் கிருபை காப்பு**
**அன்பான மனோன்மணியாள் பாதம் காப்பு**
**சோதியெனும் பஞ்சகர்த்தாள் பாதம் காப்பு**
**சொற்பெரிய கரிமுகனுங் கந்தன் காப்பு**
**நீதியெனு மூலகுரு முதலாயுள்ள**
**நிகழ்சித்தர் போகருடைய பாதங்காப்பு**
**வாதியெனும் பெரியோர்கள் பாதம் காப்பு**
**வழுத்துகிறேன் ஜோசியத்தின் வண்மைகேளே!**

விளக்கம்: *ஆதியெனும் பராபரம் என்பது சதாசிவம் ஆகும். சதாசிவத்தின் துணை சக்தி மனோன்மணி ஆகும். இவை உறையும் இடம் நெற்றியின் புருவ மத்தியில் துரிய லிங்கமாக "ஓம்" என்ற பிரணவமாக அமைந்து ஒவ்வொரு உயிரையும் இயக்குகிறது மேலும் பஞ்சகர்த்தாள் என்பது பஞ்ச பூதங்களை குறிக்கும் கரிமுகன் என்பது கணபதியையும், கந்தன் என்பது முருகனையும் சேர்த்து வணங்கி, மூலகுரு என்பது தட்சிணாமூர்த்தியையும். தன்னுடைய ஞான குருவாகிய, போகர் சித்தரின் பாதத்தினையும் ஞானத்தில் உயர்ந்த பெரியோர்களின் அருளாசியை வேண்டி ஜோதிடத்தின் நுட்பங்களை கூறுவதாக புலப்பாணி சித்தர் இங்கு ஜோதிடத்தை ஆரம்பிக்கின்றார்.*

பாடல்:2

**சக்தியே தயாபரியே ஞானரூபி**
**சாம்பவியே மனோன்மணியே கபாலி சூலி**
**மூத்தியே வேதாந்தபரையே அம்மா**
**முக்குணமே முச்சுடரே மாயா வீரி**
**வெற்றியே மூவர்களுக்குகருளாய் நின்ற**
**வேணிகையே சாமளையே பொன்னே மின்னே**
**சித்திடையே சோதிடமும் முன்னூரையா**
**சின்மயத்தின் கணேசனுடைய காப்பாம் பாரே**

விளக்கம்: இந்த பாடலில் புலிப்பாணி சித்தர் பராசக்தியின் பல்வேறு வடிவங்களை பற்றி பேசி அவைகளையும் தட்சிணாமூர்த்தி மற்றும் கணபதியின் அருளை வேண்டுகிறார். இதன்மூலம் ஜோதிட சாஸ்திரத்தில் பலன் உரைத்தல் என்ற வாக்கு வன்மை ஏற்படுவதற்கு பராசக்தியின் வழிபாடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று விளக்குகிறார். எனவே ஜோதிடத்தில் வாக்கு வன்மை ஏற்படுவதிற்கு ஒவ்வொரு ஜோதிடர்களும் பராசக்தியையும் குருவையும், கணபதியையும் உபாசனை செய்ய வேண்டும்



என்பது மிகவும் தெளிவாகி விடுகிறது.

<u>அனுபவம்:</u> மேலே கூறியுள்ள சூட்சமத்தை புரிந்துக்கொள்ளாமல் நாங்களும் புலிப்பாணி ஜோதிடம் படித்து பார்த்து விட்டோம். ஆனால் எங்களால் பலன் சொல்ல முடியவில்லை என்றால்? எப்படி பலனை சொல்லமுடியும் எனவே ஜோதிட பலன் சொல்ல முறையான உபாசனையை மேற்கொள்ள வேண்டும். இதனை ஒவ்வொரு ஜோதிடரும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். இந்த கருத்து என்னுடைய வாழ்க்கையில் 100% ஒத்து வருகிறது.

<u>பாடல் 3: கிரகங்களின் ஆட்சி, உச்சம், நீசம், பகை, நட்பு பற்றி இனிவரும் பாடல்களில் விளக்குகிறார்: சூரியன்</u>

**தானென்ற சூரியனுக்காட்சி சிங்கம்**

**தன்மையுள்ள மேஷமது உச்சமாகும்**

**தானென்ற துலா மதுவும் நீசமாகும்**

**தனியான தனுசுவுடனே மீனம் நட்பாம்**

**மானென்ற மற்றேழு ராசிதானும்**

**வரும் பகையாமென்றுனக்கு சாற்றினோம்யாம்**

**கோனென்ற போகருட கடாக்ஷத்தாலே**

**குணமான புலிப்பாணி குறித்திட்டேனே**

| | | | |
|---|---|---|---|
| மீனம் நட்பு | மேஷம் உச்சம் | ரிஷபம் | மிதுனம் |
| கும்பம் | சூரியன் | | கடகம் |
| மகரம் | | | சிம்மம் ஆட்சி |
| தனுசு நட்பு | விருச்சிகம் | துலாம் நீசம் | கன்னி |

<u>விளக்கம்:</u> புலிப்பாணி சித்தர் கூறியுள்ள கிரகங்களின் நட்பு, பகையானது மற்ற ஜோதிட நூல் ஆசிரியர்களின் கருத்துக்கு சற்று மாறுபட்டு இருக்கும். ஆனால் பலன்களை நிர்ணயம் செய்யும் பொழுது அதிசயமான பலன்களை தரும். கிரகங்களின் நட்பு பகைபற்றிய என் அனுபவ ஆய்வு பற்றி சிறிது விளக்குகிறேன். இதனை அடுத்து வரும் பாடல்களில் உள்ள ஒவ்வொரு கிரகங்களுக்கும் பொருந்தும்.

<u>அனுபவம்:</u> ஒவ்வொரு கிரகங்களின் நட்பும், பகையும் எந்த அளவுக்கு ஜோதிடத்தில் பலன் சொல்ல உதவுகிறது என்று மூல நூல்களில் சரியான விளக்கங்கள் இல்லை இந்த நட்பு பகை என்பது கிரகங்களுக்கு இடையே மட்டும் நாடி ஜோதிடத்தில் விளக்கப்பட்டு உள்ளது நம்முடைய பராசரர், வராஹிமிகிரர் தொடர்புடைய ஜோதிட சாஸ்திர முறைகளில் தெளிவு படுத்தபடவில்லை.

ஆனால் நட்பு பகையானது, கூட்டு தொழில், கூட்டு வியாபாரம், சகோதர உறவுகளில் உள்ள பாசம், கணவன், மனைவியுடைய திருமண வாழ்க்கை சம்பந்தபட்ட விஷயங்களில் பலன் நிர்ணம் செய்ய? மிகவும் உதவியாக இருக்கும். உதாரணமாக திருமண பொருத்தங்களின் போது சஷ்ட்டாஷ்டக பொருத்தங்களை தவிர்த்து விடுவது மிகவும் நல்லது. ஆனால் புலிப்பாணி சித்தர் வாக்குபடி கிரகங்களுக்கு இடையே நட்பு இருக்குமானால் திருமணத்தை தாராளமாக செய்யலாம் நடைமுறையில் சரியாக வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | இராசி ஆண் ஜாதகம் | | |
| | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பெண் ஜாதகம் | | |
| | | | சந் |
| | | | |

மேற்படி இரண்டு ஜாதகங்களை பொருத்துகின்ற பொழுது பெண் சிம்ம இராசி, ஆண் மீனம் இராசி ஆகும். பெண்ணுக்கு 8வது இராசி ஆண் இராசி அமைவதால் உண்மையில் பொருத்தமில்லை என்று பலன் கூற வேண்டும். ஆனால் மேற்படி அமைப்பில் என்னுடைய 20 வருட அனுபவ ஆய்வுகளில் பெரும்பாலும் உளவியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் பிரிவினைகள் இல்லாமல் வாழ்கின்றார்கள். எனவே புலிப்பாணி சித்தரின் கருத்துக்கள் நடைமுறையில் அதிரடியாக பலன்களை சொல்ல மிகவும் உதவுகிறது.

<u>பாடல் 4 (சந்திரன்)</u>

**பாரப்பா சந்திரனுக்கு ஆட்சி நண்டு**

**பாங்கான விடையதுவே உச்சமாகும்**

**வீரப்பா விருச்சிகமும் நீசமாகும்**

**விருதுபெற்ற தனுசு, மீனம், கன்னி நட்பு**

**ஆரப்பா அறிவார்கள் மற்றாறுராசி**

**அருளில்லப் பகையதுவே யாகும் பாரு**

**கூறப்பா கிரகம் நின்ற நிலையை பார்த்து**

**குறிப்பறிந்து புலிப்பாணி கூறினேன்.**

| | | | |
|---|---|---|---|
| நட்பு | | உச்சம் | |
| | சந்திரன் | | ஆட்சி |
| | | | |
| நட்பு | நீசம் | | நட்பு |

<u>விளக்கம்:</u> இங்கு நட்பு, பகை பற்றி கூறிய புலிப்பாணி சித்தர் இறுதியில் கிரகம் நின்ற நிலையைப் பார்த்து குறிப்பறிந்து கூறுமாறு சொல்கிறார். ஏனெனில் ஒரு ஜாதகத்தில் இலக்கின பலம் பார்ப்பது போல சந்திரா இலக்கினம் கொண்டு பலன் சொல்வது நடைமுறையில் உள்ளது. மேலும் சந்திரனை வைத்து இராஜயோகங்களும் ஜோதிட சாஸ்த்திரத்தில் கூறப்பட்டுள்ளது. எனவேதான் புலிப்பாணி சித்தர் சந்திரன் நின்ற நிலையை தீவிரமாக ஆராய்ந்து சூழ்நிலைக்கு தகுந்த மாதிரி பலன் சொல்லுமாறு விளக்கியுள்ளார்.

தொடரும்...

# பக்தியும் காமமும் பகிர்ந்துக் கொண்ட வாழ்க்கை! பற்றுத் துறந்த வாழ்க்கைக்கு பாதை அமைத்திடுமா?



**தனுசு கணேசன்**
**செல்: 94423 07032**

ஆண், பெண் என்ற இரு வேறு ஜாதிகளை படைத்து உணர்ச்சிகளின் சங்கமத்தில் நெடிது வாழ வம்ச விருத்தியின் விழுதாய் காமத்தை பொறுத்தி வாழ்க்கை என்னும் வாசலை திறந்து வைத்த இறைவன் நெறி பிறழா வாழ்க்கையை நித்தமும் பெற்றிடவே தெய்வத் தன்மை என்னும் பக்தியையும் புகுத்தி வைத்தான். இதில் முரண்பாட்டால் தான் முடங்கிவிடும் வாழ்க்கை அனுபவித்து முடித்துவிட்டால் அடங்கிவிடும் வேட்கை இது அனுபவம் கற்றுத்தந்த பாடம் நம் கீதை நமக்குச் சொன்ன வேதம். மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் இல்லாமலில்லை கையாள்வதில் மட்டும் கவனம் தேவை என்பதைப் போல அமைதியைத் தரும் பக்தியும் வேகத்தைத் தரும் காமமும் இடைவெளி இல்லாமல் நெருங்கி அமைந்துவிட்டால் எண்ணிய எண்ணம் ஈடேறாது என்பது இயற்கையே. ஆனால் விட்டு விடுமா மனம் எண்ணத்தில் ஆசையை திணித்து விடுமே. மனித வர்க்கத்தில் கருவாக்கதிற்கு காரணமான சிற்றின்பம் காமம் எனப்படுகிறது. மோட்ச கதி அடைய காரணமான பேரின்பம் பக்தி எனப்படுகிறது. இந்த இரு நிலைகளுமே மனித வாழ்க்கையின் அஸ்திவாரங்களாக கருதப்படுகிறது. இதில் இல்லற வாழ்வை மேற்கொண்டவர்கள் பக்தி மார்க்கத்தில் அளவு கடந்து ஈடுபட்டால் இல்லறம் சுவைக்காது போய் விடும். அதேபோல காமத்தில் தறிகெட்டு தாண்டினால் வாழ்வு சிதைந்துவிடும். இந்த நிலைகள் எங்கு, எப்போது, எப்படி, அளவு கடந்து மீறப்படுகிறதோ அந்த நிலை அழிவுப்பாதைக்கு நம்மை அழைத்து செல்லும் என்பது நமது கலாச்சாரம் நமக்கு கற்றுக் கொடுத்த பாடம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

இத்தகைய நல்வினை தீவினைகளுக்கு மனமே ஆதாரமாக அமைகிறது. மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம் என்று பொதுவாக கூறினாலும் எத்தனை பேருக்கு இந்த விதி இடம் கொடுக்கிறது என்பதையும் சிந்திக்க வேண்டும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவற்றை அடிப்படையாகக் கொண்டது நமது ஊனுடம்பு. இதில் மனம் எதை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் சுதந்திரமாக சிந்திக்கக்கூடியது. புத்தி என்பது எதை செய்ய வேண்டுமென்பதை தீர்மானிப்பது, சித்தம் என்பது எண்ணத்தை நிறைவேற்றித் தருவது அதனால்தான் எல்லாம் கடவுள் சித்தம் என கூறுகிறோம் அகங்காரம் என்பது செய்யக்கூடிய செயல் நன்மையா? தீமையா? என்பதன் அடிப்படையில் பாவபுண்ணிய கணக்கை சித்தரிப்பது பக்தி, காமம் என்ற இந்த இருநிலைகளையும் ஆராய நான் எடுத்துக்கொண்ட தலைப்பிற்கு பொருத்தமான பெண்ணின் ஜாதகம் ஜோதிட கேள்வி பதில் பகுதியில் வெளிவந்தது.

**அந்த ஜாதகியின் கேள்வி:** எனக்கு திருமணமாகி ஒரு குழந்தை உள்ளது தற்சமயம் கணவரைப் பிரிந்து வாழ்கிறேன். நான் வாழ்க்கையில் மனம் போன போக்கில் நிறைய தவறுகள் செய்து விட்டேன் இருந்தாலும் ஆன்மிகம் நாட்டம் அதிகம் உள்ளதால் தவம் செய்யும் முறைகளைக் கற்றேன். இப்படிப்பட்ட தவ நிலையிலும் கூட திடீரென தவம் கலைந்து தவறான எண்ணம் தலை தூக்குகிறது. எனவே முழுநேர ஆன்மிகத்தில் ஈடுபடலாமா? குடும்ப வாழ்க்கை அமையுமா? என் எதிர்காலம் என்ன? என கேள்வி எழுப்பி உள்ளார்.

அவரின் ஜாதகம்

பிறந்த தேதி 07.02.1988 / நட்சத்திரம்: அஸ்தம்

நேரம் இரவு 7.42 மணி / திசை இருப்பு : 5 வருடம் 9 மாதம் 11 நாள்

| | | | |
|---|---|---|---|
| சுக் ராகு | குரு | | |
| புத (வ) | இராசி | | |
| சூரி | பெண் | | ல |
| சனி | செவ் | மா | சந் கேது |

| | | | |
|---|---|---|---|
| | குரு | சந் சனி | |
| செவ் | அம்சம் | | ராகு |
| கேது | | | சூரி சுக் |
| | | புத (வ) மா | ல |

முதலில் நமது கலாச்சாரம் பெண்ணுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து பெண்மையை போற்றி வளர்த்தது ஏனென்றால் தாய் அடையாளம் காட்டியே தகப்பனை தெரிந்துக் கொண்டோம் தகப்பன் சொல்லியே குருவைத் அறிந்துக் கொண்டோம். குரு உபதேசித்தே கடவுளை உணர்ந்துக் கொண்டோம். இப்படி மூல ஆதாரமான தாய் என்பவள் பெண்ணினத்தின்

பேரொளி அப்பழுக்கற்ற குறைகாண முடியாத கருணைக் கடலாய் திகழ வேண்டியவள் எனவே தான் பெண்ணிற்கே ஒழுக்க நெறிகள் அதிகம் போதிக்கப்பட்டது. அப்படிப்பட்ட பெண்ணினத்தின் பிரதிநிதியான இந்தப் பெண்ணே இரு நிலைகளில் ஆட்பட்டு துன்புற்றாள் என்றால் அதன் கிரக அமைப்பை சற்று ஆராய்வோம்.

"நான்கு (4ஆம் இடம்) கெட்டிடில் நாலும் கெடும்" என்ற அளவில் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற அருங்குணங்களையும் ஒருங்கேப் பெற்றவளே பெண் என்ற தகுதியைப் பெறுவதாக நமது பண்டைய கலாச்சாரம் கூறுகிறது. இந்த ஜாதகத்தைப் பொறுத்தவரை தேவகுரு வியாழனும் அசுரகுருவான சுக்கிரனும் சமபலத்துடன் அமைந்து பக்தியும், காமமும் பிண்ணிப் பிணைந்து பூஜை அறையா, பள்ளியறையா? என தடுமாற வைத்த ஜாதகம். நவக்கிரகங்கள் நாலாபுறத்திலும் நர்த்தனமாடினாலும் ஒன்றுடன் ஒன்று உத்தரவு கேட்டு கூடிப்பேசி குன்றினில் ஏற்றும் அல்லது குழிக்குள் கவிழ்க்கும் என்பதை கிரகங்களின் சூட்சும நிலையை ஆராய்ந்து உணர்ந்துக் கொள்ளல் அவசியம்.

**தவறான காமத்தால் வீழ்ந்த பெண்ணின் வாழ்க்கை**

இந்த பெண்ணைப் பொறுத்தவரை காமத்தையும் பக்தியையும் ஒரு சேர கையாள்வது மனம் என்ற கருவி ஒன்றுதான் என வைத்துக் கொண்டால் விதி வழி சென்ற மனது என்ன சொல்லியதோ அதன் வழி அவள் சென்றாள் என்றால் நமது கலாச்சாரத்திற்கு வேண்டுமானால் தவறாக இருக்கலாம். அவள் ஜெனனத்தைப் பொறுத்தவரை சரியான முடிவுதான் என்பேன். அழுக்கான அதே மனத தானே தவத்திலும் லயிக்கிறது காமத்தை கரைத்துக்குடித்த மனம் பக்தியிலும் பரவசத்தை காணத் துடிக்கிறது. முதலில் நல்லதோ, கெட்டதோ எதைச் செய்ய வேண்டுமென்றாலும் தைரியம் வேண்டும். இந்தப் பெண் ஆண் இராசியான சிம்ம இலக்கினத்தில் பிறந்து இலக்கினாதிபதி சூரியனும் செவ்வாய் சாரம் பெற்று அம்சத்தில் தைரிய ஸ்தானாதிபதிய சூரியனுக்கு 3இல் உச்சம் பெற்று சந்திரனைப் பார்த்து ஆணுக்கு நிகரான தைரியத்தை அனாயசமாக வழங்கியது. இது மட்டுமா தைரியக்காரன் செவ்வாய் சந்திரனுக்கு 3இல் அமர்ந்து இராசிக்கு அதிபதி புதனைப் பார்த்து பயம் என்ற உணர்ச்சியே பயனற்றுப்போனது. மனதை ஆளும் சந்திரன் சுயசாரத்தில் சுக்கிரனின் அங்கிசத்தில் கேதுவுடன் நெளிந்து குழைய காமக்காரகன் சுக்கிரன் உச்சம் பெற்று போகக்காரகன் இராகுவுடன் கைகோர்த்து சந்திரனைப் பார்த்து வா வா என்றால் பாவி அவள் என்ன செய்வாள்? படுக்கையை மட்டும் பகிர்ந்துப் கொண்டாள். ஜென்ம இராசிக்கு அதிபதி புதனும் வக்கிரம் பெற்று 7இல் அமர்ந்து இலக்கினத்தைப் பார்த்து வக்கிர எண்ணத்தை வகையாய் திணித்ததால் கட்டளைக்கு அடங்கா குதிரை போல கட்டுக்கடங்காத மனம் மஞ் சத்தையே நினைக்கச் செய்யும் என்பதில் மாற்றுக் கருத்தென்ன? 7ஆம் இட சனி 5இல் அமர்ந்து புதனைப் பார்த்து புத்தியை கெடுத்து சந்திரனைப் பார்த்து சல்லாபித்தால் வழுக்கி விழ வேறென்ன வேண்டும். இலக்கினாதிபதி சூரியனோ எந்த கிரகத்தாலும் பார்க்கப்படாமல் மறைவாய் நின்ற படுக்கை ஸ்தானத்தையே பரவசமாய் பார்த்ததால் சுக்கிரனை சுற்றியே சுழன்ற கிரகங்கள் சூரியனை மடக்கி சுகம் பெற வைத்ததைக் கண்டு இத்தனைக்கும் தைரியம் எங்கிருந்து வந்தது? கேட்பது நாமானால் தவறு நம்மிடம் தானே.



பெண்ணுக்கு 4ஆம் இடம் பவித்திரம் என்றால் கலிகாலம் இன்று கண்டுக் கொள்ளுமா? 4ஆம் இட செவ்வாய் வக்கிர புதனின் சாரம் பெற்று சறுக்கிய நிலையில் பாப கத்திரியில் பலமாய் சிக்கி ஆட்சி என்ற அறுகதை இழந்தது மட்டுமல்லாமல் இலக்கினம் பூரம் சாரத்தில் அமைந்த இலக்கின திரிம்சாம்சமும் புதனாகிப் போனதால் தாலிக்கு வேலி தவிடு பொடியானது. கற்பு இங்கு காணாமல் போனது. இத்தனை நிகழ்வுகளும் காமத்தின் மூலமே நிறைவேற்றப்பட வேண்டுமென்ற விதி எங்கிருந்து புறப்பட்டது என யோசித்தால் கர்மப் பலனை நிறைவேற்ற கச்சிதமாய் உச்சம் பெற்ற சுக்கிரன் என்றாலும் முன்னோர் பாவத்தை முந்தி தருபவர் இராகு என்பதால் அவரின் திசையில் சந்திரா இலக்கின ரீதியாகவே பெரும்பாலான பலன்கள் நடைபெற்றுள்ளன என்பதை வாசர்கள் அறியவும். மேலும் இத்தனை நிகழ்வுகளும் வர்க்கோத்தமம்

பெற்ற 9ஆம் இட குரு பார்க்கும் போதே பயனற்றுப் போனதா? என கேட்பீர்களேயானால் இராகுவிற்கு கால்கொடுத்து சுக்கிரனுக்கு இடம் கொடுத்து விலகி நின்று வேடிக்கை பார்த்ததே குருதான் என்று சொன்னால் விதை விதைத்தவன் விதையறுப்பான் வினை விதைத்தவன் வினையறுப்பான் என்பது அவருக்கு தெரியாதா என்ன? மேலும் ஒரு சறுக்கலாக இலக்கினாதிபதி சூரியனையும் ஜென்ம இராசியையும் குரு பார்த்து சுபப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக துன்ப நிகழ்வுகளை அனுபவித்து முடித்தவுடன் கை கொடுப்பார் என்று வேண்டுமானால் சொல்லலாம். இந்த ஜாதகி கர்ம பலனை காமத்தின் மூலம் அனுபவிக்கப் பிறவி எடுத்த பெண் என்பதை வாசகர்கள் குறிப்பாக உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

**இந்த நிலையிலிருந்து மீண்டும் இல்லறம் தளைக்குமா? ஆன்மிகம் வலுப்பெற்று தவக்கோலம் நிலைத்திடுமா?**

அத்தனை உலகியல் இன்பங்களையும் நீக்கமற திகட்ட அனுபவித்து இறுதியில் சலிப்புத்தட்டும்போது அல்லது உடம்பு இயலாமையால் தள்ளப்படும்போது ஞானம் பிறக்கும் என்று சொல்வார்கள். ஆனால் இந்தப் பெண்ணுக்கு இளம் வயது, கையில் ஒரு குழந்தை, வாழ வேண்டிய வயது, கணவனின் பிரிவு இப்படிப்பட்ட சூழலில் மனமாற்றம் வந்தவழியை யோசித்தால் இந்த ஜாதகத்தில் காம ஸ்தானங்களான 3.7.11ஆம் இடம் வலுப்பெற்று அருள் ஸ்தானங்களான 1,5,9ஆம் இடம் வலு குறைந்து காணப்படுகிறது. இருப்பினும் மந்திர சித்தி ஸ்தானமான 5ஆம் இட குருவானவர் கேதுவின் சாரம் பெற்று வர்க்கோத்தமம் ஆகி தனது புனிதமான 9ஆம் பார்வையில் இலக்கினம் மற்றும் 5ஆம் இட சனியை பார்வை செய்தது சிறப்பு. அடுத்ததாக சந்திரன் கேதுவுடன் இணைந்து கர்மாதிபதி சுக்கிரனை நோக்கியது, தர்மாதிபதி செவ்வாய் கர்ம ஸ்தானத்தை பார்வை செய்தது தர்ம கர்மாதிபதி யோகத்தில் பாதியைப் பெறுகிறார் எனலாம். மேலும் காரகத்துவ ரீதியாக சிந்தித்தால் 5ஆம் இட சனி 9ஆம் இட குரு மிகச் சிறந்த ஆன்மிக யோகம் எனலாம் மற்றும் சனியின் 10ஆம் பார்வை மோட்ச ஸ்தான அதிபதி சந்திரனின் மேல் பதிவதாலும் கேதுவின் 3ஆம் பார்வை 9க்குடைய செவ்வாய் மேல் விழுவதாலும் அபரீதமான இறையுணர்வு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை, இருந்தாலும்கூட அலைபாயும் மனதை ஆசையில் மிதக்க விட்டுக் கொண்டு தவக்கோலம் என்பது சாத்தியமற்றது. ஏனென்றால் உடலுக்கு இயலாமை வந்தாலும் மனதிற்கு முதுமையே வராது என்பதால் தானே ஆசைக்கு வயதில்லை என்றும் மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லை என்று அனுபவ பழமொழி சொன்னார்கள். 2018இல் வரக்கூடிய குருதிசை புத்திர ஸ்தான மற்றும் புத்திர காரகர் திசை என்பதால் குழந்தையை சீரோடு வளர்ப்பதில் அக்கறை காட்டி கவியரசு கண்ணதாசன் எழுதியதைப்போல

**கால் போன போக்கிலே மனம் போகலாமா?**
**மனம் போன போக்கிலே மனிதன் போகலமா?**

என்று தறிகெட்ட மனதை தத்துவத்தால் சாடியதைப் போல வாழ வேண்டிய பருவம். இல்லறம் என்ற நல்லறத்தில் ஆன்மிகத்தையும் இணைத்து நிறைவாக வாழ்ந்து நெற்றித்திலகத்தை தக்க வைத்துக் கொள்ளலாம். பாவ மூட்டையை முதுகினில் சுமந்து விதியின் கைப்பிடிக்குள் அகப்பட்ட அபலைப் பெண்ணின் மாசு படிந்த வாழ்க்கை தன்னையுணர்ந்து திருந்திய மனமாற்றம் வாழ்வின் இறுதியில் கடமைகள் முடிந்ததும் வசப்படலாம். அதற்கு இறைசக்தி துணை வரலாம். அப்போது தவக்கோலம் நிலைபெறலாம். அதுவரையில் மனம் என்னும் மறைபொருளை மெறுகேற்றலாம். ●

## அக்டோபர் 2015 கடன் தீர்க்க உகந்த நாள், நேரம்

**17.10.2015 – 8.35 AM to 9.25 AM** (புரட்டாசி 30 முதல் 9.25 வரை)

**27.10.2015 – 5.25 PM to 6.15 PM** (ஐப்பசி 10 செவ்வாய் மாலை 5.25 முதல் 6.15 வரை)

**கடன் தீர்க்க:** வாங்கிய கடனை தீர்க்க முடியாமல் சிரமப்படுபவர்கள் மேலே கண்டுள்ள தேதி நேரத்தில் கடனில் ஒரு பகுதியை திருப்பிக் கொடுத்தால் (தவணை முறையில்) கடன் தொகை சிறுக சிறுக அடைபட்டு, கடன் விரைவில் தீர்ந்து விடும். அடுத்த தவணைக்கு எப்படியாவது பணம் கைக்கு வந்துவிடும்.

**கடன் வசூலிக்க:** கொடுத்தக் கடனை வசூலிக்க முடியாமல் சிரமப்படுபவர்கள் சம்மந்தப்பட்டவரிடம் மேலே கண்டுள்ள தேதி நேரத்தில் ஒரு தொகையை எப்படியாவது வாங்கினால் (தவணை முறையில்) கடன் தொகை சிறுக சிறுக வசூலாகி கடன் தொகை விரைவில் முழுவதுமாக வசூலாகிவிடும். அடுத்த தவணைக்கு எப்படியாவது அவருக்கு பணம் வந்து உங்களுக்கு கொடுத்து விடுவார்.

### கடன் கொடுக்க, கடன் வாங்கக் கூடாத நாட்கள்

அஷ்டமி, நவமி, கரி நாள், மரணயோகம், தனியநாள் பிரபாலிரிஷ்ட யோகம் உள்ள நாட்களிலும் பரணி, கிருத்திகை, திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி. நட்சத்திர நாட்களிலும், சந்திராஷ்டம நாட்களிலும், கடன் கொடுக்கல் வாங்கல் கூடாது. கொடுக்கல், வாங்கலில் சிரமம் ஏற்படும்.

பி.இராமசாமி

திடமான நம்பிக்கை அன்னை காமாட்சியம்மன் துணை தீர்க்கமான முடிவு

திருமணப் பொருத்தங்களில் தோல்விகள் பெருகி வருகின்றன. சென்னையில் 2014ஆம் ஆண்டு மட்டும் 6400க்கு மேல் விவாகரத்து வழக்குகள் பதிவாகி உள்ளதாக "தினமணி"ச் செய்தி கூறுகிறது. இதற்கு மூன்று காரணங்களைச் சொல்லலாம். 1. சரியான பொருத்தம் பார்க்காமல் செய்யப்படும் திருமணங்கள் 2. பத்துப் பொருத்தங்களின் அடிப்படையில் செய்யப்படும் திருமணங்கள் 3.தோஷப் பொருத்தங்கள் சரியாக இல்லாமை இத்தகைய தோஷப் பொருத்தங்களையும் அதற்கான பரிகாரங்களையும் பகுத்துக் காணும் பயிற்சி தான்.

# தோஷங்களும் நிவர்த்தி செய்யும் முறைகளும்

எத்தனை எத்தனையோ பரிகாரங்கள் செய்தும் திருமணம் ஆகவில்லையே என்று ஏங்கும் பெற்றோர்கள் பெருகி வருகின்றனர். அவர்களுக்கு நல்வழிகாட்டும் திருமணக் காலத்தைத் துல்லியமாக அறியவும், தோஷத்திற்கு இணையான தோஷம் காணும் முறை அறியவும், பலன் தராத பரிகாரங்களைத் தவிர்த்து வேறு என்ன செய்ய வேண்டும் என்பதறியவும் சிறப்புப் பயிற்சிதான் இது.

## தோஷங்களின் வகைகள்

1. களத்திர தோஷம்
2. மாங்கல்ய தோஷம்
3. புத்திர தோஷம்
4. புனர்பூச தோஷம்
5. பிரம்மஹத்தி தோஷம்
6. விஷக்கன்னியாதோஷம்
7. திருமணத்தடை
8. செல்வக்குறைபாடு
9. ஆயுள் தோஷம்
10. காளசர்ப்ப தோஷம்
11. பிதுர் தோஷம்
12. கடன் பிரச்சனை

ஒன்பது கிரகங்களால் உண்டாகும் இத்தகைய தோஷங்களை இதே கிரகங்களால் சமன் செய்தல், சமன் செய்ய முடியாத நிலைக்கு, மாற்றுவழி, மற்றும் எளிய பரிகாரங்கள் பற்றி பயிற்சியளிக்கப்படும்.

**காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை**

| கரூரில் | கோவையில் | சேலத்தில் | விழுப்புரத்தில் |
|---|---|---|---|
| **10102015 சனி**<br>PL.A.ரெசிடென்சி<br>ICICI வங்கி மாடி<br>8, பழைய பைபாஸ் ரோடு, பேருந்து நிலையம் அருகில்<br>கரூர் 1 | **11102015 ஞாயிறு**<br>திவ்யோதயா சென்டர்<br>19, கீதா ஹால்ரோடு<br>ஜங்சன் எதிரில்,<br>கோயம்புத்தூர் | **17102015 சனி**<br>சாந்தாஸ்ரமம்<br>செரிரோடு, மத்திய கூட்டுறவு வங்கி எதிரில்<br>சேலம் 1 | **18102015 ஞாயிறு**<br>ASG கெஸ்ட் ஹவுஸ்<br>புதிய பேருந்து நிலையம் எதிரில்,<br>விழுப்புரம் |

**முன் பதிவு முக்கியம்**

**பயிற்சிக்கட்டணம் ரூ.1200/ மட்டும் (நபர் ஒன்றுக்கு)**

இருவேளை தேநீர், மதிய உணவு, எழுதுகோல், பயிற்சிப் புத்தகம் இலவசம்.

பயிற்சியளிப்பவர்: வாஸ்து, சோதிட ஆய்வாளர், மற்றும் பயிற்சியாளர், திருமணப் பொருத்த வல்லுநர், சோதிட கலாநிதி, சோதிட மாமணி

**புலவர் இளங்கோவன்.வி. எம்.ஏ.எம்.எட்(தமிழ்) எம்.ஏ. (சோதிடம்)**

19 மூன்றாம் தெரு, இராசாசிநகர், அரியலூர் – 621 713.

**அனைத்து வகை தொடர்புக்கும்: 94433 10477**

துல்லியமான திருமணப் பொருத்தம் காண கட்டணம் ரூ.300/-

அனைத்து விபரங்களும் தெளிவாக எழுதி கூரியரில் அனுப்பி வைக்கப்படும்.

# செவ்வாய் தோஷ செயல்பாடு மூலநூல்கள் காட்டிடும் நிலைப்பாடு

**கே.எஸ்.எம்.ஜெய்வேலு**
M.A., D.A., M.A., M.Ed., M.A., (ஜோதிடம்)
செல் : 94428 75683

தற்கால நிலையில் பெரும்பாலான திருமணங்கள் நடைபெறாததிற்கு செவ்வாய் தோஷம் ஒரு காரணம். தற்பொழுது அடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பது போல ஜோதிடம் தெரியாத பலர் செவ்வாய் 2,4,7,8,12 இலக்கினத்திலிருந்து இருந்தால் தோஷம் என கூறி விடுகிறார்கள். உண்மையில் செவ்வாய் தோஷத்தை எப்படி அறிவது என 1. இராசியில் செவ்வாய் உள்ள இடம் 2. செவ்வாயுடன் சேர்ந்த கிரக அடிப்படை 3. செவ்வாயை பார்க்கும் கிரகங்கள் 4. செவ்வாய் உள்ள நட்சத்திரங்கள் அடிப்படையில் ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் உண்டா இல்லையா என நமது முன்னோர்கள் தங்களுடைய நூல்களில் கூறியுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் ஜோதிடம் பார்ப்பவர்கள் ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் உண்டா? இல்லையா என எளிதாக அறியலாம் என மூலநூல்கள் முன்னிறுத்தி காட்டுகின்றன.

**இராசி அடிப்படையில்**

ஜோதிட வல்லுநர்கள் ஜாதகத்திலுள்ள 12 இராசிகளை கீழ்கண்டவாறு வகைப்படுத்தி வழங்கி உள்ளார்கள்

| | | | |
|---|---|---|---|
| உபயம் | சரம் | ஸ்திரம் | உபயம் |
| ஸ்திரம் | | | சரம் |
| சரம் | | | ஸ்திரம் |
| உபயம் | ஸ்திரம் | சரம் | உபயம் |

சர இராசிகளில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் இல்லை என ஜாதக சந்த்ரிகை என்னும் நூல்

**சர ராசிகதோ பௌம:**
**சதுரஷ்டவ்யயே த்வயே!**
**லக்னேபாப விநாசஸ்யாத்**
**சே ஷேப்பாவோ விசேஷத**

ஜாதக சந்திரிகை நூலும் இதையே கூறுகிறது. எனவே இராசி கட்டத்தில் கீழ்கண்ட இடத்தில் இருந்தால் தோஷம் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | |
| | | | செவ் |
| செவ் | | | |
| | | செவ் | |

அடுத்து ஸ்திர இராசிகளான சிம்மம், விருச்சிகம், கும்பம், ஆகிய இராசிகளில் செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை.

**ஸிம்ஹ கும்ப நதோஷஸ்யாத்**
**பரத்யக்ஷம்** என சிம்மம், கும்பத்தில் செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை. இதையே ஜாதக சந்திரிகை என்னும் நூல் செவ்வாய் ஆட்சி இடமான மேஷம், விருச்சிகம் உச்ச நீச்ச இடமான மகரம், கடகம் இருந்தால் தோஷம் இல்லை என்கிறது.

எனவே ஸ்திர இராசிகளான மேஷம், விருச்கிகம், கும்பம், செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை என கீழ்கண்ட படி அறியலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | | | |
| | | | செவ் |
| | செவ் | | |

எனவே சரம், ஸ்திர இராசிகளில் இருந்தால் தோஷம் இல்லை. அடுத்து ரிஷபம், மிதுனம், கன்னி, தனுசு, மின இராசிகளில் இருந்தால் செவ்வாய் தோஷம் உண்டா இல்லையா என பார்க்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| மீனம் | | ரிஷபம் | மிதுனம் |
| | | | |
| | | | |
| தனுசு | | | கன்னி |

எனவே மேற்கண்ட விதிபடி கீழ்கண்ட இராசி கட்டத்தில் செவ்வாய் இருந்தால் தோஷம் ஆகும்.

இதில் ஜாதக சந்திரிகை படி

**வயயேச குஜ தோஷஸ்**
**யத்கண்யா மிதுனாயோர் விரு**

என்ற கருத்துப்படி — 12ஆம் இராசி மிதுனம் (அ) கன்னியானால் தோஷம் இல்லை. மேலும்

**"அஸ்டமே குஜ தோஷ்யாத்**
**கனயா மகர யோர் வினா**
என்ற கருத்துப்படி

| | | | |
|---|---|---|---|
| | | 4ம் இடம் | 12ம் இடம் |
| | | | |
| 8ம் இடம் | | | |
| | | 4ம் இடம் | 12ம் இடம் 8ம் இடம் |

*கன்னி, மகரம் 8ஆம் இடமானால் தோஷம் இல்லை.*

| | | | |
|---|---|---|---|
| | | | 12ம் இடம் |
| | | | |
| 8ம் இடம் | | | |
| | | 4ம் செவ் | 12ம் இடம் 8ம் இடம் |

**சதுர்த்தே குஜ தோஷ்யாத்துலா**

*விருஷ பயோர் வினா — என்ற கருத்துப்படி 4ஆம் இடம் ரிஷபம் மகரம், துலாம் அதில் செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை.*

*மேலும்* **அஷ்டமே பௌம தோஷஸ்து**

**தனுர் மீனத்வயோர் விநா**

*என்ற கருத்துப்படி 8ஆம் இடம் தனுசு மீனம் ஆனால் தோஷம் இல்லை*

| | | | |
|---|---|---|---|
| 8ம் இடம் | | | |
| | | | |
| | | | |
| 8ம் இடம் | | | |

*மேலும்* **அஷ்டமே பௌம தோஷஸ்து**

**தனூர் மீனத்வயோர் விந**

*எனவே 8ஆம் இடம் மீனமானால் தோஷம் இல்லை.*

| | | | |
|---|---|---|---|
| | | 12ம் செவ் | |
| | | | |
| | | | |
| | | 12ம் செவ் | |

*மேலும்* **தவாதசே பௌம தோஷஸ்து**

**வருஷ தௌளிக் யோர் விந**

*12ஆம் இடம் ரிஷபம், துலாம் எனில் தோஷம் இல்லை.*

*எனவே மேற்கண்ட தகவல்களை கீழ்கண்டபடி அறியலாம்.*

| | | | |
|---|---|---|---|
| 8ம் இடம் | செவ் சரம் | 4ம் இடம் | 12ம் ராசி 8ம் இடம் |
| செவ் | | | செவ் சரம் |
| செவ் சரம் | | | செவ் |
| 8ம் இடம் | ஆட்சி செவ் | 4ம் இடம் செவ் சரம் | 12ம் ராசி |

**பார்வை அடிப்படையில் செவ்வாய் தோஷம்**

*செவ்வாயை புதன், குரு, சுக்கிரன், இராகு, கேது, சனி ஆகிய கிரகங்களுடன் இருந்தாலும் பார்த்தாலும் செவ்வாய் தோஷம் இல்லை.*

**நட்சத்திர அடிப்படையில்**

*செவ்வாய் தன்னுடைய சொந்த நட்சத்திரமமான சித்திரை, அவிட்டம், மிருகசீரிடம் நட்சத்திரத்தில் இருந்தாலும், கேதுவின் நட்சத்திரமான மகம், மூலம், அசுவினியில் இருந்தாலும் தோஷம் இல்லை என ஜாதக பாரிஜாதகம் என்ற நூல் கூறுகிறது.*

*செவ்வாய் உள்ள இராசி அதிபதி இலக்கின கேந்திரத்தில் இருந்தால் தோஷம் இல்லை.*



*மேலும் ஜாதக சந்திரிகை நூலின் படி செவ்வாய் கடகம், சிம்மத்தில் இருந்தால் தோஷம் இல்லை. யவனேஸ்வரர் கருத்துப்படி ஆட்சி, உச்சம், நீசம் பெற்ற செவ்வாய்க்கு தோஷம் இல்லை. ஜலஇராசி ஆன கடகம் மகரத்தில் தோஷம் இல்லை.*

*தேவகேரளம் நூல்படி கும்பம், சிம்மம், செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை.*

*யவனேஷ்வரர் கருத்துப்படி செவ்வாய் சந்திரன் புதன், குரு, இராகு, கேது உடன் இணைந்தோ (அ) பார்வை பெற்றால் தோஷம் இல்லை. ஜாதக பாரிஜாதகம் நூலின் கருத்துப்படி கேதுவின் நட்சத்திரமான மகம், மூலம், அசுவினியிலும், உத்திராடம், திருவோணம், அனுச நட்சத்திரத்தில் இருந்தால் தோஷம் இல்லை.*

*செவ்வாய் உள்ள இராசி அதிபதி கேந்திரம் திரிகோணத்தில் இருந்தால் தோஷம் இல்லை.*

*இதன் அடிப்படையில் செவ்வாய் தோஷம் இல்லாத இடங்களை கீழ்க்கண்டவாறு சுருக்கமாக குறிக்கலாம்.*

| | | | |
|---|---|---|---|
| **மீனம்** 8ஆம் இடமானால் தோஷம் இல்லை | **மேஷம்** ஆட்சி சரராசி தோஷம் இல்லை | **ரிஷபம்** 4,12ஆம் இடமானால் தோஷம் இல்லை | **மிதுனம்** 8ஆம் 12ஆம் இடமானால் தோஷம் இல்லை. |
| **கும்பம்** தோஷம் இல்லை | பாவகம் ஜாதக பாரி ஜாதகம் நூல் படி அசுவினி, மகம், மூலம், ஜாதக சந்திரிகை நூல் படி, அனுசம், திருஓணம், உத்திராடம், நட்சத்திரத்தில் செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை யவனேசர் கருத்துப்படி ஜாதக சந்திரிகை நூல்படி ராகு, கேது, சனி, புதன், சந்திரன், குரு, பார்வைபடி சேர்க்கைபடி தொடர்பு பெற்றால் செவ்வாய் தோஷம் இல்லை. | | **கடகம்** நீசம், சரம் தோஷம் இல்லை |
| **மகரம்** உச்சம் சரம் தோஷம் இல்லை | | | **சிம்மம்** |
| **தனுசு** 8ஆம் இடமானால் தோஷம் இல்லை. | **விருச்சிகம்** ஆட்சி | **துலா** சரம் தோஷம் இல்லை | **கன்னி** 12ஆம் இடமானால் தோஷம் இல்லை. |

# அதிர்ஷ்டம் தரும் ஆதாய பாவம்



**கோட்டையூர்**
**என். சிவசுப்பிரமணியம்**
**செல்: 94431 37989 / 95005 96309**

எதிர்காலம் சிறப்பாக அமைய எல்லோருமே எந்த வகையிலாவது தனக்கு அதிர்ஷ்டமோ, ஆதாயமோ அமைய வேண்டும் என்று அன்றாடம் நினைக்கின்றோம். வேண்டுகின்றோம். இதற்காக போராடுகிறோம். இரவு பகல் பாராது உழைக்கின்றோம். நாம் நினைத்தது சில நேரங்களில் நிதர்சனமாக அமைந்து விடுகிறது. சில நேரம் துரதிர்ஷ்டமாகவும் போய்விடுகிறது. எல்லாம் நேரம் தான் என்று சொல்லிக் கொள்வோம்.

நாம் இவ்வுலகில் பிறந்தவர்கள் ஆண் பெண், யாராக இருந்தாலும் ஏதேனும் ஒரு வகையில் ஆதாயத்தை அடைந்து நாம் யார் என்று முத்திரை பதிக்க முன் ஜென்மத்தை பொருத்து நம் பிறவிகள் அமைகின்றது. இன்று எல்லோருமே போட்டி போட்டுக் கொண்டு தனக்கு நல்லதொரு வாய்ப்பை தேடி வருவாய் நிலையாக வருவதற்கு வழியை தேடுகின்றோம். அந்த வகையில் ஜாதகத்தில் 11ஆம் பாவம் தான் ஒருவருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகளையும் பலவித வெற்றிகளையும் ஆதாயத்தையும் தருகிறது. இன்னும் சொல்லப்போனால் இந்த பாவத்தில் இலாபம் மட்டும் அல்ல. ஒருவரின் உயர்வு, மூத்த சகோதர, இனங்கள், முக்கிய வி.ஐ.பிக்கள் தொழில் நுட்பம், பூமி விருத்தி, பொன், பொருள் அம்சம், தனக்கு கிடைக்கக்கூடிய கொடுப்பினைகள் தன் உழைப்பிற்கு ஏற்ற ஊதியங்கள் அன்னியதேசம், இளைய தாரம், பவர், காரியசித்தி இதன் அம்சங்கள் யாவும் இந்த 11ஆம் பாவத்தால் நமக்கு கிடைக்கின்றது.

இப்படிப்பட்ட இந்த பாவம் ஒருவர் பிறப்பு ஜாதகத்தில் எந்த வகையிலாவது பலமுடையதாக அமைய வேண்டும். ஜனனம் கோச்சாரம் 11இல் கிரக நிலைகள் ஒருவருக்கு உயர்வைத் தரும்.

சாஸ்திர ரிஷிகள் 11இல் ஏதேனும் கிரகங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும் அல்லது பார்க்க வேண்டும் என கட்டளை இட்டுள்ளார்கள். அது மட்டும் அல்ல. இந்த பாவத்தில் தான் நவக்கிரகங்கள் யாராக இருந்தாலும் இங்கே இருக்கலாம். அவர்கள் இயற்கை சுபரோ, பாபரோ பாகுபாடு இல்லை.

11இல் உச்சம் ஆட்சி பெற்ற கிரகம் அமையும் பாரி ஜாத யோகமாகும். பாரிஜாத யோகம் பல பேர் ஜாதகங்களை பாராட்டுவார்கள். பலவகை அனுகூலம் கொண்டவர். சில நுட்பங்களை தெரிந்தவர். வருவாய்களை வகைப்படுத்திக்குவார். பிறந்ததின் பலனை பெருபவர், எப்போதும் கையிருப்பில் பணம் இருக்கும். நிலையான வருவாய்கள் வருகின்ற மாதிரி வாய்ப்பும், முதலீடும் செய்திருப்பார்கள். நூதன தொழில்களால் ஆதாயங்கள் அமையும். நட்பு கிரகங்கள் இங்கே இருந்தாலும் இதில் பாதி பலன்களே பாதிப்பான கிரக நிலைகள் இருந்தால் இப்பாவத்திற்குரிய பலன் யோகம் பாதிப்பே.

இந்த 11ஆம் பாவத்தில் இயற்கை பாபர்கள் சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது இவர்கள் இருந்து இவர்களுடைய தசாபுக்தி அந்தர காலம் எந்த வகையிலாவது ஆதாயம், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள், எதிர்பாராத, வருவாய், பதவி, பவர், பணியாட்கள் இந்த வகை அம்சங்களால் சகாயம் அடைவார். சில நூதன அறிவாற்றால்களாலும் தன்னை யாரென்று பிரஸ்தாப படுத்திக் கொள்வர்.

சர இலக்கினங்களுக்கு 11ஆம் பாவம் பாதக ஸ்தானம் என்று சொல்லப்பட்டாலும் பாவர்கள் இங்கே இருந்தால் விமோசனம். திதி, சூன்யம் ஆனால் நன்மை. சுபர்கள் தனியாக இங்கே இருக்காமல் பிறருடன் சேர்ந்து இருந்தால் யோகமே.

காலபுருச இராசிப்படி கும்ப இராசியில் ஏதேனும் ஒரு கிரகம் இருக்க வேண்டும். இதனால் பிறரை சார்ந்து முயற்சியால் இவர்களும் ஆதாயம் அடைவார்கள்.

இயற்கை சுபர்களாக குரு, சுக்கிரன், புதன், சந்திரன், இவர்கள் யாரேனும் 11இல் இடம் பெற்று இவர்களது தசாபுக்தி அந்தர காலம் ஒரு மனிதருக்கு வந்தால் அவர்கள் நிலையில் இருந்து எந்த வகையிலும் உயர்வார்கள். அதிர்ஷ்ட லெட்சுமி இவர்கள் வசம் நிற்கும், தொட்டது துலங்கும், சொசைட்டியில் ஆணோ, பெண்ணோ மதிப்பு இருக்கும்.

ஜனனத்தில் 11ஆம் பாவத்தில் ஏதேனும் கிரகங்கள் இல்லை என்றால் மதி என்று சொல்லக்கூடிய சந்திரன் ரீதியில் (சந்திர இலக்கினபடி) 11இல் ஏதேனும் கிரகங்கள் இருக்க வேண்டும். மத்திம வயதுக்கு மேல் இவர்கள் யோகபலன்களை அடைவார்கள். தாமதமான அதிர்ஷ்டமே.

விதி, மதி இதன் அடிப்படையில் 11இல் கிரகம் இல்லாதவர்கள் கதி என்று சொல்லக்கூடிய சூரியனுக்கு 11இல் ஏதேனும் ஒருகிரகம் இடம் பெற வேண்டும். இப்படி இருப்பவர்கள் பின் வயதில் அதிர்ஷ்ட வாய்ப்பினை அடைவார்கள். புராதன சொத்துக்கள் எப்படியும் கிட்டும்.

கோச்சார அடிப்படையில் இந்த 11ஆம் இடத்தில் வருட கிரகங்களான குரு, சனி, இராகுவோ அல்லது கேதுவோ வரும் காலம் உங்க முயற்சி, முதலீடு, எதிர்பார்ப்பு, அதிர்ஷ்ட வாய்ப்பு இவற்றை ஓரளவு அனுபவிக்க முடியும்.

கோச்சார அடிப்படையில் இந்த 11ஆம் இடத்தில் மாத கிரகங்களான சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், இவர்கள் வரும் காலம் நீங்கள் எடுக்கக்கூடிய வாய்ப்பு அந்த மாதத்திற்குள் ஓரளவு ஈடேறும்.

கோச்சார அடிப்படையில் இந்த 11ஆம் இடத்திற்கு சந்திரனின் தின சஞ்சாரம் அமையும் காலம் அதிர்ஷ்டம் ஆதாயம் கைகூடும்.

இந்த 11ஆம் பாவத்தில் சூரியன் ஓர் ஆண் ஜாதகத்தில் இடம் பெற்று அவர் பகலில் பிறந்தவர் ஆனால் அவர் ஜாதகத்தில் இருக்கக்கூடிய எத்தோஷமும் நிவர்த்தி அடைந்து எதிர்காலத்தை பிரகாசமாக அடைவார்.

இந்த 11ஆம் பாவத்தில் சந்திரன் ஒரு பெண் ஜாதகத்தில் இடம் பெற்று அவர் இரவில் பிறந்தவர் ஆனால், அவள் ஜாதகத்தில் எத்தோஷமும் நிவர்த்தி அடைந்து எதிர்காலத்தை பிரகாசமாக அடைவார்.

எந்த ஒரு பாவமும் இயங்குவதற்கு அந்தந்த பாவங்களுக்கு 11ஆம் பாவம் எந்த வகையிலாவது பலம் கிரக சேர்க்கை தொடர்பு இருந்தால் தான் அத்தகைய பாவங்கள் கூட சரியாக இயங்கும். அங்கே இருக்கக்கூடிய கிரகம் தனக்கு உண்டான காரகத்துவம், ஆதிபத்தியம் இதற்குரிய பலன்களை இவரது தசாபுக்தி அந்தரத்தில் பலனை பரிணமிப்பார்கள்.

**பாதிப்பான 11ஆம் பாவத்திற்கு பரிகாரம்...**

உங்க 11ஆம் இடம் நெருப்பு இராசியானால் தீபம் போடுவது, ஆலயத்திற்கு நித்திய தீப வழிபாடுகளைச் செய்வது, விளக்குகள் தானம் செய்வது உகந்ததே. வள்ளலார் நிலையத்தில் எண்கோண பீடத்தில் அருட்பெருஞ்ஜோதி தரிசனம் 11 வருடங்கள் அல்லது 11 தடவை தரிசிப்பது அங்கு தானம் செய்வது உகந்தது.

உங்க 11ஆம் இடம் பூமி இராசியானால் பூமியில் விளையும் பொருட்கள், பூமி, தானம், கால்நடை தானம் செய்வது ஆலயங்களுக்கு கொடுப்பது உகந்ததே.

உங்க 11ஆம் இடம் நீர் இராசியானால் இறைவனுக்கு அபிஷேகம் செய்வது அபிஷேக பொருட்களை வாங்கிக் கொடுப்பது திரவப் பொருட்கள் கொடுப்பது அல்லது கிணறு, போர்வெல் ஆலய கோமுகை இவற்றுக்கு உதவுவது உகந்தது.

உங்க 11ஆம் இடம் காற்று இராசியானால் இறைவன் இறைவிக்கு பாமாலை, பூமாலை, ஸ்லோக பாராயணம் புக், படம், அலங்காரம் இப்படியாக வழிபடுவது காலபுருச தத்துவப்படி கும்ப ஆதாய ஸ்தானம் என்பதால் குபேரன், ஆகர்ஷண பைரவா பைரவி, லெட்சுமி, நரசிம்மர், காயத்திரி, தேவி, ஞான சரஸ்வதி, சித்தர்கள் பீடம் இவர்களை எல்லாம் உள் அன்போடு தரிசித்தால் உங்களுக்கு பாதிப்பான 11ஆம் பாவத்தின் பலன் எப்படியாவது விமோசனமாகி இவ்வுலகில் பிறந்ததின் பலனாக வாழ்க்கையை அனுபவிப்பீர்கள். கலியுக இராஜாவாகிய சனீஸ்வரனையும் வணங்க வேண்டும்.

11ஆம் பாவத்தினால் பாரினில் பவர், புகழ் மக்கள் செல்வாக்குடன் வாழ்ந்த சரித்திர புருஷர்கள் உதாரண ஜாதகம் சில.

| | | | |
|---|---|---|---|
| சுக் | ராகு | | ல |
| சூரி<br>புத | ஜெயலலிதா<br>24.2.48<br>மகம் | | சனி |
| | | | சந்<br>செவ் |
| குரு | | கேது | |

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி<br>சந் | சுக் |
| கேது | கருணாநிதி<br>3.6.1924<br>மிருகசீரிசம் | | ல |
| செவ் | | | ராகு |
| | குரு | சனி | |


| | | | |
|---|---|---|---|
| சந் | | | கேது |
| | கமல்<br>7.11.1954<br>உத்திரட்டாதி | | குரு |
| செவ் | | | ல |
| ராகு | சுக் | சூரி<br>புத<br>சனி | |

| | | | |
|---|---|---|---|
| செவ் | | ல<br>புத<br>சூரி<br>சனி<br>சந் | |
| | இளையராஜா<br>2.6.1943<br>ஆயில்யம் | | குரு<br>சுக்<br>ராகு |
| கேது | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| குரு | | ராகு | |
| | ஷங்கர்<br>17.8.63 | | சுக்<br>சந் |
| சனி | | | சூரி<br>புத |
| கேது | | ல | செவ் |

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி<br>சுக் | ல<br>சனி | கேது |
| | டெண்டுல்கர்<br>24.4.73 | | |
| செவ்<br>குரு | | | |
| ராகு<br>சந் | | | |

ஆக இநத் ஜாதகர் யாவும் இலக்கினத்திற்கு அதிர்ஷ்ட ஆதாய வீடான 11இல் கிரகங்கள் அமைப்பே. அதனால் அவர்கள் நினைத்து பார்க்காத அளவிற்கு பணம், பதவி, புகழ் மக்கள் மத்தியில் வாழ்கிறார்கள் என்பது சில உதாரணம் அறியவும்.



**உங்கள் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் 24 மணி நேரத்தில் தீர்வு ஆரம்பம்**
**21 நாட்களுக்குள் தீர்வு சிறிதளவும் உணர முடியவில்லை என்றால்**
**உங்கள் பணம் உங்கள் கையில் இது என் உறுதிமொழி**
ஆரா ஷீல்டு தெரபி ஆராய்ச்சியாளர் **திரு.பி.என்.பார்த்திபன்**

1 மின்காந்த கதிர்வீச்சு
3 வாஸ்து குறைபாடுகள்
5 தீய சக்திகள்
2 ஜியோபதிக் ஸ்ட்ரெஸ்
4 கண் திருஷ்டி
6 பில்லி, சூனியம்

நீங்கள் சந்திக்கும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மூல காரணம் ஒன்றே ஒன்று மட்டுமே. அது உங்களின் ஆரா (புறக் கண்களுக்குத் தெரியாத உங்களின் உடலைச் சூழ்ந்துள்ள உயிர் சக்தி) எதிர்மறையான **மின்காந்த கதிர்வீச்சு (Electromagnetic Radiation), பூமிதோஷம் (Geopathy), வாஸ்த்து தோஷம், கண் திருஷ்டி, ஆவிகள், செய்வினை (Black Magic)** போன்ற **அமானுஷ்ய தீய சக்திகளின்** தாக்குதல்களால் பலமிழந்து போவதே ஆகும். இப்படிப்பட்ட அதிபயங்கரமான 6 விதமான எதிர்மறை சக்திகள் உங்கள் ஆராவை (உயிர்ச்சக்தியை) தாக்காமல் ஒரு சக்தி வேலி **(Energy Shield)** அமைத்து விட்டால், நீங்கள் சந்திக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவர்களால் காரணம் கண்டுபிடிக்க முடியாத உடல் ஆரோக்கியப் பிரச்சனைகள், மன அழுத்தம்/சோர்வு/பயம்/ அடிக்கடி தற்கொலை எண்ணம் மேலோங்கி இருத்தல் போன்ற மனரீதியான பிரச்சனைகள், பொருளாதாரத் தடை, தூக்கமின்மை, தொடர் தோல்விகள், திருமணத் தடை, உறவுகளிடையே ஏற்படும் போராட்டங்கள், படிப்பில் கவனமின்மை மற்றும் காரணம் என்னவென்றே கண்டுபிடிக்க முடியாத அமானுஷ்யமான பிரச்சனைகள் அனைத்திற்கும் **24 மணி நேரத்தில்** இருந்து 21 நாட்களில் தீர்வு ஆரம்பிப்பதை உணர வைக்கும் அற்புதம் **உலகிலேயே முதன்முதலாக.** ஆரா ஷீல்டு தெரபி ஆராய்ச்சியாளர்



**திரு.பி.என்.பார்த்திபன்** அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட, 56 வகையான அரிய நானோ மினரலைக் கொண்டு (Gems Stone) உருவாக்கப்பட்ட **ஆராமேக்ஸ்** ஆரா ஷீல்டு தெரபி லாக்கெட்.

aura maX
Aura Shield Locket



**கடைசி முயற்சி**

மருத்துவம், மாந்த்ரீகம், ஜோதிடம், பரிகார பூஜை, வாஸ்து, மூலமாகவும் திருப்தியான தீர்வு உணர அதிர்ஷ்டக் கற்கள், கயிறு, தாயத்து, தகடு இவை அனைத்தின் முடியவில்லையென்றால் உங்கள் முன் உள்ள கடைசி ஆயுதம் **ஆராமேக்ஸ் மட்டுமே!**

B Kay Building, 2nd Floor, No.154/105, Swamy Naicken Street,
Chintadripet, Chennai - 600 002. **Phone : 044 2854 5689**

**Mob: +91 99620 78906, +91 72999 33669**
**www.auramax.in**

# அனைத்தும் இதில் அடக்கம், இதில் இல்லை என்றால்?

# ப்ராணா

# வேறு எதிலுமே இல்லை.

**நித்ய ஹோமகுண்டம்**



12 மூலமந்திர ஒலிப்பான்

108 அரிய மூலிகை ஹோம சாம்பிராணி

## பத்திரிக்கைகளில் வந்த உண்மைச் செய்தி

1984 ஏப்ரல் 3ல் போபால் நகரில் யூனியன் கார்பைட் தொழிற்சாலையிலிருந்து கசிந்த நச்சு வாயுவினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஈசல்கள் போல் மடிந்திட, நகரின் மையப் பகுதியில் இருந்த ஒரு குடும்பத்தினர் மட்டும் எந்தப் பாதிப்புக்கும் ஆளாகாது தப்பித்தனர். அதற்குக் காரணமாக விஞ்ஞானிகளால் ஆராய்ந்து ஒப்புக் கொள்ளப்பட்டது, காலங்காலமாக அந்த குடும்பத்தினர் நித்திய ஹோமம் (தினம் தினம் ஹோமம்) செய்து இறை பாதுகாப்பு கவசத்தைப் பெற்றிருந்ததுதான்.

**உலகிலேயே முதன்முதலாக ஆன்மீகமும் தொழில்நுட்பமும் இணைந்த அற்புதம்**

மகாசக்தி வாய்ந்த ப்ராணா மின்சார ஹோமகுண்டம் மூலம் வீட்டிலே எளிமையாக ஐந்தே நிமிடத்தில் 12, மூலமந்திர ஹோமங்களை தினமும் செய்வதன் மூலம் உலகமே அதிசயித்து வியந்த இறை பாதுகாப்பு கவசம் உங்கள் குடும்பத்துக்கும் நிச்சயம்.

## ப்ராணா வழங்கும் 12 முக்கிய ஹோம மந்திரமும் அதன் பலன்களும்

1. நிர்விக்ன மந்திரம் - நவக்கிரக தோங்கள் மற்றும் அனைத்துவிதமான தடைகளும் நீங்கிட, 2. காயத்ரி மந்திரம் - அனைத்துக் காரியங்களிலும் சூரியனைப் போல் பிரகாசித்திட, 3. தன்வந்திரி மந்திரம் - என்றும் நோயற்ற ஆரோக்கிய வாழ்வினைப் பெற்றிட, 4. குபேர மந்திரம் - தடைகளற்ற பெரும் செல்வம் பெற்றிட, 5. வாஸ்து மந்திரம் - அனைத்துவிதமான வாஸ்து தோங்களும் நீங்கி ஆக்கப்பூர்வமான சக்தி பெற்றிட, 6. சுதர்சன மந்திரம் - ஏவல், பில்லி, சூன்யம் போன்ற தீய சக்திகளை விரட்டிட மற்றும் தோங்கள் போக்கிட, 7. மஹாம்ருதியுஞ்ஜய மந்திரம் - துன்பத்துடன் கூடிய அகால மரணம் ஏற்படாமல் இருக்க, 8. ஸ்வஸ்தி மந்திரம் - விபத்தில்லாத பத்திரமான பிரயாணத்திற்காக, 9. துர்கா மந்திரம் - அனைத்து செயல்களிலும் வெற்றி பெற, 10. ஹரிஹரபுத்ர ஐயப்ப மந்திரம் - அரசாங்க ரீதியான முயற்சிகளில் அனுகூலமான பலன் பெற, நல்ல ஆளுமை சக்தி ஏற்பட, 11. நாராயண மந்திரம் - ஜனங்களை ஈர்க்கும் சக்தி ஏற்பட, தன் ஆளுமை சக்தியை நிலை நிறுத்திட, 12. மஹாதேவ மந்திரம் - மனதில் தைரியம் ஏற்பட, கஷ்டங்களில் மனம் துவளாமல் துணிவை உண்டாக்க.

B Kay Building, 2nd Floor, No.154/105, Swamy Naicken Street,
Chintadripet, Chennai - 600 002. **Phone : 044 2854 5689**

**Mob: +91 99620 78906, +91 72999 33669**
**www.auramax.in**

# மாமனிதர் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் ஜாதகம் K.P,முறையில் ஓர் ஆய்வு





ஜோதிஷ ஞான சிரோன்மணி
"புஷ்கராம்ஸம்"
**கடகம் இராமசாமி**
செல் : 94431 67046

டாக்டர் அப்துல்காலம் அவர்கள் கடக இலக்கினம் உபநட்சத்திர அதிபதி குரு.1,2,9,10,12 பாவங்களோடு குரு தொடர்பு கொள்கிறார். ஆதலால், படிக்க வேண்டும் என்ற எண்ணம் சுறு சுறுப்பு, உயர்கல்வி நாட்டத்தை தூண்டும் கிரகமாக குரு அமைவு.

| | | | |
|---|---|---|---|
| IX 15.38.23 ராகு 11.37 | X 17.32 | XI 17.58 | XII 16.55 |
| VIII 11.10 14.23.25 | பிறப்பு 15.10.1931 01.15 AM இராமேஸ்வரம் அயனாம்சம் 22° 48' 25" | | ல 15.45 குரு 25.13 |
| VII 15.45 | | | II 14.23.25 |
| சனி 24.16 VI 16.55 | சந் 13.6 V 17.58 | செவ் 26.2 IV 17.32 சுக் 7.24 | கேது 11.37 III 15.38 புத 24.55 சூரி 27.41 |

4 வது வீட்டின் குறிகாட்டிகள் சூரியன் கேது, புதன், செவ்வாய், சனி ஆகும். இவர் கணிதம், பொறியியல் யந்திரங்கள் சம்பந்தப்பட்ட கல்வி பயின்றார்.

குரு 9வது வீட்டையும் செவ்வாய் 10வது வீட்டையும் சூரியன், புதன் 9வது வீட்டையும் பார்க்கின்றன. செவ்வாய் 4வது வீட்டில் அமைந்தது இவரை பொறியியல் கல்வி துறையில் இழுத்தது.

9வது வீட்டின் குறிகாட்டிகள் குருவும், செவ்வாயும் ஆகும். தடைகள் மீறி படிப்பு ஏற்பட்டது.

**கிரகம் குறிகாட்டும் பாவங்கள்**

சூரி — 4,3,5,10,12
சந் — 6,4,7,8,1
செவ் — 1,4,6,3,5
புத — 4,3,5,10,3,12
குரு —1,3,12,6,9
சுக்கி — 8,3,4,11
சனி — 3,6,4,11,7,8
இராகு — 6,7,8
கேது — 4,2,1
பார்ச்சுனா — 3,2 கன்னி $1^{0}3'$

சனிதெசை முடிவு — 9.11.36

இராகு தெசை முடிவு — 9.11.2021

ஒருவர் எந்தத்துறையில் பட்டம் பெறுவர் என்பதை அறிய 2,3,4,9,10—வது வீடுகளைப் பார்க்க வேண்டும்.

**உத்தியோகம்:** இவர் புகழ்பெற்ற ஒரு விஞ் ஞானி, பொக்கிரான், அணு ஆயுத சோதனையை இவர் முன்னின்று நடத்தியவர். 10வது வீட்டின் குறிகாட்டிகள் சூரியன், புதன், செவ்வாய் ஆகும். இதில் முக்கிய கிரகம் செவ்வாய் 4 (தனது நாடு) 6—உத்தியோகம் 9—உயர்கல்வி 10—புகழ் 5—புத்தி கூர்மை வீடுகளோடு தொடர்பு. ஜாதகனை குறிக்கும் வீடு ஒன்றோடு தொடர்பு.

**வெளிநாட்டுப் பயணம்:** இவர் உத்தியோகம் சம்பந்தமாக பலமறை வெளிநாடு சென்று வந்துள்ளார். 9வது உபநட்சத்திர அதிபதி குரு 1,3,6,9,12ஐ குறிகாட்டுகிறார். குருவின் வலிமையால் பல முறை வெளிநாடு சென்று வந்துள்ளார்.

**திருமணம்**: 7ஆம் பாவ உபநட்சத்திர அதிபதி சனி 4,6,10 பாவத்தொடர்பு திருமண மறுப்பை குறிகாட்டுகிறது. திருமண முயற்ச்சி வெற்றிபெறவில்லை.

**அரசியல் வாழ்வும் ஜானதிபதியோகமும்**: துவக்கத்திலிருந்து அரசியலில் இவர் இல்லை திடீரென அவருக்கு ஜனாதிபதி யோகம் கிட்டியது. இதுவரை ஜாதகத்தில் 1,6,9,10 ஆம் பாவங்களை செவ்வாய் மட்டும் குறிகாட்டுகிறது. (அரசியலில் உயர்பதவி) இவர் செவ்வாய் திசை கேது புக்தியில், ஜனாதிபதி ஆனார். இவரது 10வது பாவ உபநட்சத்திர அதிபதி 2,6,10,11க்கு குறிகாட்டுவதால் உயர்பதவி ஏற்பட்டது. நாடு போற்றும் உத்தமராக மாணவர்களின் வாழ்வியல் வழியாட்டியாக விளங்கிய மாமனிதர் மின்னும் நட்சத்திரமாக ஜொலிக்கிறார் இவர் ஒரு கர்மயோகி ஆவார்.



# பணத்தை சம்பாதிக்கச் செய்து நஷ்டப்படுத்தும் நலிவுற்ற ஜாதக அமைப்புகள்



ஜோதிட ஆராய்ச்சியாளர்
வேப்பலோடை
**K. விஸ்வநாத்**
செல்: 97158 55358

பண்டமாற்று காலத்திலிருந்து, மனிதன் பண பரிவர்த்தனைக்கு, மாறிய காலத்திலிருந்து, உலக அளவில் பணம்தான் மிகமிக முக்கியமானதாக, மிகவும் அத்தியாவசியமானதாக இருக்கிறது. இன்றைய உலகையும் பணம்தான் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த பணம் பலரிடம் நிரந்தரமாகத் தங்கிவிடுவதில்லை. மிக, மிக அதிக பணப்புழக்கத்துடன், வாழ்க்கையை மிக ஆடம்பரமாக வாழ்ந்துக் கொண்டிருந்தவர்கள் கூட பணகஷ்டத்தினால் வாழ்க்கையை தொலைத்திருக்கிறார்கள். ஒருசில நாடுகள் கூட பணக்கஷ்டத்தினால் வறுமையில் தவித்துக் கொண்டிருக்கிறது. உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக இருக்கும் அமெரிக்கா, பொருளாதாரத்தில் சிறிது வீழ்ச்சியை கண்டதும், உலக நாடுகளில் பல நாடுகள் பொருளாதார நெருக்கடியை சந்தித்தன. சேமிக்கும் பழக்கம் கொண்ட, இந்தியா போன்ற நாடுகள் பொருளாதார நெருக்கடியை, சமாளித்துக் கொண்ட நிலையில், ஆடம்பர செலவுகளில் ஈடுபட்டு, வீண் செலவுகளை செய்யும் மக்கள் கொண்ட கிரீஸ் போன்ற நாடுகள் திவாலாகும் நிலையை எட்டி உள்ளது. கிரீஸ் நாடு ஓர் உதாரணம் மட்டும்தான் இன்னும் எத்தனை நாடுகள் எந்தெந்த நிலையில் இருக்கிறதோ தெரியவில்லை.

நாடுகளின் நிலைகள் இதுபோல் இருக்க தொழில் நிறுவனங்களில் கூட பல நிறுவனங்கள் உலகளவில் தேசிய அளவில் கொடிக்கட்டி பறந்துக் கொண்டிருந்த தொழில் நிறுவனங்களிலும் பல, திவாலாகி இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் இருக்கின்றன. இது தவிர சிறப்பான பணப்புழக்கத்துடன் செல்வ செழிப்பான வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டிருந்த பிரபலங்களில் பலர் கடன் தொல்லையால், தற்கொலை செய்துக் கொண்டதும், சிலர் அன்றாட செலவுக்கே, பணமில்லாமல் அடுத்தவரை அண்டி வாழ்ந்ததும், நாம் அறிந்த விஷயங்கள் தான். இதுபோல் பலபேர் அதில் சிலர் பணத்தை அல்லது சொத்துக்களை காப்பாற்றிக் கொள்கிறார்கள். சிலர் சேர்த்த சொத்துக்களை அல்லது பணத்தை இழந்துவிடுகிறார்கள். இதுபோன்று பணத்தை சம்பாதிக்கச் செய்து பின்பு நஷ்டமடைய வைக்கும், வித்தியாசமான ஆனால் விபரீதமான இந்த நிலை ஜாதகத்தில் இருக்கும், எந்த மாதிரியான ஜாதக அமைப்புகளால் ஏற்படுகிறது என்பதை நாம் பார்ப்போம்.

இது தவிர பணப்புழக்கங்களில் பலவிதமான நிலைகள் இருக்கின்றது. பலர் ஆடம்பரமாக செலவழித்தும் பணப்பற்றாக்குறையே ஏற்படாமல் அதிக பணப்புழக்கத்துடன் வாழ்கிறார்கள். இன்னும் பலர் அதிக வருமானம் பெறுகிறார்கள். ஆனால் வருமானத்துக்கு அதிகமான செலவுகளால் பணப்பற்றாக்குறையுடன் கடன்பட்டு வாழ்கிறார்கள். இதைவிட இன்னும் பலர் ஓய்வு இல்லாமல் அல்லது கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனாலும் அவர்கள் பணப்பற்றாக்குறையுடனே வாழ்ந்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் ஆடம்பர செலவுகளையோ, வீண் செலவுகளையோ செய்வதில்லை. குடும்ப செலவுக்கு ஏற்ற வருமானம் கூட அவர்களுக்கு கிடைப்பதில்லை. பலர் அதிக சிக்கனத்தை கடைபிடித்து கஷ்ட ஜீவனம் நடத்தி சிறிய தொகைக்கு சொத்துக்களை வாங்கி பின்நாளில் அந்த சொத்துக்களின் மீது அதிக விலை கிடைத்து, தன் 40 வயதிற்கு மேல் பின்யோகம் கிடைத்து சிறப்பான வருமானத்துடன் சந்தோஷமான வாழ்க்கை வாழ்கிறார்கள். இன்னும் பலர் தாத்தா அல்லது அப்பா சொத்துக்கள் கிடைத்து தன் 40 வயதிற்கு மேல் பின்யோகம் பெற்று வசதியான வாழ்க்கை வாழ்கிறார்கள். இன்னும் பலர் அப்பா அல்லது மனைவியின் சொத்துக்களுடன் ஆரம்ப காலங்களிலிருந்தே

சொகுசான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

பணப்புழக்கங்களில் இதுபோல் பலவித்தியாசமான, அமைப்புகள், நடைமுறை வாழ்க்கையில் இருக்கிறது. இத்தனை அமைப்புகளையும் நாம் ஜாதக ரீதியாக 5ஆம் அதிபதிகளையும், 5ஆம் இடத்தையும் கொண்டுதான் கணக்கிடவேண்டும். பணப்புழக்கங்களில் பலவிதமான திசைகள் இருப்பதால் ஒவ்வொரு அமைப்புகளையும் நாம் ஒவ்வொருவிதமாக மிகவும் நுணுக்கமாக பிரித்து கணக்கிட வேண்டும். அதில் பணத்தை சம்பாதிக்கச் செய்து பின்பு நஷ்டப்படுத்தும் ஜாதக அமைப்புகளை நாம் பார்ப்போம்.




5ஆம் அதிபதி அல்லது 5ஆம் அதிபதி ஸ்தான அதிபதி 5ஆம் இடத்தில் அமர்வது அல்லது 5ஆம் இடத்தை பார்ப்பது அல்லது 5ஆம் இடத்திற்கு பரிவர்த்தனை பெறுவது சீரான பணப்புழக்கத்தைக் கொடுத்து சிறப்பான முறையில் பணத்தை சேமிக்கவும் வைக்கும். அதனால் இந்த அமைப்பு ஜாதகத்தில் இருந்துவிடுவது, ஜாதகர்களுக்கு சீரான அல்லது சிறப்பான வருமானம் கிடைக்கும் என்பதை தெரியப்படுத்தக்கூடிய பொதுவான அமைப்பு ஆகும். இது தவிர 5ஆம் அதிபதி இலக்கினம் இராசியில் அமர்ந்து விடுவதும் சீரான பணப்புழக்கத்தைக் கொடுக்கும்.

ஆனாலும் 5ஆம் அதிபதிகள் இருவரும் இலக்கினம் இராசிக்கு 5ஆம் இடத்தில் அமர அல்லது 5ஆம் இடத்தை பார்க்க 5ஆம் அதிபதி அமர்ந்த ஸ்தானம் இலக்கினம் அல்லது இராசியில் இன்னொன்றுக்கு 8ஆம் இடமாகவோ 12ஆம் இடமாகவோ அமைந்துவிடுவது பின்யோகம் தான் தரும். இந்த அமைப்புடைய ஜாதகர்களுக்கு தன் 40 வயதிற்கு மேல்தான் பணப்புழக்கம் சீராகும். சிறப்பான பணப்புழக்கமும் ஏற்படும். ஆனால் 5ஆம் அதிபதிகள் 8ஆம் இடத்திலோ, 12ஆம் இடத்திலோ அமர்ந்தாலும் அவர்கள் அமர்ந்த ஸ்தான அதிபதி நல்ல ஸ்தானங்களில் அமர்ந்து 5ஆம் இடத்தை சம்மந்தப்பட்டுவிட்டால் சரியான வயதிலேயே பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும்.

அதனால் பலன்களை கணக்கிடும்பொழுது மிகவும் நுணுக்கமாக கணக்கிட வேண்டும். இது தவிர இலக்கினம் இராசி இரண்டிற்கும் சேர்த்து கணக்கிட்டால்தான் இது போன்று பலன்களை துல்லியமாக பிரித்துக் கூறமுடியும். அதனால்தான் ஆரம்ப காலங்களிலிருந்தே, ஜோதிடரிஷிகள் ஜோதிட முன்னோர்கள், இலக்கினம், இராசி இரண்டையும் இணைத்து பலன்களை கூறவேண்டும் என்று வற்புறுத்தி கூறினார்கள்.

இதுதவிர இலக்கினம் 5ஆம் அதிபதி அல்லது அவர் அமர்ந்த ஸ்தான அதிபதி இலக்கினத்திற்கு 5ஆம் இடத்தை சம்மந்தப்பட்டாலும், இராசிக்கு 5ஆம் இடத்தை சம்பந்தப்பட்டாலும் ஜாதகருக்கு சீரான பணப்புழக்கம் இருக்கும். அதே போல் இராசிக்கு 5ஆம் அதிபதி அல்லது அவர் அமர்ந்த ஸ்தான அதிபதி, இராசிக்கு 5ஆம் இடத்தை சம்மந்தப்பட்டாலும், இலக்கினத்திற்கு 5ஆம் இடத்தை சம்மந்தப்பட்டாலும், ஜாதகருக்கு சீரான பணப்புழக்கம் இருக்கும். ஆனால் 5ஆம் அதிபதிகள் அமர்ந்த ஸ்தானம், இலக்கினம் இராசியில் இன்னொன்றுக்கு 8ஆம் இடமாகவோ, 12ஆம் இடமாகவோ இருந்துவிடக்கூடாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த அமைப்பில் மிக முக்கியமான இன்னும் ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். 5ஆம் அதிபதியுடன் இராகு கேது இணைந்து 5ஆம் இடத்தை சம்பந்தப்படுவது, ஒருசில ஜாதகர்களுக்கு நல்ல பணப்புழக்கத்தை கொடுக்கும். ஆனால் ஒரு சில ஜாதகர்களுக்கு பணப்பற்றாக்குறையை கொடுத்துவிடும். அதனால் இந்த அமைப்பு விரிவாக விளக்கமாக பார்க்கவேண்டிய அமைப்பு. அதனால் இதை இன்னொரு முறை பார்ப்போம்.

5ஆம் அதிபதி அல்லது 5ஆம் அதிபதி அமர்ந்த ஸ்தான அதிபதி 5ஆம் இடத்தில் அமர்வது அல்லது பார்ப்பது அல்லது 5ஆம் இடத்திற்கு அல்லது 11ஆம் இடத்திற்கு பரிவர்த்தனை பெறுவது சீரான பணப்புழக்கத்தையும், பணச்சேமிப்பையும் கொடுக்கும் என்பதை பார்த்தோம்.

இந்த அமைப்பு ஜாதகத்தில் இருப்பது ஜாதகருக்கு பணத்தை சேமிக்க செய்துவிடுகிறது. மேலும் வேறு எந்த மாதிரியான அமைப்பு இதில் இணையும் பொழுது அது சேமித்த பணத்தை நஷ்டப்படுத்தவும் செய்கிறது என்பதை இனி பார்ப்போம்.

ஜாதகத்தில் இராகு கேதுக்கள் இலக்கினம் அல்லது இராசிக்கு 2,8ஆம் இடங்களில் அமர்ந்து விடுவது அல்லது இலக்கினம் 8ஆம் அதிபதி அல்லது இராசிக்கு 8ஆம் அதிபதியை இணைந்து 6,12ஆம் இடங்களில் அமர்ந்துவிடுவது ஜாதகரை நஷ்டப்பட வைக்கிறது. ஏனென்றால் 8,12ஆம் இடங்களில் அமரும் இராகுகேதுக்கள் 10ஆம் இடத்தை பார்ப்பார்கள். ஜாதகருக்கு பணத்தை சேமிக்கும் அமைப்பு இருந்து ஜாதகர் பணத்தை சேமித்துவிட கெட்டஸ்தானங்களில் அமர்ந்து 10ஆம் இடத்தை பார்க்கும் இராகுகேதுக்கள்

ஜாதகருக்கு அதிக ஆசையை ஏற்படுத்தி இலாபம் அதிகம் கிடைக்கும் இன்னொரு தொழிலை செய்ய வைக்கிறார்கள். அதன் மூலம் ஜாதகரை இராகுகேதுக்கள் நஷ்டமடைய வைக்கிறார்கள்.

இதிலும் 8ஆம், 12ஆம் இடத்தில் இராகு கேது அமர்ந்துவிடுவது மட்டுமே நஷ்டத்தை ஏற்படுத்துவதில்லை. இராகு, கேதுக்களுக்கும் 8,12 இடங்களில் அமர்ந்து மேலும் ஜாதகத்தில் அதிக கெட்ட இடத்தில் அமர்வது, அல்லது 5ஆம் அதிபதி 8, 12ஆம் இடங்களில் அமர்வது போன்ற அமைப்புகளும் ஜாதகத்தில் இருப்பதுதான் பணத்தை நஷ்டப்படவைக்கிறது. இது பொதுவான சுருக்கமான விதி. இந்த விதிகளை விரிவாக விளக்கமாக பார்ப்போம்.

இலக்கின 5ஆம் அதிபதி அல்லது இராசிக்கு 5ஆம் அதிபதி அல்லது அவர்கள் அமர்ந்த ஸ்தான அதிபதி 5ஆம் இடத்திற்கு நேர் எதிர்ஸ்தான 11ஆம் இடத்தில் அமர்ந்து பணச்சேமிப்பை கொடுக்க அவர்களால் பார்க்கப்பட்ட 5ஆம் இடத்தில் 8ஆம் அதிபதி அமர்ந்துவிடுவது, சேமித்த பணத்தை நஷ்டப்படுத்துகிறது.

அல்லது 5ஆம் அதிபதி 5ஆம் இடத்தில் அமர்ந்திருக்க கூடவே, 8ஆம் அதிபதி அல்லது 8ஆம் அதிபதி அமர்ந்த ஸ்தான அதிபதி இணைந்திருந்து, இன்னொரு 8ஆம் அதிபதியால் பார்க்கப்பட்டுவிடுவதும் பணத்தை சேமிக்கச் செய்து பின்பு பணத்தை நஷ்டப்படுத்துகிறது.

இதுதவிர 5ஆம் அதிபதிகள் இருவரும் இலக்கினம் 8ஆம் இடத்தில் அமர்ந்துவிட அல்லது இராசிக்கு 8ஆம் இடத்தில் அமர 5ஆம் அதிபதி அமர்ந்த அந்த 8ஆம் இடத்தின் அதிபதி 5ஆம் இடத்திலோ, 11ஆம் இடத்திலோ, அமர்ந்துவிடுவதும், பணத்தை சேமிக்கச் செய்து பின்பு நஷ்டமடைய வைக்கிறது. அதாவது 5ஆம் அதிபதி அமர்ந்த ஸ்தான அதிபதி என்ற முறையில் 8ஆம் அதிபதி 5ஆம் இடத்தை சம்மந்தப்படுவது பணத்தை சேமிக்க வைக்கிறது. ஆனால் அவர் 8ஆம் இட ஆதிபத்தியம் பெற்றிருப்பதால், நஷ்டப்படவும் வைக்கிறது. இதில் ஒரு 5ஆம் அதிபதி 8ஆம் இடத்தில் அமர இன்னொரு 5ஆம் அதிபதியை 8ஆம் அதிபதி இணைந்து விடுவதும் இதே அமைப்புதான்.

இதுதவிர 5ஆம் அதிபதிகள் இருவரும் 8ஆம் அதிபதியை இணைந்து 12ஆம் இடத்தில் அமர்ந்தால் அல்லது 5ஆம் இடத்திற்கு 12ஆம் இடமான 4ஆம் இடத்தில் அமர்ந்தால் 5ஆம் அதிபதிகள் அமர்ந்த ஸ்தான அதிபதி 5ஆம் இடத்தில் அமர்ந்து 5ஆம் இடத்தில் அமர்ந்து பரிவர்த்தனை பெறுவதும் அல்லது 5ஆம் இடத்தை பார்ப்பதும் பணத்தை சம்பாதிக்கச் செய்து பின்பு நஷ்டப்படவைக்கிறது.

இதிலும் ஒரு 5ஆம் அதிபதி 8ஆம் இடத்திலும், ஒரு 5ஆம் அதிபதி 12ஆம் இடத்திலும், அல்லது 4ஆம் இடத்திலும் அமர்ந்தாலும், 5ஆம் அதிபதிகள் இருவரில் ஒரு 5ஆம் அதிபதி அமர்ந்த ஸ்தான அதிபதி 5ஆம் இடத்தை பார்த்தாலும் அல்லது 5ஆம் இடத்தில் அமர்ந்தாலும் பணத்தை சேமிக்க வைத்து பின்பு நஷ்டப்பட வைக்கிறது.

இந்த அமைப்புகள் தவிர 5ஆம் அதிபதிகள் இருவரும் 8ஆம் இடத்தில் அல்லது 12ஆம் இடத்தில் அமர்ந்து அல்லது 8ஆம் இடங்களுக்கும் பரிவர்த்தனை பெற்று 5ஆம் இடத்தை பார்த்துவிடுவதும் பணத்தை சேமிக்க வைத்து பின்பு நஷ்டத்தை ஏற்படுத்துகிறது.

இந்த அமைப்புகள் தவிர 5ஆம் அதிபதிகள் இருவரும் இலக்கினம் அல்லது இராசிக்கு 10ஆம் இடத்தில் அமர்ந்துவிட அந்த 10ஆம் இடம் இலக்கினம் அல்லது இராசியில் இன்னொன்றுக்கு 8ஆம் இடமாகவோ, 12ஆம் இடமாகவோ இருந்துவிடுவதும் மேலும் 10ஆம் இடத்தில் அமர்ந்த 5ஆம் அதிபதிகளை 8ஆம் அதிபதி இணைந்து விடுவதும் அல்லது பார்த்துவிடுவதும் பணத்தை சம்பாதிக்கச் செய்து பின்பு நஷ்டப்பட வைக்கிறது.

இதுபோன்ற அமைப்புகளில் ஜாதகம் இருப்பதுதான் பணத்தை சேமிக்கச் செய்து பின்பு நஷ்டப்படவைக்கிறது. இந்த அமைப்புகளிலும் 5ஆம் அதிபதிகள் இருவருமே, மேற்படி அமைப்புகளில் இருப்பது மட்டுமே, அதிக நஷ்டத்தை கொடுக்கும். ஆனால் ஒரு 5ஆம் அதிபதி மட்டும் மேற்படி அமைப்பில் இருந்து, ஒரு 5ஆம் அதிபதி நல்ல ஸ்தானத்தில் அமர்ந்து 5ஆம் இடத்தை சம்பந்தப்பட்டுவிட்டால் ஓரளவு நஷ்டம் ஏற்பட்டு மறுபடியும் சீரான பணப்புழக்கத்தை பெறமுடியும்.

**இதுவரை நாம் பார்த்த அமைப்புகளை சில உதாரண ஜாதகம் மூலம் பார்ப்போம்.**

| | | | |
|---|---|---|---|
| ல | சனி | | செவ் |
| ராகு | 1 | | சுக் |
| சந் | | | கேது சூரி |
| | | குரு | புத |

1. இந்த ஜாதகத்தைப் பாருங்கள். இந்த ஜாதகத்தில் இலக்கினத்திற்கு 5ஆம் அதிபதி சந்திரன். இராசிக்கு 5ஆம் அதிபதி சுக்கிரன். மேலும் இலக்கினத்திற்கு 8ஆம் அதிபதியாகவும் சுக்கிரனே இருந்து அவர் இலக்கின 5ஆம் இடத்தில் அமர்ந்துவிட்டார். அதாவது இலக்கின 8ஆம் அதிபதி சுக்கிரன், இராசிக்கு 5ஆம் அதிபதியை இணைந்து 5ஆம் இடத்தில் அமர்ந்துவிட்டார். இன்னொரு 5ஆம் அதிபதியான சந்திரன் 5ஆம் இடத்திற்கு நேர்எதிராக அமர்ந்திருக்கிறார். 5ஆம் அதிபதிகள் இருவர் 5ஆம் இடத்தைச் சம்மந்தப்பட்டது. கோடிக்கணக்கில் சம்பாதிக்கச் செய்தது. ஆனால்

இராகு—கேதுக்கள் இலக்கினத்திற்கு 12ஆம் இடத்திலும் இராசிக்கு 8ஆம் இடத்திலும் அமர்ந்து, 10ஆம் இடங்கள் இரண்டையும் பார்த்துவிட்டதால் மிக, மிக அதிக ஆசைப்பட்டு மேலும் 5ஆம் இடத்தில் அமர்நத 8ஆம் அதிபதியால் சொத்துக்களை இழந்துவிட்டார்.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| செவ் சுக் | 2 | | ல |
| சூரி புத | | | |
| சந் கேது | குரு | சனி | |

2. இந்த ஜாதகத்தைப் பாருங்கள். இலக்கின 5 ஆம் அதிபதி செவ்வாய், இராசிக்கு 5 ஆம் அதிபதியும் செவ்வாய்தான். இருவரும் இணைந்து இலக்கினத்திற்கு 8 ஆம் இடத்தில் அமர்ந்துவிட்டார்கள். 5ஆம் அதிபதிகள் இருவரும் 8ஆம் இடத்தில் அமர்ந்தாலும், 5ஆம் அதிபதிகள் இருவர் அமர்ந்த ஸ்தான அதிபதியான சனி,இராசிக்கு 11ஆம் இடத்தில் அமர்ந்து இராசிக்கு 5ஆம் இடத்தை பார்த்துவிட்டதால், திடீர்பணவரவாக இலட்சக்கணக்கில் 20,30இலட்சத்திற்கு மேல் சம்பாதிக்கச் செய்தது. ஆனால் இராகு கேதுக்கள் இராசிக்கு 8ஆம் அதிபதியான சந்திரனை இணைந்து இலக்கினத்திற்கு 12இல் அமர்ந்து இலக்கின 10ஆம் இடத்தை பார்த்துவிட்டதும், 8ஆம் அதிபதியான சனி 5ஆம் இடத்தை பார்த்துவிட்டதும், தொழிலில் நஷ்டத்தை ஏற்படுத்தி கடனாளி ஆக்கிவிட்டது. சம்பாதித்த தொகைக்கு சமமாக இப்பொழுது கடன் ஏற்பட்டுவிட்டது.

| | | | |
|---|---|---|---|
| | சந் | கேது | ல சனி |
| குரு | 3 | | |
| | | | |
| | ராகு | புத | சுக் சூரி செவ் |

3. இந்த ஜாதகத்தை கவனியுங்கள். இலக்கின 5ஆம் அதிபதி சுக்கிரன் இராசிக்கு 5ஆம் அதிபதி சூரியன் இருவரும் இணைந்து 5ஆம் இடத்திற்கு 12ஆம் இடமான 4ஆம் இடத்தில் அமர்ந்துவிட்டார்கள். கூடவே இராசிக்கு 8ஆம் அதிபதியான செவ்வாயும் இணைந்துவிட்டார். 5ஆம் அதிபதிகளான சூரியன் சுக்கிரன் இருவரும் 4ஆம் இடத்தில் அமர, அவர்கள் அமர்ந்த ஸ்தான அதிபதியான புதன் 5ஆம் இடத்தில் அமர்ந்து 5ஆம் அதிபதிகளுடன் பரிவர்த்தனை பெற்று அமர்ந்துவிட்டார். 5ஆம் அதிபதிகள் இருவரும், இலக்கின 5ஆம் இடத்திற்கு பரிவர்த்தனை பெற்றதினால் கோடிக்கணக்கில் பணம் சேர்த்த ஜாதகர், இராகுகேதுக்கள் இலக்கின 12ஆம் இடத்திலும் இராசிக்கு 8ஆம் இடத்திலும் அமர்ந்து 10ஆம் இடங்கள் இரண்டையும் பார்த்துவிட்டதால், பெரிய அளவில் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு கடனாளி ஆகிவிட்டார்.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | குரு | |
| | 4 | | சனி |
| | | | புத |
| ல | | சுக் கேது | செவ் சந் சூரி |

4. இந்த ஜாதகத்தை கவனியுங்கள் இலக்கின 5ஆம் அதிபதி செவ்வாய் இலக்கின 10ஆம் இடமே இராசியாகி அங்கு 5ஆம் அதிபதி அமர்ந்திருக்கிறார் இராசியோ 10ஆம் இடமோ, நல்ல ஸ்தானங்கள் தான். ஆனால் 5ஆம் அதிபதி செவ்வாய் அமர்ந்த ஸ்தான அதிபதியான புதன் இராசிக்கு 12ஆம் இடத்தில் அமர்ந்து, இராசிக்கு பரிவர்த்தனை பெற்றிருக்கிறார். 12ஆம் இடத்திற்கு பரிவர்த்தனை பெற்றவர் வீட்டில், 12ஆம் அதிபதியுடன் இணைந்து 5ஆம் அதிபதி செவ்வாய் தன் 5ஆம் வீட்டை பார்த்திருக்கிறார். மேலும் இலக்கின 5ஆம் அதிபதி செவ்வாயே, இராசிக்கு 8ஆம் அதிபதியாகவும் இருப்பதையும் கூடவே இலக்கினத்திற்கு 8ஆம் அதிபதியான சந்திரன் இணைந்திருப்பதையும் கவனியுங்கள். 8ஆம் அதிபதிகள் இருவர் 5ஆம் அதிபதியை இணைந்து 5ஆம் இடத்தை பார்க்கிறார்கள் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய அமைப்பாகும். இது தவிர இராசிக்கு 5ஆம் அதிபதியான, சனி இலக்கினத்திற்கு 8ஆம் இடத்தில் அமர்ந்து, இராசிக்கு 5ஆம் இடத்தை பார்த்திருக்கிறார். இராகுகேதுக்களும் 8ஆம் இடத்தில் அமர்ந்திருப்பதை கவனிக்கவும்.

இந்த அமைப்புகளினால் 5 வருடங்களி சம்பாதித்த மிக அதிக பணத்தை இந்த ஜாதகர் ஒரே இடத்தில் நஷ்டப்படுத்திவிட்டார்.

| | | | |
|---|---|---|---|
| | சனி | | |
| ராகு | 5 | | சூரி புத செவ் |
| சந் | | | சுக் கேது |
| | ல | குரு | |

5. இந்த ஜாதகத்தைப் பாருங்கள். இலக்கினம் 5ஆம் அதிபதி குரு. அவர் இராசிக்கு 10ஆம் இடத்தில் அமர்ந்திருக்கிறார். இராசிக்கு 5ஆம் அதிபதி சுக்கிரன். அவர் இலக்கினத்துக்கு 10ஆம் இடத்தில் அமர்ந்திருக்கிறார். 5ஆம் அதிபதிகள் இருவரும் 10ஆம் இடத்தில் அமர்ந்ததால் இந்த ஜாதகர் தொழில் மூலம் அதிக பணம் சம்பாதிக்க முடிந்தது. ஆனால் 10ஆம் இடங்கள் இரண்டுமே, இலக்கினத்திற்கு 12ஆம் இடமாகவும், இராசிக்கு 8ஆம் இடமாகவும் அமைந்துவிட்டதால் சம்பாதித்த பணம் அத்தனையும் நஷ்டப்படுத்தவும் செய்தது. இராகு கேதுக்களும் இராசிக்கு 8ஆம் இடத்தில் அமர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற அமைப்புகள் ஜாதகத்தில் இருப்பதுதான், ஜாதகரை நன்றாக சம்பாதிக்கவும் செய்து பின்பு நஷ்டப்படவும் வைக்கிறது.

●

# சஷ்டியாம்சம் தரும் பலன்கள்




ஜோதிட கலாநிதி

**எஸ்.விஜயநரசிம்மன்** எம்.எஸ்ஸி

**அப்ளைடு அஸ்ட்ராலஜி**

**Cell: 94888 62923 / 97891 01742**


தசவர்க்கத்தில் பத்தாவதாகக் காணப்படுவது ஷஷ்டியாம்சம் ஆகும். ஷஷ்டி என்பதற்கு 60 என்று பொருளாகும். ஓர் இராசியை 60 பாகங்களாகப் பிரிப்பது ஷஷ்டியம்சம் ஆகும். ஓர் இராயை 60 பிரிவாகப் பிரிப்பது ஷஷ்டியம்சம் ஆகும்.

ஓர் இராசிக்குடைய 30 பாகையை 60ஆல் வகுக்க ஓர் அம்சமானது ½ பாகை அல்லது 30 பாகைகளாகப் பிரிக்கப்படுகிறது. இதில் ஆண் இராசிக்கு அதே இராசியை முதலாக வைத்து எண்ணி எழுத வேண்டும். பெண் இராசிக்குக் கிரகம் இருந்த இராசிக்கு 12வது இராசியை முதலாவதாகக் கொண்டு கணித்து பின்பக்க வரிசைப்படி எண்ணிப் போடுதல் வேண்டும்.

உதாரணமாக, ஆண் இராசியான மேஷத்தின் 15வது சஷ்டி அம்சத்தில் ஒரு கிரகம் நிற்கும் எனில் மேஷம் 1 எனத் தொடங்கி 12வது மீனம், 13வது பாகம் மேஷம், 14 ரிஷபம், 15மிதுனத்தில் அக் கிரகத்தை எழுத வேண்டும். அதுவே, பெண் இராசியான ரிஷபத்தில் 15வது சஷ்டி அம்சத்தில் ஒரு கிரகம் நிற்க ரிஷபம் தொடங்கி 12வது இராசியான மேஷம் முதல் பின்புறமாக மீனம் 2, கும்பம் — 3 என பின்னோக்கி எண்ணும் போது ரிஷபம் 12வது இராசியாகி மேஷம் — 13, மீனம் 14, கும்பம் 15ஆக வருகிறது, எனவே, கும்பத்தில் கிரகத்தை எழுத வேண்டும். இதில் தீய அம்சம் ஏறிய கிரகம் தீய பலனையும். சுபாம்சம் ஏறிய கிரகம் நன்மையையும் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது.

இராசியை 60 பிரிவாகப் பிரித்து, ஒற்றைப்படை இராசிகளுக்கு கீழ்கண்டபடி பெயர் பெறுகின்றன.

| பெயர் | தீர்க்கரேகை | குணம் |
|---|---|---|
| 1. கோரம்சா | 0--0 முதல் 0--30 | தீமை |
| 2. ராக்சசாம்சா | 0-30-1-00 | தீமை |
| 3. தேவாம்சா | 1-00-1-30 | நன்மை |
| 4. குபேராம்சா | 1-30-2-00 | நன்மை |
| 5. யக்சாம்சா | 2-00-2-30 | நன்மை |
| 6. கின்னராம்சா | 2-30-3-00 | நன்மை |
| 7. ப்ரஷ்டாம்சா | 3-00-3-30 | தீமை |
| 8. குலங்கனாம்சா | 3-30-4-00 | தீமை |
| 9. காரலாம்சா | 4-00-4-30 | தீமை |
| 10. அக்னியாம்சா | 4-30-5-00 | தீமை |
| 11. மாயாம்சா | 5-00-5-30 | தீமை |
| 12. ப்ரீதபுரிசாம்சா | 5-30-6-00 | தீமை |
| 13. அபபத்தியாம்சா | 6-00-6-30 | நன்மை |
| 14. மருதாம்சா | 6-30-7-00 | நன்மை |
| 15. காலாம்சா | 7-00-7-30 | தீமை |
| 16. அகோபாவ சர்பாம்சா | 7-30-8-00 | நன்மை |
| 17. அமிர்தாம்சா | 8-00-8-30 | நன்மை |
| 18. சந்திராம்சா | 8-30-9-00 | நன்மை |
| 19. முத்ராம்சா | 9-00-9-30 | நன்மை |
| 20. கோமளாம்சா | 9-30-10-00 | நன்மை |
| 21. கோராபாம்சா | 10-00-10-30 | நன்மை |
| 22. பிரம்மாம்சா | 10-30-11-00 | நன்மை |
| 23. விஷ்ணு அம்சா | 11-00-11-30 | நன்மை |
| 24. மஹேஸ்வராம்சா | 11-30-12-00 | நன்மை |
| 25. தேவாம்சா | 12-00-12-30 | நன்மை |
| 26. இந்திராம்சா | 12-30-13-00 | நன்மை |
| 27. காலமாம்ஷாம்சா | 13-00-13-30 | தீமை |
| 28. ஷிடிஸ்வராம்சா | 13-30-14-00 | நன்மை |
| 29. கமலாகராம்சா | 14-00-14-30 | நன்மை |
| 30. குளிகாம்சா | 14-30-15-00 | தீமை |
| 31. ம்ருத்யுகராம்சா | 15-00-15-30 | தீமை |
| 32. கலாம்சா | 15-30-16-00 | தீமை |
| 33. தேவாங்காம்சா | 16-00-16-30 | தீமை |
| 34. ஹோராம்சா | 16-30-17-00 | தீமை |
| 35. யமாம்சா | 17-00-17-30 | தீமை |
| 36. கண்டகாம்சா | 17-30-18-00 | தீமை |
| 37. சுதாம்சா | 18-00-18-30 | நன்மை |
| 38. அமிர்தாம்சா | 18-30-19-00 | நன்மை |
| 39. பூர்ணசந்திராம்சா | 19-00-19-30 | நன்மை |
| 40. பரதகண்டாம்சா | 19-30-20-00 | தீமை |
| 41. குலனாசாம்சா | 20-00-20-30 | தீமை |
| 42. வம்சகிஷ்யாம்சா | 20-30-21 -00 | நன்மை |
| 43. உத்பாதகாம்சா | 21-00-21-30 | தீமை |
| 44. காலரூபாம்சா | 21-30.- 22-00 | தீமை |

| | | |
|---|---|---|
| 45. ஸௌம்யாம்சா | 22-00-22-30 | நன்மை |
| 46. கோமலாம்சா | 22-30-23-00 | நன்மை |
| 47. ஷிதலாம்சா | 23-00-23-30 | நன்மை |
| 48. தனஸ்டர கரணாம்சா | 23-30-24-00 | நன்மை |
| 49. இந்துமுகாம்சா | 24-00-24-30 | தீமை |
| 50. ப்ரவினாம்சா | 24-30-25-00 | நன்மை |
| 51. காலாக்னிஅம்சா | 25-00-25-30 | தீமை |
| 52. தண்டாயுதாம்சா | 25-30-26-00 | தீமை |
| 53. நிர்மலாம்சா | 26-00-26-30 | தீமை |
| 54. ஸௌம்யாம்சா | 26-30-27-00 | நன்மை |
| 55. க்ரூராம்சா | 27-00-27-30 | தீமை |
| 56. அடிசிதலாம்சா | 27-30-28-00 | நன்மை |
| 57. சுதாம்சா | 28-00-28-30 | நன்மை |
| 58. பயோதியாம்சா | 28-30-29-00 | நன்மை |
| 59. பிராம்ஹணாம்சா | 29-00-29-30 | தீமை |
| 60. இந்துரேக்காம்சா | 29-30-30-00 | தீமை |

இரட்டைப்படை இராசிகளுக்குக் கீழிருந்து மேலாகக் கணக்கிடப்படுகிறது. அதாவது — இந்து ரேக்காம்சம் 00 — 00 — 00— 30 என தொடங்கி 00 — 30, பிரம்மாம்சா 00—30 — 1 — 00 , பயோதியாம்சா — என கோராம்சாவில் 29 — 30 — 30 — 00 என முடியும்.

ஒவ்வொரு சஷ்டியாம்சத்துக்கான பலன்கள் கீழ்கண்டவாறு அமையும்.

1. **கோராம்சா** — குருவுக்குக் கஷ்டங்களைத் தரும்.

2. **ராக்சசாம்சா** — அடிமை, வணிகர், நடனம், தையற்கலைஞர் இன்ன பிற.

3. தேவாம்சா — மனநலமருத்துவர்

4. **குபேராம்சா** — சூதாடிகள், குதிரைப் பந்தயம் செல்பவர்கள், பங்குச் சந்தை ஏஜெண்ட்ஸ்— இன்ன பிற.

5. **யக்சாம்சா** — யானை வணிகர்கள், குதிரைகள், சாரட், அரசியல்வாதிகள், வெளிநாட்டு தூதுவர்கள் பிற.

6. **கின்னராம்சா** — எழுத்தாளர்கள், கவிஞர்கள், பத்திரிக்கையாளர்கள், தட்டச்சு செய்பவர், சுருக்கெழுத்து (ஸ்டெனோ), எழுத்தர். பிற.

7. **ப்ரஷ்டாம்சா** — அலங்காலம் செய்பவர்கள், (டெக்கரெடர்ஸ்) குதிரை வியாபாரிகள், நியாயமான வழிகளை மறந்தவர்கள்.

8. **குலங்கனாசாம்சா** — நடிகர்கள், நாடக நடிகர்கள், சின்னத்திரைக் கலைஞர்கள், சினிமாக் கலைஞர்கள், குடும்ப பாரம்பர்யத்தை விட்டு எல்லை மீறுபவர்கள்.

9. **காரலாம்சா** — நடனக் கலைஞர், கோஷ்டி (குழுவாக) கானம் இசைப்பவர்கள், பயணிகள், குத்துச் சண்டை வீர்ர்கள்.

10. **அக்னியாம்சா** — யாகங்கள், ஹோமங்கள் மற்றும் இதர சடங்குகளைச் செய்பவர்கள்.

11. **மாயாம்சா** — மத குருமார்கள்.

12. **ப்ரீதபுரிசாம்சா** — நன்கொடையாளர்கள், மத சம்பந்தமான நிர்வாகிகள்.

13. **அபபத்தியாம்சா** — மாற்றுத் திறனாளிகள், அவர்கள் சம்பந்தமான இருப்பிட நிர்வாகிகள், உணவகங்கள்.

14. **மருதாம்சா** — நகரத்தின் தலைவர், கவுன்சிலர், வருவாய் அதிகாரி, நாவிதர் (மருத்துவர்)

15. **காலாம்சா** — சூதாடுபவர், பார் வைத்து நடத்துபவர்.

16. **அகோபாவ சர்பாம்சா** — மக்களை மகிழ்விக்கும் தொழில் செய்பவர்கள், கிளப் புக்குச் செல்பவர்கள். நாடக, திரை அரங்கு உரிமையாளர்கள், சுற்றுலா பயணங்களை நடத்துபவர்கள், ஓய்வு விடுதிகளின் உரிமையாளர்கள், தோட்டக்காரர்கள், பாதுகாப்பாளர்கள், மக்கள் தொடர்பு அதிகாரிகள்.

17. **அமிர்தாம்சா** — மலர் வணிகர்கள், சென்ட் வியாபாரிகள் மற்றும் தயாரிப்பாளர்கள், நர்சரி தோட்டம் வைத்திருப்பவர்கள், கெமிக்கல் வியாபாரிகள்.

18. **சந்திராம்சா** — அரசுப் பணியாளர்கள், பொதுத்துறை கம்பெனிகள்.

19. **முத்ராம்சா** — இராணுவத்தினர், காவல் துறை, ஹோம் கார்ட்ஸ் பிற.

20. **கோமளாம்சா** — காய்கறி வணிகர்கள், இரசாயனம், வைத்தியம், இயற்கை வைத்தியம், உணவுப் பொருள் வியாபாரிகள், மருத்துவர்கள்.

21. **ஹோராம்சா** — தொலைகாட்சி, சினிமா, டிராமா.

22. **பிரம்மாம்சா** — கெமிக்கல்ஸ், வெற்றிலை வியாபாரிகள், முந்திரி வர்த்தகர்கள்.

23. **விஷ்ணு அம்சா** — முறையற்ற பொருள்களை (தடை செய்யப்பட்ட) விற்பவர்கள், கள்ளச் சந்தையில் விற்பவர்கள்.

24. **மஹேஸ்வராம்சா** — மிராசுதார், மின்சார சாதனங்கள் விற்பவர் (ரெப்)

25. **தேவாம்சா** — இசையமைப்பாளர், கலைஞர்.

26. **இந்திராம்சா** — முனிவர், மதத் தலைவர், மதபோதகர்கள்,

27. **காலமாம்ஷாம்சா** — மதம் தொடர்புடைய பெரியோர், போதகர்.

28. **ஷிடிஸ்வராம்சா** — சுக்கிரன் காரகமுடைய பொருளை விற்கும் வணிகர், துணிகள், வாசனை திரவியங்கள், பேன்சி சாமான்கள், அழகு சாதனங்கள்.

29. **கமலாகராம்சா** — மருந்து தயாரிப்பாளர்கள், மருத்துவர்கள், வைத்தியர்கள், சர்ஜிகல் பொருட்கள்.

30. **குளிகாம்சா** — வீட்டு உபயோகப் பொருட்கள் வணிகர், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள், அழகு சாதனங்கள், செண்ட், பவுடர், பியூட்டி பார்லர் பொருட்கள்.

31. **ம்ருதுயுகராம்சா** — போர்ட்டர்கள், டிரைவர்கள் (

ரிக்ஷா, டாக்ஸி, ட்ரக், ட்ரெயின், ஆட்டோ )

**32. கலாம்சா** — சிராமிக் தயாரிப்பாளர், க்ரோக்கரி, கட்லரி, சமயலறைக் கருவிகள் தயாரிப்பாளர்.

**33. தேவாங்காம்சா** — விவசாயிகள், மிராசுதார், விவசாயத் துறைப் பணியாளர்கள், நில விற்பனையாளர்கள், உரத்தயாரிப்பாளர்கள்.

**34. ஹோராம்சா** — தொழிலதிபர், பெரிய வணிகர், மொத்த வியாபாரி.

**35. யமாம்சா** — ப்ளாஸ்டிக், லெதர் தயாரிப்பாளர், ரப்பர் தொழிற்சாலை, பனியன் தயாரிப்பாளர், ஜுவெல்லரி.

**36. கண்டகாம்சா** — விவசாயிகள், ட்ராக்டர் டிரைவர்கள், புல்டோஸர் டிரைவர்கள், தராசு.

**37. சுதாம்சா** — பண்டிதர், வேதபண்டிதர், பேராசியர், ட்யூட்டர்.

**38. அமிர்தாம்சா** — ஆராய்ச்சியாளர், விஞ்ஞானி.

**39. பூர்ணசந்திராம்சா** — எழுத்தாளர், பதிப்பாளர், ஆராய்ச்சியாளர், விளம்பர அலுவலகம், நூலகர்.

**40. பரதகண்டாம்சா** ( விஷ பிரதிக்தாம்சா )— சலவைத் தொழிலாளி, அச்சகத் தொழிலாளி, நெசவாளி, சிந்தடிக் துணி, கம்பளி ஆகியவற்றை தயாரித்தல் மற்றும் விற்பனை செய்பவர்.

**41. குலனாசாம்சா** — வணிகர், ஏற்றுமதி, இறக்குமதித் தொழில், விற்பனையாளர், சேல்ஸ் ரெப்.

**42. வம்ஸகிஷ்யாம்சா** — பேராசிரியர், முதல்வர், மத தத்துவவியலாளர், டைப்பிஸ்ட், இலக்கியவாதி, புரோகிதர், ஜோதிடர், இலக்கண மேதை.

**43. உத்பாதகாம்சா** — விஞ்ஞானி, வேதங்களை அறிந்தவர்.

**44. காலரூபாம்சா** — வரவேற்பாளர், காப்பாளர் ( ப்ளாக் கேட் ), அரசனின் நலம் விரும்பிகள்.

**45. சௌம்யாம்சா** — இராணுவ தளபதி, பாதுகாப்புத்துறை தொடர்பு உடையவர்.

**46. கோமலாம்சா** — அரசு உயர் அதிகாரிகள்.

**47. ஷிதலாம்சா** — கணித வல்லுநர், பொறியாளர், கணணிப் பொறியாளர், கணக்கர், பொருளாதாரத்துறை அதிகாரிகள்.

**48. தனஸ்டர கரணாம்சா** — நீதிபதி, மாவச்ச ஆட்சியர், காவல்துறை தலைமை அதிகாரி, தலைமைச் செயலாளர், வருவாய்த் துறை அதிகாரிகள், உள்துறை அலுவலகம், நியாய சபை.

**49. இந்துமுகாம்சா** — சந்திர முகாம்சா — கொள்ளையர்கள், துஷ்டர்கள், திருடர்கள், கொலையாளிகள், துப்பறியும் நிபுணர்.

**50. ப்ரவினாம்சா** — கேஸ், நிலக்கரி, மண்ணெண்ணய், மின்சாரம், ஹீட்டர், ப்யூயல், தீ மூட்டுபவர்கள்

**51. கலாங்குலாம்சா**. — காய்கறி வியாபாரி, துரித உணவகம், இனிப்பகம், ஹோட்டல், கேண்டீன் ஓனர்.

**52. தண்டாயுதாம்சா.** — உள்துறை அலுவலகம், நீதித்துறை, அரசு உயர் அதிகாரிகள்.

**53. நிர்மலாம்சா** — ஜுவெல்லரி, சுரங்கம் தொண்டுபவர்கள், தங்கம் வெள்ளி ஆபரணங்களைச் செய்யும் ஆசாரி..

**54. சௌம்யாம்சா**. — விவசாயி, சுரங்கப் பணியாளர், தாது வியாபாரி, நிலக்கிழார்.

**55. க்ரூராம்சா**. — பால், மட்டன், பானம், இனிப்பு, ஹோட்டல், உணவக முதலாளி.

**56. அடிசிதலாம்சா** — மதச்சடங்குகள் மற்றும் யஞ்ஞும் நிகழ்த்தும் புரோகிதர்கள்.

**57. சுதாம்சா.** — அம்ரிதாம்சா — பேராசிரியர், ஆசிரியர், வேதவித்தகர், எழுத்தாளர், துணைநூல் வெளியீட்டாளர்.

**58. பயோதியாம்சா**. — காவல் ஆய்வாளர், காவல் கண்காணிப்பாளர், பிரஸிடெண்ட்ஸ் பிற.

**59. பிராம்ஹணாம்சா** — பிச்சைக்காரர்கள், நன்கொடை பெறுபவர்கள்.

**60. இந்துரேக்காம்சா** — முத்து வணிகர்கள், மீனவர், தோட்ட வேலையாள், பெரிய தோட்டத்துக்கு உரிமையாளர்.

வர்க்கச் சக்கரங்களில் துல்லியமான பலன் கிடைக்க முக்கியமாகப் பார்க்க வேண்டியது வர்க்கச் சக்கரங்களின் நிலையேயாம். ஒவ்வொரு வர்க்கச் சக்கரத்துக்கான காரகங்களை வைத்து வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளை ஆராய்ந்து அறிந்து பலன்கள் உரைக்கப்பட வேண்டும்.

இராசிக் கட்டங்களை மட்டுமே பார்த்து பலன் கூறுவது சில நேரங்களில் மாறிவிட வாய்ப்புண்டு. ஏனெனில், சில நேரங்களில் இராசிக்கட்டத்தில் பலம் மிக்கதாகத் தோற்றம் அளிக்கும் ஒரு கிரகத்தின் மூலமாக ஜாதகருக்குத் தேவையான, சாதகமான முடிவு கிடைப்பதில்லை. எனவே, இராசிச் சக்கரத்தோடு, சரியான வர்க்கக் கட்டங்களை ஒப்பிட்டு அலசி ஆராயும்போதே அது சாத்தியம் ஆகிறது. உண்மையில் வர்க்கக் கட்டங்களின் நிலைகளை ஆராய்ந்து பார்க்கப்படாத பலன்கள், குறைவான நம்பகத் தன்மையை மட்டுமே உடைத்தாய் இருக்கிறது. எனவே, வர்க்கக் கட்டங்களை பயன்படுத்தி துல்லியமான பலன்களை ஜாதகர்களுக்கு அளித்து மகிழ்வோம்.

ஜாதகரின் வாழ்க்கையின் நிகழ்வுகளை இந்த நேரத்தில் இன்னது நடக்கும் எனக் கண்டறியப்பட்டாலே பலன் கூறும் ஜோதிட முறை, அதன் 100 சதவிகித நன்மைகளினால் ஏற்படும் மகிழ்ச்சியை அடைய முடியும். மிக வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் தற்போதைய மானுட வாழ்க்கையிலே நேரமின்மை காரணமாக அனைவரும் எதிர்வரும் காலங்களில் என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய மிக ஆவலுடன் உள்ளனர். மேலும், பலன் கூறுவதில் துல்லியம் இருந்தால் ஜோதிட விஞ் ஞானத்தை நம்பாதவர்களும், ஜோதிடம் உண்மையா? பொய்யா ? எனக் குழப்பம் அடைபவர்களும், கண்டிப்பாகத் துல்லியமான பலனைக் கேட்டு தங்கள் மனநிலையை மாற்றிக் கொள்வதோடு, ஜோதிடரின் மீதும், ஜோதிடத்தின் மீதும் நம்பிக்கை கொள்வது உறுதி என்பதற்கு உத்திரவாதமாக அமையும். ●

உண்மை! உழைப்பு!! உயர்வு!!

ஜெமினி ஸ்கூல் ஆப் அஸ்ட்ராலஜி

உலகின் எளிமையான, முதன்மையான, துல்லியமான பலன் கூறும்

# ஜாமக்கோள் பிரசன்னம் பயிற்சி வகுப்பு 31

**பயிற்சி கட்டணம் ₹2750**

புத்தகம் உட்பட

நாள் : 31-10-2015, 01-11-2015 சனி–ஞாயிறு

இடம் : ஆஷா நிவாஸ், சென்னை

9, ருட்லேண்ட் கேட் 5–வது வீதி, தாஜ் ஹோட்டல் எதிரில், ஜெமினி பிரிட்ஜ் அருகில், நுங்கம்பாக்கம், சென்னை

பயிற்சி வகுப்பு பற்றிய விபரங்கள் அறிய... 98422 33773

- ஜோதிடர் அனைவரும் அறிய வேண்டிய பிரசன்னம்
- அடிப்படை ஜோதிடம் தெரிந்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.
- நேரில் (அ) போனில் எந்த கேள்வி கேட்டாலும் துல்லியமான பலனை ஜாமக்கோள் பிரசன்னத்தில் சொல்ல முடியும்.
- உலகில் எந்த ஒரு நபரும் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் ஜாமக்கோளை பயன்படுத்தி தானே பலனைப் பார்த்துக் கொள்ள முடியும்.
- ஜாமக்கோள் பிரசன்னத்தில் எளிமையான முறையில், கணினி தொழில்நுட்பம் மூலம் (Projector) கணிதம், பலன்பார்க்கும் வசதிகள் உதாரண பிரசன்னத்துடன் கற்றுத் தரப்படும்.

## ஜாமக்கோள் சாப்ட்வேர்

சாப்ட்வேர் பற்றிய விபரங்கள் அறிய... 90036 19181

- உதயம், ஆருடம், கவிப்பு, ஜாம கிரகம் டிகிரி சுத்தமாக கணிக்கப்பட்டுள்ளது
- பாவகாரகம், கிரககாரகம், ராசிகாரகம் ஸ்கீரினிலேயே உடனுக்குடன் பார்க்கும் வசதி
- பிரசன்னம் & ஜாதகம் பார்க்க வரும் நபர் என்ன கேள்வி கேட்பார் என்பதை கண்டறிந்து, அதற்கு பதில் சொல்லும் கணித முறையை உள்ளடக்கியது.
- கால நிர்ணயம், பலன்கள், திசா புத்தி, பஞ்சாங்க விபரங்கள் உள்ளடங்கியது.
- சிறந்த முறையில் பிரிண்ட் எடுக்கும் வசதி
- ஜாமகிரகம் 6 மணி முதல் உள்ள கணித முறையும், சூரிய உதயம் முதல் உள்ள கணித முறையும் உள்ளது.

**ரூ. 3500/-**

## திருமண பொருத்தம் - சாப்ட்வேர்

- நட்சத்திரப் பொருத்தம்
- செவ்வாய், ராகு, கேது பொருத்தங்கள்
- கிரக பொருத்தம்
- தோசஷாமியம்
- 100 வருடத்திற்கு முகூர்த்தம் பார்க்கும் வசதி
- ஆண் பெண் ஜாதகத்தை டிகிரியுடன் பார்க்கும் வசதி
- தசா புத்தி பார்க்கும் வசதி
- பிரிண்ட் எடுக்கும் வசதி

ஜெமினியின் புதிய வெளியீடு

**ரூ. 4500/-**

# பூர்வ புண்ணியம் புலப்படுத்திடும் இராஜயோகம்

## இலக்கினாதிபதியும் பூர்வ புண்ணியாதிபதியும் இணைந்திருத்தல்

நாடி விதிகளின்படி ஒன்றுக் கொண்டு திரிகோணதிபதிகள் தெடர்பு கொண்டாலும் ஒன்றுக்கொண்று திரிகோண இராசிகளில் கிரகங்கள் அமர்ந்திருந்தாலும் அவை நெருங்கிய தொடர்பை பெறுகின்றன. அவைகள் பகை கிரகமாக இல்லாநிலையில் ஜாதகருக்கு யோகம்தான். அதன் பலம்—காரகம்—மறைவு—வக்கிரம்—மேற்கே அஸ்தமனம்—என்ற பாகுபாடுகள் எதேனும் ஒன்று அமைந்திடினும் எவ்விதத்திலும் ஜாதகரை பாதிக்காது. நட்பு நிலை ஒன்றே போதும். ஜாதகத்திலுள்ள திரிகோணாதிபதிகள் பலம் பெற்றாலே போதும் அல்லது இந்த மூன்று ஸ்தானத்தில் ஏதேனும் ஒரு கிரகம் நின்று உச்சம் ஆட்சி பெறாலம் போதுமானது. பிற இரு திரிகோணாதிபதிகள் இவ்வித நிலையில் ஏதோஒரு நிலையில் தொடர்பு பெற்று சிறப்பாகச் செயல் படுவார்கள்.

இலக்கினாதிபதி, உடம்பு (சந்திரன் பெற்ற நட்சத்திரம்) ஸ்தானதிபதியை விட கூடுதல் பலம் பெற்றும் உடம்பு ஸ்தானாதிபதிக்கு நட்புடனும் இருக்க வேண்டும். ஜோதிடத்தில் பகை என்பதற்கு பொருள் என்னவெனில் —குணங்கள்—செயல் திறன்—அறிவு போன்றவைகளின் அடிப்படையில் வேறுபட்டும் மாறுபட்டும் செயல் படக்கூடியது என்பதாகும். இதற்காக மனிதர்களைப் போல சுயநலவாதிகளாய் இருந்து பகைபடுவது என்பதல்ல. இலக்கினாதிபதி என்ற உயிர்நாதன்—ஜீவாத்மா என்பதால் இவனுக்கு குணம் குற்றவுணர்வுகள் (கில்டி) போன்றவைகளால் பாதிப்பு என்பது கிடையாது. அனைத்து குற்றங்களும் ரஸனைகளும் பாதிப்புகளும் இந்த உடம்பு காரகனுக்கே என்பதை வாசக நேயர்களுக்கு தெளிவுறுத்துகிறேன். இந்நிலையில் நமக்கு நாமே பகைபடாமல் இருந்திட ஜென்ம நட்சத்திர நாயகன் என்கிற உடம்பு காரகன் இலக்கினாதிபதிக்கு பகை பெறாமல் ஜாதகத்தில் அமைப்பை பெற்றாலே போதுமானது. ஜாதகர் எந்நிலையிலும் தாழ்வுறாமல் சுதாரித்துக் கொள்ளவியலும். எத்துனை ஹிம்சைகள் ஏற்படினும் அவைகளை சமாளித்து முறியடிக்கும் ஆற்றல் உடம்பு காரகனுக்கு ஏற்படும். மாறாகயிருப்பின் உடம்பும் மனமும் ரணமாகும். உங்களுடைய மனம் வாக்கு இவைகள் உயிர்நாதன் உடம்பு காரகனுக்கு சொந்தமாகி இவ்விருவரும் பயன்படுத்துவார்கள் என்கிற காரணத்தைக் கொண்டே இலக்கனாதிபதி ஜென்ம நட்சத்திராதிபாதியைக் காட்டிலும் சற்றே கூடுதலாய் பலம் பெற்றிருப்பது பல நன்மைகளைப் பெற்று விருத்திகளை அடைந்திடும்.




**கிருஷ்ணன் இராஜகோபாலன்,**
B.A., M.F.M.
**பாரம்பரிய ஜோதிடர்**
**ஆன்மீக ஜோதிட ஆய்வாளர்**
**செல்: 98404 53792**


இலக்கினாதிபதியின் பலம் இலக்கினாதிபதிக்குரிய கிரக அதிபன்—ல என்று குறிப்பிட்டுள்ள வீட்டிற்கு அதிபன்—இவருக்கு துணை நின்று அனுசரனையாய் செயல்களை நிறைவேற்றுவதற்கு இலக்கினாதிபதி பெற்ற சாரநாதன் என்ற கிரக அதிபதி இவர்களும் ஒருவர்க்கொருவர் நட்பு நிலையில் இருந்தால்தான் முழுப்பலனை பெற்று அனுபவிக்கவியலும். மாறாக சாரநாதன் பகை பெறின் கூடயிருந்தே குழி பறிக்கும் அவல நிலை உருவாகும். காலத்தையும் சரீரத்திற்கு கிடைக்கும் பொன்னான சந்தர்ப்பங்களையும் நமது உயிர்நாதன் உடனுக்குடன் முடிவி எடுத்து அதிர்ஷடப்பகை பட்டால் அரிதொரு பேறுகளை நழுவ விட்டு விடுகிறது. இந்நிலையில் உயிர்நாதன் பலம் பெற்றிருப்பின் நழுவிப்போகும் அதிர்ஷட வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் தடுத்து ஆட்கொள்வார் என ஒரு ஜாதகர் எதிர்பார்க்கலாம். இந்நிலையில் இலக்கினாதிபதி நின்ற வீட்டு அதிபதி பலம் பெற்றிருந்தாலும் இலக்கினாதிபதிக்கு இனியவராய் இருந்தாலும் இவர் தெடர்பால் உடம்புகாரகன் பகைமறந்து சரீரத்திற்குரிய தேவைகள் ஆசைகள் எண்ணங்கள் செயல்கள் என பெற்று நீங்களும் நிம்மதி காண்பீர்கள்.

இலக்கினாதிபதிக்குரிய காரநாதன் பகை பெற்றாலும் பாதிப்புகளினின்று விடுபடுவீர்கள். மேலே குறிப்பிட கிரகநாதர்கள் ஒருவர்க்கொருவர் சுமுக முறையில் நட்புடன் இயங்கினாலே போதும் யோகங்களை தவறவிடாமல் அனைத்து சந்தரப்பங்களும் உங்களுக்கு அனுகூலமாகவே தடையின்றி செயல்படும். சரி இது போகட்டும். சுருக்கமாக கூறிடின், உங்கள் உயிர் சரீரத்தில் தங்கியிருக்கும் காலபரியந்தம் மேலே கூறியுள்ள கிரகநாதர்கள் தான் உங்கள் நல்லது கெட்டதிற்கு முழுப் பொறுப்பேற்கிறார்கள். தலையும் சரீரமும் சரியாய் இருந்தால் தானே அதிர்ஷடப் பேறுகள் உங்களைத் தேடி நாடி நீங்கள் அனுபவித்திட என்னென்ன தேவையோ அவை அத்தனையுமே உங்களிடம் ஏதோ ஒரு ரூபத்தில் வந்தடையும். இது சிதம்பர இரகசியத்தைக் காட்டிலும், (நாடி) முக்கியமான இரகசியம். இதன்படி உங்கள்

ஜாதகத்தை பரித்து வைத்துக் கொண்டு உடம்பு உயிருக்கு பொறுப்பானவர்களை கண்டறிந்து (Diarise) மனதில் பதித்து வைத்துக் கொள்ளுங்கள் அவர்களுடைய துணை உங்களுக்கு எப்பொழுதுமே தேவை.

இனி யோகத்தைப் பற்றி பார்ப்போம். உயிர்க்காகத்தான் இந்த சரீரம் அளிக்கப்பட்டுள்ளது—என்பதை உபநிஷத்துகள் அனைத்தும் வலியுறுத்துகின்றன. இதன் காரணமாகத்தான் உடம்பு காரகனைக் காட்டிலும் உயிர்நாதன் பலம் மிகுத்து இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன். உதாரணத்திற்கு நீங்கள் மேஷஇலக்கின ஜாதகர் என்று கொள்வோம். மேஷஇலக்கினத்திற்கு செவ்வாய் அதிபதியாகிறார். இவர் மேஷத்திலேயே நின்றிருந்தால் ஆட்சி பலத்தில் உள்ளார். இவ்வாறில்லாமல் இலக்கினாதிபதி செவ்வாய் ரிஷபத்தில் நின்று கிருத்திகை நட்சத்திர சாரம் பெற்றிருந்தால் செவ்வாய்க்கு சூரியன் சாரநாதனாக துணையிருப்பார். அதோடன்றி இலக்கினாதிபதி நின்ற வீட்டு அதிபதி ரிஷபத்திற்குரிய சுக்கிரனாகி மேலும் செவ்வாய் பலம் பெறுகிறார். இதன் பயனால் சூரியன் செவ்வாய் மற்றும் சுக்கிரனும் ஒருவர்க்கொருவர் நட்புநிலைதான். ரிஷபத்தில் நின்ற இலக்கினாதிபதி செவ்வாயும் நட்பு வீடாகி பலம் பெறுகிறார். நட்பு நிலையில் இவர்கள் துணையிருந்து ஒருவேளை செவ்வாய் கடகத்தில் நின்று நீச்சமாகினும் இலக்கினாதிபதி நின்று வீட்டு அதிபதி சந்திரன் என்பதால் அவர் செவ்வாய்க்கு நட்பு நிலையில் என்றைக்குமே செயல்படுவார் என்பதாலும் ஒருவேளை சாரநாதன் புனர்பூசத்தில் செவ்வாய் நில்லாமல் சனி (அ) புதன் நட்சத்திரத்தில் நின்றாலும் சந்திரன் அளிக்கும் சரீர காரகன் ஜென்ம நட்சத்திராதிபதி) நட்பு நிலையில் இயங்கிட யோகங்கள் காலதாமத மாயினும் எவ்விதமாயினும் பார்வை நீச்சபங்கள் மற்றும் யோககிரகங்களின் தெடர்பு போன்ற நிலையில் சுபப் பேறுகளை ஜாதகர் பெற்றிடுவார் என உறுதியாக கொள்ளலாம். ஒருவேளை இலக்கினாதிபதிக்கு ஜென்ம நட்சத்திராதிபதி பகை பட்டால், குண விகாரத்தால் ஜாதகர் பெறும் குற்றங்களை பொருத்துக் கொண்டு மனம் வாக்கு செயல்களில் வெளிப்படும் குறைகளை உணர்ந்து நீக்கிட, வாழக்கை வண்ணப் பூக்களின் தோட்டமாய் அமைந்து நறுமணத்தை எங்கும் கமழும்.

மேஷஇலக்கினத்திற்கு—பூர்வ புண்ணிய அறிவுக்காரர் சிம்ம சூரியன். இவர் செவ்வாயுடன் கூடினாலும் அல்லது சப்தம பார்வையில் நின்று கண்களால் தழுவினாலும் அல்லது ஹம்சத்தில் செவ்வாய் சூரியன் தொடர்பு பெற்றிருப்பின், ஜாதகருக்கு அவர் தாய் கவனிப்பது போன்று ஒவ்வொரு வளர்ச்சிக்கும் ஏற்றத்திற்கும் கருமத்தினால் தோன்றும் வினையின் செயல்களை நன்கு அனுபவிப்பதற்கும் சூரியன் செய்கைகள் ஏற்றமாய் அமைந்து விடும்.

ரிஷபஇலக்கினத்திற்கு பூர்வ புண்ணிய அறிவுக்காரர் நிபுண புதன் ஆகி சுங்கனும் (சுக்கிரன்) சௌமியனும் (புதன்) கூடி எங்கு நின்றாலும் பகை மறைவுஸ்தானம் இல்லாமல் இருப்பின் வாழக்கையில் இவருக்கு எங்கிருந்தாலும் சாத்வீகத்தன்மையில் சாமர்த்தியமும் சமர்த்தும் கைகூடி வரும் பாக்கியத்தை ஜாதகர் பெற்றிடுவார். இவரின் இத்தன்மையுடன் செயல்படும் நிலையை எவரும் அவ்வளவு எளிதில் கண்டுபிடிக்க இயலாது. எத்துறையில் ஈடுபட்டாலும் எவரும் இவரிடம் பகை காட்டமாட்டார்கள். ஏனெனில் புத்தி எப்பொழுதுமே இவருக்கு விழித்துக் கொண்டு இருக்கும். மேலும் இவர்களுக்கு கலைத்துறை—இயல் இசை நாடகம் வண்ணத்திறை மற்றும் விளையாட்டு போட்டிகள்—ஒரு பொக்கிஷமாகி அதில் ஏதேனும் ஒன்றில் பிகாசிப்பார் செல்வம் செல்வாக்கு புகழ பெருமை கௌரவம் பட்டங்கள் பதவிகள் என அனைத்துக் புடைசூா பெற்றுத் திகழ்வார்.

மிதுன இலக்கினத்திற்கு பூர்வ புண்ணியநாதன் துலா சுங்கனாகி புதனுக்கு வேண்டியவராதலால் (மாமன்—மைத்துனன்) இருவரும் சேர்த்து நின்றிடில் ஜாதகர் துணிந்து அகலக்கால் வைப்பார். படு சாமர்தியத்துடன் நுண்ணிய அறிவும் இவர்களுக்கு சற்று மிகுந்து இருக்கும் என்பதால் கட்டிய கணவன் என்றாலும் சகோதரன் என்றாலும் மனைவி என்றாலும் அவர்களின் ஒத்துழைப்பை எவ்விதத்திலாவது பெற்று தன் தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொள்வார் ஜாதகர்.

கடக இலக்கினத்தாருக்கு பூர்வ புண்ணியநாதன் சேய் ஆவதால் சந்திரனுக்கு மிகவும் வேண்டியவராகி, சந்திரன் செவ்வாய் ஒருவர்க்கொருவர் பார்வை பெற்றிருப்பினும் ஹம்சையில் கூடினாலும் பாசமுள்ள மகன். தாய்க்கு பணிவிடை செய்வது போன்று ஜாதகருக்கு செவ்வாய் ஒருவரே சர்வ விருத்திக்கும் பொறுப்பேற்கிறார்.

சிம்மஇலக்கினத்தாருக்கு பூர்வ புண்ணிய நாதன் தனுசின் குரு என்பதால் மிகவும் நெருக்கமானவராகி குரு சூரியன் கூடி எங்கு நின்றாலும் மகர கும்ப வீடுகளைத் தவிர யோகத்தை அளிக்கக்கடவர்.

கன்னி இலக்கினத்தாருக்கு பூர்வ புண்ணியதி சனி என்பதாகி சனி புதன் இணைப்பு அவ்வளவு ஏற்புடையதல்ல எனினும் சப்தம பார்வையால் ஒருவரையொருவர் நோக்கிடினும். கள்ளத்தனம் மிகுந்த மாதவன் சனியை தன் பார்வையால் சனியின் நேத்ரதிருஷ்டியை போக்கிடுவான். இதன் பயனால் வடிகட்டின தூய யோக பலன்கள் இவர்களுக்கு வெளிப்படும்.

**தொடரும்...**

# மணம் காணா மனிதர்கள்




ஜோதிட ஆய்வாளர்

புலவர் **வி.இளங்கோவன்**

செல்: 94433 10477


வாலிபக் கனவுகளுக்கு வக்காலத்து வாங்காமல் வறண்ட பாலைவன வாழ்வைத் தரும் வல்லமை படைத்த கிரகங்கள் சாதிக்கும் ஆற்றலுக்கு ஈடு இணை இல்லை என்றே சொல்லலாம்.

திருமணம் தடைப்படுவதற்கும் தள்ளிப் போவதற்கும் திருமணமே ஆகாத நிலைக்கும் கிரகங்களின் ஆதிக்கமே காரணமாகிறது. திருமணம் தள்ளிப் போவதற்குப் பல காரணங்கள் உள்ளன. கல்வி, வேலை வாய்ப்பு இவற்றால் மட்டுமே திருமணம் தள்ளிப்போகிறது. ஆனால் தடைப்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. தோஷ அமைப்புகள் ஒரு காரணம் என்றாலும், மனத்திற்குப் பிடித்த தோற்றப் பொலிவு இல்லாமை, தான் நினைக்கும் கல்வி பெறாமை, அவரவர் பெறும் ஊதிய அளவு குறைவு, உடன்பிறப்புகளின் எண்ணிக்கை, குடும்பத்தின் ஏற்றத் தாழ்வுகள் இவைதான் முக்கியமான காரணங்களாகும்.

இதைவிடப் பெரிய கொடுமை என்னவென்றால் வயது வித்தியாசம் தான் என்னுடைய அனுபவத்தில் எந்த ஒரு பெண்ணும் ஓரிரு வயதுக்குமேல் வித்தியாசம் இருக்கக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். வயது வித்தியாசத்திலும் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது இருக்க வேண்டும் என்ற எண்ணம் எவருக்குமே இல்லாதது வருந்தத் தக்க ஒன்றாகும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் மிகக் குறைந்த வயது வித்தியாசத்தில் திருமணம் செய்துக் கொண்ட பெண்கள் பிற்காலத்தில் மிகவும் வருத்தப்பட நேரும் என்பது அவர்களுக்கு இப்போது புரியாத புதிர்தான் !.



ஒரு பெண்ணின் தாய் தன் மகளுக்குத் திருமணப் பொருத்தம் காண சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன் வந்தார்கள். இப்போது அப்பெண்ணுக்கு வயது 29. ஒரு வயது வித்தியாசம் பார்த்தே 5 ஆண்டுகள் ஓடி விட்டன. 30 வயதைத் தொடப் போகும் நிலையில் இப்போது இரண்டு வயது வித்தியாசத்தில் பார்க்கலாம் என்றுதான் பெண் சொன்னதாக கூறினார்கள். இதுபோல வயது வித்தியாசம் பார்த்தே இளைமயைப் பலி கொடுக்கும் பெண்கள் ஏராளம். திருமணம் ஆகவில்லையே என்று தவிக்கும் பெண்களின் அணிக்கு "இளமை" என்ற கனவு காணும் பெண்களின் பேராசை பெரு நட்டமாகி திருமணம் ஆனால் போதும் என்ற நிலைக்குக் கட்டாயம் வந்துதான் ஆக வேண்டும்.

இவர்களைப் போல இலவுகாத்த கிளிபோல காத்திருந்து திருமணம் ஆகாமல் வாழ்வை இழந்த நிலையில் உள்ளனர். திருமணம் ஆகாதநிலை என்பது வாழ்வை இழந்த நிலை என்றே சொல்லலாம். அத்தகைய மணம் காணா நிலையினர் சிலரைக் காணலாம்.

உதாரணம்:1

| | | | |
|---|---|---|---|
| | | சனி | |
| ல/ | இராசி | | கேது |
| செவ் ராகு | | | |
| | குரு சந் | | சூரி புத சுக் |

| | | | |
|---|---|---|---|
| சூரி சனி | | சுக் | ல/ ராகு |
| புத | அம்சம் | | |
| | | | |
| சந் கேது | | குரு | செவ் |

25—9—1971இல் பிறந்த இப்பெண்ணுக்கு இதுவரை திருமணம் ஆகவில்லை. 7ஆம் அதிபதியும் சுக்கிரனும் பலம் இழந்தால் திருமணம் ஆகாது என்ற விதிப்படி இப்பெண்ணுக்கு 7க்குரிய சூரியன் 8இல் மறைவு. புதனும் சுக்கிரனும் அஸ்தங்கம் அடைந்து விட்டது. எனவே வயது 43 ஆகியும் திருமணப்பேறு இல்லை.

*உதாரணம்:2*

| | | | |
|---|---|---|---|
| சுக் | செவ் | சனி | சந் |
| சூரி புத | இராசி | | கேது |
| ல / ராகு | | | |
| குரு | | | |

*25—2—1972இல் பிறந்த இப்பெண்ணுக்கும் இதுவரை திருமணம் நடைபெறவில்லை. இலக்கினாதிபதியும் 7ஆம் அதிபதியும் பாவ கர்த்தாரி யோகத்தில் இருந்தால் திருமணம் ஆகாது என்ற விதிப்படி இச்ஜாதகத்தில் இலக்கினாதிபதி சனிக்கு இருபுறமும் செவ்வாய் சந்திரன் பாவர்கள் உள்ளனர். அதுபோல அதிபதி சந்திரனுக்கு இரு புறமும் சனி, கேது ஆகிய பாவர்கள் உள்ளனர். எனவே இந்த ஜாதகிக்கும் 43 வயதாகியும் திருமணம் ஆகும் நிலை இல்லை எனலாம்.*

*இதுபோல திருமணம் ஆகாத நிலையை உணர்த்தும் கிரக அமைப்புகள் சிலவற்றைக் காணலாம். அவையாவன.*

1. *இலக்கினத்தையும் இராசியையும் சனிபார்ப்பது*
2. *சூரியன், சந்திரன், செவ்வாய் கூடி 10இல் இருப்பது*
3. *பலம் பெற்ற கிரகங்கள் நான்கு கூடி 5,9,10இல் இருப்பது*
4. *சனி சந்திரன் கூடி 7இல் இருப்பது அல்லது 7ஐப் பார்ப்பது*
5. *சந்திரனை சனியும் குருவும் பார்ப்பது*
6. *7ஆம் அதிபதி நவாம்ச இலக்கினத்திற்கு 12இல் பலம் இழந்திருப்பது*
7. *சுக்கிரனும் சுக்கிரன் நின்ற இராசி அதிபதியும் 6,8ஆக இருப்பது*
8. *5ஆம் அதிபதி இராகு அல்லது 9ஆம் அதிபதியுடன் தொடர்பு பெறுவது.*
9. *1,7இல் பாவிகள் நிற்க, 1,7ஆம் அதிபதிகள் பகை, நீசம் அஸ்தங்கம், பெற்று சுக்கிரனும் பலம் இழந்திருப்பது.*
10. *துலா இலக்கினத்திற்கு 7இல் சூரியன் இருப்பது.*

*இப்படிப்பட்ட அமைப்புடைய ஜாதகங்கள் வந்தால் திருமணம் ஆகாது என்பதைச் சொல்லாமல் இனி எதற்குச் ஜாதகம் பார்க்க வேண்டும் ஜாதகம் பார்க்காமல் விருப்பப்பட்ட வரைத்திருமணம் செய்து கொள்வதேக் நல்லது என்று சொல்லி அனுப்புவதில் தவறே இல்லை அல்லவா?*


## முழுவதும் விந்தையான நினைத்ததை நிறைவேற்றும்

# அற்புத சித்த மோதிரம் இலவசம்



அப்படி தாங்கள் ஏதேனும் துயரால் சிக்கியிருப்பின் கவலைப்பட வேண்டாம். உடன் எங்கள் ஆசிரம மோதிரம் பெற்று அணிந்தாலோ அல்லது உடன் வைத்திருந்தாலோ நீங்கள் விரும்பும் ஆண் / பெண் இதயத்தை கவரும், யாருடைய பெயரைஉச்சரிக்கின்றீரோஅவர்எத்தனைகல்நெஞ்சம்படைத்தவராயிருப்பினும் தங்கள் காலடியில் வந்து விழுவார். மேலும் தங்கள் விருப்பத்தின்படி பணிந்து நடப்பர், வியாபாரத்தில் லாபம், பரீட்சையில் வெற்றி, மனதுக்கேற்ற திருமணம், புத்திரபாக்யம், லாட்டரி சீட்டில் பரிசு, வீட்டில் சண்டை சச்சரவு, நோய் நொடி, கடன் பிரச்சனை முதலான குறைகளிலிருந்து விடுதலை. ஆரோக்கியத்தில் அனுகூலம், நினைவாற்றல் கூடுதல், வேலையில் பதவி உயர்வு, வழக்குகளில் வெற்றி, இழந்த பொருட்கள் திரும்ப கிடைத்தல், இவ்வாறு நாளொருமேனி பொழுதொரு வண்ணம் முன்னேற்றம் அடைந்து எல்லா காரியம் வெற்றியுடன் நடந்து முடியும். இந்த அற்புத சித்த மோதிரம் தற்போது எங்களது ஆசிரம விசே யாகத்தை முன்னிட்டு சில நாட்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். பெற விரும்புவோர் பெயர், விலாசம் மற்றும் ஒன்றிலிருந்து ஒன்பதுக்குள் ஓர் எண்ணையும் மறக்காமல் எழுதவும். **தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

N. SUBRAMANI THANTRIC

VENKATAPURAM, GUDIYATHAM (VELLORE) - 632 602.

PH : 04171 - 229015, CELL : 98653 71667

ADVT

# மோகம் தூண்டிவிட்ட வேகம்
# ஜாதகம் உணர்த்திக் காட்டிய பங்கம்



**Dr. E. சரவணன்**
**Cell : 91769 26027 | 94441 59680.**

வாழ்க்கை நிறைய பேருக்கு நிறைய வி-யங்களை கற்று கொடுக்கிறது. சிலர் மற்றவர்களுக்கு கிடைத்த அனுபவங்களை அல்லது தாங்கள் கற்று கேட்டு தெரிந்துக் கொண்ட வி-யங்களை தங்களுடைய வாழ்க்கையின் அடுத்தபடிக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். அப்படி மற்றவர்களின் அனுபவங்களைக் கொண்டு தங்கள் வாழ்க்கையை செப்பனிட்டுக் கொள்பவர்களே புத்திசாலிகளாகவும், சாதிக்க கூடியவர்களாகவும் சமுதாயத்தில் உயர்ந்து இருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு தற்பொழுது உலாவரும் கைபேசியை எடுத்துக் கொள்ளலாம். நீங்களும் நானும், எவனோ கண்டுபிடித்த பொருளை உபயோகப்படுத்தி அதில் நமது வாழ்க்கைக்கு தேவையான வி-யங்களை சேகரித்து வைத்துக் கொண்டு அதை முறையாகவோ முறையற்ற முறையிலோ பயன்படுத்துகிறோம். ஆனால் அதை பார்க்கும் வேறு ஒருவன், அதில் நாம் அவ்வப்போது சார்ஜ் செய்யும் பேட்டரிக்கு வீணாகும் காலத்தை குறைக்க புது முயற்சிகளைக் செய்கிறான். வேறு ஒருவன் அதனுடைய அடுத்த பரிமாணத்தை நோக்கி போக முயல்கிறான். வேறு ஒருவன் அந்த கைபேசி யுக்தியை விட சிறப்பாக எதாவது செய்ய யோசிக்கிறான்.

நம்மவர்கள் கைபேசியில் வெட்டிப் பேச்சுகளில் காலத்தை வீணாக்கிக் கொண்டு, முகநூலில் போய் அவனிடம், இவனிடம், அவளிடம், இவளிடம் வெட்டி பேச்சுகளுடன் விதன்டாவாத வி-யங்களைப் பேசிக் கொண்டு, தனது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் தரும் கருவிகளை எப்படி தங்களுடைய வாழ்க்கையின பயன்படுத்தலாம் என்று யோசிக்கும் எண்ணமே இல்லாமல் இருப்பது தான் வேதனையான வி-யமாகும்.

கணினியில் புத்தம் புதிய வி-யங்களைப் புகுத்த மைக்ரோசாப்ட்வேர் நிறுவனம் முயன்றுக் கொண்டே இருக்கிறது. அங்கு நம்மை போன்ற ஒரு தமிழன் ஒரு பகுதிக்கு தலைமை பொறுப்பு ஏற்கிறான். நாம் அவனைப் பார்த்து பெருமூச்சு விடத்தான் முடிகிறது. சாதிக்க நினைக்கின்றவனுக்கு வாழ்க்கை நிச்சயமாக உதவத்தான் செய்கிறது. கணவு கண்ட அப்துல்கலாமும் என்னையும் உங்களையும் போன்ற மனிதர் தானே.

சரியான திட்டமிடுதல், சரியான உந்துதல், சரியானப் பாதையை தேர்ந்தெடுத்தல், சரியான வழிகாட்டியை பிடித்துக் கொண்டு மேலேறுதல், இப்படி எல்லாவற்றிலும் ஒரே நோக்கம், அது மட்டுமே இலக்கு என்பவர்களுக்கு வாழ்க்கை நிச்சயமான வழி காட்டும். காட்டும், காட்டியே தீரும்.

இன்றைக்கு பெரிய நடிகர் என்றால் அதற்கு பின்னால் (நடிகர் விஜய் தன்னுடைய புலி பாடல் விழாவில் சொன்னது போல) எத்தனையோ அவமானங்கள், அவமதிப்புக்கள், ஏளனங்கள், ஏச்சுக்கள், தோல்விகள், இத்தனையையும் சகித்துக் கொண்டு மேலே மேலே ஏற வேண்டும் என்ற வெறி இருந்ததால் மட்டுமே இந்த சாதிப்பு நிகழ்ந்து இருக்கக் கூடும். புறமுதுகிட்டு ஓடி இருந்தால், இன்றைக்கு இது போல நிற்க முடியுமா? வாழ்க்கை கற்றுத் தரும் படிப்பினைக்காக அவர்கள் பட்ட அவஸ்தைகளும், அவமானங்களும், தோல்விகளும் நிச்சயமாக அதிகமாகத்தான் இருக்கும்.

பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்க்கை கற்று தருவதை உணராதவனுக்கு நாம் எப்படி சொல்லி உணர வைக்க முடியும். என்னால் முடிந்தவரை முயற்சித்து பார்த்து தோற்ற கதையிது.

(எனது உரையாடலுக்கும் வந்த பையனின் உரையாடலுக்கும் வித்தியாசம் தெரிவதற்காக நான் உபயோகித்து இருக்கும் வார்த்தைகள் - சாமியும் தம்பியும். வேறு எந்த அர்த்தமும் கொள்ள வேண்டாம்)

சாமி, பெயர் இராசிப் பொருத்தம் பார்க்கணும் என் பெயர் ரமே-. பொண்ணு பெயர் லாவன்யா.

தம்பி, உட்காருங்க. பெயர் இராசி பார்த்து கல்யாணம் பண்ணக்கூடாது. இரண்டு பேர் ஜாதகத்தையும் பார்த்தா தான் எப்படி இரண்டு பேரும் சேர்ந்து வாழ்க்கையை நடத்துவாங்களா? அல்லது ஒற்றுமை குறைவாக இருக்குமா? ஏதாவது ஜாதகத்தில் குறைபாடுகள் உள்ளதா? அது நிவர்த்திக்கப்படுமா, இல்லையா? செவ்வாய் இருவருக்கும் சரியாக இருக்கிறதா? குரு, செவ்வாய், சுக்கிரன் இணைவு ஏதாவது இருக்கிறதா? என்று பல்வேறு கோணங்களில் கவனமாய் பார்க்க வேண்டிய வி-யமிது.

தம்பி, பெயர் இராசி பார்க்கறதுன்னா, இரண்டு ஆண்கள் - ரமேஷ்க்கும் சுரேஷ்க்கும் கூட பார்க்கலாம். கட்டிக்க முடியுமா? வெறும் பெயர் இராசிப்படி திருமணம் செய்வது தெரிந்தே கிணற்றில் விழுவதற்கு சமம்

தம்பி, எல்லோருக்கும் பெயர், நட்சத்திரப்படி வைத்து இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அதனால் பெயர் இராசிப் பார்த்து திருமணம் செய்துக் கொண்டு வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளாதீர்கள்.

சாமி, எனக்கு ஜாதகம் இருக்கிறது. பெண் வீட்டில்

இல்லை என்கீறார்கள்.

தம்பி, அப்போ ஏதோ வில்லங்கம் இருப்பதாக தெரிகிறது. கேட்டு பாருங்கள்.

(அவன் கைபேசியில் தொடர்புக் கொண்ட நேரத்தில் நான் அவனுடைய ஜாதகத்தை கணினியில் போட்டேன்)

தம்பி, முதல்ல உங்க ஜாதகப்படி உங்களுக்கு திருமணம் மற்றும் திருமண வாழ்க்கை எப்படி இருக்குமுன்னு பாத்திடலாம். உங்களுக்கு ரி-ப இலக்கினம், இராசி நட்சத்திரம் பூரம் 2ஆம் பாதம்.

சாமி, இல்லை. எனக்கு உத்திரம் 1ஆம் பாதம் தான். சிம்ம இராசி. இதோ பாருங்க, என் கைபேசியில் பதிவு செய்து இருக்கிறேன்.

தம்பி, நீங்கள் பிறந்த தேதி 28.06.1990. விடியற் காலை 03.30. விடிந்தால் வியாழக்கிழமை. தமிழ் பஞ்சாங்கத்தின்படி புதன்கிழமை இன்னும் முடியவில்லை. நிச்சயமாக, உங்களுக்கு பூரம் நட்சத்திரம் 2-ம் பாதம் தான். உங்கள் ஜாதகமே தவறாக எழுதப்பட்டுள்ளது.

சாமி, இதுவரை உத்திரம் நட்சத்திரம் 1ஆம் பாதம் என்று தான் எங்க வீட்டில் எனக்கு சொல்லி இருக்காங்க. இப்போ திடீரென்று தப்புன்னு எப்படி சொல்லறீங்க.

தம்பி, நான் சொல்லலப்பா, கணினி போட்ட ஜாதகப்படி நீங்கள் பூரம் 2ஆம் பாதம். 138.59 பாகையளவில் இருக்கீறீர்கள். உங்கள் கூற்றுப்படி உத்திரம் நட்சத்திரம் வரவே வராது. மதியம் 3.30-க்கு கணித்தால் ரிஷப இலக்கினம் வராது. ஒரு வேளை 28.06.1990க்கு பதிலாக 29.06.1990 விடியற் காலை 03.30-க்கு போட்டு பார்த்தால் உத்திரம் 2ஆம் பாதம், கன்னியா இராசியில் சந்திரன் இருக்கும். என்னை பொறுத்தவரை நீங்கள் பூரம் தான்.

சாமி, எனக்கும் நான் பார்த்து இருக்கும் பெண்ணிற்கும் பெயர் பொருத்தம் பாத்தா போதாதா?. சரி. என் ஜாதகப்படி இப்போ திருமணத்திற்குண்டான குரு பலன் இருக்கா?

தம்பி, நீங்கள் ரிஷப இலக்கினம். சுக்கிரன் இலக்கினாதிபதியாகி அதுவும் இலக்கினத்திலேயே இருப்பதால் உங்களுக்கு நான் சொல்லுவது ஏதும் காதுல ஏறாது. நீங்கள் ஒரு தீர்மானத்தோடு வந்து இருக்கிறீர்கள். நான் அதை மறுத்துப் பேசுவது வீண். இருந்தாலும் என் கடமையை நான் செய்து விடுகிறேன். உங்கள் திருமணத்திற்கு செவ்வாய் 7ஆம் அதிபதி. 2ஆம் அதிபதியான புதன், 11ஆம் அதிபதியான குரு இவர்களை பாக்க வேண்டும். இவர்கள் 3 பேரையும் கோச்சார குரு தற்போது பார்க்கவில்லை. இலக்கின வீட்டை கோச்சார சனி 7ஆம் வீட்டிலிருந்து பார்ப்பதால் உங்களுக்கு திருமண பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

ஆனால் கோச்சார குரு, சுக்கிரனை பாக்கும் போதோ, அல்லது 7ஆம் அதிபதியையோ, இலக்கினத்தையோ, 7ஆம் வீட்டையோ பார்க்கும்போதுதான் திருமணம் நடைபெறக்கூடும். அதனால் உங்களுக்கு திருமணம் தற்போது நடைபெறாது. 2016 ஆகஸ்டுக்கு பிறகு தான்


| | | | |
|---|---|---|---|
| செவ் | | ல / சுக் | புத சூரி குரு |
| | 1990 ஆண் | | கேது |
| ராகு | | | சந் |
| சனி (வ) | | | |

தம்பி, உங்கள் ஜாதகத்தில் 2ஆம் வீட்டையும் 5ஆம் வீட்டையும் சனியும் செவ்வாயும் சேர்ந்து பார்ப்பதால் பெருத்த துன்பங்கள் உங்களுக்கு உண்டாகக்கூடும். அதுவும் கோச்சார குரு அடுத்த வருடம் ஆகஸ்டு மாதவாக்கில் 5ஆம் வீட்டில் சஞ்சரிக்கப் போவதால் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நலம்.

தம்பி, 7ஆம் அதிபதியான செவ்வாய் இருப்பது 11ஆம் வீடு. அது ரேவதி நட்சத்திர சாரத்திலிருக்கிறார். செவ்வாய்க்கு புதன் பகை. ஆக, 7ஆம் அதிபதி தன்னுடைய பலத்தை இழக்கிறார் அடுத்து இலக்கினாதிபதி சுக்கிரன் சூரியனுடைய நட்சத்திர சாரத்திலிருக்கிறார். சுக்கிரனுக்கு சூரியன் எதிரி. அடுத்து சூரியன் - திருவாதிரை நட்சத்திரத்தில் இருக்கிறார். இராகு சூரியனுக்கு எதிரி. அடுத்து புதன் செவ்வாய் நட்சத்திர சாரத்திலிருக்கிறார். கேது சனியினுடைய நட்சத்திர சாரத்திலிருக்கிறார். சந்திரன் சுக்ரனுடைய நட்சத்திர சாரத்திலிருக்கிறார். இராகு சந்திரனுடைய நட்சத்திர சாரத்திலிருக்கிறார். ஆக இலக்கினாதிபதி, 2ஆம் அதிபதி, 3ஆம் அதிபதி, 4ஆம் அதிபதி, 5ஆம் அதிபதி, 6ஆம் அதிபதி, 7ஆம்அதிபதி, (8 மற்றும் 11 நீங்கலாக) 9ஆம் மற்றும் 10ஆம் அதிபதி, 12ஆம் அதிபதி ஆகியோர் பலமிழந்த நிலையில்

## "சூட்சும" ஜோதிடர் Dr.G.பட்டாபிராமன்

அவர்கள் தமிழகமெங்கும் பத்து விதமான ஜோதிட சூட்சும பயிற்சிகளை பல்வேறு நகரங்களில், நூற்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளை அளித்து, பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான ஜோதிடர்களால் சிறந்த ஜோதிட பயிற்சியாளர் என்ற பாராட்டை பெற்றவர். கடந்த 2.9.2015 அன்று தனது 67வது பிறந்த நாள் கண்ட அவரை மேலும் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகிறோம்.





இருக்கிறார்கள். மொத்த கிரகங்களும் (குருவைத் தவிர) தங்களுடைய எதிரி நட்சத்திர சாரத்திலிருப்பது வேதனைக்குரிய விஷ்யமாகும்.

உங்களுடைய வாழ்க்கையில் விதி விளையாடி வருகிறது என்பதற்கு உதாரணம் உமது படிப்புத்தான். வெறும் டிப்ளமா முடித்திருப்பதற்கு காரணம். தொழில் காரகனான சனி வக்ரமாக இருப்பதால், சூரியனுடைய சாரத்திலிருந்தாலும் உங்களுக்கு அரசாங்க வேலை கிடைக்கவில்லை. மேலும் சந்திரன் சுக்கிரனின் நட்சத்திர சாரத்திலிருப்பது உங்கள் திருமணத்தில் நிச்சயமாக பிரச்சனை உருவாகும்.

(நான் சொன்னது எதுவும் அந்த பையனின் மண்டையில் ஏறியது போல தெரியவில்லை.)

சாமி, நாங்கள் போய் பெண்ணை பார்த்து விட்டு வந்து விட்டோம். எனக்கு பிடித்து இருக்கிறது. (பையனுடைய சுக்கிரனை பெண்ணின் செவ்வாய் பார்க்கிறது. அதனால் கண்ணோடு கண் நோக்கின் காதல் வயப்பட்டு விட்டார்கள் போலிருக்கிறது. மணந்தால் லாவன்யா, இல்லையென்றால் மரணதேவி என்ற முட்டாள் தனமான முடிவிலிருக்கும் இவனுக்கு உபதேசம் செய்வது வீண் என்ற முடிவிற்கு வந்து விட்டேன்) உங்களுக்கு வேண்டுமென்றால் அந்த பெண்ணின் பிறந்த தேதியும் நேரமும் வைத்து பொருத்தம் பார்த்து விடலாமே?

(எனக்கு கோபம் தலைக்கேறிக் கொண்டு இருந்தது. ஒரு முட்டாளிடம் பேசிக் கொண்டிருப்பது போல இருந்தது)

தம்பி, பெண் ரோகினி நட்சத்திரம். 10 பொருத்தங்கள் உள்ள புத்தகத்தை பார்த்தால் அதில் ரோகினிக்கு பூரம் - தினம், கணம், ஸ்திரி தீர்க்கம், ரஜ்ஜு, வேதை ஆகிய 5 பொருத்தங்கள் இருக்கிறது. பலன் - அதமம் என்றும் போட்டு இருக்கிறது. நட்சத்திர பொருத்தம் சரியில்லை. பெண் ஜாதகத்தில் 6 கிரகங்கள் இலக்கினத்திலும், 7ஆம் வீட்டிலும் இருப்பது நல்லது அல்ல.

| | | | |
|---|---|---|---|
| | | ல / கேது சந் | |
| சனி | 1993 பெண் | | |
| | | | |
| | செவ் சூரி ராகு சுக் | புத குரு | |

தம்பி, செவ்வாய் 7இல் சூரியனுடன் இருப்பது சரியல்ல. இது அமங்கலி யோகம் எனப்படும். இப்படிப்பட்ட அமைப்பு இருந்தால் திருமணத்திற்கு பிறகு இந்த பெண்ணிற்கு வாய்க்கும் கணவன் இறக்க வேண்டும். அல்லது விவாகரத்து வரை போகக் கூடும். இரண்டில் ஒன்று நடப்பதை உங்களால் தடுக்க முடியாது. முட்டாளாக இருப்பது வேறு. எனது ஜோதிடத்தில் எனக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையின் பேரில் சொல்கிறேன். உங்கள் உயிருக்கு ஏதாவது பிரச்சனை ஏற்படக்கூடும்.

மேலும் 7இல் இராகு இருப்பது திருமணத்தில் நிச்சயம் பிளவை தரக்கூடும். சுக்கிரன் 7இல் இருப்பது மேலும் கெடுதலைத் தரும். இராகுவும் சுக்கிரனும் இணைந்து இருப்பதும் தவறு. இப்படி ஏகப்பட்ட பிரச்சனைகளோடு இருக்கும் பெண்ணை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுக்கு வயது 25 தான் ஆகிறது. அப்படி இருக்க எதற்கு அவசரமாக இந்த பெண்ணை முடிக்க விரும்புகீறீர்கள் என்று புரியவில்லை. இலக்கினத்தில் கேது இருப்பது (12ஆம் பாவத்தில்) அந்த பெண் எல்லா விஷயங்களிலும் தனக்கு ஏதாவது ஆதாயம் இருந்தால் மட்டுமே அதைச் செய்வாள். சந்திரன் இலக்கினத்திலிருந்தாலும் (12ஆம் பாவத்தில்) அது அந்த பெண்ணை எப்போதும் எதையாவது சிந்தித்துக் கொண்டே வைத்து இருப்பார்.

இதற்கு மேலும் ஒரு விஷயம் சொல்லியே ஆகவேண்டும். விருச்சிகத்திலும் ரிஷபத்திலும் கிரகங்கள் இல்லாமல் இருப்பது தான் நல்லது. ஆனால் இந்த பெண்ணுக்கு 6 கிரகங்கள் இருப்பது பெரும் துன்பத்தையே தரும். இதனால் தான் பெண் வீட்டுக்காரர்கள் பெண்ணுக்கு ஜாதகம் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போ எப்படி தந்தார்கள் என்று ஆச்சிரியமாக இருக்கிறது.

(வந்த ஜாதகனுக்கு நான் சொல்லிய எதுவும் மூளையில் ஏறவே இல்லை என்பது அவனுடைய பேச்சிலிருந்து ஊகிக்க முடிந்தது.)

சாமி, நாங்க ஏற்கனவே போய் பார்த்து விட்டு வந்து விட்டோம். அவர்கள் இந்த வாரத்தில் வருவதாக சொல்லி இருக்கிறார்கள். அதற்குள் பெயர் இராசி பார்த்து வைக்க சொல்லி இருக்கிறார்கள். உத்திர நட்சத்திற்கு எத்தனை பொருத்தங்கள் வருகிறது.

தம்பி, உங்களுடையது பூரம் நட்சத்திரம் 2ஆம் பாதம்.

சாமி, பரவாயில்லை. உத்திரத்திற்கு பாத்துச் சொல்லுங்கள்.

(ரிஷப இலக்கினக்காரர்களுக்கு நீங்கள் உபதேசம் செய்வதை விட சுவற்றில் போய் மூட்டிக் கொள்ளலாம். நான் எழுதிய கட்டுரையை நானே படித்துக் கொள்ள வேண்டும் போல இருக்கிறது.)

தம்பி, உங்களுக்கு பூரம் நட்சத்திரம் 2ஆம் பாதம். அப்படி இருக்க எதற்காக உத்திரம் 1ஆம் பாதத்திற்கும் ரோகினிக்கும் பொருத்தம் இருக்கிறதா என்று பார்க்கணும். 6 பொருத்தங்கள் வருகிறது. ஆனால் நான் எழுதி தரமாட்டேன். வேறு யாரிடமாவது போய் எழுதி வாங்கிக் கொள். எப்படி இருந்தாலும் இந்த திருமணம் நடைபெறும் என்ற உமது எண்ணம் ஈடேறாது. வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளாதே. ஆற்றில் விழுபவனுக்கு கூட கடவுள் இரண்டு முறை கைகளை வெளியே தூக்கிக் காப்பாற்ற உதவுவார். கடவுளே உன்னை என்னிடத்தில் அனுப்பியதாக எண்ணிக்கொள். எனக்கு தெரிந்த ஜோதிட அறிவிற்கு எட்டியவரையில் இந்த திருமணம் சரியில்லை என்று மனத்திற்கு படுவதை சொல்லி விட்டேன். ஏற்று கொள்ளுவதும், மறுப்பதும் உனது விருப்பம். நல்ல தொழிலில் இருக்கிறாய். இன்னும் வயது இருக்கிறது. நல்ல பெண்ணை பார்த்து திருமணம் செய்துக் கொள்வதை விட்டு நீயே உன் தலையில் மண்ணை வாரி போட்டுக் கொள்ள யத்தனிக்காதே. போய் வா

அவனே தன் கைப்பட எழுதிக் கொண்டு கிளம்பிவிட்டான். முட்டாள்களை திருத்த எத்தனித்த எனக்கு இன்றைக்கு கிடைத்த பாடத்திலிருந்து அடைந்த நீதி யாதெனில் - மூடர்களிடம் உனது ஜோதிட அறிவை காட்டாதே. என்பது தான்

●

முதல் ஆண்டு மலர்

# மேதினி ஜோதிடம்

## MUNDANE ASTROLOGY

தெய்வதிரு இராம.பழனியப்பன்

மேதினி ஜோதிடம் என்பது கிரகங்களின் அமைப்புகள், கிரகங்களின் இயக்கங்கள், பஞ் சாங்க விதிமுறைகள், யுரேனஸ் மற்றும் நெப்ட்யூன், புளூட்டோ இவைகளின் கிரக இயக்கங்கள், குரு, புதன், சுக்கிரன் இவற்றின் கிரக இயக்கங்களை, ஓரளவு சார்ந்து ஒரு நாட்டில் எதிர் பாராமல் நடக்கும் இன்ப துன்பம் நன்மை — தீமையான நிகழ்வுகளைக் குறிக்கும் ஜோதிடக்கூறாகும்.

மேதினி ஜோதிட சாஸ்திரத்தால் ஒரு நாட்டில் 40 ஆண்டுகளுக்குப் பின் நடக்கும் நிகழ்வுகளைத் துல்லியமாக முன் கூட்டியே அறிந்துக் கொண்டு, அந்த நாட்டு மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள முடியும்.

மனித வாழ்க்கை முதல் இயற்கையில் ஏற்படும் பல்வேறு செயல்கள் வரை கிரகங்களும், பஞ் சாங்கங்களும், பிரபஞ்சத்தில் ஏற்படும் நிகழ்வுகளுக்கு ஏற்ப மாறுபடுவதால் ஞானிகள், கற்றறிந்த பெருமக்கள், இன்றைய விஞ்ஞானிகள் போன்ற பலர் கண்டறிந்து, மக்களை அவ்வப்போது இயற்கையில் ஏற்படும் கொடிய மாற்றங்களில் இருந்து காத்து வந்தனர்.



சிலப்பதிகாரத்தில் மதுரை எரிக்கப்பட்டப் பின் கண்ணகி அழுது கொண்டு நிற்க, மன்னன் அழிந்ததும், மதுரை எரிந்ததும், ஊழ் வினைப்பயன், உன்னால் ஏற்பட்டது அல்ல என மதுராபதித் தெய்வம் கூறி சமாதானப்படுத்தியது மேதினி ஜோதிடத்தின் அடிப்படையாகும்.

ஒரு நாட்டில் வாழும் மனிதர்களின் வாழ்க்கை முறைகள் பண்புடையதாக இல்லை எனில், ஊழ்வினைப் பயனாகிய கர்மா வால் பல சேதாரங்கள் நாட்டுக்கும், மக்களுக்கும் ஏற்படலாம். என்பது ஜோதிடத்தின் அடிப்படை விதிகளில் முக்கியமானது ஆகும்.

இதனையே இளங்கோ அடிகள் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பார். ஊழ் என்ற அதிகாரத்தில் உள்ளப் பத்துப் பாட்டுகளுமே ஜோதிடத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட உண்மைகள் ஆகும். ஊழ்வினை அல்லது கர்மாவின் அடிப்படையில் நிகழ்ந்த எல்லா நிகழ்வுகளைப் பற்றி மஹாபாரதம், இராமாயணம், சிவபுராணம், தேவி மஹாத்மியம் போன்ற சமய இலக்கிய நூல்களில் இருந்து பல செய்திகளை நாம் அறியலாம்.

கர்மாவின் அடிப்படையில் தீமையான நிகழ்வுகள் நடைபெறாது நம்மைக் காத்துக் கொள்வது எப்படி? என்பதனையும், ஏற்பட்டத் தீமையான நிகழ்வுகளுக்கும், பரிகார முறைகள் என்ன? என்பதனைப் பற்றியும் வேதங்களும், கிருஹ்ய சூத்திரம் என்ற நூலும் விளக்கமாக கூறி உள்ளன.

இந்திய வரலாற்று நூல் எழுதிய பேரறிஞர் பணிக்கர் என்பவர் உலகத்தில் நடைபெற இருக்கும் அவலங்களையும் பேரழிவுகளையும் பண்டைய ஜோதிடப் பெருமக்கள், ஞானிகள், மகான்கள், எடுத்துக்கூறித் தாங்கள் வாழ்ந்து வந்த காலக்கட்டத்தில் இருந்த மக்களை நெறிப்படுத்தியதால் அவர்கள் அந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்து பத்திரமான இடங்களுக்குச் சென்று தம்மைக் காத்துக் கொண்டனர்.

எனவே, போகும்போது தங்களிடம் இருந்த பல பொருட்களையும், எடுத்துக் கொண்டு சென்றதால், அவர்கள் வாழ்ந்த முறைகளைப் பற்றிய செய்திகள் அறியக் கிடைக்கவில்லை.

சிந்துச் சமவெளி மக்கள் தெற்கு நோக்கிச் சென்றிருக்கலாம் எனவும், அவர்கள் விட்டுச் சென்ற சிலகாசுகள், மண்பொம்மைகள், ஆற்று வெள்ளப் பெருக்கால் அழிக்கப்பட்ட வீடுகள், கோயில்கள், பல இருப்பிடங்களின் வாசல், கிணறு, குப்பைத் தொட்டி, போன்றவைகளின் அடித்தடங்களை வைத்து நாம் சிந்துவெளி நாகரிகத்தை வைத்து, சில செய்திகளை, மட்டுமே அறிய முடிகிறது என்றார். இன்னும் சிந்துவெளி நாகரிகத்தினைப் பற்றிய செய்திகள் முழுமையாக வெளிப்படவில்லை.

பிரபஞ்சத்தில் அளவிட முடியாத அளவிற்குப் பஞ்ச பூதங்கள் உள்ளன. இவைகளின் இயக்கங்கள் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக இருப்பதால், வெவ்வேறு சுற்றுப்புறச் சூழலுக்குத்

தக்கவாறு மாற்றங்களும், நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

எனவே மேதின ஜோதிட வழிமுறைகள் மூலம் நாம் இவைகளை அறியமுடியும். நடப்பதற்கு முன் அறிகின்ற அறிவே உத்தமமானது, மனித இனத்திற்கும் இன்றியமையாதது.

பிரபஞ்சத்தில் உள்ள பஞ்ச பூதங்களைப் போல, மனிதனுடைய உடலிலும், பஞ்ச பூதங்கள் உள்ளன. உடல்—மண், வெப்பநிலை—நெருப்பு, நீர் நிலை—நீர், மூச்சு—காற்று மனித இயக்கத்திற்குத் தேவைப்படும் இடம்—ஆகாயம், அண்டம் அளவிட முடியாது. பிண்டம் அளவுக்குட்பட்டது. எனவே பிரபஞ்சம் மனிதனையும், மனிதன் பிரபஞ்சத்தினையும் ஆளுவது உண்மை.

"பஞ்சபூதத்தின் செயல்களைக்கூறும் கலைகள், மெத்தவளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழினிற்கில்லை. திசைகள் எட்டும் சென்று அவைகளைக் கொண்டுவந்திங்கு சேர்ப்பீர் இங்கு" எனப் பாரதிபாடுவான்.

பஞ்ச பூதத்தின் இயக்கங்களுக்கு ஏற்ப இயங்கும் மனித உடல், மனம், உயிர் போன்ற இயக்கங்கள் அவன் கர்மாவிற்கு ஏற்ப எவ்வாறு செயல்பட்டு நன்மை—தீமைகளை ஏற்படுத்தும் எனக்கூறுவது மனிதனுடைய ஜாதகம்.

அதே போல் "பஞ்சபூதத்தினால் பிரபஞ்சத்தில் ஏற்படும் இயக்கங்களை விளக்குவது மேதினி ஜோதிடம்" என கார்ல் ஜங் என்ற உளவியல் அறிஞன் கூறுவதுடன் இத்துடன் வராஹமிஹிரரின் பிருஹத் சம்ஹிதையும் படிப்பதால், பூமியின் மேற்பரப்பில் நிகழ வேண்டியவைகளை ஒரு ஜோதிடன் நன்கு அறிந்து கொள்ள இயலும், மேலும் அதை முன்கூட்டியே எடுத்துக்கூறி மக்களைக் காத்து நன்னெறிக்கு உட்படுத்தவும் இயலும்.

பைபிளில் பரமபிதா "ஒளிபிறக்கட்டும்" என்று கூறினார். சூனிய நிலையில் இருந்த உலகத்தில் ஒளி பிறந்தது. வெப்பம் ஒளி, மின்னாற்றல், மின்காந்த தத்துவம், ஈர்ப்பு விசை, இயக்க விசை, அணுவாற்றல் இவைகளை உடைய ஒளி பிறந்தது. ஒளியின் பல்வேறு தன்மைகளின் சேர்க்கையினால் பஞ்சபூதங்கள் பிறந்தன எனக்கூறி இருப்பது இயற்பியல் கோட்பாடுகளை மையமாக வைத்துக் கூறப்பட்டவை

நம் நாட்டுச் சாங்கியத் தத்துவத்தில் கூறப்பட்டு உள்ள "பௌருஷம்" என்ற துகள் அரு—உரு இல்லாதது. அரு—உரு உடையது. இத்துகள் தங்களுடையத் தன்மைக்கு ஏற்ப மூன்று குணங்களில், ஒரு குணத்தைப் பெற்று இயக்கத்தினை ஆரம்பிக்கின்றன.

இந்த இயக்கத்தினை பெற்றத் துகள் பஞ்சபூதங்களுடன் செயல்பட்டு மூலப் "பிரகிருதி" என்ற பெயரைப் பெற்றுப் பலவகையானக பிரகிருதிகளை உண்டாக்குகின்றன. இந்த பிரகிருதிகளின் இயக்கங்களைக் கட்டுக் கோப்பில் வைத்து நடத்துவது கிரகங்களே. மற்றும் பஞ்சாங்க விதிமுறைகளே ஆகும். எனவே பூமியில் மனிதன் பிறப்பதில் இருந்து நடக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளும் மேதினி ஜோதிட கோட்பாடுகளின் படி நடக்கின்றன.



பைபிளில் கூறப்பட்ட மேதினி ஜோதிடக் கோட்பாடு பருமனான நிலை சார்ந்து, சாங்கிய தத்துவத்தின் அடிப்படையில் கூறப்பட்டு உள்ளன.

மேதினி ஜோதிடக் கோட்பாடு உலகினைச் சேர்ந்த ஒரு அடித்தளத்தின் நிலையையும், பிரபஞ்சத்தில் உள்ள ஒரு உயர்தளத்தின் நிலைமையையும் உடையது என்பதால் நாம் நன்றாகப் புரிந்து, ஆய்வுகள் செய்து மேதினியில் ஜோதிடத்தில் என்னென்ன மாற்றங்கள் நிகழும் என்பதனை முன் கூட்டியே சொல்லும் திறமையினைப் பெற வேண்டும்.

இயற்கை விதிகள் காலநேரக் கோட்பாடுகளின் படி எல்லாவற்றையும் செய்து முடிக்கிறது. இதனை மனிதர்கள் புரிந்து கொண்டு நடந்தால், இயற்கை விதிகளின் படி எதனையும் சரியாகச் செய்து முடிக்கலாம்.

ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்த காலநேரம் சரியாகப் பார்க்காது அணுசக்தியினை ஆக்கச் செயலுக்கு பயன்படுத்தச் செய்த ஆய்வுக்குரிய ராக்கெட் பயனளிக்கவில்லை. இரண்டாம் நாள் சரியான கால நேரத்திற்கு அனுப்பப்பட்டதால் பயனுடைய சோதனையானது.

மேதினி ஜோதிடம் மூலம் சரியான கால

நேரங்களை நிர்ணயம் செய்து நடத்தும் உலகியல் நடவடிக்கைகள் எல்லாமே மிகச் சிறப்பாக அமைகின்றன. எனவே ஜோதிடப் பெருந்தகை Dr.B.V.ராமன் அவர்கள் காலநிலை மற்றும் பூகம்பம் பற்றி முன் கூட்டிக் கூறும் (Prdeicting weather and Earth quake) நூலில் வானவியல் துறைக்குச் சேர்க்கப்படும். ஒவ்வொருவரையும் மேதினி ஜோதிடப் பாடம் படிக்க வைக்க வேண்டும் எனவும் ஒவ்வொருவரும் பின்னால் வரும் ஆண்டுகளில் நடக்க விருக்கும் செயல்பாடுகளைக் கணிக்க வேண்டும் எனவும் எல்லாவற்றையும் ஒருங்கிணைந்து ஒரு முடிவெடுத்துச் செயல்பட்டால் பலசீரழிவுகள், சிரமங்களைத் தவிர்க்க முடியும் என்று கூறியுள்ளார்.

தற்போது நாம் பயன்படுத்தும் வானிலை ஆராய்ச்சிக் கருவிகள் மூலம் ஒரு மேதினிச் செயல் நடைபெறுவதற்கு 4மணி நேரத்திற்கு முன்பு தான் அறிய முடியும் என்பதால், நாம் ஏதும் செய்ய முடியாமல், நம்மைக் காத்துக் கொள்ள முடியாமல் அழிந்து போகின்றோம் என்றும் கூறியுள்ளார்.

மேதினி ஜோதிடக் கோட்பாடுகளை 150 ஆண்டுகளுக்கு முன் ஆந்திராவில் வாழ்ந்திருந்த ஞானி வீரப்பிரம்மேந்திரங் காரு, 400 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் வாழ்ந்த நாஸ்ட்ரடாமஸ் போன்றவர்களின் ஆய்வுகளின், பலன்கள் இன்று மிகவும் நன்மையைச் செய்து கொண்டு உள்ளன.

20ஆம் நூற்றாண்டில் பிரிட்டனில் வாழ்ந்து வந்த "ஆலன்லியோ" பெருமகனார் இந்தியாவில் இருக்கும் "மாணிக்கசந்த் ஜெயின்" "எல்.சி.லுத்ரா" "கே.கே.கேதார்" போன்ற மேதினி ஜோதிட அறிஞர்களின் விளக்கவுரையால் பல கெடுதல்கள் தவிர்க்கப்பட்டு உள்ளன.

மேதினி ஜோதிடம் என்ற Mundane Astrologyயில் உள்ள முண்டேன் Mundane என்ற சொல் இலத்தீன் மொழியிலிருந்து பிறந்தது. முண்டஸ் Mundane என்ற சொல்லே அடிப்படையானது.

முண்டஸ் என்ற சொல், தமிழ் — சமஸ்கிருத மொழிகளில் உள்ள மண்டலம் என்ற சொல்லின் அடிப்படையில் இருந்து பிறந்தது. பூமியின் மேற்பரப்பில் ஏதாவது குறிப்பிட்ட செயல் நடந்தால் நிர்ணயம் செய்து அறிந்து கொள்ளும் இடமே மண்டலம் எனப்படும்.

பிறநாட்டு ஜோதிடங்களில் 12வீடுகளில் 9 கிரகங்களின் அடிப்படையில் மேதினி ஜோதிடம் கணிக்கப்படுகின்றன. இந்திய நாட்டுச் ஜோதிடத்தில் இவைகளுடன் பஞ்சாங்கம், நவநாயகர்களின், உபநாயகர்கள், அடிப்படையையும், சேர்த்து நிர்ணயம் செய்கின்றோம்.

முற்காலத்தில் நமக்கு கணித முறையில் கணக்கிட்டு ஆய்வு செய்ய முடியாது இருந்தமையால், ஒரு மேதினி நிகழ்வு நடந்த பின்னே நாம் அதனைப் பற்றி ஆய்வு செய்தோம். தற்போதுள்ள வசதிகள் வாய்ப்புக்களைக் கொண்டு முன்கூட்டியே ஆய்வு செய்து தக்கவாறு செயல்பட்டு மக்களைக் காக்கலாம்.

நமது வருஷாதி நூலில் தாரண ஆண்டுக்குத் தீமையான நிகழ்வுகள் நடைபெறும் ஆண்டாக கூறப்பட்டு உள்ளது.

**தாரணத்தில் மாரியறும், தாரணியில கேடும் உண்டாம்**
**ஓராம் நீ, சீவன்கள் உய்யாது பார். பிணியால்**
**யை மடியுமே, யக்கங் குறைவாம்**
**வெய்யர் பயமே மிகும்**

தாரண ஆண்டில் 1. மழையிருக்காது 2. உலகில் கேடு உண்டாகும். 3. மனிதர், பிற உயிரினங்கள் நன்றாக இருக்க மாட்டார்கள் 4. உலகத்து மக்கள் பிணியால் மடிவார்கள் 5. விளைச்சல் குறையும் 6. சமூக விரோதிகளின் கையோங்கி நிற்கும் நிலைமையால் மக்கள் பயத்துடன் வாழ்ந்து வருவார்கள்.

தாரண ஆண்டின் நவநாயகர்களில் அரசராகிய சூரியன் பெருமழையால் துயரத்தையும், ஆளுகின்றோர்க்குப் பயத்தையும், நெருப்பாலும், பெருமழை யாலும் பலவிதமான இழப்பினையும் தருவார்.

தான்யாதிபதியாகியப் புதன் தான்யங்களின் அழிவினையும், அரசாள்வோருக்குத் துன்பத்தினையும், பயத்தினையும் தருவார். சேனாதிபதி, அர்காதிபதி, மேகாதிபதியாகிய சந்திரன் 15% விழுக்காடு மழையினை நிலத்திலும் 85% விழுக்காடு மழையினை கடலிலும் விழச்செய்வார்.

மகர சங்ராந்தித் தேவர் மிஸ்ரர் எல்லா வழிகளிலும் தீமைகளையும், பெண்கள், க்ஷத்திரயர்களுக்கும், வைசியர்களுக்கும் பெரும் துன்பத்தினையும், பொருளாதாரச் சரிவினையும் ஆடு, மாடுகள் பயிர் பச்சைகள் அழிவினையும் தருவார்.

2004ஆம் ஆண்டு இந்தியா முழுமையாகத் தீமையான பலன்களையே அநுபவித்து மலேஷியா, தாய்லாந்து, இந்தோனேஷியா, கங்கை, மாலத்தீவு, அந்தமான் நிக்கோபார் தீவுகளும் தீய பலன்களையே அனுபவித்தன.

ஜுலை 2004ஆம் மாதம் கும்பகோணம் பள்ளியில் ஏற்பட்ட தீவிபத்தால் 95 குழந்தைகள் இறந்து போனார்கள். அதன்பிறகு ஸ்ரீ ரங்கம் திருமண மண்டபத்தில் ஏற்பட்ட தீவிபத்து.

மே 2004 மஹாராஷ்ட்ரா தவாபோல் என்ற இடத்தில் ஏற்பட்ட பூகம்பம். இதன் விளைவு பெங்களூர், சென்னை, போன்ற பல இடங்களில், ஏற்பட்ட பூகம்பங்கள். இறுதியாக டிசம்பர் 2004இல் ஏற்பட்ட மிகவும் பயங்கரமான சுனாமியின் விளைவு இதனை மட்டும் நாம் மேதினி

ஜோதிடத்தின் அடிப்படையில் சுருக்கமாகக் ஆய்வு செய்வோம்.

இந்த சுனாமி சென்னையில் 26 டிசம்பர் 2004 அன்று காலை 7.58க்கு ஆரம்பித்தது. 8.02க்கு வலுப்பெற்றுப் பல தென்கிழக்கு நாடுகளிலும் செயல்பட்டுப் பாதிப்படையச் செய்து உள்ளது.

இந்த சுனாமி இலங்கைக்கு அருகே 9.00 ரிக்டர் அளவில் 6.09மணிக்கு ஆரம்பித்து இந்தியாவை 7.58 மணி அளவில் அடைந்து 8.02க்கு வலுப்பெற்று இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற பல நாடுகளைத் தாக்கி 9.05 மணிக்கு முடிவு பெற்றது. இதனுடைய பின் விளைவுகள் 29 டிசம்பர் 2004 வரை இருந்தன. இதனால் பாதிப்புகளும் வலுவடைந்தன.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சந் |
| | சுனாமி நாள் 26.12.2004 காலை 7.58 சென்னை | | சனி |
| ல / நெப் | | | |
| சூரி | புத சுக் செவ் புளூ | கேது | குரு |

இதனை நாம் மேதினி ஜோதிட முறைப்படி ஆய்வு செய்வோம். மேதினி ஜோதிட முறைப்படி சூரியன், சந்திரன், செவ்வாய், சனி, இராகு, கேது, யுரேனஸ், நெப்ட்யூன், புளூட்டோ மிகவும் கெடுதல் செய்யும் கிரகங்கள், புதன், குரு, சுக்ரன், கொஞ்சம் பரவாயில்லை.

இலக்கினம் மகரம் நெப்டியூன் மகரத்தில் இருக்கிறார். எனவே நீரால் பேரழிவு ஏற்படும். 12ஆம் வீட்டில் சூரியன் இருக்கிறார். சந்திரனின் பார்வை சனி, கேது நல்ல நிலைமையில் இல்லாது இருக்கின்றார்கள்.

மிருகசீரிட நட்சத்திரத்தில் செவ்வாய் இருக்கும் வீடு 11ஆம் இடம் இங்கு மரணத்தை தரக்கூடிய புளூட்டோவும் இருப்பதால் மரணம் ஏற்பட வேண்டும். இராகு, அஸ்வினியில் இருப்பதால் எந்த வழியிலும் தீமையான பலன்களே உண்டாகும். அஸ்வினி, அனுஷம் போன்ற நட்சத்திரங்களும், கண்டாந்த நட்சத்திரம் வாய்ந்தவைகள். எனவே கிரகம், நட்சத்திரம் பஞ்சாங்கம் எல்லாமே ஒன்று சேர்ந்து மிகவும் வலுவான அழிவுகளை ஏற்படுத்தும். எனவே சுனாமியின் பேரழிவு சென்னையைத் தாக்கி நாசப்படுத்தியது.

இம்மாதிரியான பேரழிவுகளில் இருந்து நாம் நம்மை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்றால் மேதினி, ஜோதிடத்தை நாம் நன்கு கற்றுக்கொள்ள வேண்டும். விவசாயிகள் கற்றுக்கொள்வதால் விவசாயத்தினை உயர்த்திக் கொள்ளலாம். வியாபாரிகள், பசு, ஆடு, மாடுகள் விற்போர், தொழில் அதிபர்கள், அனைவரும் கற்பதால் பல நன்மைகளை அடையலாம்.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்தின் அட்சாம்சம், இரேகாம்சம் மாறுபடுவதால் ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள ஜோதிடர்கள், ஜோதிடக் கூட்டம் போட்டு மேதினி ஜோதிடத்தினை ஆய்வு கட்டாயமாக செய்ய வேண்டும்.

அதனால் அந்த மாவட்டத்தில் ஏற்பட இருக்கும் தீமைகளிலிருந்து மக்களைக் காக்கலாம். இது குறித்து நீங்கள் ஆய்வரங்கம் ஏற்பாடு செய்தால் குருவருள் ஜோதிடப் பெருமக்களும் கலந்து, ஒரு நன்மையான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளலாம். தாங்கள் கடிதம் மூலம் கருத்துக்களைத் தெரிவியுங்கள்.


## அன்பு வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

**உங்கள் ஆர்வத்திற்கு ஏற்ப, "குருவருள் ஜோதிடம்" 3,4 மற்றும் 5ஆம் ஆண்டு இதழ்கள் எங்களிடம் விற்பனைக்கு கிடைக்கும். மேலும் தேவைப்படுவோர் எங்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். இனி வரும் இதழ்களும் தடைபடாமல் உங்கள் இல்லம் தேடி வர சந்தா தொகையை மட்டும் எங்களுக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.**

3ஆம் ஆண்டு 12 இதழ்: ரூ.230/-
4ஆம் ஆண்டு 12 இதழ்: ரூ.300/-
5ஆம் ஆண்டு 12 இதழ்: ரூ.300/-

கூரியர் செலவு உட்பட (தமிழ்நாடு மட்டும்) மற்ற மாநிலங்களுக்கு கூரியர் செலவு மாறுபடும்

கீழ்கண்ட எமது வங்கி கணக்கில் பணம் செலுத்தி எங்களுக்கு தெரியப்படுத்தினால் உடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**R.RADHA - C. RAJU, Indian Bank (Chennai, Royapettah)**
**SB A/c. No. 426681768**

ஆசிரியர், செல் : 97104 21880

# ஜோதிடச் சுரங்கம்



**S.R.அருள்வேல் (Ph.D) ஜோதிடம்**
செல்: 98428 41497

*கடந்த இதழில் (பகுதி — 1) ஒவ்வொரு வீட்டில் இருந்தும் நாம் தெரிந்து கொள்ளும் விசயங்களுக்கான அறிவியல் ரீதியான காரணங்களைத் தெரிந்து கொண்டோம். இந்தப் பகுதியில் 60 தமிழ் வருடங்களின் பெயர்களையும், அதன் பொருளையும் தெரிந்துக் கொள்வோம்*

*ஒரு நாளில் 60 நாழிகை இருப்பதுபோல, 60 மாதங்கள் கொண்ட காலத்தை ஒரு யுகமாக கருதுவது மரபு. இதில் 5 வருடங்கள் அடங்கும். எனவே 60 தமிழ் வருடங்கள் கொண்ட கால கணிதத்தில் 12 யுகங்கள் அடங்கும். 12 யுகங்கள் சூட்சுமமாக 12 இராசிகளைக் குறிக்கும்.*

*தோராயமாக ஓர் இராசிக்கு 5 நாழிகை என்பதுபோல், ஓர் இராசிக்கு, ஓர் யுகம் எனும் 5 வருடங்களையும் குறிக்கும். மேற் சொன்ன விசயத்தைச் சற்று ஆழமாக சிந்தித்து மனதில் உள்வாங்கிக் கொண்டால், ஜோதிட ஆய்விற்கு உரிய ஒரு விதையை நாம் விதைத்த நன்மை கிட்டும்.*

| வருடம் | பொருள் |
|---|---|
| 1. பிரபவ | உயர்வு |
| 2. விபவ | வெற்றி |
| 3. சுக்ல | தர்மம் |
| 4. பிரமோதூத | இறைவனின் தயவு |
| 5. பிரஜோஸ்பத்தி | உயிரின பொத்தம் |
| 6. ஆங்கிரச | நெருப்பு |
| 7. ஸ்ரீமுக | திருமுகம் |
| 8. பவ | வாழ்த்து |
| 9. யுவ | இளமை |
| 10. தாது | வித்து |
| 11. ஈஸ்வர | தெய்வ வழிபாடு |
| 12. வெகுதான்ய | மிகுந்த விளைச்சல் |
| 13. பிரமாதி | மிகுந்த மேன்மை |
| 14. விக்ரம | வெற்றியாளன் |
| 15. விஷு | தெளிவாகத் தெரிதல் |
| 16. சித்திரபானு | அழகான சூரியன் |
| 17. சுபானு | மேன்மையான சூரியன் |
| 18. தாரண | ஒருவகை ஆசனம் |
| 19. பார்த்திப | அர்ஜுனன் |
| 20. விய | விரிந்த |
| 21. சர்வஜித்து | அனைத்திலும் வெற்றி |
| 22. சர்வதாரி | அனைத்தையும் அடைதல் |
| 23. விரோதி | எதிரி |
| 24. விக்ருதி | நுணுக்கமான |
| 25. கர | தர்மத்தை போதிக்கும் உள்ளங்கை |
| 26. நந்தன | பசு வளம் நிறைந்தவன் |
| 27. விஜய | அனைத்திலும் வெற்றி |
| 28. ஜய | வெற்றி |
| 29. மன்மத | காதல் உணர்வு உடையவன் |
| 30. துன்முகி | கோபமான முகம் |
| 31. ஹேவிளம்பி | உயர்வான சொற்களே உச்சரித்தல் |
| 32. விளம்பி | கூறுதல் |
| 33. விகாரி | மேலான செயல்களைச் செய்தல் |
| 34. சார்வரி | சூழலை உணர்ந்து செயல்படல் |
| 35. பிலவ | குகை, நெஞ்சு |
| 36. சுபகிருது | மங்களகரமான செயல்கள் |
| 37. சோபகிருது | விருப்பமான காரியங்களைச் செய்தல் |
| 38. குரோதி | வஞ்சம் |
| 39. விசுவாவசு | ஆகாயத்தில் வசித்தல் |
| 40. பராபவ | பரம்பொருள் |
| 41. பிலவங்க | சமுத்திரம் |
| 42. கீலக | வருந்துதல் |
| 43. சௌம்ய | நமது நன்மையை விரும்புவர் |
| 44. சாதாரண | ஒரே மாதிரியான |
| 45. விரோதிகிருது | விரோதியும் நண்பராக மாற்றுதல் |
| 46. பரிதாபி | நன்மைச் செய்ய ஆர்வம் |
| 47. பிரமாதீச | அனைத்திலும் ஈஸ்வர தன்மையை உணர்தல் |
| 48. ஆனந்த | ஆனந்தம் |
| 49. ராட்ஷச | இராட்ச தன்மை |
| 50. நள | சனீஸ்வரன் |
| 51. பிங்கள | குரங்கு நிறம், சூரிய கலை |
| 52. கால யுக்தி | காலத்தை உணர்ந்து செயல்படல் |
| 53. சித்தார்த்தி | ஞானம் அடைதல் |
| 54. ரௌத்ரி | வீரமும், கோபமும் இணைந்த குணம் |
| 55. துன்மதி | தீய மனம் |
| 56. துந்துபி | குதிரைமுக இசைக்கருவி, பைரவர் |
| 57. ருத்ரோஷ்காரி | கரடி முக இசைக்கருவி |
| 58. ரக்தாட்க்ஷி | அனைவரையும் காப்பாற்றுதல் |
| 59. குரோதன | குரோதத்தை போக்குதல் |
| 60. அக்ஷ்ய | என்றும் குறையாத தன்மை, இலட்சுமி |

*60 வருடங்களின் பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் பலரைத் தொடர்பு கொண்டேன். இது ஏறக் குறைய 10 வருட தேடுதல் ஆகும்.*

*இறுதியாக இறையருளால் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரைச் சேர்ந்த பல்கலை வித்தகா திரு.சுப்பிரமணியம் செட்டியார் அவர்களின் அருட்கொடையாக, சிலருடன் கலந்துரையாடும் போது கிடைத்த பொக்கிஷம் என்பதை தெரிவிப்பதில் மனம் மகிழ்கிறேன்.*

# நிர்மூலமா? நீர் மூலமா?

## பட்டிமன்றத்தில் நிகழ்ந்த பரிதாப நிலை



டாக்டர் **ஏ.கே.சந்தன ராஜா,**
ஆர்.ஐ.எம்.பி
**மணி மந்திர மருந்து ஆராய்ச்சி மையம்**
**செல்: 94426 70917**

19—7—2009இல் ஞாயிறு காலை 8.00 மணிக்கு சன்.டி.வி.யில் ஒளிப்பரப்பாகும் கல்யாண மாலை நிகழ்ச்சி பட்டிமன்றத்தில், திரு.சுகி சிவம் நடுவராக கொண்டு நடந்த நிகழ்ச்சியில், திரு.புலவர் இராமலிங்கம் ஆண் மூலம் அரசாளும் பெண் மூலம் நிர்மூலம் என்ற பழமொழியை மேற்கோள் காட்டிப் பெரிய அணுகுண்டு ஒன்றை தூக்கிப் போட்டார்.

சோதிடத்தில் பேசப்படும் நட்சத்திரங்களில் ஒன்றான மூல நட்சத்திரத்தில் பிறந்த ஆண் — பெண்களைப் பற்றி பேசப்படுவதாக பொருள் கொண்டு அவரே முடமான கருத்து ஒன்றை வெளிப்படுத்தி பேசி விட்டு அமர்ந்தார்.

திரு.புலவர் இராமலிங்கம் மேற்கோளாக காட்டிய பழுது உள்ள சித்தர்கள் கூறிய பழமொழியைத் திருத்தி செம்மைப்படுத்திக் கூறாமல் மக்கள் சபையில் தவறாகக் கூறியதை நடுவர் சுகி சிவம் அவர்கள் அனுமதித்தது எவ்வாறு என்பது புலனாக வில்லை.

திரு.சுகி சிவம் அவர்கள் மண்ணுக்கு அதாவது நிலத்தை பெண்ணாகக் கருதி அதனை தெய்வமாக வணங்குவதாகவும், அவர்கள் மூலமே உலகம் உருவாகிறது என்றும், ஒன்பது வயது டையப் பெண் சிறுமியைத் துர்க்கை என்று போற்றப்படுவதாகவும், அதனால் பெண்களை இகழக்கூடாது என்று பொருளில்லாத கருத்து ஒன்றைக் கூறி சமாதானமாக சமாளித்து சப்பைக் கட்டி பேசினார்.

திரு.புலவர் இராமலிங்கம் எடுத்துக் காட்டிய பழமொழியும், திரு.சுகி சிவம் சமாளித்துக் கூறிய கருத்து விளக்கமும் அடிப்படையில் அவர்கள் பொருள் கொண்டமுறை தவறானதாகும். பிழையானக் கருத்தை சபையில் கூறியது வருத்தம் தருவதாக உள்ளது. அவர்களின் தவறான கருத்து மறுக்கப்படுகிறது. அவ்விருவரும் மக்கள் சபையில் கூறிய கருத்துக்கள் ஒளிப்பரப்பாகும் போது தவறான கருத்துக்களை மக்கள் பார்க்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனை வருங்காலத்தில் தவிர்க்க வேண்டும்.

திரு.புலவர் இராமலிங்கம் கூறிய கருத்தும், திரு.சுகி சிவம் கூறிய கருத்தும் உடன்பாடு இல்லை. முரண்பாடானது. திரு.புலவர் இராமலிங்கம் மேற்கோளாக எடுத்துக்கூறிய பழமொழியான ஆண் மூலம் அரசாளும் பெண் மூலம் நிர்மூலம் என்று கூறியதில் மிகப்பெரும் பொருள் பிழையும் (பொருட்குற்றம்) சொல் பிழையும் (சொல் குற்றம்) உள்ளது.

எடுத்துக் காட்டிய பழமொழி, சோதிடத்திற்கு தொடர்புடையது என்று எண்ணியது முதல் தவறாகும். அதுவுமில்லாமல், இந்தப் பழமொழி மூல நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கருதியது மாபெரும் பிழையாகும். காலம் கடந்து நிற்கும் பழம் பெரும் பழமொழிகள் காலமாறுதலால் பொருள் மாறியும், சொல் மாறியும் புழக்கத்திற்கு பிழைப்பட ஆண்டு வருவதை ஆராயாமல் மக்கள் மன்றத்தில் பதித்தது மிகத் தவறாகும்.

பழமொழியைச் சிந்தித்து ஆராய முற்பட்டிருந்தால் அதன் பொருளில் பிழைகள் உள்ளதா? இல்லையா! என்று தெரிய வந்திருக்கும். திரு.புலவர் இராமலிங்கம் இந்தப் பழமொழியை திருத்தம் செய்யாமல் ஏனோ தானோ என்று இருந்து அதனை கேட்கும் மக்கள் பூம் பூம் மாடுகள் என்றும் எண்ணக்கூடாது. தாம் எதைக் கூறினாலும் சபையில் அமர்ந்துள்ள மக்கள் சிரித்து தலை ஆட்டுவார்கள் என்ற எண்ணம் வரக்கூடாது.

திரு.புலவர் இராமலிங்கம் கூறிய ஆண் மூலம் அரசாளும், பெண் மூலம் நிர்மூலம் என்கிற பழமொழியைத் திருத்தம் செய்யாது அப்படியே பயன்படுத்தியது முதல் தவறாகும். பழமொழியின் பொருள் வேறுபடுவதை உணராதது இரண்டாவது தவறாகும். அந்த பழமொழியில் சொல் பிழை உள்ளதா? இல்லையா? என்று ஆராய்ந்து திருத்திக் கூறாமல் பயன்படுத்தி சபையில் கூறியது மன்னிக்கக் கூடாத பெரு தீவினையாகும். பொருள்

பிழையும், சொல் பிழையும் உள்ள பழமொழியைத் திருத்தத்திற்கு கொண்டு வராது மக்கள் சபையில் அறிமுகப்படுத்திய மாபெரும் தவறாகும்.

மூலம் என்ற ஒரு சொல்லை வைத்துக் கொண்டு, ஆணாக இருந்தால் அரசாளும் என்றும் பெண்ணாக இருந்தால் நிர்மூலமாகும் என்று நட்சத்திரத்தையும், சோதிடத்தையும் சம்பந்தப்படுத்தி கேலியும் கிண்டலும் செய்த இவர், பொய்மையே பொருளாக எடுத்து வாதாடும் அணியில் சேர்த்ததை தவிர்த்திருக்கலாம். சோதிடத்தில் இடம் பெற்றுள்ள மூல நட்சத்திரம் பேரிலுள்ள தவறான எண்ணமும் காழ்ப்பு உணர்வும் அவரை இப்படி பேச வைத்து உள்ளது. அவர் கூறிய பெண்மூலம் கருத்து சிறிது ஒத்து வந்தாலும் மூலம் என்ற சொல்லுக்கு பெண்ணும் மண்ணும் முழுமையான கருத்தல்ல என்பதை உணர வேண்டும்.

இப்பொழுது இந்த பழமொழியை நாம் ஆய்வு செய்யவோம். இந்த பழமொழி சித்தர் பெருமக்களால் எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது. அப்பழமொழி நீண்ட கால நிகழ்வில் பொருள் இழந்து சொல் குறுகி நிற்கின்றது. இந்த பழமொழிக்குச் சரியான பொருள் அறியாமல் மிக்க படித்தவர்களும், சாதாரணமாகப் படித்தவர்களும், படிக்காதவர்களும் பயன்படுத்தி வருகிறார்கள்.

"ஆண் மூலம் அரசாளும் பெண் மூலம் நிர்மூலம்" என்று பயன்படுத்துவது, எடுத்துக் கூறுவது, மேற்கோள் காட்டுவது தவறாகும். மேற்கண்ட பழமொழியை பயன்படுத்தினால் அதன் உட்பொருளின் கருத்து, சொல் பொருளின் கருத்தும் இழந்து விடுகிறது. சோதிடத்தில் கூறப்படும் 27 நட்சத்திரத்தில் ஒன்றான மூல நட்சத்திரத்திற்கும் இந்த பழமொழிக்கும் சம்பந்த முண்டா? ஒட்டு உறவு உண்டா? நெருக்கம் உண்டா? என்று ஆராய வேண்டும்.

பழமொழியை ஆராய்ந்து, ஆய்வு செய்திருந்தால் சோதிடத்திற்கும் சம்பந்தமில்லை. சோதிடத்தில் கூறப்படும் 27 நட்சத்திரத்தில் ஒன்றான மூலநட்சத்திரத்திற்கு சம்பந்தமில்லை. அவ்வாறு இல்லாத போது மனிதர்களாகப் பிறந்த ஆண் — பெண் இருபாலருக்கும் எப்படி தொடர்பு இருக்க முடியும்? மூலம் என்ற ஒரு சொல்லும் அரசாளும் என்ற மற்றொரு சொல்லும் வைத்துக் கொண்டு,ஆண் மகனை உயர்த்தியும், பெண் மகளைத் தாழ்த்தியும் பேசப்படுவது தவறாகத் தெரியவில்லையா?

மேற்கண்ட நபர் கூறிய பழமொழியில் காணப்படும் சொல்பிழைகள் திருத்தத்திற்கு கொண்டு வந்துவிட்டால், பொருள் பிழை தானாகவே நீங்கிவிடும். ஆண் மூலம் அரசாளும், பெண் மூலம் நிர்மூலம் என்பது திருத்தப்படாத பழமொழியாகும். அப்பழமொழியில் காணப்படும் சொற்களான அரசாளும் என்ற ஒற்றை சொல் "அரசாள" என்று திருத்தி வாசித்துப் பார்க்கவும். அதுபோல் நிர்மூலம் என்ற இரட்டைச் சொல்லில் நிர் என்பதை நீர் என்று திருத்தி வாசித்துப் பாருங்கள்.

திருத்தியப் பழமொழியான அரசாள என்ற சொல்லும், நீர் என்ற சொல்லும் முன் கூறிய திருத்தப்படாத பழமொழயில், திருத்திய புதிய சொற்கள் இணைத்து எழுதிப் பாருங்கள். "ளு" கரம் "ள" கரமாகவும் நிகரம் "நீ" கரமாகவும் மாறுதல் அடைந்து உள்ளது. "ள" என்ற குறில் எழுத்து "ளு என்ற குறில் எழுத்து மாறி நிற்கிறது. அகரமாக இருந்தால் பொருள் கொடுக்கும். உகரமாக செயல்பட்டால் பொருள் கெடும்.

அதுபோல் "நி" என்பது குறில் "நீ" என்பது நெடில். "நீ" யில் ஒரு குறிப்பிட்ட இடம் குறுகிய எல்லையாக இருக்கும். "நீ" யில் ஓர் எல்லையைக் கடந்து பரவிய நிலையைப் பொருந்தி நிற்கும். "நிர்" என்பது அழித்தலைக் குறிக்கும். "நீர்" என்பது ஆக்கத்தையும் வளத்தையும் பொருளையும், செழுப்பையும், வளமையும், பசுமையும், வளர்ச்சியும், வழங்கக் கூடியது. "ளு" கரத்தை "ள" கரமாக மாறியதால் பொருள் மங்காமல் பொலிவுடன் அதன் உட்கருப் பொருள் வெளிப்பட்டு அர்த்தமுள்ள பொருளாக திகழ்கிறது. உகரம் முற்றுப் புள்ளியின் முடிவைக் காட்டுகிறது. அகரம் தொடர் புள்ளியாக நிற்கிறது.

மேற்கண்ட பழமொழியில் அரசாளும் என்ற முடிவு சிலை தொடர்நிலையாக நின்று தேவையைக் குறிக்கிறது. "நிர்" என்ற அழிவுநிலை நீங்கி நீர் என்ற ஆக்க நிலையும் இன்றியமையாத பொருளாக நின்று பரிமாண வளர்ச்சியைக் குறிக்கிறது. சொல்பிழை அகன்றதால் அதன் உட்கருப்பொருள் ஒளிர்ந்து வீசுகிறது.

இந்த பழமொழி திருத்தியதை முழுமையாக்கிக் கீழ்க்கண்டவாறு எழுதிப்படித்தால் முழுப்பொருள் விளக்கத்திற்கு வரும். அதனை "ஆண் மூலம் அரசாள பெண்மூலம் நீர் மூலமே" என்று சித்தர் பெருமக்களால் பரிபாஷையாக ஓதினார்கள். அப்படி ஓதிய பொருள் என்னவாக இருக்கும்? என்பதை இனி பார்ப்போம்.

சித்தர்கள் மொழிக்கு கிரந்த மொழி, வட மொழி, பரிபாஷை, பரிமொழி என்று கூறுவார்கள். அவர்கள் பாடிய பாடலிலுள்ள உட்கருப்பொருளின் முடிச்சுகள் அவிழ்ப்பது மிகக் கடினமாகும். சித்தர்கள் எழுதும் அனைத்து பாடல்கள் அங்காடியில் கிடைக்கும் பல்பொருள்களுக்கு நிகராக பொருள் பொருந்தி வருமாறு அமைத்துப் பாடப்படுகிறது. சித்தர்களின் பாடல்கள் ஒரு முறை படித்தால் புரியாது. மானுட அறிவுக்குத் தகுந்தவாறு பொருள்கள் எண்ணத்தில் தோன்றும். இது தான் என்று அறுதியிட்டு கூற முடியாது. அவர்களின் பாடல்கள் பகுத்தறிவும் திறனாய்வு பெற்றவர்களால் மட்டும் தான் முடிச்சு அவிழ்க்க முடியும்.

இப்பொழுதும் "நிர்" என்ற சொல்லுக்கும், "நீர்" என்ற சொல்லும் எவ்வாறு உணரப்படுகிறது என்பதை நாம் பார்க்கலாம். நிர் என்பதில் நகரத்தின் மேல் நுனியில் தொங்கும் கொக்கி இவ்வாறு உள்ளது. நீர் என்பதில் நகரத்தின் மேல் நுனியில் கொக்கிக் கோடு தொங்காமல் சற்று நிமிர்ந்து சுழன்று இப்படியாக உள்ளது.

நிகரத்தில் கொக்கி குறுகி கீழ்நோாக்கி தொங்குகிறது. நீகரத்தில் கொக்கி மேல் நோக்கி நிமிர்ந்து மேலே சுழன்று உள்ளது. நிர் என்பது அழிவைக் குறிக்கிறது. நீர் என்பதில் வளமையைக் குறிக்கிறது. நீர் என்பது தண்ணீரைக் குறிக்கும் அற்புதப் பொருளாகும்.

இந்த நீரைப் பற்றி திருமூலர் திருமந்திரம் 3000 என்னும் நூலில் வான் சிறப்பு என்ற தலைப்பில் இரண்டு பாடல்கள் அருளியுள்ளார். அதில் முதல் பாடலில் இருவரிகள் மட்டும் மேற்கோளாகக் காட்டப்படுகிறது.

**அமுதூறு மாமழை நீரதனாலே**
**அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றம் – 105**

விண்ணிலிருந்து இறங்கும் மாமழை நீராக மண்ணில் சேர்ந்து நிலைத்து நின்று வளமையையும் அமுதம் என்றும் அருள் என்றும் ஓதப்படுகிறது. நீர் மண்ணைச் சார்ந்து இருப்பதால் பல்வித மரம், செடி, கொடி, பூல், பூண்டு, ஊர்வன, பறப்பன, ஆடு மாடுகள், மனித இன உயிரினங்கள் உற்பத்தியாகின்றன. உயிரினங்கள் பரிமான வளர்ச்சி அடைய மழை நீர் அவசியமாகிறது. இது புறவியல் வாழ்விலும் அன்றாடம் நிகழும் நிகழ்ச்சியாகும்.

அடுத்து திருவள்ளுவப் பெருமகனார் வான்சிறப்பு என்ற தலைப்பில் பத்து திருக்குறள்களில் ஒன்றில்

**நீர் இன்று அமையாது உலகெனின் யார் யார்க்கு**
**வான் இன்று அமையாது ஒழுக்கு – என்று கூறுகிறார்**

எங்கெங்குள்ள மக்கள் அனைவருக்கும் நீர் என்று ஓதப்படும் மாபெரும் பொருள் இல்லாமல் போனால் உலக வாழ்க்கையும் உயிர்களின் பரிமாண வளர்ச்சியும் நடைபெறாது. மழையாக வரும் நீர் இல்லையென்றால் உலகம் ஒழுக்க நிலையிலிருந்து விலகி போகும் என்பதாம். இங்கு நீரின் அவசியத்தையும் தேவையையும் உணர்த்தப்படுகிறது. சித்தர்கள் அருளியல் அக வாழ்விலும் சரி, உலகியல் புறவியல் வாழ்விலும் சரி, இந்தப் பழமொழி பயன் படுத்தப்படுகிறது என்பதை இங்கு கூர்ந்து கவனிக்க வேண்டும்.

ஆண் மூலம் அரசாள, பெண் மூலம் நீர் மூலமே என்று சித்தர்களால் பரிபாஷையாக ஓதப்பட்டுள்ளது.

1. **சாகாத கால் – வாசி–வாயு–நாதம்–ஆண்மூலம்**
2. **வேகாத தலை – ஆகாசம்–வெளி–நாதம்–ஆண்மூலம்**
3. **போகாத–புனல்–ஆவி–வன்னி–நாதம்–ஆண்மூலம்**
4. **கருப்பொருள்–நீர்–விந்து–பெண்மூலம்**
5. **கருப்பொருள்–மண்–விந்து–பெண்மூலம்**

இதன் விரிவான ஆன்மிக விளக்கங்கள் ஒரு நல்ல குருவை சார்ந்து பெற வேண்டிய நற்செய்தியாகும். நற்பொருளுமாகும். அற்புத கருப்பொருளாகும். இப்பாடலின் உட்கரு பொருள்கள் நற்குருவை தேடி பெற வேண்டுமென்று ஓதப்படுகிறது. இதற்குரிய சித்தர் பாடல் இங்கு தரப்படுகிறது. படித்து அகத்து புலனுர்வால் அறிந்து தெளிக.

**பாரப்பா சாகாத கால்தான் மைந்த**
**பதிவான வாசியடா வாயுவாச்சி**
**நேரப்பா வேகாத தலையே தென்றால்**
**நிசமான போகாத புனல் தானப்பா**
**கனிவான ஆவியடா வன்னிவன்னி**
**ஆரப்பா அறிவார்கள் மூன்றின் நேர்மை**
**அரிதரிது காணவென்றால் ரெண்டைக் கேளே 646**

**கேளப்பா ரெண்டான கருவே தென்றால்**
**கேள்வி யென்ன மண்ணுடனே தண்ணீராச்சு**
**ஆளப்பா மண்ணீரும் விந்துவாச்சு**
**அடங்கி நின்ற முப்பாழே நாதமாச்சு**
**கோளப்பா யில்லாமல் மூன்று ரெண்டும்**
**கூடி யொன்றாய்ச் சேர்ந்ததினார் பிண்டமாச்சு**
**காலப்பா வலுவான பிண்டந்தானும்**
**கதித்தெழுந்த தேக பஞ்ச பூதமாச்சே 647**

என்று அகத்தியர் ஓதுகிறார்.

மேற்கண்ட பாடல் இரண்டும் அகவியல் வாழ்வுக்கும், புறவியல் வாழ்வுக்கும் பொருந்தும். மானுடதேகம் பஞ்ச மூலக் கூறுகளின் அடிப்படையாகக் கூறப்படும் வான்—வளி—தீ—நீர்—மண் ஆக இவைகளின் அடிப்படையில் அமைகிறது. வான் மூலக்கூறு. வெளி மூலக்கூறு. தீ மூலக்கூறு மூன்றும் ஆண் மூலக்கூறாகும். இதற்கு நாதம் என்று கூறுவார்கள்.

நீர் மூலக்கூறும் — மண் மூலக்கூறும் ஆக இரண்டும் பெண் முலக்கூறு என்றும் அதையே கரு வென்றும் அகத்திய சித்தர் பெருமான் உணர்த்துகிறார். இப்பொருளுக்கு விந்து என்றும் ஓதுகிறார். நாத விந்து ஆக இரண்டும் இணைவ தால் மானுட தேகம் உண்டாகிறது. மானுட தேகம் பஞ்ச பூத மூலக்கூறுகளால் இணைந்து பருவடிவமாக வெளிப்படுகின்றன.

மேலும் மானுட புறவியல் வாழ்வியல் பஞ்சமூலம் கூறுகளின் கரு உற்பத்தியைப் பற்றி அறிய முயல்வோம். கரு உற்பத்தியில் பஞ்சபூத மூலக்கூறு வடிவத்தில் அதன் அமைப்பும் அதன் பால் ஆண்—பெண் அனைவருக்கும் ஒன்றாகும்.

உலகில் மானுட பிறவி எடுக்கையில் ஆணாகவும், பெண்ணாகவும், தோன்றி வெளிப்படுவதற்கு முக்கிய காரண காரியங்கள் எந்தெந்தப் பஞ்

சபூத மூலக்கூறு அடிப்படையில் எப்படி எவ்வாறு என்னவாக இருக்க முடியும் என்பதை மிகத்தெளிவாக உறுதியான முடிவெடுக்க ஓர் ஆய்வு செய்யலாம்.

பஞ்சபூத மூலக்கூறுகளில் மண்—நீர்—தீ—வளி—வான்—மூலக்கூறுகள் கலந்துள்ளன என்பார்கள். இதன் மூலக்கூறுகளின் அளவினையும் அதன் கூட்டுத் தொகையும் என்ன? என்பதை காணுங்கள்.

1. மண் மூலக்கூறு அளவு 1.50 பாகம் கூட்டு தொகை
2. நீர் மூலக்கூறு அளவு 1,25 பாகம் 2,75பாகம்
3. தீ மூலக்கூறு அளவு 1.00 பாகம் கூட்டுத் தொகை
4. வளி மூலக்கூறு அளவு 0.75 பாகம் 2.25 பாகம்
5. வான் மூலக்கூறு அளவு 0.50 பாகம்

1. மண் மூலக்கூறு பெண்மூலம் ஆகும்.
2. நீர் மூலக்கூறு பெண் மூலமாகும்.
3. தீ மூலக்கூறு ஆண் மூலமாகும்.
4. வளி மூலக்கூறு ஆண் மூலமாகும்.
5. வான் மூலக்கூறு ஆண் மூலமாகும்.

1. மண் மூலக்கூறு பெண் மூலம் கருவென்றும் விந்து என்றும் கூறப்படுகிறது.
2. நீர் மூலக்கூறு பெண் மூலம் கருவென்றும் விந்து என்றும் கூறப்படுகிறது.
3. தீ மூலக்கூறு ஆண்மூலம் நாதம் என்றும் முப்பாழ் என்றும் ஓதப்படுகிறது.
4. வளி மூலக்கூறு ஆண் மூலம் நாதம் என்றும் முப்பாழ் என்றும் ஓதப்படுகிறது.
5. வான் மூலக்கூறு ஆண் மூலம் நாதம் என்றும் முப்பாழ் என்றும் ஓதப்படுகிறது.

நாதத்தின் ஆண் மூலக்கூறுகளும், விந்தின் பெண் மூலக்கூறுகளும் இணைந்தால் கரு உற்பத்தி உண்டாகும் என்பதாம். அதற்கு "பிண்டம்" என்றும் கூறுவார்கள். மானுட வயிற்றில் ஆண் மூலக் கூறு உயிரணுவும் பெண் மூலகூறு கருவணுவும் இணைவதால் பிறவி வரும் விதம் எவ்வாறெனில், அகத்தியர் பாடலை கவனிக்

**கூறான அஞ்சு பஞ்ச பூதந் தன்னில்**
**குமரனென்றும் குமரியென்றும் பேருண்டோ சொல்**
**தேரான தொன்று மில்லை தெளிந்து பாரு**
**தெளிவான ஆண் பெண் தானே தென்றாக்கால்**
**வீரான பிரிதிவியும் அப்புங்கூடி**
**மிகுந்தாக்கால் பெண்ணாச்சு பின்னுங்கேளு**
**வாறான ஆகாசங் காற்றுந்தீயும்**
**பரிவாக மிகுந்திருந்தால் புருடணாமே**

*அகத்தியர் ஞானம் 100*

ஐந்து பருபொருள் மூலக்கூறான மண்ணும் தண்ணீரும் மிகுந்து மற்ற மூன்று மூலக்கூறுகளான தீ—வளி—வான் மூலக்கூறு பொருள்கள் குறைந்து அமையப் பெற்றால் பெண் பிறவியாகவும், தீ, வாளி, வான் மூலக்கூறுகளின் பொருள்கள் மிகுந்து மற்ற இரண்டான மண்ணும் நீரும் குறைந்து அமைந்தால் ஆண் பிறவியெடுக்கும் என்பதாம்.

இதனை அகத்தியர்

**கேளப்பா ரெண்டான கருவே தென்றால்**
**கேள்வி யென்ன மண்ணுடனே தண்ணீராச்சு**
**ஆளப்பா மண்ணீரும் விந்துவாச்சு**
**நீரான தண்ணீருரும் மண்ணுங்கூடி**
**நின்றதினால் பெண்ணாச்சு தீயே ஆண்**

என்று ஓதுகிறார்.

வான், வளி, தீ ஆகிய ஆண் மூலக்கூறுகள் செயல்பட வேண்டுமானால் நீர் மூலக்கூறு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த சித்தர் பழமொழியில் பஞ்ச பூதத்தில் ஆண் மூலக்கூறுகள் செயல்பட வேண்டுமானால் நீர் மூலக்கூறு தேவைப்படுகிறது என்பதை சித்தர் பெரும் மக்கள் முறையாக ஓதினார்கள்.

பெண் மூலக்கூறான நீர் மூலக்கூறு இல்லையென்றால் உலகம் என்ற சொல் வெறும் மண்ணாக நிலவும், நீரில்லா கோள்களில் உயிரினங்கள் இல்லை என்ற கண்டு பிடிப்பு விஞ்ஞானத்தில் கூறப்படுகிறது. இதற்கு உதாரணமாக புதன், சுக்கிரன், சந்திரன், செவ்வாய் போன்ற கோள்கள் முன் மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம்.

மண் மூலக்கூறு மட்டும் பெண்ணல்ல. இதனுடன் நீர் மூலக்கூறு இணைந்தால் தான் பெண் என்று கூறுங்கள் என்றும் அதுவே கரு மூலக்கூறு எனவும் சித்தர்கள் கூறுகிறார்கள். நீரில்லாத மண் கூறு பெண் மூலக்கூறாக இருந்தால் உலக உயிர் தோற்றம் நிகழ வாய்ப்பில்லை என்ற உண்மையை இவ்வுலக மக்கள் அறிய வேண்டும்.

திரு.புலவர் இராமலிங்கம் எடுத்து காட்டிய பழுதுள்ள பழமொழியான ஆண்மூலம் அரசாளும் பெண் மூலம் நிர்மூலம் என்பது தவறு. இந்த பழமொழி சோதிட செய்திகளுக்குச் சம்பந்தம் இல்லை. சோதிடத்திலுள்ள 27 நட்சத்திரங்களில் ஒன்றான மூலநட்சத்திரத்திற்கு ஒத்து வரவில்லை. மூல நட்சத்திரத்தில் பிறந்த ஆண் — பெண் ஆக இருவருக்கும் இணக்கமான பொருள் ஏற்படவில்லை.

பெண் மூலக்கூறான நீர் மூலம் இல்லையெனில் ஆண் மூலக்கூறுகள் செயல்படாது என்பதைத் தெளிவாக்கியுள்ளோம். நீர்மூலம் அவசியத்தையும், அதன் தேவையையும் பஞ்ச பூத மூக்கூறுகள் நீர் பெரும் பங்கு வகிப்பதையும் உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இனி வருங்காலத்தில் இந்த பழமொழியை சோதிடத்திற்கும் மூல நட்சத்திரத்திற்கும், ஆண்—பெண்களுக்கும் சம்பந்தப்படுத்தி தவறாக பயன்படுத்தினால் அவர்களை ஒதுக்கித் தள்ளிடுங்கள். சோதிடத்தின் பக்கம் திரும்பியும் எண்ணவும் மாட்டார்கள், சோதிடத்தை கேலியும் கிண்டலும் செய்யமாட்டார்கள். ●

# ஜோதிடத்தில் நோய் அறியும் காரணிகள்

ஜோதிட விஷராத், ஜோதிட ரத்னா, ஜோதிட பண்டிட்


**இரா.விஜயலட்சுமி**

**செல்: 94422 54502**

ஜோதிடத்தில் 'நோயை' அறிந்துக் கொள்ள முக்கிய காரணிகளான பாவங்கள், கிரகங்கள், மிருத்யுபாகம், மாரகம் கொடுக்கும். தீமை தரும் வீடுகள், திரேகாணம் மற்றும் 22வது திரேகாணம், 64வது நவாம்சம், பாதக வீடுகள் மற்றும் இராகு, கேதுக்கள் இவைகளுடன் திசா, புத்தி, அந்தர கிரகங்கள், கோச்சாரத்தில் சம்மந்தப்படும் போதும் அக்கிரகங்கள் எந்த பாவத்தில் இருக்கிறார்களோ, அந்த பாவத்தில் உடைய தன்மைக்கேற்ப குறிப்பிட்ட உடல் உறுப்புகளும் கிரகத்தின் தன்மைக்கேற்ற நோயும் உருவாகும்.

**மருத்துவ ஜோதிடத்தில் பாவங்களின் பங்களிப்பு:** காலபுருஷத் தத்துவப்படி, மேஷம் முதல் மீனம் வரையும், இலக்கினத்தை அடிப்படையாகக் கொண்டு அவரவர் ஜாதகங்களைக் கொண்டும் இலக்கினத்தை முதல்பாவமாகக் கொண்டும், இரண்டு வழிமுறைகளிலும் பார்க்க வேண்டும்.

**உதாரணமாக:** மிதுன இலக்கினமாக இருந்தால் மிதுனம் 1ஆம் பாவகமாக இருக்கும். மிதுனத்தின் நாதர் புதனையும், காலபுருஷ தத்துவப்படி முதல் பாவ நாதர் செவ்வாய், இவர்களையும் இணைத்து நோய் அறிய வேண்டும்.




1ஆம் பாவம் தலை, முடி, தோல் 2ஆம் பாவம் முகம், வலது கண், பல், நாக்கு, வாய், மூக்கு, நகம், 3ஆம் பாவம் வலதுகாது, தொண்டை, தோள், மூச்சுக்குழாய், உணவுக்குழாய், கழுத்து எலும்பு. 4ஆம் பாவம் மார்பகம், நுரையீரல், இரத்த ஓட்டம் 5ஆம் பாவம் இருதயம், வயிறு, கல்லீரல்.

6ஆம் பாவம் சிறுநீரகம், அடிவயிறு 7ஆம் பாவம் சிறுநீர்ப்பை, கருப்பை, ஓவரீஸ். 8ஆம் பாவம் பிறப்பு உறுப்புகள். 9ஆம் பாவம் இடுப்பு, தொடைகள், 10ஆம் பாவம் மூட்டுகள், மூட்டு இணைவுகள்.

11ஆம் பாவம் கால்கள், இடது காது. 12ஆம் பாவம் பாதம் இடது கண்.

**கிரகங்கள் தரும் நோய்கள்: சூரியன்:** இருதயம், தலைவலி, கண் மூளை சம்மந்தமாக நோய்களையும், ஜுரம் போன்றவை.

**சந்திரன்:** கருப்பை சம்மந்தமான நோய்கள், நீரினால் ஏற்படும் நோய்கள், நுரையீரல், ஆஸ்துமா, வாந்தி, இரத்த சம்மந்தமான நோய்கள், காமாலை, சிறுநீரகக் கோளாறு, தூக்கமின்மை.

**செவ்வாய்:** இரத்த சம்மந்தமான நோய்கள் மற்றும் புற்றுநோய், பல்வலி, நகம், குடல்புண், காயங்கள். இரத்தத் கொதிப்பு, சிறுநீரகக் கோளாறுகள், எலும்புமுறிவு, பெண்களின் கருப்பைக்கோளாறுகள்.

**புதன் :** சனியின் சம்மந்தம் பெற்றால் நரம்பு மண்டலம் சம்மந்தமான நோய்களையும் யூரேனஸ் உடன் இணைந்தால் மூளை சம்மந்தமான நோய்களையும் மூக்கு சம்மந்தமான நோய்களும் உண்டாகும்.

**குரு:** ஈரல் சம்மந்தமான நோய்கள், காது கேளாமை, சிறுநீரகக் கோளாறு, நுரையீரல், நினை விழத்தல், தண்டுவடம், சர்க்கரை வியாதி.

**சுக்கிரன்:** முகக் கோளாறுகள், கண்சம்மந்தமான நோய்கள், சிறுநீரக நோய்கள், உடல் நிறமாற்றம், தொண்டைப்புண், பால்வினை நோய்கள், சர்க்கரை வியாதி, ஜீரண சம்மந்தமான நோய்கள், நீர் சம்மந்தமான நோய்கள் மற்றும் ஜுரம்.

**சனி:** சோர்வு, வயிறுசம்மந்தமான நோய்கள், உடல் ஊனம், பல்வலி, தோல், எலும்பு முறிவு மூட்டு சம்மந்தமான நோய்கள், படபடப்பு, தசை பிடிப்பு, மூட்டுவலி, நினைவிழத்தல், வாதம், மனநோய் மற்றும் புற்றுநோய்.

**இராகு:** ஈரல் சம்மந்தமான நோய்கள், மூட்டு வலி, மூட்டு இணைவுகள், கண், தண்டுவடம், பல் ஈறுகள் போன்றவைகள் பாதிக்கும்.

**கேது:** ஜுரம், கண் வலி, வயிற்று வலி, உடல் வலி, கண்டுபிடிக்க முடியாத நோய்கள்

**மிருத்யு பாகம்:** மிருத்யு பாகம் என்பது குறிப்பிட்ட பாவங்களில், குறிப்பிட்ட பாகை, கலைகளில் கிரகங்கள் இருக்கும்போது தீமை அதிக அளவில் தரும் தன்மையை பெறுகிறது (Sensitive point)

**உதாரணமாக:** சூரியன் மேஷஇராசியில் 20வது பாகையில் இருக்கும் போது இத்தன்மையை பெறுவார்.

நாம் நோய் ஆராய்கிறது காலத்தில் ஜாதகருக்கு, சூரிய தசா, புக்தி அந்தர காலமாக இருந்தால் இதை முக்கியமாக கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

| மிருத்யு பாகத்தில் கிரகங்களின் பாகைகள் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இராசி | மே | ரிஷ | மிது | கட | சிம் | கன் | துல | விரு | தனு | மக | கும் | மீன |
| சூரி | 20 | 9 | 12 | 6 | 8 | 24 | 16 | 17 | 22 | 2 | 3 | 23 |
| சந் | 26 | 12 | 13 | 25 | 24 | 11 | 26 | 14 | 13 | 25 | 5 | 12 |
| செவ் | 19 | 28 | 25 | 23 | 29 | 28 | 14 | 21 | 2 | 15 | 11 | 6 |
| புதன் | 15 | 14 | 13 | 12 | 8 | 18 | 20 | 10 | 21 | 22 | 7 | 5 |
| குரு | 19 | 29 | 12 | 27 | 6 | 4 | 13 | 10 | 17 | 11 | 15 | 28 |
| சுக் | 28 | 15 | 11 | 17 | 10 | 13 | 4 | 6 | 27 | 12 | 29 | 19 |
| சனி | 10 | 4 | 7 | 9 | 12 | 16 | 3 | 18 | 28 | 14 | 13 | 15 |
| இராகு | 14 | 13 | 12 | 11 | 24 | 23 | 22 | 21 | 10 | 20 | 18 | 8 |
| கேது | 8 | 18 | 20 | 10 | 21 | 22 | 23 | 24 | 11 | 12 | 13 | 14 |
| மாந் | 23 | 24 | 11 | 12 | 13 | 14 | 8 | 18 | 20 | 10 | 21 | 22 |
| இலக் | 1 | 9 | 22 | 22 | 25 | 2 | 4 | 23 | 18 | 20 | 24 | 10 |

மாரகம் தரும் வீடுகள் : 8ஆம் வீடும், 8க்கு எட்டான 3ஆம் வீடும், அதன் நாதர்களும், அவ்வீட்டில் இருப்பவர்கள் இத்தன்மையைப் பெறுவார்கள். பொதுவாக ஒரு வீட்டிற்கு 12ஆம் வீடு தீமை தரும், அதன் அடிப்படையில் 3ஆம் வீட்டுக்கு 12ஆம் வீடு 2ஆம் வீடும், 8ஆம் வீட்டுக்கு 12ஆம் வீடு 7ஆம் வீடும் "மாரகம்" கொடுக்கும் வீடுகள் ஆகும். நாம் நோயின் தன்மை அறியும்போது இவ்விரு வீடுகளில் உள்ளவர்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீமை தரும் வீடுகள்: நோய் அராய்கிற போது 6,8,12ஆம், வீடுகளின் நாதகர்கள், இவ்வீடுகளில் உள்ளவர்கள். இவ்வீடுகளைப் பார்ப்பவர்கள், இவர்கள் தசா, புக்தி, அந்தர நாதர்களுடன் சம்மந்தம் பெறும் போது, நோய் கொடுக்கும் தன்மையைப் பெறுவார்கள்.

| வீடுகள் | 1ஆம் திரேகாணம் | 2ஆம் திரேகாணம் | 3ஆம் திரேகாணம் |
|---|---|---|---|
| 1 | தலை | கழுத்து | இடுப்பு |
| 2 | வலது கண் | வலது தோள் | பிறப்புறுப்பு |
| 3 | வலது காது | வலது கை | வலது விறைப்பை |
| 4 | வலது பக்கமூக்கு | வலது பக்க உடல் | வலது தொடை |
| 5 | வலது கன்னம் | வலது பக்க மார்பு | வலது முழங்கால் |
| 6 | வலது பக்கவாய் (jaw) | வலது நுரையீரல், மார்பு | பின் கழுத்து |
| 7 | வாய் | பிறப்புறுப்பு | கால்கள், பாதம் |
| 8 | இடது பக்கவாய் | இடது நுரையீரல், மார்பு | பின் கழுத்து |
| 9 | இடது கன்னம் | இடது பக்க மார்பு | இடது முழங்கால் |
| 10 | இடது பக்க மூக்கு | இடது பக்க உடல் | left thigh |
| 11 | இடது காது | வலது கை | இடது விறைப்பை |
| 12 | இடது கண் | இடது தோள் | Anus |

திரேகாணம்: நோய் அறிதலில் திரேகாணத்தின் பங்குதான் மிக முக்கியமானது. ஒவ்வொரு பாவத்திற்கும் மூன்று திரேகாணங்கள் உண்டு.

உதாரணமாக மேஷ முதல் திரேகாணம் அசுவினி 1,2,3 பாதங்கள், இலக்னமோ, இலக்னத்தில் உள்ள கிரகங்களோ இந்த பாதங்களில் வந்தால் நோய் அறிதலின் போது தலைக்கு பாதிப்பு உள்ளதா? என்பதை அறியலாம்.

நோய் அறியும் போது இலக்கினத்தின் 22வது திரேகாண நாதரையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

64வது நவாம்சம்: நோய் அறியும்போது சந்திரனில் இருந்து 64வது நவாம்ச நாதரையும் கணக்கிட வேண்டும்.


பாதக வீடுகள்: சர, ஸ்திர, உபய வீடுகள் நாம் அறிந்ததே, சர இலக்கினத்திற்கு 11ஆம் வீடும், ஸ்திர லக்கினத்திற்கு 9ஆம் வீடும், உபய இலக்கினத்திற்கு 7ஆம் வீடு பாதக வீடுகளாகும்.

இராகு, கேது: ஜாதகத்தில் நோயின் தன்மை அறிய இராகு, கேதுக்களை நன்றாக அறிய வேண்டும். புற்று நோய் அறிய இவர்களின் பங்கு மிக அவசியமாகும்.

ஜோதிடத்தில் நோய் அறியும் காரணிகளை வைத்து கோச்சாரத்தில் கிரக நிலைகளைக் கணக்கிட்டு ஜாதகரின் தசா, புக்தி, அந்தர நாதர்களை இவர்களுடன் இணைத்துப் பார்த்தால் நோயின் தன்மையை மிகத் துல்லியமாக அறிய முடியும். ●


உலகம் முழுவதும் உலா வருகின்றன
நீங்களும் இதில் வலம் வாருங்கள்..!
INTERNET
eBOOK
100 % Absolutely FREE!
Get Instant Access Now!
APSARA PUBLICATIONS
Lesson of time - KARMA
So be good and do good" - Buddha
www.apsaraepublications.com

# பாப, தோஷ சாபநிவர்த்திக்கு உடனடி தீர்வு பலன் அளித்திடும் பரிகார மூலிகை இரக்ஷை



## 12 இராசிகளுக்குரிய பரிகார மூலிகை இரக்ஷைகள்

**மேஷம்:** திருவம்பலச் சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி வைகுண்ட மூலிகையை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்துக் உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்துக் கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் லால்குடி அருகில் இருக்கும் நந்தி அடிகள் ஜீவ சமாதியில் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**ரிஷபம்:** ஸ்ரீ சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி அம்மான் மூலிகையை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த ஸ்ரீ சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் திருவிடை மருதூர் அருகில் உள்ள பாஸ்கரராயர புரத்தில் இருக்கும் பாஸ்கரராயர் சமாதிக் கோவிலில் வழிபட ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**மிதுனம்:** ஸ்ரீ குபேர எண் சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி அற்ற இலை ஒட்டி மூலிகையை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த குபேர எண் சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் திருவண்ணாமலையில் கிரிவலப் பாதையில் உள்ள குபேர லிங்கத்தில் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**கடகம்:** ஸ்ரீ சூலினி சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி நத்தைசூரி மூலிகையை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் தாம்பரம் அருகே உள்ள படப்பையில் இருக்கும் துர்க்கைச் சித்தர் பீடத்தில் ஒரு முறை மட்டும் ஆலயத்தில் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**சிம்மம்:** சுதர்ஸன சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி விஷ்னு மூலிகையை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் ஸ்ரீரங்கத்தில் உள்ள இராமானுஜர் ஆலயத்தை வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**கன்னி:** இராமர் சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி துளசி வேரை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் இராமேஸ்வரம் ஆலயத்தில் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**துலாம்:** துர்கா சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி செந்நாயுருவி வேரை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் பொள்ளாச்சியில் உள்ள அழுக்குச்சாமி சித்தர் கோவிலில் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** கிருஷ்ணர் சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி மஞ்சை கிளுகிளிப்பை வேரை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் சென்னிமலையில் இருக்கும் பின்னாக்குச் சித்தர் ஆலயத்தில் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**தனுசு:** விஷ்னு லட்சுமி சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி சிவனார் மூலிகையை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் சுவாமிமலை முருகன் ஆலயத்தில் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**மகரம்:** பகுளாமுகி சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி யானை வணங்கி மூலிகையை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் பழனிமலையில் உள்ள போகர் ஆலயத்தில் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

**கும்பம்:** கணபதி சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி தகரை மூலிகையை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் வேலூர் அருகில் உள்ள திருவலம் ஆலயத்தில் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

மீனம்: கோபுர கலச சக்கரத்தை செப்புத்தகட்டில் வரைந்து அஷ்டகந்தம் பூசி குப்பைமேனி மூலிகையை முறைப்படி பூஜித்து எடுத்து இந்த சக்கரத்தில் அடைத்து உங்களது ஜென்ம நட்சத்திரத்தில் அணிந்து கொண்டு ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஜென்ம நட்சத்திரத்தில் ஒரு முறை மட்டும் கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் கோவிலையும் பிரம்மன் கோவிலையும் வழிபாடு செய்ய ஆயுள் முழுவதும் பல அற்புத அரிய அபூர்வ பலன்கள் கிடைக்கும்.

ஜீவநாடி மூலம் அந்தந்த இராசியினருக்கு ஜீவநாடியில் சொல்லப்பட்ட பரிகார மூலிகை இரக்ஷை முன்பதிவு செய்பவர்களுக்கு குறுகிய கால இடைவெளியில் கிடைக்கும். ஒரு மண்டலம் பூஜை செய்யப்பட்டு உருவேற்றி, உயிரோட்டத்துடன் வழங்கப்படுகிறது. "அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்" நிறுவனத்தின் ஆதரவுடன் அனுபவம் வாய்ந்தோரால் வழங்கப்படுவதால் 100% பலன் கிடைக்கும் என்பது உறுதி. ஜீவநாடிப் பரிகாரங்களைக் கடைபிடித்து பலன் பெற்றோர் ஏராளம். இந்த இரக்ஷை சகலவிதமான பாப, தோஷ, சாபநிவர்த்திக்கும், உடனடி பலனுக்கும், இரக்ஷையுடன் "தமிழ் புத்தாண்டு" மற்றும் "ஆங்கிலப் புத்தாண்டு" "குரு பெயர்ச்சி"யில் வெளிவந்துள்ள ஜீவநாடி ஆலய பரிகாரங்களையும் கண்டிப்பாக தொடர்ந்து கடைபிடித்தால் வாழ்வில் மாற்றம் காண்பது உறுதி. இதுவரை பதிவு செய்தவர்களுக்கு தொடர்ந்து வரிசைப்படி அனுப்பப்பட்டு வருகிறது

**தொடர்பு கொள்க 94445 41239**

# கைரேகைக் கலை காலத்தால் அழியாத நிலை

## விரல்களின் நிலைகள்

15



ஜோதிட ரத்னா
பி.ராஜராஜன் M.Com., M.A., (Astro)
cell: 94436 02265

**7. குட்டையான மூன்றாம் அங்குலாஸ்த்தி பலன்கள்**

1. அனைவரிடமும் நன்கு பழகுவார்கள்
2. பேராசை கொண்டு திரிய மாட்டார்கள்
3. வாழ்வில் முன்னேற நல்ல வழிகளில் ஈடுபடுவார்கள்
4. மற்றவர்கள் சொத்துக்கு ஆசைப்பட மாட்டார்கள்
5. உழைத்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்
6. எப்போதும் மன குளிர்ச்சியுடன் இருப்பார்கள்
7. எப்போதும் இவர்கள் நல்ல மனஉணர்ச்சியுடன் காணப்படுவார்கள்
8. துன்பத்தை கண்டு கலங்கமாட்டார்கள்
9. ஆண் / பெண் வெறுப்பு இருக்காது
10. பொருளாதார வசதி கொண்டவர்கள்.

**சனி விரல் முதல் அங்குலாஸ்த்தி பலன்கள்**

| நல்லதன்மை / பலன் | கெட்ட தன்மை/பலன் |
|---|---|
| 1. நிதானமான செயல் | 1. மூட நம்பிக்கை |
| 2. ஆத்திரப்படாத குணம் | 2. துக்கம் |
| 3. சுதந்திரமான உணர்வு | 3. விசனம் |
| 4. அதிகாரம் செய்யாமை | 4. துர்மரணம் |
| 5. அதிகாரி நிலை | |
| 6. விவேகம் | |
| 7. சூட்சம புத்தி | |
| 8. சகித்துக் கொள்ளும் தன்மை | |

**சனி விரலின் இரண்டாம் அங்குலாஸ்த்தி பலன்கள்**

| நல்ல பலன்கள் / தன்மை | கெட்ட தன்மை/ பலன்கள் |
|---|---|
| 1. ஆராய்ச்சி | 1. ரகசியம் |
| 2. கணித சாஸ்திரம் | 2. புறம் கூறுதல் |
| 3. உத்திரவு | 3. துரோகம் |
| 4. முறை | 4. பொறாமை |
| 5. படிப்பில் அக்கறை | 5. கீழ் படியாமை |
| 6. ரகசிய கலை | 6. போலி பாத்தியம் |
| 7. மனசாட்சி | |

**சனி விரல் மூன்றாம் அங்குலாஸ்த்தி பலன்கள்**

| நல்ல தன்மை / பலன்கள் | கெட்ட தன்மை / பலன்கள் |
|---|---|
| 1. பொருளாதாரம் | 1. துன்பம் |
| 2. தனிமை விருப்பம் | 2. தகுதியின்மை |
| 3. ஆண் / பெண் வெறுப்பு | 3. உணர்ச்சியின்மை |
| | 4. மனகுளிர்ச்சி |
| | 5. ஆண்/ பெண் வெறுப்பு |

நல்ல தன்மை: நல்ல தன்மை என்பது அங்குலாஸ்த்தியில் அசுப குறிகள் எதுவும் தென்படாமல் நல்ல முறையில் விரல் வளர்ச்சி

அடைந்து இருந்தாலும் அங்குலாஸ்த்தி இயல்பாக, நீளமாக இருந்தால் நல்ல தன்மை, நல்ல பலன்களை பெறுவார்கள்

**கெட்ட பலன்கள்:** மேற்கண்ட கெட்ட பலன்களை, விரலின் அங்குலாஸ்த்திகள் ஒழுங்கா அமையாவிட்டாலும், அசுப குறிதென்பட்டால், கூறலாம்.

**சனி விரல் பின்பக்கம் வளைந்தால் பலன்கள்**



1. அவர் எல்லாரிடமும் நன்றாக கலகலப்பாக பழகுவார்கள்
2. இவர்கள் பேச்சிலும் கலகலப்பு நிறைந்திருக்கும்
3. அவர் வாழ்க்கையின் சுவையை நன்கு அனுபவிப்பார்கள்.
4. எப்போதும் உற்சாகமாகக் காணப்படுவார்கள்
5. இவர்களுக்கு பெரிய அளவில் வருமானம் இல்லாவிட்டாலும் கிடைக்கும் வருமானத்தை கொண்டு மகிழ்ச்சியோடு காலத்தை கடத்துபவர்களாக இருப்பர்.
6. தொழில் நெளிவு சுளிகளை நன்கு அறிந்து சாதுரியமாக பேசி செயல்பட்டு முன்னேறுவார்கள்.

**சனி விரல் கோணலான அமைப்பு**



சனிவிரல் கோணலாய் அமைய பெற்று இருந்தால்

1. குற்றச் செயல்களில் ஈடுபடக் கூடிய விகார மனம் அமையும்.
2. மனவியாதி கூட ஏற்படும்
3. இதர அம்சங்கள் நன்றாக இருப்பின் கொஞ்சம் பண்பட்டுக் காணப்படுவார்கள்.
4. எவ்வகையான குற்றத்தையும் செய்ய அஞ் சமாட்டார்கள்.

சனிவிரல் குருவிரல் பக்கம் ஆராய்ந்து காணப்பட்டால்

**சனி விரல் குரு விரல் நோக்கி சாய்ந்திருந்தால் பலன்கள்**



1. அவர் ஒழுக்கமாக வாழ்வார்
2. மற்றவர்களாலும் ஒழுக்கமாக வாழ வேண்டும்மென்று விரும்புவார்
3. எல்லாரிடமும் கண்டிப்புடன் நடந்துக் கொள்வார்.
4. ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்
5. பெரிய பிரபுக்களின் நட்பு, தனவான்களின் நட்பையும் பெற்று இருப்பார்கள்
6. இவர்கள் பணக்காரர்களின் தொழில் கூட்டையும் பெற்று சிறப்படைவார்கள்
7. கண்டிப்பான ஆசிரியர் போல நடந்து கொள்வார்கள்.

**சனி விரல் சூரிய விரல் பக்கம் சாய்ந்து இருந்தால்**



பலன்கள்

1. ஒரு நேரம் வலியவந்து சிரித்து பேசுவார்கள். மறு நேரம் பார்க்காமல் செல்வார்கள்.
2. சிலர் அபூர்வமான கலைத் திறமை கொண்டவர்கள்
3. அரசு தொடர்பால் தொழில் அமையப் பெறுவார்கள்
4. எப்படியாவது அரசு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வார்கள்
5. சிறந்த கலைஞராக விளங்குவார்கள்
6. பல சமயங்களில் விநோதமாக நடந்து கொள்வார்கள்.

**குருவிரல் சனி விரல் உயரம்**



சனி விரல் சூரிய விரலுக்கு சம உயரத்தில் இருப்பின்

1. சுயத் தொழில் உடையவர்கள்
2. எந்திரத் தொழில் நுணக்கம் அறிவார்கள்
3. தொழிலில் பிரச்சினைகள் கலந்து இருக்கும்
4. அரசு உதவி போதிய பலன் கிடைக்காது
5. தந்தையின் நலன் பாதிக்கப்படும்.

**தளர்ந்த சனி விரல் பலன்கள்**

1. எந்த தொழிலிலும் வன்மை, திறமை அற்றவர்கள்
2. தொழிலில் அக்கறை பிடிமானம், ஈடுபாடு குறைந்தவர்கள்

**விறைப்பான சனி விரல்கள் பலன்கள்**

1. கடின உழைப்பாளிகள்
2. நேர்மையால் முன்னேறுவார்கள்
3. சிறந்த தொழில் நுட்ப வல்லுனராக இருப்பார்கள்

இடைவெளிகள்

**குருவிரல் சனி விரல்**

**குருவிரலுக்கும் சனி விரலுக்கும் இடையே அதிக இடைவெளி பலன்கள்**



1. தங்கள் கருத்துகளே சரியானவை என்று வாதாடுவார்கள்.
2. மற்றவர் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.
3. தங்களுடைய கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்புவார்கள். அதற்கு தீவிர முயற்சி கொள்வார்கள்.

**குரு–சனி விரலுக்கு இடையே மிக குறைவான இடைவெளி**

1. இவர் தமது கருத்துக்கள் சரியானது என வாதாட மாட்டார்கள்
2. மற்றவர்களுடைய கருத்துக்களை கேட்டு அவை சரியாக இருக்குமானால் அவற்றை ஏற்றுக் கொள்வார்கள்.

**சனி–சூரிய விரல் இடைவெளி**



A. அதிக இடைவெளி

1. பொறுப்பு என்பது இருக்காது
2. எதிலும் பொறுப்பு இல்லாமல் நடந்து கொள்வார்கள்
3. எந்த காரியத்தை திட்டமிட்டு செய்யமாட்டார்கள்
4. எதிர்காலத்தை பற்றி எண்ணியே பார்க்க மாட்டார்கள்.
5. யாருக்கும் கட்டுப்பட மாட்டார்கள்
6. உல்லாசமாக வாழ்வதில் அதிக ஆர்வம்

B. குறைவான இடைவெளி

1. எதிர்காலத்தைப் பற்றி எண்ணுவார்கள்
2. எதிர்காலம் வளமாக இருக்க வேண்டும் என்று திட்டம் இடுவார்கள்
3. அதன்படி செயல்படுவார்கள்.
4. உழைப்பாளர்கள்
5. கட்டுப்பட்டு நடப்பார்கள்.

**சிறுத்த சனி விரல்:** சனி விரல் மெலிந்தும் சிறுத்தும் காணப்பட்டார்கள்.



1. அவர்கள் சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நடந்து கொள்வார்கள்.
2. இவர்தனது நலமே பெரிதாக கருதுவார்கள்
3. தனது உடல் நலன் முக்கியம் என்பார்கள்
4. இவர்கள் நற்செய்தி செயலுக்கு நன்றி தெரிவிக்க மாட்டார்கள்

**சனி விரல் பொதுவான அமைப்பு பலன்கள்**



1. இவ்விரல் சராசரியான அளவில் இருந்தால் எதிலும் எச்சரிக்கையோடு செயல்படுவார்கள்
2. இவ்விரல் மிகவும் நீளமாக இருந்தால் தாழ்ந்த எண்ணங்களைக் கொண்டிருப்பார்கள்.
3. இவ்விரல் மிகவும் நீளமாக இன்றிக் குறுகி இருந்தால் பொன்னான காலத்தை வீண் செய்வார்கள்.
4. இவ்விரல் வளைந்திருந்தால் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவார்கள்
5. இவ்விரலுக்கும் சூரிய விரலுக்கும் இடைவெளி இருந்தால் குறிக்கோளில்லாத வாழ்க்கையை நடத்திச் செல்வர்.

## 3. சூரிய விரல்

நமது கைகளில் ஐந்து விரல்கள் இருக்கின்றன. அவற்றை நாம் கீழ்கண்ட பெயர்களில் அழைக்கிறோம்.

1. பெரு விரல்
2. ஆள்காட்டி விரல்
3. நடு விரல்
4. மோதிர விரல்
5. சுண்டு விரல் என்று அழைக்கிறோம்.

ரேகை சாஸ்த்திரத்தின் படி பெருவிரலைத் தவிர மாற்ற நான்கு விரல்களை கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

1. குருவிரல் (ஆள்காட்டிவிரல்)
2. சனிவிரல் (நடுவிரல்)
3. சூரிய விரல் (மோதிரவிரல்)
4. புதன் விரல் (சுண்டுவிரல்)

தொடரும்...



உ

ஓம்

எல்லாம் வல்ல இறைவனடி போற்றி, அன்னை ஆதிபராசக்தி திருவடிகள் போற்றி

ஆதிமுதல் 18 சித்தர்கள் திருவடிகள் போற்றி, குருநாதர் சுப்பிரமணியம் சுவாமிகள் திருவடிகள் போற்றி



# ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையம் வழங்கும்

## மகா மாந்திரீக, மந்திர,எந்திர, தந்திர, தாந்திரீக, ஆன்மீக சூட்சம ரகசிய பிரயோக பயிற்சி

தொட்டதெல்லாம் துலங்கும் ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையம் வழங்கும் " தொழில்முறை மாந்திரீக கல்வியின் இளநிலை மாந்திரீக பயிற்சி வகுப்பு." அடுத்தடுத்து தொடர்ந்து பயிற்சியில் கலந்து கொள்ளாதவர்களின் வேண்டுகோளுக்காக மீண்டும் ஒரு முறை இந்த முறையான மாந்திரீக பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. மாந்திரீகத்தை தொழிலாக செய்ய நினைப்பவர்களும், மாந்திரீகத்தில் நல்ல ஈடுபாடு உள்ளவர்களும், ஜோதிடர்களும், பூசாரிகளும், குறிசொல்பவர்களும், மாந்திரீகத்தை மேலும் மேலும் கற்று முன்னேற துடிப்பவர்களும் முன் அனுபவம் இல்லாத இயல்பானவர்களும் இப்பயிற்சியில் கலந்து மிக நல்ல பலனை அடையலாம். ஒன்றுமே தெரியாதவர்களுக்கும் முறையான மாந்திரீக வித்தையை கற்றுக்கொடுத்து மாந்திரீக சக்கரவர்த்தி ஆக்கியுள்ளார் மாந்திரீக இரத்தின சிந்தாமணி சித்தர் அடியார் சுவாமிகள். எளிமையை எளிமையால் வெல்லக்கூடிய அஷ்டகா்ம பிரயோகம் முதல் பலத்தை பலத்தால் அடிக்கக்கூடிய அனுபவ அஷ்டகா்ம பிரயோக முறை வரை கற்றுத்தரப்பட இருக்கிறது. ஆகையால் இம்முறையான மாந்திரீக பயிற்சியை தாங்களும் கற்றுப் பயனடையலாம். இப்பயிற்சியில் தொடர்ந்து கலந்து மாந்திரீக வித்தையைக் கற்றுக்கொண்டால் இதன் மூலம் இக்கலையில் மிகப்பெரிய உயர்வான நிலையை அடையலாம். மாந்திரீக வித்தையில் கைதேர்ந்தவர்களாக மாறலாம். முறையான மாந்திரீக வித்தையைக் கற்று, மக்களின் குறைகளை நீக்கி அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் எங்களைப்போல் குறைந்த சேவைக் கட்டணத்தில் முறையான மாந்திரீக வித்தையை கற்றுத்தருபவர்கள் யாரும் இல்லை. இம்மையத்தின் நோக்கமே இக்கலை அனைத்து மக்களின் துயர் நீக்கி நலமோடு வாழவேண்டும் என்பதே. வாய்ப்புள்ளவர்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஆண்/பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். முன் அனுபவம் தேவையில்லை. பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்.

மாந்திரீகத்தின் தலையாய விதியான மந்திர, எந்திரங்கள் உடனே சித்தியாக செய்யவேண்டிய **1.** இயமம், நியமங்கள் **2.** ரிஷிசந்தஷ் **3.** அங்க நியாசம் **4.** அஷ்டதிக்கு தேவர்கள் பூஜை **5.** உடல்கட்டு **6.** பஞ்சபூத பூஜை **7.** கணபதி பிராண பிரதிஷ்டை **8.** கலச பிராண பிரதிஷ்டை **9.** எந்திர சாப நிவர்த்தி **10.** எந்திரத்திற்கு உயிர்கொடுத்தல் **11.** எந்திர தசா மகா மந்திர பூஜை **12.** எந்திர பீட சக்தி தேவதா பூஜை **13.** குலதெய்வ சித்திமுறை **14.** குருவருள் சித்தி முறை. **15.** உடலில் உள்ள 51 அட்சர தேவதைகள் உயிர்பெற சுகப்பிராணாயாமம் **16.** இரண்டே நாள் சித்தியில் பேய்-பிசாசு பில்லி சூனியம் என அனைத்தையும் வந்த வழித் தெரியாமல் ஓட்டி செய்வினையால் பாதிக்கப்பட்டவரை மிகமிக எளிய செலவில் குணமாக்கக்கூடிய எந்திர தாயத்து முறை **17.** தேவதா கட்டு விபூதி பிரயோக முறை **18.** எண்ணிய வேலை தேடிவர **19.** வேலை கிடைக்காதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்க **20.** கடைகளில் கூட்டம் குவிய **21.** தன ஆகர்ஷனம் மற்றும் சர்வ ஜன ஆகர்ஷன முறை **22.** தூப பிரயோக முறை **23.** வசிய எண்ணெய் பிரயோக முறை **24.** துரதிஷ்டங்கள் விலகி தொழில் நஷ்டத்தை விலக்கி கடன் தொல்லைகளை விலக்கி குடிசையில் உள்ளவரையும் கோபுரத்திற்கு கொண்டு வரக்கூடிய ரகசிய எந்திர மந்திர லட்சுமி பூஜை முறை **25.** கணவன் மனைவி சண்டைகள் விலகி ஒற்றுமையாய் இருக்க அதிசக்தி வாய்ந்த ஆனால் எளிய முறையில் எவரும் செய்ய வல்ல கணவன்-மனைவிக்கான ரகசிய வசிய ஈடுமருந்து ரகசியம் **27.** ஈடு மருந்து (வசிய மருந்து) பாதிப்பு வயிற்றில் உண்டா ? **28.** ஈடு மருந்து பாதிப்பில் இருந்து விடுபடுவது எப்படி ? **29.** மூலிகை சாப நிவர்த்தி, மூலிகைக்கு காப்புகட்டி உயிர்கொடுத்தல் நேரடி பயிற்சி **30.** எளிமையான மூலிகைகளைக் கொண்டு மிகப்பெரிய அதிரகசிய சூட்சம பிரயோக முறை, மஞ்சள் கரிசலாங்கன்னி மகிமையால் மாந்திரீகத்தை வெல்லும் அதிரகசிய சூட்சம பிரயோகம் மற்றும் **31.** சத்ருவை வெல்லும் பிரயோகம் மற்றும் **32.** குலதெய்வ வசிய முறை **33.** மார்ஜால மோகினி என்னும் குப்பைமேனி மூலிகையால் எதிரியை வசப்படுத்தும் முறை மற்றும் **34.** எதிரி பிரயோகம் மற்றும் **35.** சத்ரு உச்சாடனம் **36.** சர்வகாரிய சித்திக்கான மகா சக்திவாய்ந்த வெள்ளருக்கன் மை முறை **37.** நன்மைக்காக செய்வினை செய்வது எப்படி **38.** செய்வினையை சரிசெய்வது எப்படி **39.** செய்வினை வைத்துள்ளார்களா ? **40.** செய்வினை வைத்திருப்பதை நீங்களே தெரிந்து கொள்ள முறையான வழிமுறைகள் **41.** தொல்லை கொடுக்கும் எதிரியை முடக்க முட்டை மந்திரித்து வைத்தல் **42.** எதிரியின் செயல்களை முடக்க எலுமிச்சம் பழம் மந்திரித்தல் **43.** தகாத உறவுகளை பிரிக்க **44.** இருந்த இடத்தில் இருந்தே எதிரியின் செயல், புத்தி பிரயோகம் இவையனைத்தையும் முடக்க மகா அதிரகசிய அட்சர பிரயோக முறை **45.** அதிகமாக தொல்லைகொடுக்கும் எதிரிகளை நன்மைக்காக இருந்த இடமே தெரியாமல் ஆக்க சத்ரு நாச சண்டாலக்கரு எட்டிக்குச்சி முலைசீவி பிரயோகம் செய்யும் முறை **46.** எப்பேற்பட்ட பேய் பிசாசு பில்லி-சூனியம் விலகாத முனியையும் விரட்டி குணமாக்கும் வழிமுறை **47.** தங்களை நாடி வரும் மக்களின் நடைமுறை வாழ்வில் உள்ள பிரச்சனைகள் தீர பலதாயத்து பிரயோக முறை **48.** தங்களது பூஜை அறையில் பூஜை செய்வது எப்படி ? **49.** வீட்டில் பூஜை அறை இல்லாதவர்கள் பூஜை செய்வது எப்படி ? **50.** எதிரிகளின் பொறாமை, கண் திருஷ்டி, எதிரியின் மாந்திரீக செயல்கள் இவைகள் நம் வீட்டிற்கு வராமல் தடுக்கும் வழிமுறைகள் மற்றும் இன்னும் பல்வேறுபட்ட அனுபவ மாந்திரீக ரகசியங்களை நேரில் வருபவர்களுக்கு வெளிப்படையாக கற்றுத்தருகிறார் தேவதா பிரயோக மாந்திரீக கலையில் கைதேர்ந்த ஆசானான சித்தர் அடியார் அவர்கள்.

**இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் பொருட்கள் :-**

1. ரூபாய். **3000/-** மதிப்புள்ள தேவதா வசியமும், காரியசித்தியும் தரக் கூடிய மிக அரிய புல்லுருவிகளைக் கொண்டு சைவ ஐங்கோலத் தைலம் சேர்த்து அரைத்த அஞ்சன மை இலவசம். 2. ரூபாய். **1500/-** மதிப்புள்ள செய்யும் வேலை சிறப்படைய தொழிலில் லாபம் வர திடீர் அதிர்ஷ்டத்தை உண்டாக்கக் கூடிய தன ஆகர்ஷன மூலிகை ரட்சை இலவசம். 3. இருவேளைத் தேனீர், மதிய உணவு, பயிற்சி கையேடு உட்பட இவையனைத்தும் இலவசம்.

**பயிற்சி அளிப்பவர் மற்றும் தலைமை பொறுப்பாளர் :** 102 நகார, மகார, மந்திர பீஜாட்சரம் மற்றும் வாலை மனோன்மணி உபாசகர் மாந்திரீக ரத்தின சிந்தாமணி மாந்திரீக ஆசான். **சித்தர் அடியார் சுவாமிகள்.**

பயிற்சி நாள் : **18-10-2015 ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 9-15 மணிமுதல் மாலை 5-30 மணிவரை**

இடம் : **நாகலட்சுமி கல்யாண மகால்** (ராம் ஆட்டோ பெட்ரோல் பங்க் அருகில் உள்ள சந்து) பழனி ரோடு, திண்டுக்கல்.

# பயிற்சி சேவைக் கட்டணம் ரூ. 1500/- மட்டும்.

முன்பதிவு அவசியம், தங்களது விவரங்களை முன்பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களது பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஒன்று அவசியம் கொண்டு வரவும்.

**நிகழ்ச்சி ஏற்பாடு : I.C.V. பாஸ்கரன், (ஜோதிட, மாந்திரீக, தாந்திரீக நுண்ணியல், நுட்பவியல் வல்லுநர்.)**

# முன்பதிவிற்கு : 94898 68978, 99445 51378

புலிப்பாணி **மு.இளங்கோ** வழங்கும்

# ஜோதிட கேள்வி-பதில்



செல்: 98943 85933

*கோமதி விநாயகம் தூத்துக்குடி*

*கேள்வி:* **ஐயா எனது மகள் தற்சமயம் கல்லூரிபடிப்பினை தொடர முடியாமல் பாதியில் திரும்பி வந்துள்ளார். அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போகிறது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்கிறார்கள் ஜோதிடர்களிடம் ஜாதகத்தை காட்டிய பொழுது செய்வினை பாதிப்பு இருக்கிறது என்றார்கள். ஜாதகத்தில் செய்வினை தோஷம் தெரியுமா? எனது மகளின் நிலைபாடு எவ்வாறு உள்ளது. தயவு செய்து உறுதிபட கூறுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| சந் சனி மாந் | | | |
| கேது | 9.12.1997 காலை 10.58 இராசி ரேவதி நட்சத்திரம் | | |
| ல / சுக் குரு | | | ராகு |
| புத செவ் | சூரி | | |

| | | | |
|---|---|---|---|
| | கேது | | புத |
| சூரி சுக் | நவாம்சம் ரேவதி நட்சத்திரம் | | |
| | | | குரு |
| சந் செவ் சனி | | மாந் ராகு | ல |

*ஆதியில் புதன்திசை இருப்பு 13 வருடம் 9 மாதம் 16ம் நாள்கள்*

**பதில்:** திருமதி கோமதி அவர்களுக்கு உங்கள் மகள் ஜாதகத்தில் தற்சமயம் கேது திசையில் இராகு புத்தியானது 25.8.2014 முதல் 13.09.2015 வரையில் உள்ளது. கேது திசையில் இராகு புத்தியானது 8ஆம் பாவத்தில் அமர்ந்து நடைபெறுகிறது. இராகு பகை கிரகமான சூரியன் வீட்டில் அமர்ந்து இராகு புத்தி நடப்பதால் அவமானம், உயிர்கண்டங்கள், முடக்கம் போன்றவை ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் மீன இராசியில் சனி, சந்திரன், மாந்தி கிரக சேர்க்கை உள்ளது. இந்த மீனத்தில் கோட்சார கேது சஞ்சாரம் செய்வதால் இதனை ஜென்ம கேது என்று அழைப்பார்கள். இந்த கிரக அமைப்பு உடல் நலபாதிப்புடன் மன நிலையையும் பாதிக்கும். எனவே நீங்கள் தகுதியான மனநல மருத்துவரிடம் காட்டி கவுன்சிலிங் மற்றும் சிகிச்சை மேற்கொள்ளுங்கள் மற்றபடி ஜாதகத்தில் செய்வினை கிடையாது. ஒருவருக்கு ப்ரஸன்ன ஜோதிடம் மூலமாக மட்டுமே செய்வினை தோஷங்களை அறிய முடியும். எனவே மனதில் குழப்பம் வேண்டாம். தகுந்த மருத்துவத்துடன் பசும் வெண்ணெயை ஆஞ்சநேயருக்கு படைத்து அர்ச்சனை செய்து அந்த வெண்ணெயை உங்கள் மகளுக்கு கொடுத்து வாருங்கள். படிபடியாக நோயின் பாதிப்புகள் நீங்கும். வாழ்க வளமுடன்

*****

*E.மாலா திருச்சி*

*கேள்வி:* **ஐயா நான் பள்ளி இறுதியாண்டு படித்து வருகிறேன் எனக்கு கொஞ்சம் ஜோதிடம் தெரியும்? எனது ஜாதகம் சர்ப்ப தோஷமா? இதனால் எந்த மாதிரியான நிலைபாடு உண்டாகும். எனக்கு எந்த துறையில் படித்தால் பிரகாசமான எதிர்காலம் அமையும்?**

| | | | |
|---|---|---|---|
| குரு மாந் | சனி | சந் | ல / சுக் செவ் |
| கேது | இராசி 20.7.1998 ரோகிணி நட்சத்திரம் | | சூரி புத |
| | | | ராகு |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| புத | | | ல / சந் சனி ராகு |
| செவ் | நவாம்சம் | | சூரி |
| | | | குரு மாந் |
| கேது | சுக் | | |

*ஆதியில் சந்திரதிசை இருப்பு 4 வருடம் மாதம் 0 நாள் 27*

**பதில்:** செல்வி மாலா அவர்களுக்கு உங்கள் ஜாதகத்தில் ரோகிணி நட்சத்திரம் ரிஷபம் இராசி ஆகும். தற்சமயம் இராகுதிசையில் சனி புத்தி நடக்கிறது. 21.9.2014 முதல் 28.7.17 வரையில் நடப்பில் உள்ளது. பொதுவாக உங்கள் ஜாதகத்தில் 10ஆம் இடத்தில் குரு அமர்ந்து நவாம்சத்தில் சூரியன் வீட்டில் உள்ளது. எனவே கல்லூரி பேராசிரியர் சார்பான படிப்புகள் மற்றும் மருத்துவ படிப்பு படிக்கலாம். அதே சமயம் சனிபுத்தி நடப்பில் உள்ளதால் இப்பொழுது, இரசாயணம் மற்றும் மெடிக்கல் சம்பந்தமான படிப்புகளை படிக்கலாம். பொருளாதார ரீதியாக எதிர்காலம் சிறப்பாக அமையும். உங்கள் ஜாதகத்தில் இராகு கிரகம் செல்லும் வழியில் தான் லக்கினம் இராசி முதல் எல்லா கிரகமும் அடைவு பெற்றுள்ளது. எனவே இதற்கு கால சர்ப்ப யோகம் என்று பெயர். இராகு சூரியன் வீட்டில் அமர்ந்துள்ளதால், காயத்திரீ ஜெபம் செய்தல் மற்றும் கணபதி வழிபாடு செய்து வர சர்ப்ப யோகம் மேலும் விருத்தி ஏற்படும் வாழ்வில் சாதனைகளை படைப்பீர்கள்.

*****

*திருமதி கீதா இராமநாதபுரம்*

*கேள்வி:* **ஐயா எனது மகன் விஷ்ணு படிப்பில் மிகவும் பின் தங்கி இருக்கிறான். அவன் நன்றாக படிக்க என்ன செய்ய வேண்டும். தந்தை இல்லாத குழந்தை என்பதால் கொஞ்சம் செல்லமாக வளர்த்து விட்டேன். நான் ஆசிரியராக பணியாற்றுகிறேன். என் எதிர்கால சந்தோஷமே என் மகன் கையில் தான் உள்ளது. சரியான வழி காட்டுதல் தேவை.**

| | | | |
|---|---|---|---|
| | சந் | குரு சனி | புத |
| | இராசி 24.7.2000 அஸ்வினி நட்சத்திரம் | | ல/சூரி ராகு சுக் செவ் |
| கேது | | | |
| | மாந் | | |

| | | | |
|---|---|---|---|
| புத | சந் குரு | | |
| சனி | நவாம்சம் | | செவ் ராகு |
| கேது மாந் | | | |
| சுக் | | | ல/சூரி |

*ஆதியில் கேது திசை இருப்பு 5 வருடம் 9 மாதம் 25 நாள்*

**பதில்:** *சகோதரி கீதா அவர்களுக்கு தங்கள் மகனுக்கு ஆரம்பத்திலேயே அதிக செல்லம் கொடுத்து வளர்த்து விட்டதாக கூறியுள்ளீர்கள். இதனையும் கணக்கில் எடுத்துதான் பலன் சொல்ல வேண்டும்.பொதுவாக இலக்கினாதிபதி சந்திரன் 10ஆம் இடத்தில் அமைய பெற்ற ஜாதகர்கள் தத்து போய் வளர்வதை என் அனுபவத்தில் கண்டுள்ளேன். எனவே அவனை உங்களை விட்டு பிரித்து ஹாஸ்டலில் தங்கி படிக்க வையுங்கள். மனதிற்கு கஷ்டமாக இருந்தாலும் இதனை கட்டாயம் நீங்கள் செய்தால் தான் உங்கள் மகனின் எதிர்காலம் சிறப்பாக அமையும். மேலும் அஸ்வினி நட்சத்திரம் மேஷ இராசிக்கு அஷ்டமத்து சனியும் நடைபெறுவதால் சனிக்கிழமை தோறும் 108 திராட்சை பழத்தை நீலநிற நூலில் கோர்த்து மாலையாக கட்டி பைரவருக்கு அணிவித்து அர்ச்சனையை தொடர்ந்து செய்து வாருங்கள் படிபடியாக மாற்றங்கள் உண்டாகும்.*

*குமரன் கோவை*

*கேள்வி:* **ஐயா எனது ஜாதகத்தை உங்களுக்கு அனுப்பியுள்ளேன். தற்சமயம் நான் இஞ்ஜினியரிங் படிப்பு படிக்கிறேன். எனக்கு காதல் திருமணம் நடக்குமா? எப்பொழுது திருமணம் செய்யலாம்? எந்த மாதிரி தொழில் வாய்ப்பு அமையும். எனக்கு ஆயுள் பலம் எப்படி உள்ளது.**

| | | | |
|---|---|---|---|
| சனி கேது மாந் | சந் | | |
| | இராசி 3.9.1996 பரணி நட்சத்திரம் | | சுக் செவ் |
| | | | ல/சூரி |
| குரு | | | புத ராகு |

| | | | |
|---|---|---|---|
| புத மாந் | ல | ராகு | |
| | நவாம்சம் | | சுக் செவ் |
| | | | குரு |
| | சந் கேது | சனி | சூரி |

*ஆதியில் சுக்கிரன் திசை இருப்பு 1 வருடம் 4 மாதம் 6 நாள்*

**பதில்:** *தம்பி குமரன் காதல் செய்கிறீர்களா? என்பது பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் காதல் திருமணம் பற்றி கேட்கிறீர்கள் உங்கள் ஜாதகத்தில் தற்சமயம் 9.1.2015 முதல் 9.1.2021 வரை செவ்வாய் திசை நடைபெறுகிறது. இதன்மூலம் பலன்களை ஆராய்ந்தால் செவ்வாய் சுக்கிரன் தொடர்புடன் கடகத்தில் அமர்ந்து பரிவர்த்தனையுடன் செவ்வாய் திசை நடைபெறுகிறது. செவ்வாய் திசையில் கட்டாயம் காதல் விவகாரம் ஏற்பட்டு விடும். ஆனால் இராகு திசையில் இராகு புத்தியில் தான் உங்கள் தாயார் பார்த்து வைக்கும் பெண்ணை திருமணம் செய்வீர்கள். நீங்கள் எதிர்காலத்தல் தகவல் தொடர்பு, கம்யூட்டர் கடல் சார்பு துறை, காவல்துறை போன்ற இடங்களில் பணி செய்வீர்ர்ள். உங்கள் ஜாதகத்தில் சந்திரன் நின்ற இடத்திற்கு 5ஆம் இடத்தில் சூரியன் அமர்ந்து உள்ளதால் தீர்க ஆயுள்பலம் உண்டு சுமார் 75 வயது வரை அமையும். தற்சமயம் பொறியியல் படிப்பில் கவனம் செலுத்தி படியுங்கள்.*

**நமது குருவருள் ஜோதிடம் வாசகர்களின் ஜோதிட சம்பந்தமான கேள்விகளுக்கு...**

## புலிப்பாணி மு.இளங்கோ பதில் அளிக்கிறார்

**கேள்விகள் கேட்க விரும்பும் வாசகர்கள் தங்கள் ஜாதக நகலுடன் பிறந்த தேதி, நேரம், இடம் மற்றும் தங்கள் முகவரி, தொலைபேசி எண்ணையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் குருவருள் ஜோதிடம் அலுவலக முகவரி கூப்பனை ஒட்டி அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.**

அனுப்பவேண்டிய முகவரி

**புலிப்பாணி மு.இளங்கோ ஜோதிட கேள்வி பதில்**

**குருவருள் ஜோதிடம், 18/67, பி.வி. கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை இராயப்பேட்டை, சென்னை 600 014.**

# மன்மத வருஷத்திய திருவருள் **சக்தி** சுத்த திருக்கணித பஞ்சாங்கம்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | மணி | நிமிடம் | ★ | நட்சத்திரம் | மணி | நிமிடம் | ★ | நாமயோகம் | மணி | நிமிடம் | ★ | கரணம் | மணி | நிமிடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | அக்1 | வி | சது | 6 | 57 | இ | பர | 10 | 07 | ப | ஹர் | 4 | 31 | அ | பவ | 8 | 16 |
| 15 | 2 | வெ | பஞ் | 4 | 47 | ப | கிரு | 8 | 27 | ப | வஜ் | 1 | 16 | அ | கௌ | 5 | 47 |
| | | | | | | | | | | | சித் | 10 | 32 | இ | | | |
| 16 | 3 | சனி | சஷ் | 3 | 19 | ப | ரோ | 7 | 27 | ப | விய | 8 | 24 | இ | கர | 3 | 57 |
| 17 | 4 | ஞா | சப் | 2 | 39 | ப | மிரு | 7 | 12 | ப | வரீ | 6 | 53 | இ | பத் | 2 | 53 |
| 18 | 5 | தி | அஷ் | 2 | 46 | ப | திரை | 7 | 44 | ப | பரீ | 5 | 59 | ப | பால | 2 | 37 |
| 19 | 6 | செ | நவ | 3 | 39 | ப | புன | 9 | 01 | ப | சிவ | 5 | 39 | ப | தை | 3 | 07 |
| 20 | 7 | பு | தச | 5 | 11 | ப | பூச | 10 | 57 | ப | சித் | 5 | 50 | ப | வணி | 4 | 20 |
| 21 | 8 | வி | ஏகா | 7 | 14 | இ | ஆயி | 1 | 26 | ப | சாத் | 6 | 24 | இ | பவ | 6 | 09 |
| 22 | 9 | வெ | துவா | 9 | 40 | இ | மக | 4 | 18 | ப | சுப | 7 | 14 | இ | கௌ | 8 | 25 |
| 23 | 10 | சனி | | | | | பூர | 7 | 23 | இ | சுப் | 8 | 15 | இ | கர | 10 | 58 |
| 24 | 11 | ஞா | திர | 12 | 18 | அ | உத் | 10 | 33 | இ | பிரா | 9 | 19 | இ | வணி | 12 | 18 |
| 25 | 12 | தி | சசி | 2 | 59 | அ | | | | | ஐந் | 10 | 20 | இ | சகு | 2 | 59 |
| 26 | 13 | செ | அமா | 5 | 36 | அ | அஸ் | 1 | 40 | அ | வை | 11 | 15 | இ | நா | 5 | 36 |
| 27 | 14 | பு | பிர | 8 | 03 | ப | சித் | 4 | 37 | அ | விஷ் | 11 | 58 | இ | பவ | 8 | 03 |
| 28 | 15 | வி | துதி | 10 | 13 | ப | சுவா | 7 | 20 | ப | | | | | கௌ | 10 | 13 |
| 29 | 16 | வெ | திரு | 12 | 02 | ப | விசா | 9 | 43 | ப | பிரீ | 12 | 27 | அ | கர | 12 | 02 |
| 30 | 17 | சனி | சது | 1 | 25 | ப | அனு | 11 | 41 | ப | ஆயு | 12 | 38 | அ | வணி | 12 | 47 |
| 1 | அக்18 | ஞா | பஞ் | 2 | 19 | ப | கே | 1 | 12 | ப | சௌ | 12 | 28 | அ | பவ | 1 | 56 |
| | | | | | | | | | | | சோ | 11 | 54 | இ | | | |
| 2 | 19 | தி | சஷ் | 2 | 40 | ப | மூல | 2 | 10 | ப | அதி | 10 | 53 | இ | கௌ | 2 | 34 |
| 3 | 20 | செ | சப் | 2 | 24 | ப | பூரா | 2 | 33 | ப | சுக | 9 | 23 | இ | கர | 2 | 36 |
| 4 | 21 | பு | அஷ் | 1 | 30 | ப | உத் | 2 | 19 | ப | திரு | 7 | 23 | இ | பத் | 2 | 02 |
| 5 | 22 | வி | நவ | 11 | 59 | ப | திஓ | 1 | 28 | ப | சூல | 4 | 53 | ப | பால | 12 | 50 |
| 6 | 23 | வெ | தச | 9 | 52 | ப | அவி | 12 | 02 | ப | கண் | 1 | 54 | ப | கர | 9 | 52 |
| 7 | 24 | சனி | ஏகா | 7 | 14 | ப | சத | 10 | 04 | ப | விரு | 10 | 31 | ப | பத் | 7 | 14 |
| 8 | 25 | ஞா | துவா | 4 | 09 | அ | பூதி | 7 | 42 | ப | துரு | 6 | 46 | ப | பால | 4 | 09 |
| 9 | 26 | தி | திர | 12 | 45 | அ | உதி | 5 | 01 | அ | வியா | 2 | 47 | அ | தை | 12 | 45 |
| | | | சசி | 9 | 11 | இ | | | | | ஹர் | 10 | 40 | இ | | | |
| 10 | 27 | செ | பௌ | 5 | 36 | ப | ரே | 2 | 12 | அ | வஜ் | 6 | 33 | இ | பத் | 7 | 23 |
| | | | | | | | அசு | 11 | 25 | இ | | | | | | | |
| 11 | 28 | பு | பிர | 2 | 10 | ப | பர | 8 | 49 | இ | சித் | 2 | 33 | ப | பால | 3 | 51 |
| 12 | 29 | வி | துதி | 11 | 03 | ப | கிரு | 6 | 37 | இ | விய | 10 | 50 | ப | தை | 12 | 33 |
| 13 | 30 | வெ | திரு | 8 | 25 | ப | ரோ | 4 | 56 | ப | வரி | 7 | 30 | ப | பத் | 8 | 25 |
| 14 | 31 | சனி | சது | 6 | 26 | ப | மிரு | 3 | 57 | ப | பரி | 4 | 41 | அ | பால | 6 | 26 |

◈ அ = நள்ளிரவு மணி 12.01 முதல் அதிகாலை மணி 6.00 வரை; ப = காலை மணி 6.01 முதல் மாலை மணி 6.00 வரை; இ = இரவு மணி 6.00 முதல் நள்ளிரவு மணி 12.00 வரை என பொருள்படும். திதி, நட்சத்திரம், யோகம், கரணம் போன்றவை மேலே குறித்துள்ள நேரம் வரை இருக்கும்.

## 2015 ஆக்டோபர் மாதம் திருக்கணித பஞ்சாங்கம்

| ★ | கரணம் | மணி | நிமிடம் | ★ | நேத்திரம் | ஜீவன் | அமிர்தாதி யோகம் | மணி | இலக்கின இருப்பு நிமி | சிரார்த்த திதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | பால | 6 | 57 | இ | 2 | 1 | சி/ம | 1 | 08 | சது |
| அ | தை | 4 | 47 | ப | 2 | 1 | சி/ம | 1 | 04 | பஞ் |
| அ | வணி | 3 | 19 | ப | 2 | 0 | அ/சி | 1 | 00 | சஷ் |
| அ | பவ | 2 | 39 | ப | 2 | 1/2 | சி | 0 | 56 | சப் |
| அ | கௌ | 2 | 46 | ப | 1 | 1/2 | சி/அ | 0 | 52 | அஷ் |
| அ | கர | 3 | 39 | ப | 1 | 1/2 | சி | 0 | 48 | நவ |
| அ | பத் | 5 | 11 | ப | 1 | 1/2 | சி | 0 | 43 | தச |
| ப | பால | 7 | 14 | இ | 1 | 1/2 | சி/அ | 0 | 39 | ஏகா |
| ப | தை | 9 | 40 | இ | 0 | 1/2 | ம/சி | 0 | 35 | துவா |
| ப | | | | | 0 | 1/2 | சி/ம | 0 | 31 | திர |
| அ | பத் | 1 | 39 | ப | 0 | 0 | அ/சி | 0 | 27 | சசி |
| அ | சது | 4 | 19 | ப | 0 | 0 | சி/பி | 0 | 24 | அமா |
| அ | கிம் | 6 | 51 | இ | 0 | 0 | சி | 0 | 20 | பிர |
| ப | பால | 9 | 10 | இ | 0 | 0 | சி | 0 | 16 | துவி |
| ப | தை | 11 | 10 | இ | 0 | 0 | அ/சி | 0 | 11 | திரு |
| ப | | | | | 0 | 1/2 | சி | 0 | 07 | சது |
| அ | பத் | 1 | 25 | ப | 0 | 1/2 | சி | 0 | 03 | பஞ் |
| அ | பால | 2 | 19 | ப | 1 | 1/2 | ம/அ | 2 | 06 | |
| அ | தை | 2 | 40 | ப | 1 | 1/2 | சி/ம | 2 | 02 | சஷ் |
| அ | வணி | 2 | 24 | ப | 1 | 1/2 | சி/பி | 1 | 58 | சப்,அஷ் |
| அ | பவ | 1 | 30 | ப | 1 | 1/2 | அ/சி | 1 | 54 | நவ |
| அ | கௌ | 11 | 59 | ப | 2 | 1/2 | சி | 1 | 49 | தச |
| | தை | 11 | 00 | இ | | | | | | |
| ப | வணி | 8 | 37 | இ | 2 | 0 | சி | 1 | 45 | ஏகா |
| ப | பவ | 5 | 44 | ப | 2 | 1 | அ/ம | 1 | 41 | துவா |
| அ | கௌ | 2 | 29 | ப | 2 | 1 | சி/அ | 1 | 37 | திர |
| அ | கர | 10 | 59 | ப | 2 | 1 | சி | 1 | 33 | சசி |
| | வணி | 9 | 11 | இ | | | | | | |
| ப | பவ | 5 | 36 | ப | 2 | 1 | சி | 1 | 28 | பௌ |
| அ | கௌ | 2 | 10 | ப | 2 | 1 | சி/அ | 1 | 24 | பிர, துவி |
| அ | கர | 11 | 03 | ப | 2 | 1 | ம | 1 | 20 | திரு |
| | வணி | 9 | 40 | இ | | | | | | |
| ப | பவ | 7 | 21 | இ | 2 | 1 | ம/சி | 1 | 16 | சது |
| ப | கௌ | 5 | 44 | ப | 2 | 1 | சி | 1 | 12 | பஞ் |

## அக்டோபர் மாத விரத தினங்கள்

*1. கி.சதுர்த்தி*

*1 கிருத்திகை*

*3 கி.சஷ்டி*

*8 கி.ஏகாதசி*

*10 கி.பிரதோசம்*

*11 மாத சிவராத்திரி*

*12 அமாவாசை*

*14 சந்திர தரிசனம்*

*17 மாத சதுர்த்தி*

*19 சு.சஷ்டி*

*22 சிரவண விரதம்*

*24 சு.ஏகாதசி*

*25 சு.பிரதோசம்*

*26 பௌர்ணமி*

*29 கிருத்திகை*

*30 கி.சதுர்த்தி*

### சுப முகூர்த்தங்கள்

*19 திங்கள் சுக்லபட்சம், சஷ்டிதிதி, மூலம்*

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| | 1 சிம் சு<br>18 துலா சூரி<br>29 துலா புத | | சு |
| | | | செவ் குரு |
| | சனி | | சூரி பு ரா |

கணித்தவர்: பஞ்சாங்க கணிதர், ஜோதிடர் **இரா.அருள்வேல்** Ph.D - செல்: 98428 41497



# அக்டோபர்2015 மாத

**Astro தெய்வீகன் மாரிமுத்து**

செல் : 98425 21669 / 92446 21669

## மேஷம்

நட்சத்திரம்: அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

பஞ்சமம் என்னும் தெய்வஸ்தானத்தில் உங்கள் இராசியபதி ஸ்ரீசெவ்வாய் பகவானுடன் ஸ்ரீகுருபகவான் ஸ்ரீசுக்கிரன் பகவான் ஸ்ரீபுதன் பகவான் இணைகிறார். கிரஹ சேர்க்கை கிரஹ யுத்தம் அமைகிறது. தெய்வ அனுகூலம் கிடைக்கும் சாதுக்கள் சித்தர்கள் ரிஷிக்களை தேடிச் சென்று வழிபட்டு ஆசி பெறுவீர்கள். சதுரகிரி மலை போன்ற மலை வழிப்பாட்டு ஸ்தல தரிசனம் கிடைக்கும் பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கம் அகலும் சகோதர, சகோதரிகள் ஒற்றுமையுடன் பாகப் பிரிவினை செய்து மகிழ்வீர்கள் பூர்வீக ஊரில் உள்ள ஆலயங்கள் சென்று உறவுகள் கூடி வழிப்படுவீர்கள். உறவுகளை பலபடுத்த திருமண நிச்சயதார்த்தம் செய்து பகையாளியாக இருந்தவர் சம்பந்திகளாக மாறுவீர்கள். தூர தேச பயணங்கள் உருவாகும் எனினும் பஞ்சமத்தில் அமர்ந்த ஸ்ரீபுதன் பகவான் 6ஆம் இடத்திற்கு சென்று உச்சம் பலத்துடன் ஸ்ரீராகு பகவானுடன் இணைகிறார். நீங்கள் கட்டி காத்து, வந்த உறவுகளுக்கு இருந்த ஒற்றுமைகள் குறையும் தேவையில்லாத பகைகள் உருவாகும். இடம் வாங்கி வீடு கட்ட ஆலோசனைகளை எதிர்பார்ப்பீர்கள் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்க சற்று தாமதமாகும். மேலும் ஸ்ரீசூரியன் பகவான் 6இல் இருப்பதால் அரசு வகை பகையும் உருவாகும் எனினும் 18ஆம் தேதி ஸ்ரீசூரியன் பகவான் நீச பலத்துடன் நட்பு ஸ்தானத்திற்கு இடம் பெயர்ந்து ஸ்ரீசுக்கிரன் பகவானுடன் பரிவர்த்தனை நட்பு ஸ்தானமும் தெய்வஸ்தானமும் பரிவர்த்தனை இக்கட்டான சூழ்நிலையில் பல நண்பர்களின் உதவி கிடைக்கும் புதிய நட்புக்கள் உருவாகும் ஏற்றத்திலும் தாழ்விலும் உங்கள் இல்லத்தரசி உங்களுக்கு உற்றத்துணையாக இருப்பார் மனைவி வழி சொத்துக்கள் வருமானம் வந்து சேரும். திருமண தோஷம் உள்ளவர்களுக்கு தோஷம் விலகி மனதிற்கு பிடித்த வரன்கள் அமையும்

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 15ஆம் தேதி இரவு மணி 2.44 முதல் 18ஆம் தேதி பகல்மணி 11.13 வரை சந்திராஷ்டமம் இந்நாட்களில் காரிய தாமதம் கவலை உருவாகும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** வெண்மை, சிவப்பு, மஞ்சள்,
**அதிர்ஷ்ட எண்கள்:** 3,6,9

**வழிப்பட வேண்டிய தெய்வம்:** 1. திருப்பதி வெங்கடாசலபதியை தரிசனம் கடன் கஷ்டங்கள் விலகும்.

2. திருமண தோஷம் விலக

"ஹ்ரீம் யோகினி யோகினி யோகேஸ்வரி யோக
பயங்கரி ஸகல ஸ்தாவர ஜங்கமஸ்ய முக
ஹ்ருதயம் மம வஸமாகர் ஷயா கர்ஷய ஸ்வாஹரி என்ற மந்திரத்தை தினமும் சுக்ர ஹோரையில் 24 முறை பாராயணம் செய்யுங்கள் அழகான படித்த மனதிற்கேற்ற வரன் கிடைக்கும்

## ரிஷபம்

நட்சத்திரம்: கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருக சிரிஷம் 1,2 பாதம்

சுகஸ்தானத்தில் உங்கள் இராசியதிபதி ஸ்ரீசுக்கிரன் பகவான் திக் பலத்துடன் ஸ்ரீகுருபகவான் ஸ்ரீபுதன் பகவான் ஸ்ரீசெவ்வாய் பகவான் கிரஹ சேர்க்கை பெறுகிறார். புதிய வசதிகள் அந்தஸ்துக்கள் கிடைக்கக்கூடிய காலம் ஸ்ரீசுக்கிரன் பகவான் 4இல் அமர்ந்தால் அரண்மனை போன்ற வீடு, கப்பல் போன்ற கார் வாங்கலாம் வசதி வாய்ப்புக்கள் பெருகும். வீட்டிற்கு தேவையான மிக்ஸி, கிரைண்டர், டிவி, கம்ப்யூட்டர் ரெப்ரிஜிரேட்டர், ஏசி, கட்டில் பிரோல், விலையுயர்ந்த செல்போன் வாங்கலாம். கிரஹ சேர்க்கையால் எதிர்பாராத இடமாற்றங்கள் அமையும். இயற்கை வளம் நிறைந்த பகுதிக்கு சுற்றுலா செலவீர்கள். பழைய வாகனத்தை விற்று விட்டு புதிய வாகனம் வாங்குவீர்கள் ரியல் எஸ்டேட் தொழில் நல்ல இலாபம் தரும். இன்ஜினியர்களுக்கு அதிர்ஷ்டம் நிறைந்த காலம் ஸ்ரீபுதன் பகவான் 4ஆம் தேதி பஞ் சமத்திற்கு உச்ச பலத்துடன் சென்று ஸ்ரீசூரியன் பகவான் ஸ்ரீஇராகு பகவானுடன் இணைகிறர். தெய்வ பலம் கிட்டும் யோக ஆசிரியர்களுக்கு அரசு வேலை கிடைக்கும் இம்மாதம் ஸரஸ்வதி பூஜை வித்ய தசமி அன்று குழந்தைகளுக்கு கல்வி உதவி செய்யுங்கள் உங்கள் குழந்தைகளுக்கு வித்யா ஆரம்ப பூஜை செய்யுங்கள். பூர்வீக சொத்துக்கள் முழுமையாக வந்து சேரும். பல தொண்டு காரியங்களில் ஈடுபட்டு புண்ணியம் தேடுவீர்கள் ஆலய தரிசனம் மன அமைதியை தரும். கன்னிப் பெண்களுக்கு திருமண யோகம் கூடிவரும். மாமன், அத்தை குழந்தைகளுக்கு திருமண நிச்சியார்த்தம் நடைபெறும். தொழிலில் நல்ல வருமானம் வரும் சேமிப்புக்கள் பெருகும் பிரயாணத்தால் நன்மையுண்டாகும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 18ஆம் தேதி பகல் மணி 11.13 முதல் 20ஆம் தேதி மாலை மணி 5.18 வரை சந்திராஷ்டமாம். இந்நாட்களில் குடும்பத்தில் கலகம் ஏற்படும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு, பச்சை

**அதிர்ஷ்ட எண்கள்:** 1,5

**வழிப்படகூடிய தெய்வங்கள்:**

"ஓம் ஹும் ஸம் கம் பகவதே நித்யயோக

யுக்தாய ஸச்சிதானந்த ரூபிணே விநாயகாய நம"

என்ற மந்திரத்தை தினமும் 24முறை பாராயணம் செய்யுங்கள் எல்லா வகை ஞானமும் சித்திகமும்

2.சிதம்பரம் நடராஜரை தரிசியுங்கள் உங்கள் வேண்டுதல் நிறைவேறும்.

# இராசிப் பலன்கள்

26.–10–.2015ல் புதன் துலாம் இராசி மாற்றம்

18–.10–.2015 சூரியன் துலாம் இராசி மாற்றம்

9–.10–.2015ல் புதன் கன்னி இராசி மாற்றம்

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| | இராசி | | |
| | | | செவ் குரு புத சுக் |
| | சனி | | சூரி ராகு |

## மிதுனம்

நடசத்திரம் : மிருகசீரீஷம் 3,4 பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பாதம்



தைரியஸ்தானத்தில் உங்கள் இராசிநாதன் ஸ்ரீபுதன் பகவானுடன் ஸ்ரீகுருபகவான் ஸ்ரீசுக்கிரன்பகவான் ஸ்ரீசெவ்வாய் பகவான் எடுத்த காரியத்தை முடிக்காமல் விடமாட்டோம். வேகம் கூடும் பல நாட்களாக நடக்காமல் இருந்த காரியங்கள் வேகமாக செய்து முடிப்பீர்கள். அலுவலக உயர் அதிகாரிகளிடம் பாராட்டுக்கள் பெறுவீர்கள். பதவி உயர்வு கிடைக்கும். புதிய வெளிநாட்டு பயணம் வரும்.

வெளிநாட்டில் உள்ள உறவினர்கள் உங்களை அன்புடன் அழைப்பார்கள். உறவினர்கள் மரியாதையுடன் நடந்துக் கொள்வார்கள். புதிய தொழிலை ஆரம்பிக்கலாம் நம்பிக்கையுடன் செய்யலாம் ஆதாயம் பெருகும். 4ஆம் தேதி ஸ்ரீபுதன் பகவான் உச்சம் பலத்துடன் சுகஸ்தானத்தில் ஸ்ரீசூரிய பகவான் ஸ்ரீராகு பகவானுடன் இணைகிறார். சொந்த வீடு வாங்கலாம். இன்ஜினியர்களுக்கு பல புதிய வாய்ப்புக்கள் மூலம் பிரகாசிக்கலாம். இன்ஜினியரிங் படிப்பு படிக்கலாம். தேர்வில் அதிக மார்க் எடுத்து பெற்றோர் ஆசிரியர்களின் அன்பை பெறுவீர்கள். பத்திரிகை துறையினர்க்கு வளமான எதிர்காலம் அமையும் சினிமா துறையில் மின்னலாம். கதை, கவிதை கட்டுரைகள் எழுதி பத்திரிகைக்கு அனுப்பலாம். பலருக்கு அரசு துறை வேலை வாய்ப்பு கிடைக்கும். 18ஆம் தேதி முதல் ஸ்ரீசூரியன் பகவான் பஞ்சமத்தில் நீசம் பெறுகிறார். அரசு ஊழியர்கள் மேல் அதிகாரிகளிடம் அனுசரணையாக நடந்துக் கொள்வது நலம். பதவி உயர்வுகள் தள்ளி போவதால் நன்மை யாருக்கும் ஜாமின் கையெழுத்து போட வேண்டாம். வங்கி கடன் அதிகாரிகள் மிகவும் கவனமுடன் செயல்படுவது நண்பர்களுக்கு உதவி செய்து பின் அந்த நண்பர்களே பகையுடன் செயல்படுவது நண்பர்களுக்கு உதவி செய்து பின் அந்த நண்பர்களே பகை ஆவார்கள். 26ஆம் தேதி உங்கள் இராசியதிபதி ஸ்ரீபுதன் பகவான் பஞ்சமத்தில், இணைவதால் எல்லா பிரச்சனைகளிலிருந்து தெய்வபலத்தால் தப்பித்து விடுவீர்கள்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 20ம் தேதி மாலை மணி 5.19 முதல் 22ம் தேதி இரவு மணி 9.22 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் வேலை பளு அதிகம் குறித்த நேரத்தில் கடமையை முடிக்க முடியாது.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு, பச்சை

**அதிர்ஷ்ட எண்கள்:** 1,5

**வழிப்பட வேண்டிய தெய்வம்:** சென்னை அனேக ஞாயிறு நகரம் ஸ்ரீசூரிய பகவானை ஞாயிற்றுக்கிழமை தரிசியுங்கள் எல்லா கஷ்டங்களும் விலகும்.


2. அன்னபூரணி மந்திரம்

"ஓம் பகவத்யைஹ் வித்மஹே மஹேஸ்வர்யைஹ் தீமஹி

தன்னோ அன்னபூர்ண ப்ரசோதயாத்" தினமும் 18 முறை பாராயணம் செய்தால் செல்வம் பெருகும்.

## கடகம்

நடசத்திரம் : புனர்பூசம் 4 பாதம், பூசம், ஆயில்யம்



வாக்குஸ்தானத்தில் ஸ்ரீசெவ்வாய் பகவான் ஸ்ரீகுரு பகவான் ஸ்ரீசுக்கிரன் பகவான் ஸ்ரீபுதன் பகவான் இனிமையான வாக்குகள் அமையும். ஜோதிடர்கள் வாக்கு சொல்ல ஆரம்பிக்கலாம். பெரிய மனிதர்களிடம் சென்று பேசி காரியம் சாதிக்கலாம். வியாழநோக்கம் இருப்பதால் திருமண காரியங்களில் வேகபடுத்துங்கள். நல்ல வரன் கிடைக்கும். வெகுவிமர்சையாக திருமணத்தை முடிக்கலாம். புத்திர பாக்கியம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முழு திறமையையும் காட்டுவார்கள் நல்ல மார்க் கிடைக்கும். பரிசு பாராட்டு பெறுவார்கள். பெண்கள் உடல் நிலையில் அக்கறை காட்ட வேண்டும். குடும்ப பிரச்சனைகளில் தலையிடமல் இருப்பது உத்தமம். 4ஆம் தேதி உச்சப்பலத்துடன் ஸ்ரீபுதன் பகவான் தைரியஸ்தானத்தில் ஸ்ரீசூரியன் பகவான் ஸ்ரீராகு பகவானுடன் இணைகிறார். எடுத்த காரியத்தை இனிதே செய்து முடிப்பீர்கள். புதிய கல்வியை கற்று பட்டம் பெறுவீர்கள். ஜோதிடம் வழக்குறைஞர்கள் மருத்துவர்கள். ரியல் எஸ்டேட் என பல தொழில்கள் நல்ல வருமானத்தை கொடுக்கும். தொண்டு நிறுவனம் ஆரம்பிப்பீர்கள் அதன் மூலம் பலருக்கு உதவுவீர்கள் உங்கள் தொண்டு நிறுவனத்திற்கு வெளிநாட்டு முதலீடு கிடைக்கும். பாதியில் கட்ட முடியாமல் நிறைவேறாத வேலைகளைத் தொடர்ந்து செய்யலாம் 18ஆம் தேதி ஸ்ரீசூரியன் பகவான் சுகஸ்தானத்தில் நீசம் பலம் பெற்று ஸ்ரீசுக்கிரன் பகவானுடன் பரிவர்த்தனை குடும்பஸ்தானமும், சுகஸ்தானமும் பரிவர்த்தனை உங்கள் குடும்பம் முன்னேற வேண்டும். உறவுகள் மத்தியில் மதிப்பு மரியாதையாக இருக்க வேண்டும். அதற்க்கென இலட்சிய பயணம் செல்வீர்கள். ஏற்றத்தாழ்வுகளை கண்டு அஞ்சமாட்டீர்கள். உங்கள் குடும்பம் முன்னேற்றம் அடைய பல மாற்றங்கள் செய்யும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 22ஆம் தேதி இரவு மணி 9.23 முதல் 24ஆம் தேதி இரவு மணி 12.07 வரை சந்திராஷ்டமம் இந்நாட்களில் பெண்களால் எதிர்பாராத தொல்லை உருவாகும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு பச்சை

**அதிர்ஷ்ட எண்கள்:** 1,5

**வழிபட வேண்டிய தெய்வம்:** திருப்பதி வெங்கடகலபதியும் கீழ் திருப்பதியில் அமர்ந்துள்ள அலமேலு மங்கை தயாரியை வழிப்படுங்கள். குடும்பம் வளம் பெருகும்.

இந்திரன் மந்திரம்

ஓம் தேவராஜாய வித்மஹே வஜ்ர ரஹ்ஸதாய தீமஹி

தன்னோ சக்ரஹ் ப்ரசோதயாத் தினமும் 9 முறை பாராயணம் செய்யுங்கள் அரசு வேலை கிடைக்கும்.

# சிம்மம்

நட்சத்திரம் : மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்.

உங்கள் இராசியில் ஸ்ரீ குரு பகவான் ஸ்ரீ புதன் பகவான் இருவரும் திக் பலத்துடன் ஸ்ரீ செவ்வாய் பகவான் ஸ்ரீ சுக்கிரன் பகவான் என கிரஹ சேர்க்கை அமைகிறது. தூர தேச பயணங்கள் செய்வது திரவியம் தேட முயற்சி செய்வீர்கள் அதற்காக பல திறமைகளையும் வளர்த்து முயற்சிகளையும் செய்து வெற்றி பெறுவிர்கள்.

இடமாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம் உருவாகம் பலருக்கு வெளிநாட்டு பயணம் அமையும். வெளிநாட்டில் பணியில் இருப்பவன் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு சென்று வேலையில் அமர்வார்கள். புதிய மனிதர்களின் சந்திப்புக்கள் நிகழும். பெண்கள் நட்பு விஷயத்தில் கவனம் தேவை. காதல் பின் மோதல் உருவாகும் எனினும் திருமணம் சிறப்பாக கூடிவரும் கணவன் மனைவி ஒற்றுமையுடன் எதிர்காலதிட்டங்களை செயல்படுத்துவார்கள். 4ஆம் தேதி உச்சபலத்துடன் ஸ்ரீ புதன் பகவான் வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ஸ்ரீ சூரியன் பகவான் ஸ்ரீ இராகு பகவானுடன் இணைகிறார். குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வாய்ப்பு கிடைக்கும். அரசுவகையான காரியங்கள் சிறப்பாக நிறைவேறும். இதுவரை வராமல் இருந்த பணம் வந்து சேரும் வேலை பார்ப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். நகை வியாபாரம், பத்திர வியாபாரம், துணி கடை பேன்ஸி ஸ்டோர்ஸ், ஸ்டேஷனரி வியாபாரம் நல்ல ஆதாயத்தை கொடுக்கும். உங்கள் இல்லத்தரசிக்கு கைநிறைய சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு அமையும். 18ஆம் தேதி ஸ்ரீ சூரியன் பகவான் தைரியஸ்தானத்தில் நீசபலம் பெற்று தைரியஸ்தானாதிபதி ஸ்ரீ சுக்கிரனுடன் பரிவர்த்தனை பெறுகிறான் இதுவரை யாரும் பெண் கொடுக்க மாட்டேன் என்கிறவர்கள் வயது அதிகரித்து விட்டது என அஞ்சுபவர்களுக்கு நல்ல மணமகள் அமையக் கூடிய காலம் விவாகரத்தானவர்களுக்கு மறுமண யோகம் கிட்டும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 24ஆம் தேதி இரவு மணி 12.08 முதல் 26ஆம் தேதி இரவு மணி 2.26 வரை சந்திராஷ்டமம் இந்நாட்களில் தேவையற்ற மணக்குழப்பம் ஏற்படும்

**அதிர்ஷ்ட நிறங்கள்:** சிவப்பு, வெண்மை,

**அதிர்ஷ்ட எண்கள்:** 1,6

**வழிப்பட வேண்டிய தெய்வம்**

காளஹஸ்தி சென்று ஸ்ரீ நாக தோஷம் நிவர்த்தி செய்யுங்கள் செல்வம் சேரும்.

கருடன் மந்திரம்

ஓம் பக்ஷிராஜாய வித்மஹே சுவர்ண பக்ஷாய தீமஹி

தன்னோ கருடஹ் ப்ரசோதயாத் தினமும் 26முறை பாராயணம் செய்யுங்கள். கடன் குறையும் எதிர்ப்பு விலகும்.



# கன்னி



நட்சத்திரம் : உத்திரம் 2,3,4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 பாதம்

உங்கள் இராசிநாதன் மாத ஆரம்பத்தில் ஸ்ரீ புதன் பகவான் விரையஸ்தானத்தில் ஸ்ரீ குரு பகவான், ஸ்ரீ செவ்வாய் பகவான் ஸ்ரீ சுக்கிரன் பகவானுடன் இணைவதால் எதிர்பாராத செலவுகளும், அலைச்சலும், ஏற்படும். புதிய புதிய பயணங்கள் உருவாகும். பயணத்தில் அரச-கரியங்கள் அமையும். சில சந்திப்புக்கள் காதலாக மாறும் பெண்களின் திருமண வகைக்கு அதிகமாக செலவாகும் வெளிநாடு செல்ல பாஸ்போர்ட் வாங்கலாம். விசா கிடைக்கும் வெளிநாட்டிலிருந்து சிலருக்கும் அழைப்பும் வேலை வாய்ப்பும் கிடைக்கும். பலர் வர்த்தக ரீதியான தொடர்புகளை வெளிநாட்டில் அமைத்துக்கொள்வார்கள். 4ஆம் தேதி உங்கள் இராசிநாதன் உச்சம் பலத்துடன் ஜென்மத்தில் ஸ்ரீ சூரிய பகவான் ஸ்ரீ இராகு பகவானுடன் இணைகிறார் இதனால் உங்கள் புகழ் மதிப்பு ஸ்ரீ இராகு பகவானுடன் இணைகிறார் இதனால் உங்கள் புகழ் மதிப்பு மரியாதை அந்தஸ்து கூடும். ஒரு நல்ல வேலை வாய்ப்பும் சம்பளமும் கிடைக்கும். எதிர்பார்த்த இடமாற்றத்தை அமைத்துக் கொள்ளலாம். மறைமுகமான தன வருமானங்கள் கிடைக்கும். வாழ்க்கையில் எதிர்பாராமல் ஆடபரமான விலையுயர்ந்த கார் வாங்கும் பாக்கியம் கிடைக்கும். எனினும் அதிக ஆடம்பரத்தை காட்டமால் இருப்பது உத்தமம். பெரிய வி.ஐ.பிக்களின்


# துலாம்



நட்சத்திரம் : சித்திரை 3,4 பாதம், சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள்

உங்கள் இராசிநாதன் ஸ்ரீசுக்கிரன் பகவானுடன் ஸ்ரீபுதன் பகவான் ஸ்ரீசெவ்வாய் பகவான் ஸ்ரீகுருபகவான் இணைத்து கிரஹ சேர்க்கையுடன் இலாப ஸ்தானத்தில் அலங்கரிக்கிறார்கள். இலாப ஸ்தானத்தில் எத்தனை கிரஹங்கள் சேர்ந்தாலும் தோஷமில்லை பல வகையில் வருமானம் வரும் வேலை கிடைக்கும் என பலகாலம் காத்திருந்தவர்கள் தற்போது வங்கி லோன் வாங்கி புதிய தொழிலை செய்யலாம். முன்னேற்றத்திற்கான நேரமும் காலமும் கைக் கூடி வரும். வருமானத்திற்காக தொலைத்தூர பயணங்கள் செய்யலாம். திருமண யோகம் கைக்கூடிவரும் புதிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். நட்புக்கள் இணைந்து குதுகுலமாக இருப்பீர்கள். கூட்டுத் தொழில் நல்ல இலாபம் தரும் எனினும் 4ஆம் தேதி ஸ்ரீபுதன் பகவான் உச்சம் பலத்துடன் ஸ்ரீசூரியன் பகவான் ஸ்ரீராகு பகவானுடன் விரையஸ்தானத்தில் இணைகிறார் 12ஆம் இடம் கிரஹ சேர்க்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பை உருவாக்கித்தரும். இதன்மூலம் குடும்பத்துடன் வெளிநாடு செல்லமுடியும். பிரயாணங்கள் மூலம் பல நன்மையான தொடர்புகளும் காரிய வெற்றியுண்டாகும். ஏற்றுமதி இறக்குமதி

# விருச்சிகம்



நட்சத்திரம் : விசாகம் 4 பாதம், அனுஷம், கேட்டை

தொழில் ஸ்தானத்தில் உங்கள் இராசிநாதன் ஸ்ரீ செவ்வாய் பகவான் திக் பலத்துடன் ஸ்ரீ குரு பகவான் ஸ்ரீ குரு பகவான் ஸ்ரீ புதன் பகவான் ஸ்ரீ சுக்கிரன் பகவான் இணைகிறார்கள். இதுவரை அடுத்தவர்களிடம் அடிமையாக வேலைபார்த்தவர்கள் நாமும் சுயமாக தொழில் செய்து பலருக்கு வேலைக் கொடுத்து சாம்பாதிக்கலாம். என்ற எண்ணம் தோன்றும் தோன்றிய எண்ணங்களும் கனவுகள்போல் நிறைவேறும். நாளை உலகில் நீங்கள் சிறந்த தொழிலதிபர்கள். திறமை வாயந்தவாகள் வேலைக்கு அமர்த்துவீர்கள். எல்லாருடனும் எளிமையாக பழகி தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்துக் கொடுத்து உற்பத்தியை பெருக்கி வெற்றிநடை போடுவீர்கள். 4ஆம் தேதி முதல் ஸ்ரீ புதன் பகவான் உச்சப்பலத்துடன் லாபஸ்தானத்திற்கு சென்று ஸ்ரீ சூரியன் பகவான் ஸ்ரீ இராகு பகவானுடன் இணைகிறார். செய்யும் தொழில் எதுவாயினாலும் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். கிடைத்த இலாபத்தை மற்றொரு தொழிலில் முதலீடு செய்யலாம். வாழ்க்கை துணைவியால் நல்ல ஆதாயமும் பண்பும் பாசமும் கிடைக்கும். குடும்பத்துடன் இனிய சுற்றுலா சென்று மகிழ்வீர்கள். சம்பதிப்பதை அனுபவிக்க வேண்டும்

நட்பு முழுமையாக கிடைக்கும். 18ஆம் தேதி ஸ்ரீ சூரிய பகவான் வாக்கு குடுமபஸ்தானத்தில் நீசம் பலத்துடன் ஸ்ரீ சுக்கிரன் பகவானுடன் பரிவர்த்தனை பெறுகிறார். குடும்பமும் விரையமும் பரிவர்த்தனை குடும்பத்திற்காக எதிர்பாராத செலவுகள் தோன்றும். தங்கை தம்பிகளுக்கு நல்ல வேலை வாங்கிக் கொடுத்து திருமணம் செய்து வைப்பீர்கள் சிலர் குடும்பத்தினருடன் சுற்றுலா மூலம் இயற்கை கொஞ்சும் மலை பிரதேசங்கள் தெய்வ ஆலயங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 1ஆம் தேதி இரவு மணி 9.21 வரையும் 26ஆம் தேதி இரவு மணி 2.27 முதல் 29ஆம் தேதி அதிகாலை மணி 5.15வரையும் சந்திராஷ்டமாம் இந்நாட்களில் பிரயாண அசௌகரியம் பிரயான தடை உருவாகும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** நீலம், ஆரஞ்சு,

**அதிர்ஷ்ட எண்கள்:** 1,4

**வழிப்பட வேண்டிய தெய்வம்:** மருதமலை ஸ்ரீ சுப்பிரமணியரை தரிசியுங்கள் சொந்த வீடு வாகனம் வாங்குவீர்கள்.

சந்தோஷி மாதா

ஓம் ரூபா தேவி சவித்மஹே சகதிரூபிணி தீமஹி

தன்னோசந்தோஷி ப்ரசோதயாத் என்ற மந்திரத்தை 24 முறை பாராயணம் செய்யுங்கள் குடும்ப சுபிட்சம் கிட்டும்.

தொழில் சிறப்புடையும். தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. அரசு ஊழியர்களுக்கு இடமாற்றம் அமையும் 18ஆம் தேதி முதல் ஸ்ரீசூரியன் பகவான் உங்கள் ஜென்ம இராசியில் நீசம் பெற்று உங்கள் இராசிநாதன் ஸ்ரீசுக்கிரன் பகவானுடன் பரிவர்த்தனை பெறும் அரசியல்வாதிகள் மக்கள் செல்வாக்கு கூடும். புதிய பதவிகள் வந்து சேரும் எல்லோரையும் வித்தியாசம் பார்க்காமல் அரவணைத்து நடத்துக் கொண்டால் எதிர்காலம் சிறப்பாக அமையும் அரசு வகையான காரியங்கள் அனுகூலமாகும் வராத பணம் வந்து சேரும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 1ஆம் தேதி இரவுமணி 9.22 முதல் 3ஆம் தேதி இரவுமணி 1.41 வரையும், 29ஆம் தேதி அதிகாலை மணி 5.16 முதல் 31ஆம் தேதி காலைமணி 9.28 வரையும் சந்திராஷ்டமம் இந்நாட்களில் பக்கத்து வீட்டினரின் பகை உருவாகும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** நீலம் பச்சை, அதிர்ஷ்ட எண்கள் : 4,7

**வழிப்படவேண்டிய தெய்வம்:** சமயபுரம் ஸ்ரீமாரியம்மனை தரிசியுங்கள் திருமண யோகம் கூடிவரும்.

"ஸ்யாம வர்ணாயை வித்மஹே சகல ஹஸ்தாயை தீமஹி

தன்னோ வைஷ்ணவி பிரசோதயாத்" என்ற மந்திரத்தை தினமும் 300 முறை ஜெபியுங்கள் ஜோதிடம் வாக்குவன்மை சித்திக்கும்.

எண்ணுவீர்கள் ஏனெனில் 8ஆம் தேதிக்கு பிறகு தொழில் ஸ்தானாதிபதியும் விரையஸ்தானதிபதியும் பரிவர்த்தனை நன்றாக சம்பாதிப்பீர்கள் சம்பாதித்த பணத்தை விரையம் செய்து மகிழ்வீர்கள். எனினும் விரையத்தின் அளவை குறைக்க முயலுங்கள். சுப காரியங்கள் இனிதே நடக்கும் வியாபார முறை பயணமாக புதிய சென்று வியாபார ஒப்பந்தங்களை அமைத்துக் கொள்வீர்கள். புதிய மாற்றங்கள் உருவாகும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 3ஆம் தேதி இரவு மணி 1.42 முதல் 6ஆம்ம் தேதி காலைமணி 8.13 வரையும் 31ஆம் தேதி காலை 9.29 முதல் அன்றும் முழுவதும் சந்திராஷ்டமாம் இந்நாட்களில் குழந்தைகளால் மனகஷ்டம் உருவாகும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பச்சை, நீலம், அதிர்ஷ்ட எண்கள்: 5,4

**வழிபட வேண்டிய கடவுள்:** திருவல்லிக்கேனி அருள்மிகு ஸ்ரீ பார்த்தசாரதி திருவேங்கட கிருஷ்ணனை புதன்கிழமை தரிசியுங்கள் இலாபம் பெருகும்.

குரு கணபதி மந்திரம்

ஓம் கம் கணபதயே ஸர்வ விக்ன ஹராய

ஸர்வாய ஸர்வ குரவே லம்போதராய ஹ்ரீம் கம் நம

என்ற மந்திரத்தை 108 முறை பாராயணம் செய்யுங்கள் புத்திர பாக்கியம் கிட்டும்.

## தனுசு

நட்சத்திரம் : மூலம், பூராடம், உத்திராடம் 1 பாதம்

பாக்கியஸ்தானத்தில் உங்கள் இராசிநாதன் ஸ்ரீகுரு பகவானுடன் ஸ்ரீ செவ்வாய் பகவான் ஸ்ரீ புதன் பகவான் ஸ்ரீ சுக்கிரன் பகவான் இணைகிறார் கல்வி கடவுள் ஸ்ரீ புதன் பகவான் போதிக்கக்கூடிய கடவுள் ஸ்ரீ குருபகவான் இணைவதால் கல்வி கேள்வி வித்தைகளில் திறமைசாலிகளாக விளங்குவீர்கள். பலருக்கு ஆசிரியர் பணி, பேராசிரியர் பணி, கிடைக்கும். உங்களிடம் இருந்த பல திறமைகள் வெளியுலகுக்கு வரும் ஆசிரியர்கள். பெற்றோர் என பலரின் பாராட்டை பெறுவீர்கள். மேலும் கலைகளின் அதிபதியும் பாக்கியத்தில் இருப்பதால் பெண்களின் வளர்ச்சி சிறப்பாக அமையும். திரைப்படம் தொலைகாட்சியில் நடிக்க வாய்ப்பு கிடைக்கும். இயக்குநர் ஆகலாம். கதை வசனம் எழுதலாம். நாவலாசிரியர் ஆகலாம். திருமணத்திற்கு வரன் பார்க்கலாம். வரன் பார்த்து உங்களை பற்றி விசாரிக்கும்போது உங்களுடைய சிறப்பான குணநலன்களை பலர் வெளிப்படுத்துவார்கள். சிலருக்கு தந்தையின் வேலை தனயனார்க்கு கிடைக்கும் தந்தையின் மேல் அதிக பாச வைப்பீர்கள். 4ஆம் தேதி ஸ்ரீ புதன் பகவான் உச்சம் பலத்துடன் ஸ்ரீ சூரியன் பகவான் ஸ்ரீ இராகு பகவானுடன் இணைந்து தொழில் ஸ்தானத்தில் அமர்கிறார். கொடுத்த பணியை திறமையாக செய்து அலுவலகத்தில் பாராட்டை பெற்று உயர் பதவிகள் மூலம் கிட்டும். உங்களுக்கு வேண்டிய வசதிகளான தங்குவதற்கு வீடு, வாகனம் எல்லாம் கம்பெனி நிர்வாகம் செய்துக் கொடுக்கும். உங்கள் இல்லத்து அரசிக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும். கணவன் மனைவி மிகுந்த ஒற்றுமையுடன் எதிர்கால திட்டத்தை உருவாக்குவார்கள் எனினும் 18ம் தேதி இலாபஸ்தானதிற்கு ஸ்ரீ சூரியன் பகவான் சென்று லாபஸ்தானாதிபதியுடன் பரிவர்த்தனை ஆவதால் எல்லா பாக்கியங்களும் நிறைவாக கிடைக்கும்.

**சந்திரரிஷ்டமம்:** இம்மாதம் 6ஆம் தேதி காலை மணி 8.14 முதல் 8ஆம் தேதி மாலை மணி 5.14 வரை சந்திராஷ்டமம் இந்நாட்களில் வாகனம் ஒட்டும் போது அதிக கவனம் தேவை.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு, நீலம்,

**அதிர்ஷ்ட எண்கள்:** 1,4

**வழிபட வேண்டிய தெய்வம்:** இருக்கண் குடி ஸ்ரீ மாரியம்மனை பௌர்ணமி அன்று வழிப்படுங்கள் கல்யாண தடை அகலும்.

துர்க்கை மந்திரம்

ஓம் நாராயண வித்மஹே துர்காயை சதீமஹி

தனனா கேணீ ப்ரசோதயாத் 108முறை பாராயணம் செய்யுங்கள் எல்ல கஷ்டங்களும் பறந்து போகும்.



## மகரம்



நட்சத்திரம் : உத்திராடம் 2,3,4 பாதம், திருவோணம் அவிட்டம் 1,2 பாதம்

உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் ஸ்ரீ குரு பகவான் ஸ்ரீ செவ்வாய் பகவான் ஸ்ரீ புதன் பகவான் ஸ்ரீ சுக்கிரன் பகவான் சேர்க்கை எல்லா காரியங்களிலும் கவனம் தேவை மருந்துவ பரிசோதனைகள் செய்துக் கொள்ளலாம். வாகனம் ஓட்டும்போது நிதானமாக ஓட்டுவது நலம். இடம் வாங்கும் போது வில்லங்கம் சரிபார்த்து வாங்குவது உத்தமம். மாணவர்கள் ஆசிரியர்களிடம் மிகுந்த பணிவு தேவை. போராட்டங்கள் பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பது நல்லது. சில பேராட்டங்கள் மூலம் தற்போது பெயர் புகழ் கிடைக்கும் ஆனால் எதிர்காலத்தில் பல கஷ்டங்களை கொடுக்கும் அஷ்டமத்தில் கிரஹங்கள் சேரும் போது பெரும் புகழ் கிடைக்கக்கூடாது. எனவே அரசியல்வாதிகள் உங்கள் எதிரிகளிடம் விட்டுக் கொடுத்து செயல்படுவது உத்தமம். எனினும் 4ஆம் தேதிக்கு பிறகு ஸ்ரீ புதன் பகவான் உச்சம் பலத்துடன் பாக்கியஸ்தானத்தில் ஸ்ரீ சூரியன் பகவான் ஸ்ரீ இராகு பகவானும் இணைகிறார் மாணவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள் நன்றாக படிப்பார்கள் படிப்பின் சிறப்புக்காக பரிசும் பெறுவார்கள். தகுதிக்கேற்ற வேலை கிடைக்கும். தந்தை மற்றும் அரசு சம்பந்தப்பட்ட உதவிகள் கிடைக்கும். வசதிவாய்ப்புகள் கூடும். பொதுநலத்தொண்டு செய்வீர்கள். தர்ம ஸ்தானங்கள் தோற்றுவிப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு மக்கள் செல்வாக்கு கூடும். 18ஆம் தேதிக்கு பிறகு ஸ்ரீ சூரியன் பகவான் நீச பலத்துடன் தொழில் ஸ்தானத்திற்கு வருகை தந்து தொழில் ஸ்னாதிபதியுடன் பரிவர்த்தனை பெறுகிறார். அரசு ஊழியர்கள் மேல் அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. வழக்கு பிரச்சனைகளில் தலையிட வேண்டாம். எல்லா காரியத்திலும் பணிவுடன் செயல்பட்டால் பிழைத்துக் கொள்வீர்கள்

**சந்திராஷ்டமம்:** 8ஆம் தேதி மாலை மணி 5.15 முதல் 11ஆம் தேதி அதிகாலை மணி 4.15 வரை சந்திராஷ்டமம் இந்நாட்களில் உறவினர் நண்பர்கள் வருகையால் எதிர்பாராத செலவுகள் உருவாகும் கடன் வாங்குவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பச்சை, சிவப்பு, **அதிர்ஷ்ட எண்கள்:** 5,7


**வழிபட வேண்டிய தெய்வம்:** சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியமமைலை தரிசனம் செய்யுங்கள் திருமண பாக்கியம் கூடி வரும்.

ஸ்ரீ சூரியன் பகவான் காயத்ரி

அஸ்வதீ வசாய வித்மஹே பாஸ ஹஸ்தாய தீமஹ

தற்றங் ஸ்ர்ய ப்ரசோதயாத் தினமும் 10முறை பாராயணம் செய்து சூரிய நமஸ்காரம் செய்யுங்கள் அரசு வழியா பிரச்சனைகள் நீங்கி அரசு வேலை கிடைக்கும்.

## கும்பம்



நட்சத்திரம் : அவிட்டம் 3,4 பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதம்

மனைவிஸ்தானத்தில் ஸ்ரீ குரு பகவான் ஸ்ரீ புதன் பகவான் ஸ்ரீ செவ்வாய் பகவான் ஸ்ரீ சுக்கிரன் பகவான் சேர்க்கை வெகு நாட்களாக காதலித்த பெண்ணை பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து மகிழ்வீர்கள். இல்லத்தரசி வழியில் உள்ள சொத்துக்கள் உங்கள் பெயரில் பதிவு செய்துக் கொள்வீர்கள். மனைவியின் தாய் தந்தையை மணம் குளிர கவனித்துக் கொள்வீர்கள். சிலருக்கு பெண் வீட்டோட மாப்பிள்ளையாக போகக்கூடிய அமைப்பு உருவாகும். குழந்தைகள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். வெளிநாட்டு நண்பர்கள் உங்கள இல்லத்திற்கு வருவார்கள். 4ஆம் தேதி உச்சப்பலத்துடன் ஸ்ரீ புதன் பகவான் அஷ்டமத்தில் ஸ்ரீ சூரியன் பகவான் ஸ்ரீ இராகு பகவானுடன் இணைகிறார். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் தேவை. பெற்றோர் கண்டிப்புக்கு ஆளாவீர்கள். இளைஞர்கள் வேலை தேடி பல இன்டர்வியூக்களுக்கு அலைவார்கள். எனினும் உங்கள் கடின முயற்சியை விடாமல் இருந்தால் நல்ல வேலை கிடைத்து விடும். சோதனைகளும் வேதனைகளும் வருவதால் வாழ்க்கை அனுபவ பாடங்களை கற்றுக் கொள்வீகள். சில ஏமாற்றங்கள் உருவாகும் எனினும் அதிலிருந்து மீண்டு வந்துவிடுவீர்கள். உங்களுக்கு துரோகம் செய்தவர்கள் மற்றவரின் வஞ்சகத்தால் வீழ்வார்கள். மருத்துவ துறையினர் ஏற்றமும் சாதனையும் படைக்கலாம். 18ஆம் தேதி முதல் நீசம் பலத்துடன் ஸ்ரீ சூரியன் பகவான் பாக்கியஸ்தானம் சென்று பாக்கியாதிபதியுடன் பரிவர்த்தனை மனைவியின் உடல்நிலையில் கவனம் தேவை. உடல் நல பரிசோதனை செய்வது உத்தமம். ஆண் பெண் நட்பில் கவனம் தேவை. தேவையற்ற பிரச்சனை தோன்றும் திடீர்திருமண யோகம் கிட்டும். விவாகரத்தானவர்களுக்கு மறுதிருமணம் யோகம் கிட்டும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 11ஆம் தேதி காலை மணி 4.16 முதல் 3ஆம் தேதி மாலை மணி 3.56 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் எதிர்பாராத மாற்றங்கள் உருவாகும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** மஞ்சள், சிவப்பு, **அதிர்ஷ்ட எண்கள்:** 3,9


**வழிபட வேண்டிய தெய்வம்:** ஆலங்குடி ஸ்ரீ குரு பகவானை தரிசிப்போம். குரு பலம் அடைவோம். இனி இல்லற வாழ்க்கையை தொடங்குவோம்.

குரு மந்திரம்

குரு பிரம்மா குரு விஷ்ணு குரு தேவே மஹேஸ்வரக

குரு சாஷாத் பரபிரம்மா தஸ்மே ஸ்ரீ குருவே நமஹ" 21 தடவை பாராயணம் செய்து குருவருளும் திருவருளும் பெற்று ஜோதிடம் பணியை ஆரமிக்கலாம்.

## மீனம்



நட்சத்திரம் : பூரட்டாதி 4 பாதம் வரை, உத்திரட்டாதி, ரேவதி

ருரன ரோக சத்ரு ஸ்தானத்தில் உலகம் இராசிநாதன் ஸ்ரீ குருபகவான் ஸ்ரீ செவ்வாய் பகவான் ஸ்ரீ புதன் பகவான் ஸ்ரீ சுக்கிரன் பகவான், என கிரஹ சேர்க்கை பணத்தேவைகள் அதிகரிக்கும் எனினும் செலவுகள் குறையுங்கள். அதிகமாக சம்பாதிக்க முயலுங்கள் உங்கள் இல்லத்தரசி படித்தவராக இருந்தால் வேலை வாய்ப்பு முயற்சியில் ஈடுபடுங்கள் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உடல்நல குறைபாடுகள் வந்தால் மருத்துவரை அணுகுங்கள் தேவையில்லாத மருந்துகள் சாப்பிடாதீர்கள் கெட்ட பழக்கங்களை விட்டுவிடுங்கள். 4ஆம் தேதி ஸ்ரீ புதன் பகவான் உச்ச பலத்துடன் 7ஆம் இடம் என்னும் பாதகத்தில் ஸ்ரீ சூரியன் பகவான் ஸ்ரீ இராகு பகவானுடன் இணைகிறார் காதல் பிரிவையும் பிரச்சனையும் ஏற்படுத்தும் கணவன் மனைவியின் விவாகரத்து வழக்கில் நல்ல தீர்ப்புக் கிடைக்கும். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் பேசி தீர்ப்பது நலம் நண்பர்களை நம்பாதீர்கள் இவ்வளவு கஷ்டமான பலன்களை தொடர்ந்து எழுதினாலும் அதற்கு விடிவாக 18ஆம் தேதி தனரோக சத்ருஸ்தானாதிபதி நிசபலத்துடன் அஷ்டமத்தில் அமர்ந்து அஷடமாதிபதி பரிவர்த்தனை அற்புதம் எல்லா கடன்களையும் அடைத்து விடுவீர்கள் கோர்டு வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். எவ்வளவு கஷ்டங்களை தாங்கி அதிலிருந்து மீண்டு வந்து உறவுகளும் நண்பர்களுக்கு நாம் யார் என்பதை அறிய செய்வோம். தொழில் மாபெரும் வளர்ச்சியை அடைவோம் பணம் பல வழிகளில் வீடுதேடி வரும். தைரியமாக பல காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 13ஆம் தேதி மாலை மணி 3.57 முதல் 15ஆம் தேதி இரவு மணி 2.43வரை சந்திராஷ்டமம் இந்நாட்களில் உடல் நலத்தில் கவனம் தேவை மருத்துவ பரிசோதனை சிறப்பு

அதிர்ஷ்ட நிறங்கள்: நீலம், வெண்மை, அதிர்ஷ்ட எண்கள்: 2,7

வழிபட வேண்டிய தெய்வம்: குருவாயூர் ஸ்ரீ குருவாயுப்பனை தரிசனம் செய்யுங்கள் எல்லா கஷ்டங்களும் நீங்கும்.

2. ஸ்ரீ கிருஷ்ணர் காயத்ரி

ஓம் வாசுதேவாய வித்மஹே ராதாப்ரியாய தீமஹி

தன்னோ கிருஷ்ணஹ் ப்ரசோதயாத்

தினமும் 60முறை பாராயணம் செய்யுங்கள் வாழ்க்கை வளம் பெறும்.



உ
ஓம் ஆதி சத்குரு துணை
நற்பவி



# ஆதிசக்தி வராஹி ஆன்மீக மையம் வழங்கும்

## மக்கள் நலவாழ்வு பயிற்சி

1. தவறான ஆண், பெண் உறவை **இரட்டை வாழைக்காயின்** மூலம் உடனே பிரிக்கும் எளிய வித்துவேசன முறை.
2. இழந்த பொருட்களையும் சொத்துக்களையும், வெகு விரைவில் நம்மிடம் வரச்செய்யும் எளிய பூஜை முறை.
3. வீட்டில் உள்ள தீய சக்திகளின் மூலம் **நல்ல நிகழ்வுகள் உண்டாக்கவும் நமக்கு சாதகமாக** மாற்றும் வழிமுறை.
4. கால நடப்பை சொல்லவும், பின்னால் நடக்க கூடிய விசயத்தை **கனவில் வந்து சொல்லும் வராஹிசித்தி.**
5. எதிர்பாராத பணவரவுகளை வாரி வழங்கும் **சொர்ண காக்காய்** பூஜை.
6. **எட்டிக் கொட்டையின்** மூலம் எதிரியை வீழ்த்தும் எளிய முறை.
7. விற்காத வீடு, நிலங்கள் உடனே விற்க **முட்டை பரிகாரம் .**
8. வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு உடனே வேலை கிடைக்க **வேல் ஆல மர பூஜை.**
9. மாமியார் மருமகள் பிரச்சனை தீர யந்திர, மூலிகை வசிய பூஜை முறை.
10. நாம் நினைக்கும் ஆண் அல்லது பெண்ணை **புஷ்பத்தால் வசியம் செய்யும்** எளிய மந்திர ஜெப முறை.
11. சத்ருவின் போட்டோ எலுமிச்சம்பழத்துடன் அவர் குடி இருக்கும் வீட்டை விட்டு விரட்டும் எளிய முறை.
12. ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி பூதம் உண்டு, அவர் அவருக்கு உள்ள பூதம் வசியமாகி இட்ட வேலைகள் செய்ய **பூத வசிய மந்திரம்.**
13. வாகனத்தில் செல்வோர் விபத்தை தடுக்க **பாதுகாப்பு குளிசம தயாரிக்கும்** முறை.
14. இரண்டு **குரு மூலிகை** வேரினால் **சித்தர்களின் சக்தியை** அடையும் முறை.
15. பெண்களுக்கு மஞ்சள் கிழங்கின் மூலம் கண்திருஷ்டி பரு, உடல் உபாதைகளை சரிசெய்யும் எளிய முறை.
16. பெண்களால் சதா பாதிப்பு அடைபவர்கள் அந்த பெண் மாயையிலிருந்து விலக யந்திரம் மந்திர எளிய பயிற்சி.
17. கல்வியில் மந்த நிலை உயர்கல்வியில் வெற்றி பெற **சரஸ்வதி தாயின் அனுகிரகம்** பெற மந்திர ஜெபம்.
18. மாந்திரீகர்களுக்கும், ஜோதிடர்கள் குறி சொல்வோர் ஆன்மீகத்தில் உள்ளவர்களும், உடம்பை தெய்வீகமாக மாற்றக்கூடிய மூலிகைகள் கூறப்படும்.
19. **மயில் இறகின்** மூலம் சர்வசெல்வத்தையும் தரிசனத்தையும் தந்து அருள்பாலிக்கும் **முருகர் வசிய** மந்திர உச்சாடன முறை. 20. **"மாங்கல்ய பலம்" உண்டாக அபூர்வ மூலிகை** மூலம் எளிய பரிகார முறை.
21. வீட்டில் உள்ள துஷ்ட சக்திகள் ஓட **பனை ஓலை** யந்திர முறை.
22. அடுத்த வீட்டு விசயங்கள் நம்மிடம் வந்து உளவு சொல்லும் **நல்ல ஆத்மா வசியமாக** மந்திரசித்தி வழி முறை.
23. தீராத நோய், தீராத தரித்திரம், வறுமை நீங்க மூலிகை யந்திர தாயத்து முறை.
24. சினிமா, கலைத்துறை, வியாபாரம், ஜோதிடம் போன்றவற்றில் சிறப்பு அடைய எளிய **முட்டை** பரிகாரம்.
25. கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து நிவாரணம் அடைய தாந்ரீக பூஜை முறை.
26. முடங்கிய வியாபாரம் தொழில் விருத்தியடைய தாந்ரீக முறை.
27. தடைப்பட்ட திருமணம், காதல் திருமணம் நினைத்தபடி நடக்க தாந்ரீக முறை.
28. **குபேர யோகம்** உண்டாக வழிமுறை.
29. நாம் ஜெபிக்கும் மந்திரம் சித்தியாகவும் **கருப்பு மாந்ரீகம், வெள்ளை மாந்ரீகம்** விளக்கம்.
30. மாந்ரீக பாதிப்பு உங்களுக்கு உள்ளதா என்பதை நீங்களே தெரிந்துகொள்ள வழிமுறை.
31. கழிப்பைத் தாண்டிய தோஷம், மயானம் சென்று வந்த தோஷம் நிவர்த்தியாக.
32. அபூர்வ மூலிகையான **மயூர் சிகையின்** மூலம் பிரிந்த கணவன் மனைவியை சேர்க்கும் முறை.
33. தீராத நாட்பட்ட வியாதிகள் அகல எளிய **ரோக மாரண** மந்திர பூஜை.
34. கேட்ட வரம் அருளும் **பஞ்ச பூததியான** முறை விளக்கம்.
35. அடிப்படை ஜோதிடர், அடிப்படை மாந்ரீகர்களுக்கு முதல் நிலை மாந்ரீக பயிற்சியின் விளக்கம்.
36. சர்க்கரை நோய், கண் நோய்தீர மந்திர தியானம். 37. சர்வ பீடை நீங்க யந்திர மந்திரம், கெட்ட கனவுவராமல் இருக்கவும் வழி முறை. 38. சொந்த வீடு அமைய "புவண முருகர்" வழிபாட்டு முறை.

**பயிற்சி கட்டணம் ₹1900/-**

**(பயிற்சியில் ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்)**

**இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுபவை:**

1. சகல துஷ்ட நிவர்த்தி, சகல சம்பத்துகளை தரும் 16 சக்திகளை உடை 16 கை நிலவராஹி போட்டோ இலவசம்.
2. அதிக சக்தி வாய்ந்த எவரையும் வசியம் செய்ய வல்ல மாய கிருஷ்ண வேர் இலவசம்.
3. தேவையற்ற உறவை நன்மைக்காக பிரிக்கும் எட்டிமை இலவசம். 4. போட்டி, பந்தயம், வாக்குவாதம், கோர்ட்கேஸ், வியாபாரம் மார்க்கெட்டிங், ஷேர் பிசினிஸ், சினிமாத்துறை சிறக்க மூலிகை தாயத்து இலவசம்.
5. மாமியார், மருமகள் சண்டையை எப்பொழுதும் சரிசெய்யும் அபூர்வ கிழங்கு இலவசம்.

**பயிற்சி நடைபெறும் இடங்கள்**

**ஹோட்டல் சௌடாம்பிகா கான்பரன்ஸ் ஹால்**
புதிய பேருந்து நிலையம், **சேலம் - 4.**
**பயிற்சி நாள் : 11.10.2015 ஞாயிற்றுக்கிழமை**
**பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 4.30 வரை**

**கோபால் திருமண மண்டபம்**
வடக்கு வீதி, வடபழனி முருகன் கோவில், **சென்னை.**
**பயிற்சி நாள் : 18.10.2015 ஞாயிற்றுக்கிழமை**
**பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 4.30 வரை**

**M.P.C. லாசாலே மீட்டிங் ஹால்**
2-வது தளம், 52 TB ரோடு, ESI ஆஸ்பத்திரி எதிரில், மாபாளையம், **மதுரை**
**பயிற்சி நாள் : 25.10.2015 ஞாயிற்றுக்கிழமை**
**பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 4.30 வரை**

பயிற்சி ஆசிரியர்: வராஹி உபாசகர், மாந்ரீக, தாந்ரீக ரத்தின சிந்தாமணி, ஆன்மீக ஆசான், ரசவாத வைத்தியர்
*வாசியோகி, தவத்திரு.* **முருகன் அண்ணாச்சி சுவாமி ஜி**
(3 தலைமுறை ஆன்மீகம், மருத்துவம், மாந்ரீகம், தாந்ரீகம், ரசவாதம் அனுபவம்) 7/632, குமாரசாமி ராஜ தெரு, நாகமலை புதுக்கோட்டை, மதுரை - 19
**முன்பதிவுக்கு: 8489140765, 9842686840, 9842686940**

# அறிந்துக் கொள்ள வேண்டிய அரிய ஜோதிட முத்துக்கள்

13



**ஈ.வெ.சு. பிள்ளை**

**செல்: 099958 30338**

### தூண்டிற் புழுக்கள் – 12

'WE WERE DELIBERATELY DESIGNED TO LEARN ONLY BY TRIAL AND ERROR. WE'RE BROUGHT UP, UNFORTUNATELY, TO THINK THAT NOBODY SHOULD MAKE MISTAKES.'

ஜாதகத்தில் இலக்கினம்

| | |
|---|---|
| மேஷம் | 15710இல் சனியிருக்க, 7இல் சுக்கிரன் |
| ரிஷபம் | 15710இல் சனியிருக்க, 7இல் செவ்வாய் அல்லது |
| | 37912இல் சனியிருக்க, 9இல் செவ்வாய் |
| மிதுனம் | 710இல் வியாழனிருந்தால் |
| கடகம் | 14910இல் செவ்வாய் 4இல் சனி அல்லது |
| | 14712இல் செவ்வாய் 7இல் சனி |
| சிம்மம் | 1479இல் சுக்கிரன் 7இல் சனி |
| கன்னி | 481012இல் புதன் 4இல் செவ்வாய் அல்லது |
| | 14711இல் புதன் 7இல் வியாழன் |
| துலாம் | 471011இல் சந்திரன் 4இல் செவ்வாய் அல்லது |
| | 12710இல் சந்திரன் 7இல் செவ்வாய் |
| விருச்சிகம் | 457இல் சூரிய சுக்கிர சேர்க்கை |
| தனுசு | 710இல் புதன் |
| மகரம் | 511இல் சுக்கிரன், 5இல் சந்திரன் அல்லது |
| | 17இல் சுக்கிரன், 7இல் சந்திரன் |
| கும்பம் | 14712இல் செவ்வாய் 7இல் சூரியன் |
| மீனம் | 481012இல் வியாழன் 4இல் புதன் அல்லது |
| | 14711இல் வியாழன் 7இல் புதன் |

மேற்கண்ட கிரக அமைப்பு உள்ளவர்கள் பொதுவாகவே ஒழுக்க நெறிமுறைகளை மீறி நடந்து கொள்ளக் கூடியவர்களாகவே இருப்பர். திருமணப் பொருத்தத்தில் இதனையும் கவனிக்க வேண்டியது முக்கியமாகும்.

*****

### சிறு துளிகள்–1

'READING GIVES US SOMEPLACE TO GO WHEN WE HAVE TO STAY WHERE WE ARE.'

ஜாதகத்தில்

இலக்கினம் எதுவாயிருப்பினும்

கன்னி இராசியில் சூரிய, சுக்கிர சேர்க்கை இருந்து, சனி (சேர்க்கை/பார்வை பெற்றிருந்தால், ஜாதகர்/ஜாதகியின் வாழ்க்கைத் துணைக்கு ஹிஸ்டீரியா போன்றவகையில் உடல்/மனநிலையில் பாதிப்புக்களை ஏற்படுத்திவிடும்.

2. ஜாதகத்தில்

இலக்கினம் எதுவாயிருப்பினும் —

ரிஷப/மிதுன/கன்னி/துலா/மகர/மீன இலக்கினங்களுக்கு மட்டும் சூரிய வியாழ சேர்க்கை எங்கிருந்தாலும், ஜாதகர்/ஜாதகியின் தந்தைக்கு யோகமிராது. உயர்கல்வியும் அமையாது என்பதோடு பணப்புழக்கமுள்ள இடங்களில் பணி/தொழில்/வேலை போன்றவைகளும் அமையாது. ஆனால் —

மேஷம்/கடகம்/சிம்மம்/விருச்சிகம்/தனுசு/கும்பம் ஆகிய 6 இலக்கினங்களுக்கும் மேற்படி பலன் பொருந்தாது.

### சிறு துளிகள்–2

'THE MIRROR TELLS ONLY THE FACTS, NEVER THE POETRY.'

1. ஜாதகத்தில்

இலக்கினம்

| | |
|---|---|
| மேஷம்/மகரம் | 5இல் புதன் |
| ரிஷபம்/தனுசு | 5இல் சுக்கிரன் |
| மிதுனம்/விருச்சிகம் | 5இல் செவ்வாய் |
| கடகம்/துலாம் | 5இல் வியாழன் |
| சிம்மம்/கன்னி | 5இல் சனி |
| கும்பம் | 5இல் சந்திரன் |
| மீனம் | 5இல் சூரியன் |

இருந்தால், ஜாதகர்/ஜாதகி தங்கள் பிள்ளைகள் வகையில் மிகையான செலவுகளை எதிர்கொள்ளவும் அதன் காரணமாகக் கடன் பெறவும் நேரிடக்கூடும்.

2. மிதுன இலக்கின ஜாதகத்தில்

இலக்கினத்திற்கு 4—10 ஆகிய இடங்களிலொன்றில் சுக்கிரனிருக்க, அதே சமயம்

1. 4—10 ஆகிய இடங்களிலொன்றில் சந்திரனோ அல்லது

2. 2—4—7—10 ஆகிய இடங்களிலொன்றில் சனியோ இருந்தால்.

*ஜாதகர்/ஜாதகி சிற்றின்ப வேட்கை மிகுதியாக உள்ளவர்களாகவும், அதே சமயம் தங்கள் எண்ணங்கள்/செயல்பாடுகளில் போன்ற வகைகளில் அசாதாரணமான/வித்தியாசமாகச் செயல்படக்கூடியவர்களாகவும் இருப்பர்.*

**சிறு துளிகள்–3**

'BLAMING YOUR FAULTS ON YOUR NATURE DOES NOT ALCHANGE THE NATURE OF YOUR FAULTS.'

*ஜாதகத்தில்*

*1. துலா இலக்கினம் 2இல் சனி இயற்கைக்கு மாறான வகையில் மரணம் இருதாரம் அமைய அல்லது ரகசிய தொடர்பு ஏற்பட்டு விடக் கூடும்.*

*2. விருச்சிக இலக்கினம் 12இல் சனி துர்/குறுக்கு வழிகளில் வருமானமடைக் கூடியவர்களாக இருப்பர்.*

*3. தனுசு இலக்கினம் 2ல் சனி ஒரு முறைக்கு மேல் திருமணம் செய்து கொள்ள அல்லது பிற தொடர்புள்ளவர்களாக இருப்பர். இவர்களின் வாழ்க்கைத் துணை துர் நடவடிக்கை உள்ளவராகவே இருப்பார். இவர்கள் பிறரை ஏமாற்றுவதில் கெட்டிக்காரர்களாக இருப்பர்.*

*மகர/கும்ப இராசிகளிலொன்றில் புதனிருந்து, சனி சேர்க்கை/பார்வை குடும்ப சுகமனுபவிப்பதில் பாதிப்பு நேரிட்டு விடக்கூடியவர்களாவும், பொருளாதார நிலையில் ஏற்றதாழ்வுகளை எதிர்கொள்ள நேரிட்டு விடக் கூடியவர்களாகவும், ஜாதித்துவேஷம் உள்ளவர்களுமாக இருப்பர்.*

**சிறு துளிகள்–4**

'LOVE DOES NOT CONSIST IN GAZING AT EACH OTHERS BUT IN LOOKING OUTWARD TO NETHER IN THE - AME LINE FOON.'

*ஜாதகத்தில்*

*எந்தவொரு இலக்கினமாக இருந்தாலும்*

*சிம்ம இராசியில் சந்திரனிருக்க, அதே சமயம் ரிஷபம்/கடகம்/விருச்சிகம்/மீனம் ஆகிய ராசிகளிலொன்றில் வியாழனிருந்தால், ஜாதகர்/ஜாதகிக்குப் பிரயாண காலத்தில் ஏதேனும் காதலனுபவங்கள் ஏற்படும்.*

*சிம்ம இலக்கின ஜாதகத்தில் மேற்குறிப்பிட்ட 4 ராசிகளில் ஏதேனுமொன்றில் வியாழனிருந்தாலும் இதே பலன்தான்.*

*2. பொதுவாகவே ஜாதகத்தில்*

*சந்திரன் — சனி சேர்க்கை/பார்வை பெற்றிருந்தால், ஜாதகர்/ஜாதகிக்குத் தாங்கள் பணி/தொழில்/வேலை செய்யும் இடத்தில் பிறபாலர்களுடன் தொடர்பு ஏற்படுத்திவிடும். இன்றைய கால கட்டத்தில் ஆண்/பெண் இருபாலர்களும் நிறைந்த அளவில் வேலை/பணி/தொழில்களில் சம அளவில் ஈடுபடுவதால் எச்சரிக்கையுடனிராவிடில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிட்டு விடக்கூடும்.*

**சிறு துளிகள்–5**

'MYSTERY IS A RESOURCE, LIKE COOR GOLD, AND ITS PRESERVATION IS A FINE THING.'

*ஜாதகத்தில்*

*எந்தவோர் இலக்கினமாக இருந்தாலும் —*

*மகர இராசியில் சந்திரனிருக்க, அதே சமயம் கன்னி இராசியில் — சூரியன்/செவ்வாய்/புதன்/சுக்கிரன்/ இவர்களில் எவரிருந்தாலும், ஜாதகர்/ஜாதகி தங்கள் வாழ்க்கைத் துணையைப் பிரிய/விலக/ இழக்க நேரிட்டு விடக்கூடும். ஒருமுறைக்கு மேல் இத்தகையோர்களுக்குத் திருமணம் செய்து கொள்ளவும் நேரிடக் கூடும். உதாரணம்.*

*தனுஷ், சிநேகா, ஜமுனா, பூர்ணிமா*

| | | | |
|---|---|---|---|
| ல | | | ராகு |
| | நடிகர் 28.9.1982 | | |
| சந் | | | |
| கேது | செவ் | குரு | சூரி புத சனி |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | நடிகை 12.10.1978 | | ல குரு |
| சந் கேது | | | சனி |
| | | செவ் சுக் புத | சூரி ராகு மா |

| | | | |
|---|---|---|---|
| | | | கேது |
| சனி | நடிகை 31.8.1936 | | செவ் |
| சந் | | | ல சூரி |
| ராகு | குரு | | சுக் புத |

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| | நடிகை 12.10.1978 | | |
| சந் | | | |
| ல | குரு புத கேது | சூரி சனி | செவ் சுக் |

*அதே போல்*

*மகர இலக்கின ஜாதகத்தில்*

*இலக்கினத்திற்கு 9இல் சூரியன்/சந்திரன்/ செவ்வாய்/புதன்/சுக்கிரன் இவர்களில் எவரிருந்தாலும் மேற்படிப் பலனே உதாரணம்.*

*நாரயண் மூர்த்தி, ஜுஹு சாவ்லா*

| | | | |
|---|---|---|---|
| | சனி (வ) | சந் | |
| ராகு | தொழிலதிபர் 17.10.1970 | | |
| ல | | | கேது |
| | சுக் | சூரி குரு | செவ் புத |

| | | | |
|---|---|---|---|
| சனி சந் | ராகு | | |
| | நடிகை 13.11.1967 | | |
| ல | | | குரு |
| செவ் | | புத கேது சூரி | சுக் |

**தொடரும்...**



# புரட்சிப் போராளியின் ஜாதகம் உணர்த்திட்ட சரித்தரச் சான்று

2




எஸ்.ஞானசந்திரன்
செல்: 94434 57536


## புரட்சிப் போராளி
# சே குவேரா

இராகு கிரகமே புரட்சி, எதிர்க்கருத்து, புதுமையான சிந்தனை, வளமையான செயற்பாடுகளை விட்டு விலகி புதுமையாக சிந்தித்துக் செயற்படுவது போன்ற விஷயங்களுக்குரிய காரகனாவான். ஒரு ஜாதகரைக் குறிப்பிடும் இலக்கினம், சந்திர இராசி, சூரிய இராசி என்பனவற்றை இராகு பாதிக்கும் போது, அந்த ஜாதகர் மேற்சொன்ன விதமான குணாதிசயங்களைப் பெறுகிறார் எனலாம்.

சேவின் ஜாதகத்தில் இராகு சூரியனோடு கூடி, சந்திரனோடு சார பரிவர்த்தனை பெற்று இருக்க, இராகுவின் இராசிநாதனான சுக்கிரன் இலக்கினாதிபதியான வியாழனுடன் கூடியுள்ளது. தவிர, சந்திர இராசிநாதனான சனியின் மீதும் இராகு பார்வை செய்திருப்பதையும் நாம் காண முடியும்.

அரசாங்கம், அதிகாரம், ஆட்சி போன்றவற்றைக் குறிப்பிடும் இராஜ கிரகங்களான சூரியனும், சந்திரனும் இராகுவுடன் நேரடியாகச் சம்பந்தப்படுவதாலேயே இவற்றை எதிர்த்துப் போராடுகின்ற புரட்சிகர சிந்தனைகளை சே இளம் வயதிலேயே பெற்றுக் கொண்டார்.

1949ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் "மிக்ரன் மோபெட்" என்கிற இரு சக்கர வாகன தயாரிப்புக் கம்பெனி ஒரு விளம்பரம் செய்தது. அதில் அவர்களின் மோபெட் அதாவது இருசக்கர வாகனத்தில் ஆர்ஜென்டைனாவின் 12 மாநிலங்கள் வழியாக சுமார் 4000 கி.மீ. பயணம் செய்ய ஒருவரைத் தேர்ந்தெடுக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருந்தது. இப்போட்டிக்கு விண்ணப்பித்த பல இளைஞர்களுள் சே தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த மோபெட் கம்பெனியின் விளம்பர உத்திக்காக ஏற்பாடு செய்யப்பட்டதாக இப்பயணம் இருப்பினும் சே தன் நாட்டை நன்கு சுற்றிப் பார்க்கவும் புரிந்துக் கொள்ளவும் பலதரப்பட்ட மக்களோடு பழகவும், நாட்டின் நாடித்துடிப்பை அறிந்துக் கொள்ளவும் இதனைப் பயன்படுத்திக் கொண்டார்.

இக்காலம் சனிதிசையில் புதன் புத்தி சே வுக்கு நடந்துக் கொண்டிருந்தது. 9ஆம் பாவமானது உள்ள மூன்று இலக்கின விஷயங்களோடும் தொடர்புபடும்போது இந்த நீண்ட பயணங்கள் உண்டாகலாம். குறிப்பாக 4ஆம் பாவமும் 4க்குடையவனும் பிரிக்கும் கிரகங்களான சூரியன், சனி, இராகு மற்றும் ஜாதக 12க்குடையவனான கிரகம் என்பனவற்றாலோ அல்லது இவற்றில் பெரும்பாலானவற்றாலோ பாதிக்கப்பட்டிருந்தால் இப்பலன் நிச்சயம் நடக்கும்.

சே வின் ஜாதகத்தில் திசாநாதனான சனி 9இல் இருந்து, 4க்குடைய புதனோடு பரஸ்பரம் பார்வையில் ஈடுபட்டு இருப்பதுடன், சந்திரனின் இராசிநாதனாகி சூரியனோடும் பரஸ்பரம் பார்வையில் உள்ளது. இவற்றோடு, தனது இராசிநாதன் செவ்வாய் மூலமாக இலக்கினத்தோடும் இலக்கினாதிபதியோடும் சனி சம்பந்தப்பட்டு இருக்கிறது.

புத்திநாதனான புதன் தானே 4க்குடையவனாகியுள்ளதோடு, 9ஆம் பாவத்தைப் பார்வையிட்டு, சூரியனோடு கூடியிருப்பதோடு, சந்திர இராசிநாதனான சனியுடன் பரஸ்பர பார்வையினால் சம்பந்தம் அடைகிறது. தனது இராசிநாதனான சுக்கிரன் வழியாக

இலக்கினாதிபதியான வியாழனுடனும் புதன் தொடர்பு பெற்று உள்ளதை நாம் காண முடியும்.

இவ்வாறான அமைப்புடன் திசா, புத்திநாதர்களான சனியும், புதனும் இருந்து, இவை யிரண்டும் தமக்குள் தொடர்புட்டு இருக்க, 4க்குடைய புதன் சூரியன், இராகு, 12க்குடைய சனி என்பனவற்றினால் செல்வாக்குச் செலுத்தப் பட்டு, பாதிக்கப்படுகிறது. 12க்குடைய சனியின் இராசிநாதனான செவ்வாய் 4ஆம் ஸ்தானத்தைப் பாதித்திருக்க, இந்த ஸ்தானத்தின் பின் இராசியில் சூரியன் மற்றும் இராகு என்பன உள்ளன. முன் இராசியில் சனியின் தாக்கத்தைக் கொண்டு வருகிற கேதுவின் 9ஆம் பார்வை விழுகிறது. இந்த அமைப்பானது பிரிக்கும் கிரங்களின் செல்வாக்கானது காத்தாரி யோக விளைவு காரணமாக 4ஆம் பாவத்தைப் பாதிப்பதை நாம் தெரிந்துக் கொள்ளலாம்.

இவவிவாதங்களின் வழியாக நாம் முன்னர் எடுத்துக்கூறிய கிரகநிலைகள் முழுவதுமாக சே வின் ஜாதகத்தில் இருப்பதை அறிய முடியும்.

எறத்தாழ மூன்று மாதங்கள் நீடித்த 4000 கிமீ. தொலைவு கொண்ட மோபெட் பயணம், 1949ஆம் ஆண்டின் நவம்பரில் ஆரம்பித்து, 1950 பெப்ரவரியின் போது முடிவுற்றது. இதற்கான செலவுகள் முழுவதையும் மோபெட் கம்பெனியே ஏற்றுக்கொண்டது. ஆர்ஜென்டைனா பற்றிய தெளிவான பார்வையை சே பெற்றுக் கொண்டது இப்பயணத்தின் பின்னர் தான் ஆர்ஜென்டினா முழுவதுமான சுற்றுப்பயணத்தை சே மேற்கொண்ட போது அவர் ஒரு மருத்துவ மாணவராக இருந்தார்.

மருத்துவக் கல்லூரியில் சே சேர்ந்தது 1946ஆம் ஆண்டிலாகும். அப்போது அவருக்கு வியாழ திசையில் இராகு புத்தி நடந்துக் கொண்டிருந்தது.

முதலில் மருத்துவப் படிப்பில் சே ஆர்வம் காட்டுவதற்காகவென உள்ள கிரக சேர்க்கை என்ன என்பதை ஆராய்வோம்.

எந்தவொரு ஜாதகத்திலும் 2ஆம் பாவம், 2க்குடையவன், கல்விக்காரகன் புதன் என்பவற்றின் மீது சூரியன், சனி, இராகு ஆகிய கிரகங்கள் செல்வாக்குச் செலுத்தினால் அவர் மருத்துவப் படிப்பைத் தேர்ந்தெடுத்துப் படிப்பார். உயர்கல்வி அமைகிறயோகமும் இன்றியமையாதது.

சே வின் ஜாதகத்தில் 2க்குடைய செவ்வாய் சனி மற்றும் கேதுவின் இராசிநாதனாகியிருக்க, சூரியனின் பார்வையை வாங்கும் கேது, அதனை தன் 5ஆம் பார்வையினால் எடுத்துக் சென்று செவ்வாயைப் பாதிக்கிறது. 2ஆம் பாவமானது சூரியன் மற்றும் இராகுவின் இராசிநாதனான சுக்கிரனைக் கொண்டிருப்பதுடன், பின்இராசியில் சனியின் இராசிநாதனான செவ்வாயைக் கொண்டுள்ளதோடு, முன் இராசியில் சூரியனையும், இராகுவையும் பெற்று, சனியின் பார்வையையும் பெற்று, இதனால் ஏற்படும் இரு பக்க மருத்துவ கிரகங்களின் செல்வாக்கினால் தாக்கப்பட்டுள்ளது.

கல்விக்காரகனான புதன் சூரியன் மற்றும் இராகுவுடன் கூடி, சனியின் பார்வையைப் பெற்று, நேரடியாகவே மருத்துவ கிரகங்களின் செல்வாக்குக்கு உள்ளாகியுள்ளதை நாம் கவனிக்கலாம். மருத்துவப் படிப்பின் மீது நாட்டம் ஏற்பட்டது இந்தக் கிரகநிலைகளால் தான்

இவர் கல்லூரியில் சேர்ந்தது வியாழதிசை இராகு புத்தியின் போது ஆகும். வியாழன் 2இல் இறப்பதாலும், நவாம்சத்திலும் காரகன் புதனோடு கூடி, 2க்குடையவனாகி 2ஐப் பார்வை செய்வதாலும் கல்லூரிப் படிப்பை வழங்கினான். இராகு புதனோடு நெருங்கிக் கூடி, நவாம்சத்தில் 2ஐப் பார்ப்பதோடு, புதனின் அம்சமும் பெற்று இருக்க, இராகுவின் இராசிநாதர்கள் முறையே இராசியிலும், நவாம்சத்திலும் வியாழனோடு கூடியிருப்பதால் இவற்றின் திசா புத்தி காலம் கல்வியில் முன்னேறும்படியான கல்லூரிப் படிப்பு சேவுக்கு கிடைத்தது.

படிப்பின் போது விடுமுறை எடுத்துக் கொண்டு ஆர்ஜென்டினா முழுவதையும் இருசக்கர வாகனத்தில் சுற்றி வந்த பின்னர், சேவுக்கு இதர தென்னமெரிக்க நாடுகளையும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்கிற ஆவல் மேலிட்டது. மீண்டும் கல்லூரியில் விடுமுறை பெற்றுக் கொண்டு, அதே சனிதிசை புதன் புத்தியில் ட்ரினிடாட், கௌதமாலா ஆகிய நாடுகளுக்கு எண்ணெய்க்கப்பலில் பகுதிநேர பணியாளராக வேலை பெற்றுப் புறப்பட்டார் சே. திசாநாதனான சனி 11ஆம் பாவத்தையும், 6ஆம் பாவத்தையும் பார்ப்பதை நாம் கவனிக்க வேண்டும். தவிர 4ஆம் பாவம், 4க்குடையவனையும் சனி பாதிக்கின்றதால், இடப்பெயர்ச்சி தவிர்க்க முடியாததாக ஆகிறது.

6ஆம் பாவம் சம்பளத் தொழிலையும், 11ஆம் பாவம் அதில் பெறுகிற வருமானமாகிய இலாபத்தையும் காட்டுகின்றன. இவற்றோடு புதன் 6க்குடையவனோடு சேர்ந்தும், 11க்குடையவனின் பார்வையைப் பெற்றும் இருந்து, 4க்குடையவனாகிப் பாதிப்படைந்திருப்பதால் இசைந்த சனி திசையின் போது தன் புத்தியில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தினான் என்பதோடு, வீட்டைவிட்டு வெளியேறவும் வைத்தான். மேலைநாடுகள், அமெரிக்க நாடுகளில் நம் நாட்டைப் போன்று இல்லாமல், கல்லூரிப் படிப்பின்போது விடுமுறை பெற்று வேலை பார்ப்பதும், பகுதிநேர வேலை பார்த்து சம்பாதித்த பின் படிப்பைத் தொடர்வதும் வளமையானது என்பதை வாசகர்களுக்கு நினைவுப்படுத்துகிறோம்.

கப்பலில் பணி பெற்றுச் சென்றமைக்கான காரணம் என்ன அடுத்த இதழில் ஆராய்வோம்?

**தொடரும்...**

# ஜாதக கணிதம்

5



S.R.அருள்வேல் (Ph.D) ஜோதிடம்
செல்: 98428 41497

ஜோதிட அன்பர்களுக்கு வணக்கம். கடந்த செப்டம்பர் மாத இதழில் ரிஷப இலக்கின ஜாதகருக்கு ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய கிரகங்களை அறிந்து கொண்டோம்.

இந்த இதழில் மிதுன இலக்கின ஜாதகருக்கு ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய கிரகங்களை அறிந்து கொள்வோம்.

1ஆம் வீடு : புதன், சுக்கிரன், சனி, இராகு, கேது அமரலாம். பார்க்கலாம்.

2ஆம் வீடு : சூரியன், செவ்வாய், அமரலாம். பார்க்கலாம். 2ஆம் அதிபதியான சந்திரன், தேய்பிறை சந்திரனாக இருந்தால் மட்டும், 2ஆம் வீட்டில் இராகு, கேது அமரலாம்.

3ஆம் வீடு : வளர்பிறை சந்திரன், தேய்பிறை சந்திரன், செவ்வாய், குரு, இராகு, கேது அமரலாம் பார்க்கலாம்



4ஆம் வீடு : சனி அமரலாம். பார்க்கலாம், ஜாதகத்தில் சூரியனும்ட புதனும் சேர்ந்திருந்தால் மட்டும் 4ஆம் வீட்டில் இராகு, கேது, அமரலாம்.

5ஆம் வீடு : புதன், சுக்கிரன், இராகு, கேது, அமரலாம். பார்க்கலாம்.

6ஆம் வீடு : சூரியன், தேய்பிறை சந்திரன், இராகு, கேது அமரலாம். பார்க்கலாம்.

7ஆம் வீடு : சூரியன், தேய்பிறை சந்திரன், செவ்வாய் அமரலாம். பார்க்கலாம்.

8ஆம் வீடு : சூரியன், புதன், இராகு, கேது அமரலாம், பார்க்கலாம்.

9ஆம் வீடு : புதன், சுக்கிரன் அமரலாம். பார்க்கலாம்.

10ஆம் வீடு: சூரியன், தேய்பிறை சந்திரன், செவ்வாய், அமரலாம், பார்க்கலாம்.

11ஆம் வீடு : சூரியன், வளர்பிறை சந்திரன், தேய்பிறை சந்திரன், குரு, இராகு, கேது அமரலாம். பார்க்கலாம்.

12ஆம் வீடு : சூரியன், புதன், சனி அமரலாம், பார்க்கலாம்.

இது கணிதம் போன்றது. மேற்கண்ட வீடுகளில் மேற்கண்ட கிரகங்கள் இருந்தால் மட்டுமே நன்மை செய்வார்கள் பிறகிரகங்கள் இருந்தால் தீமை செய்வார்கள். அவ்வாறு கிரகங்கள் தரும் நன்மை தீமைகளை விவரித்து கூறுவது வர்ணணை ஜோதிடம் ஆகும். இதற்கு கிரகங்களின் காரகம், வீடுகளின் காரகன், இராசிகளின் தன்மை தெரிந்திருக்க வேண்டும்.

உதாரணமாக மிதுனம் இலக்கினத்தில் புதன், சுக்கிரன், சனி, இராகு, கேது அமரலாமென பார்த்தோம். இதற்கு பலன் சொல்லும் முறையை பார்ப்போம். மிதுனம் காற்று இராசி ஆகும். மேலும் உபய இராசி ஆகும். ஜோதிடத்தில் காற்று (வாயு), மறைபொருளாக அறிவை குறிக்கும். உபய இராசி என்பது முழுபயனை தரும் இராசி என பொருள்படும். மேலும் மிதுன இராசி, கால புருஷனுக்கு 3ஆம் இராசி ஆகும். 3ஆம் இராசி அல்லது மூன்றாம் வீடு என்றாலே பரிமாற்றம் பரிவர்த்தனை என்று பொருள்படும்.

எனவே மிதுன இலக்கின ஜாதகருக்கு இலக்கினத்தில் புதன், சுக்கிரன், சனி, இராகு, கேது இருந்தால் ஜாதகர் அறிவாளியாக இருப்பார். மேலும் தனக்கு தெரிந்தவற்றை பிறருக்கு தெரிவிப்பதில் (பரிமாற்றம், பரிவர்த்தனை செய்வதில்) திருப்தி அடைவார்.

மேற்சொன்ன கிரகங்கள் இல்லாது பிற கிரகங்கள் சூரியன், சந்திரன், செவ்வாய், குரு, லக்கினத்தில் இருந்தால் ஜாதகர் அறிவு குறைந்தவராக இருப்பார். ஆனால் தனக்கு எல்லாம் தெரிந்தது போல் காட்டிக் கொள்வார். இவரை அனைவரும் கேலி செய்வர். கோமாளி என்பர்.

இப்படி விவரித்து பலன் கூற எனது ஸ்ரீ இராஜ ஜோதிடம் நூல் பயன்படும். படித்து பயன் பெறுங்கள்




# அப்ஸரா நாவல்

## மகிழ மலையா? மர்ம மலையா?

நாவலாசிரியர்- **லக்ஷ்மி ராஜரத்தினம்**

### பதிப்பாசிரியரின் பரிந்துரை

**திருவருள் சக்தி, குருவருள் ஜோதிடம்** குழுமத்தின் அப்ஸரா நாவல் இதழின் படைப்பான “மகிழ மலையா? மர்ம மலையா?’ நாவலைப் படைத்தவர் திருமதி லக்ஷ்மி ராஜரத்தினம். இவரின் பல அரிய படைப்புகள் வாசகர்களின் அமோக ஆதரவைப் பெற்றவை. சமீபத்தில் “அப்ஸரா நாவல்” வெளியிட்ட “உறவுகள் தொடர்கதை” நாவலுக்கு கிடைத்த வாசகர்களின் பாராட்டுகள் அவரை ஊக்கப்படுத்தி ஆக்கத்தை கொடுத்தமையால் உருவானதே இந்த நாவல்.

**மகிழ மலையா? மர்ம மலையா?** நாவல், ஜமீன்தாரின் வாரிசை வெளிப்படையாக வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் வளர்த்து ஆளாக்கி சூழ்ச்சி கூட்டங்களில் இருந்து காப்பாற்றி ஜமீனைக் கைப்பற்றுவதே கதையின் மூலக்கரு. அமானுஷ்ய நிகழ்வுகளுடன் திகில் நிறைந்த கதையின் உயிரோட்டம் அடுத்து என்ன ஏற்படப் போகிறது என்ற எதிர்ப்பார்ப்போடு கதையின் வேகத்தை சிறப்பாகக் கொண்டு செல்வதுடன் கதையின் முடிவு எப்படி இருக்கும் என்பதை யூகிக்க முடியாத அளவிற்கு லக்ஷ்மி ராஜரத்தினம் அவர்கள் எடுத்துச் செல்வது சிறப்பான அம்சம். கதையின் வேகம் கருத்துக்கு வியூகம். தீர்ப்பை தீர்மானிக்க வைத்திடும் உங்கள் மதியூகம். படித்துப் பாருங்கள் மலைத்துப் போவீர்கள் மகிழ மலையா? மர்ம மலையா? அதை உணர்ந்துக் கொண்டால் உங்கள் மனம் முழுவதும் வீசிடும் மகிழ மணம் பாராட்ட தூண்டிடும் உங்கள் குளிர்ந்த குணம்.

இந்த நாவலைப்படித்த வாசகர்களின் கருத்துக்களை செல் 89258 26347 என்ற எண்ணில் தொடர்புக் கொண்டு திருமதி **லக்ஷ்மி ராஜரத்தினம்** அவர்களுடன் உங்கள் கருத்துக்களை பகிர்ந்துக் கொள்ளலாம். அவர்களின் எழுத்துக்கு ஏற்றம் கொடுக்கலாம். உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றம் பெறலாம்.



உங்கள் அன்புச் சகோதரி

**இராதா இராஜு** ஆசிரியர்

இப்போது விற்பனையில்




**உங்கள் அருகில் உள்ள கடைக்காரர்களிடம் கேட்டு வாங்குங்கள்**

**மேலும் விவரங்களுக்கு: அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் 18/67, பி.வி. கோயில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை 600 014. Ph: 044-2811 6770 / Cell: 72999 21880**

# உலக அரங்கில் ஆன்மீகம் மற்றும் சமூக சேவையில் அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மீக நற்பணி அறக்கட்டளை மற்றும் பேரவை!

இந்த நூற்றாண்டுகான கண்கண்ட தெய்வமாக அருள்புரியும் ஷீரடி ஸ்ரீசாய் நாதரின் திருவருளால் சாய் பக்தர்களை கொண்டு அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மீக நற்பணி அறக்கட்டளை மற்றும் பேரவையை KA.ஸ்ரீலிங்கம் அவர்கள் தலைமையில் சாய் நாதரின் மகிமைகளை பரப்பவும், நம்பிவரும் பக்தர்களுக்கு அவருடைய திருஅருள் கிடைக்கவும் தொடங்கப்பட்ட இந்த அறக்கட்டளையின் சார்பில் ஸ்ரீ சாந்தி சாய் பிராத்தனை மையம் என்ற துணை அமைப்பு தொடங்கப் பட்டுள்ளது.



ஸ்ரீ சாய் நாதரின் திருபணிகளின் முழுமையாக அற்பணித்து கொண்டிருக்கும் இந்த அறகட்டளை மற்றும் பேரவையின் பணிகள்.

பௌர்ணமிதோறும் பிரசித்திபெற்ற அம்பிகை ஆலயங்களில் உலக நலன் வேண்டியும் அறகட்டளை நன்கொடை தாரர்களின் நலன்வேண்டியும் குங்கும அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படுகிறது.

கிரக பெயர்ச்சிகளின் போது உலக நலன்கள் வேண்டி பரிகார ஹோமங்கள் செய்யபடுகிறது.

அவ்வப்போது மாற்று திறனாளிகள் மற்றும் வருமை நிலையில் உள்ள மக்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

சுற்றுசூழல் பராமரிப்பு, சுற்றுசூழல் பராமரிப்பின் அவசியம் சாலை விதிகளை மதிப்பது பற்றிய அவசியம் போன்ற சமூக நல விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கம் பிரச்சாரங்கள் போன்றவைகளை நடத்தி வருகின்றனர்.

விசேஷ நாட்களில் கோவில்களில் அன்னதானம் போன்றவைகளை நடத்தி வருகிறது.

இப்பேரவையில் மாவட்டவாரியாக உறுப்பினர்களை நியமிக்க உள்ளோம் விரும்பும் அன்பர்கள் அடையாள அட்டை பெற பேரவையை தொடர்பு கொள்ளலாம்.

உலக அமைதி சமாதானம் மத நல்லிணக்கம் எய்ட்ஸ் விழிப்புணர்வு. அனைவருக்கும் கல்வி சுற்றுசூழல் பாதுகாப்பு பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்களை காவல்துறை உயர் அதிகாரிகள் நீதிஅரசர்கள் தலைமையில் தொடர்ந்து நடத்தப்பட்ட வருகிறது.

வியாழன் தோறும் மையத்தின் சார்பில் கூட்டு பிரார்த்தனை மாலை 6 மணிமுதல் 7 மணி வரை நடைபெறுகிறது. அப்போது அன்பர்கள் எழுதி அனுப்பும் குறைகளை பாபாவின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு

பிரார்த்தனை செய்யப்பட்டும் அன்பர்கள் தங்கள் பெயர், வயது, நட்சத்திரம் மற்றும் கோரிக்கைகளை எழுதி அனுப்பினால் உங்களின் நலம் வேண்டி கூட்டு பிரார்த்தனை செய்யப்படும் மற்றும் பௌர்ணமி பிரசாதமும் அனுப்பி வைக்கப்படும்.

பௌர்ணமி தோறும் பேரவையின் சார்பில் அன்னதானம் செய்ய உள்ளோம் விரும்பும் அன்பர்கள் தங்களால் இயன்ற உதவியை அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மீக நற்பணி அறக்கட்டளை என்ற பெயருக்கு **M.O. or D.D.** அனுப்பி இப்புனித பணிக்கு உதவிகள் செய்யலாம். அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மிக நற்பணி பேரவையின் சார்பில் ஸ்ரீ சாந்தி சாய் மந்திர் (ஆலயங்கள்) பல இடங்களில் நிறுவ உள்ளோம். இடமிருந்து கோவில் நிறுவ விரும்பும் அன்பர்கள் மையத்தை தொடர்பு கொள்ளலாம். ■



*நீதியரசர் திரு. பொன்னுதுரை அவர்கள் முன்னிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கு சைக்கிள் வழங்கியபோது*


இந்துக்களின் தளபதி

**KA ஸ்ரீலிங்கம்** நிறுவனர்

அகில உலக ஷீரடி சாய்பாபா ஆன்மீக நற்பணி பேரவை

24/67, விஸ்வகர்மா இல்லம், சைதாப்பேட்டை ரோடு, வடபழனி, சென்னை - 26.

செல் : **98404 25712** வாட்ஸப் தொடர்புக்கு : **98845 02057**

E-mail : auantrust@gmail.com website : www.auantrust.org

ADVT

# திசா புத்தி பலன்கள் 9

# தேவகுரு நரகுரு என்னும்,குரு திசை, புத்தி பலன்கள்

தெய்வத்திரு
**பி. இராமசாமி**



**குரு** ஜனன காலத்தில் 3,6,8,12ஆம் இடங்களிலிருந்தால் அவன் திசை முற்பகுதியில் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு உள்ளாக்குகிறான். 3,6,8,12ஆம் இடங்களின் ஆதிக்கம் பெற்றாலும் இதே தொந்திரவுதான். ரிஷப இலக்கினம், சிம்ம இலக்கினத்திற்கு 8க்குடைய ஆதிபத்தியம் குருவுக்கு ஏற்படுவதால் இந்த இரு இலக்கினத்தோருக்கும் குரு திசை வந்துவிட்டால் முற்பகுதி சொல்லொணாக்கஷ்டங்கள் ஏற்படுகிறது. இனியும் உயிர் வாழத்தான் வேண்டுமா? மானம் பறிபோன பிறகு வாழ்ந்து தான் என்ன பயன் என்ற விரக்தி அடிக்கடி ஏற்படுகிறது. குரு இருக்கும் இடத்தை விட அவன் பார்க்கும் இடத்திற்கு அதிக நன்மைகள் ஏற்படுகின்றன. இதுதான் அனுபவங்கண்ட உண்மை. இனி குரு திசையில் புத்திகளைப் பற்றி பார்ப்போம்.

### குருதிசை குரு புத்தி 2 வ 1 மா 18 நாட்கள்

**புத்திநாதனாகிய குரு** கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும் ஆட்சி உச்சம் பெற்று இருந்தாலும், சேத்திர யாத்திரைகளும் கங்கை, யமுனை போன்ற தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யும் பாக்கியமும் ஏற்படுகிறது. ஆண் மகவு பிறத்தலும், அடிக்கடி அன்னதானமும் சொர்ணதானமும் செய்யவும் பண வசதியும் ஏற்படுகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு பிரதி வியாழக்கிழமை தோறும் எந்த விதத்திலும் பணம் கிடைத்துவிடுகிறது.

**புத்திநாதனாகிய குரு சந்திரனுடன்** சம்மந்தப்பட்டிருந்தால் "கஜ அஸ்வாம்பா" யோகம் ஏற்படும். கஜம் என்றால் யானை என்றும் அஸ்வம் என்றால் குதிரை என்று பொருளாகும். இப்படி அமையப் பெற்றவர்களுக்கு யானை குதிரைகள் வந்து சேருகின்றன (அதாவது சொகுசு கார்கள் போன்ற வாகனங்கள்) தாயின் குடும்பம் வெகு உன்னத ஸ்திதியிலிருக்கும், ஏராளமான பொன், பொருள், பூமி சேர்க்கையும் உண்டாகும் அரசாங்கத்தின் ஆதரவும் நிறைய ஏற்படும்.

**புத்திநாதனாகிய குருவுடன் சூரியன்** சம்மந்தப்பட்டு இருந்தால் அடிக்கடி சண்டையும், இரகளையும் அரசாங்கத்தின் எதிர்ப்புகளும் முன் கோபத்தால் பலவித கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாவதும் மனம் பலவீனப்படுதலும், இருந்து வரும் ஸ்தானத்தை இழத்தலுமுண்டாம்.

**புத்திநாதனாகிய குருவுடன் செவ்வாய்** சம்மந்தப்பட்டிருந்தால் எதிரிகள் ஏராளமாகத் தோன்றுதலும், தன் சொந்த இனத்தார்களின் தீராத பகையும், சொத்து பெரும் பகுதி பறிபோதலும் எடுத்த காரியங்களில் எல்லாம் படு தோல்வி ஏற்படுதலுமுண்டாம்.

**புத்திநாதன் குருவுடன் புதன்** இருந்தால் எடுத்த காரியங்களில் பெருமளவு வெற்றியும், கல்வியில் சிறந்து விளங்குதலும், சுற்றத்தாருக்கு இவரால் வேண்டிய உதவி கிடைத்தலும், மனம் சன்மார்க்கமான வழிகளில் செல்லுதலுமுண்டாம்.

**புத்திநாதன் குருவுடன் சுக்கிரன்** இருந்தால் குடும்ப சுக விருத்தியும், மனைவியின் ஆதரவும் ஆண் மகவு பிறத்தலும், ஏராளமான ஆடை ஆபரணம் சேர்க்கையும், குடும்பத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட விவாக சுபமுகூர்த்தங்கள் ஏற்படுதலும் உண்டாம்.

| | | | |
|---|---|---|---|
| ல/ | சனி ராகு | | |
| சுக் சந் | 121911 | | |
| சூரி | | | |
| செவ் புத | | கேது குரு | |

**புத்திநாதன் குருவுடன் சனி** இருந்தால் பல வகைகளில் வீண் விரையமும், தன்னைவிட கீழாக உள்ளவர்களுடன் சண்டையும், வேலைக்காரர்கள் கோபித்துக் கொண்டு போய் விடுதலும், உற்றார் உறவினரின் பகையும் ஏற்படும். புத்திநாதனாகிய குரு ஜெனன காலத்தில் இலக்கினத்திற்கு 2ஆம் இடத்திலோ அல்லது 7ஆம் இடத்திலோ இருந்தால் திடீர் மரணம் ஏற்பட நியாயமுண்டு. இதற்கு பரிகாரம் சதா துர்க்கை அம்மனை ஜெபித்து வழிபட்டு வரவேண்டும்.

### குரு திசை சனி புத்தி 2 வ 6 மா 12 நாட்கள்

**புத்திநாதனாகிய சனி** கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும் அல்லது இலக்கினத்திற்கு 3,11 ஆம் இடங்களில் இருந்தாலும், எடுத்த காரியங்களில் ஆடு மாடுகள் சேர்க்கையும், புதிதாக நிலம் மனை

வாங்குதலும், விலை உயர்ந்த நீல கற்கள் சேருதலும் வண்டி வாகனம் ஏற்படுதலும் உண்டாம். இந்த புத்தி முடிய ஐந்து மாதங்கள் இருக்கும் பொழுது பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். புத்திநாதனாகிய சனி நீச்சம் பெற்று இருந்தால் தற்காலிகமாக மனைவியை விட்டுப் பிரிதலும், புத்திரர்களின் திரேகசுகம் குன்றுதலுமுண்டாம்.

**புத்திநாதனுடன் சூரியன்** இருந்தால் "சிரரோகம்" ஏற்படும் அதாவது சிரம் என்றால் தலை, தலையில் யாராவது வெட்டு காயமோ அல்லது தலை சம்மந்தப்பட்ட ஏதாவது வியாதியோ ஏற்படும். அரசாங்கத்தின் கோபத்தால் சொத்துக்களில் ஒரு பகுதி பறி போதலுமுண்டாம்.

**புத்திநாதன் சனியுடன் சந்திரன்** இருந்தால் வாதநோய் அல்லது மூட்டுக்கு மூட்டுவலி ஏற்படுதலும், தாய் குடும்பத்தில் முக்கியமானவர்களில் ஒருவர் இறத்தலும், புத்திரர்களின் ஒருவரின் திரேக சுகம் பாதிக்கப்படுதலுமுண்டாம்.

**புத்திநாதன் சனியுடன் செவ்வாய்** இருந்தால் ஆயுதங்களால் ரணம் ஏற்படுதலும், காயம் ஏற்பட்டு அது செப்டிக்காக மாறுதலும் அதாவது புரை போடுதலும் உண்டாம். குறிப்பாக இது மாதிரி காலங்களில் ஆயுதங்களை கவனமாக பயன்படுத்த வேண்டும்.

**புத்திநாதன் சனியுடன் புதன்** இருந்தால் ஏராளமான சினேகிதர்கள் அதிலும் நல்ல சினேகிதர்கள் ஏற்படுதலும், விலை உயர்ந்த பெரிய பங்களாக்களில் வசித்து வருதலும், சங்கீத வித்வான்களின் தொடர்பும் சங்கீத கலையில் ஆர்வமும் ஏற்படும்.

**புத்திநாதன் சனியுடன் குரு** இருந்தால், மகனின் திரேக சுகம் பாதிக்கப்பட்டு பெரும் பொருள் செலவாகுதலும், மனக்குழப்பமும் மன சஞ்சலமும் சதா கவலையும் ஏற்படும்.

**புத்திநாதன் சனியுடன் சுக்கிரன்** இருந்தால் மனைவி மூலமாக பலவித நன்மைகளும், எடுத்த காரியங்களில் பெருமளவு வெற்றியும் நல்ல இடத்தில் உத்தியோகத்திலமர்ந்து நல்ல முறையில் நிறைய சம்பாதித்தலும், தனப்பிராப்தியுமுண்டாம்.

### குரு திசை புதன் புத்தி: 2 வ 3 மா 6 நாட்கள்

**புத்திநாதனாகிய புதன்** இலக்கினத்திற்கு 3 அல்லது 11ஆம் இடங்களில் ஜெனன காலத்தில் இருந்தால் சொந்தத்தில் பெரிய தொழில் ஏற்படுதலும், நிறைய ஆடை ஆபரணச் சேர்க்கையும், தருமசத்திரமோ அல்லது சொந்த செலவில் கோவில் திருப்பணி செய்தலும் உண்டாம்.

**புத்திநாதன் புதனுடன் சூரியன்** இருந்தால் நல்ல பட்டப்படிப்பு ஏற்படுதலும் கடல் கடந்து சென்று நிறைய திரவியம் சம்பாதித்தலுமுண்டாம். அரசாங்கத்தாரால் கௌரவிக்கப்படுதலும் உண்டாம்.

**புத்திநாதன் புதனுடன் சந்திரன்** இருந்தால் மனசந்தோசமும் நிறைய பொன், பொருள் சேர்க்கையும், எடுத்த காரியங்களில் எல்லாம் பூரண வெற்றியும் ஏற்படும்.

**புத்திநாதன் புதனுடன் செவ்வாய்** இருந்தால், ஆயுதத்தால் காயமும் யுத்தகளத்தில் படுதோல்வி, அடைதலும், வேளை தவறிய போஜனம் (உணவு) கிடைத்தலுமுண்டாம். தேவையற்ற விவாதம் போன்றவற்றை தவிர்ப்பது நலமாகும்.

**புத்திநாதன் புதனுடன் குரு இருந்தால்,** வேத புராண இதிகாசங்களை படித்தலும், கடவுள் பக்தியும், மிகுந்த ஆன்மிக ஆராய்ச்சியுமுண்டாம் மனம் சன்மார்க்க வழியில் செல்லுதலும், ஆலய வழிபாடும் உண்டாம்.

**புத்திநாதன் புதனுடன் சுக்கிரன்** இருந்தால் கவி, கதை இயற்றும் தன்மையும், வண்டி வாகன வசதியும் ஏற்படும். ஆனால் நடத்தை சரியில்லாத பெண்களின் சவகாசம் நிறைய ஏற்படுதலும் உண்டாம்.

**புத்திநாதன் புதனுடன் சனி** இருந்தால், பொருளாதார நெருக்கடியும் சொத்து சம்மந்தமாகப் பெரிய தகராறு ஏற்பட்டு நீதிஸ்தலம் வரை சென்று வாதாட வேண்டிய நிலையும் ஏற்படும்.

### குருதிசை கேது புத்தி : 0 வ 11 மா 6 நாட்கள்

**புத்திநாதனாகிய கேது** ஜனன காலத்தில் கேந்திரங்களிலோ அல்லது திரிகோணங்களிலோ இருந்தால் நல்ல பலன்கள் நடைபெறும். மந்திரத்தால் தேவதைகளையும் கட்டுப்படுத்தும் சக்தியும், பெண் குழந்தை பிறத்தலும், நல்ல பேரும் புகழும் ஏற்படுதலுமுண்டாம். குடும்பத்திலும் சுணங்கிவந்த விவாகங்கள் நன்கு நடைபெறும்.

**புத்திநாதன் கேதுவுடன் சூரியன்** இருந்தால், பலவகைகளிலும், வீண் செலவுகள் ஏற்படுதலும் தகப்பனாரின் வகையில் முக்கியமானவர் இறத்தலும், உத்தியோகத்தில் கெட்ட பெயர் ஏற்பட்டு வேலையை ராஜினாமா செய்தலும், மரண பயமும் உண்டாகும்.

**புத்திநாதன் கேதுவுடன் சந்திரன்** இருந்தால், தாய் வம்சத்தல் ஒரு முக்கியமானவர் இறத்தலும், தொழில் வகையில் கவனக்குறைவால் சில சங்கடங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**புத்திநாதன் கேதுவுடன் செவ்வாய்** இருந்தால், ஆயுதங்களால் தாக்கப்படுதலும், யுத்த காலத்தில் நின்று போரிட வேண்டிய நிலையும், தகப்பனாரின் குடும்பத்தாருடன் அதாவது பங்காளிகளுடன் பகை ஏற்படுதலுமுண்டாம்.

**புத்திநாதன் கேதுவுடன் புதன்** இருந்தால் வியாபாரத்தில் நல்ல இலாபமும் கொள்முதல் செய்வதிலும் அதனை விற்று முதல் செய்வதிலும் மகா கெட்டிக்காரன் என்ற பெயரும் பெருமையும் ஏற்படுதலுமுண்டாம்.

தொடரும்...

# நவக்கிரகங்களின் நர்த்தனம்

# நலம் நல்கிடும் பரிவர்த்தனம் 4




நாடி ஜோதிடர்

**கே. சற்குருதாசன் ராமமூர்த்தி**

செல் : 94441 13777


**சுக்கிரன்**

*1. ஆண் ஜாதகத்தில் மனைவி தம்பியின் மனைவி அத்தை தாய் மாமன்கள்*

*2. கணவனின் சகோதரிகள், உடன் பிறந்த சகோதரிகள் சகோதரியின் குழந்தைகளை பெண் ஜாதகம் குறிக்கும்.*

*3. 2ஆம் பாவம் மனைவியின் சகோதரி, பெரியம்மா*

*4. 7ஆம் பாவம் மனைவி தங்கை மகள், அண்ணியின் தங்கை, தம்பி மனைவியின் அக்காள், அத்தை, தாய்வழிகாட்டி இங்கு ஏன் 2ஆம் பாவமும், 7ஆம் பாவமும் எடுத்துக் கொள்ளப்பட்டது. என்றால் சுக்கிரனின் வீடுகளான ரிஷபம், துலாம், கால புருஷ இலக்கினத்திற்கு இரண்டிற்கும், 7ஆம் வீட்டுக்கும், அதிபதி என்பதால் மட்டும். இது ஆண் ஜாதகத்திற்கு,*

*5. பெண் ஜாதகத்தில் 2ஆம் பாவம்... அல்லது 2ஆம் வீடு குறிக்கும் உறவுகள் தாய்மாமன், தாய்மாமன் மகள். அதேபோல் 7ஆம் வீடு கணவன், அக்காள் கணவரின் தம்பி, தங்கை கணவரின் அண்ணன், பெரியப்பன், இபப்டி சுக்கிரன் சொந்த வீட்டின் உறவுகள் சொந்தம் கொணடாடும்.*

தற்போது உங்களுக்கு கூடுதல் தகவலாக கணவன் மனைவியின் வீடு அமைந்த வீதியை பற்றி பார்ப்போமா

*1. ஆண் ஜாதகத்தில் சுக்கிரன், அல்லது 7க்குடையவன்*

*2. பெண் ஜாதகத்தில் செவ்வாய் அல்லது 7க்குடையவன் நின்ற இராசி கொண்டு தெரிந்துக் கொள்ளலாம்.*

**ரிஷபம்** *தென்வடல் வீதி, கிழக்கு பார்த்த வாசல் உள்ள வீடு.*

**துலாம்**. *கிழக்குமேல் வீதி, தெற்கு பாாத்த வாசல் உள்ள வீடு இந்த விதி பெரும்பாலான ஜாதகங்களுக்கு ஒத்துப்போகும் ஆனால் நூறு சதவிகிதம் சரியாக இருக்கும் என கூற முடியாது. இனி சுக்கிரன் காரகத்துவங்களையும், மனைவி, சுகம், மண், மனை, பொன், பொருள், வீடு, வாகனம், சுபகாரியம், இவைகளை பெரும்பாலும் குறிக்கும் இந்த சுக்கிரன் ரிஷபத்திலும், துலாத்திலும் நின்றால் என்ன பான் என்று பார்ப்போம்.*

**ரிஷபத்தில் சுக்கிரன்:** *ஜாதகனின் மனைவி அழகான வன் செல்வாக்கு உள்ள குடும்பத்தில் பிறந்தவள். குடும்பம் நடத்துவதில் திறமை வாய்ந்தவள். நல்ல நாகரீகமான உடை உடுத்துவாள் ஜாதகனின் மனைவி உறவு பெண்ணாக இருக்கலாம். தெற்கு திசையில் இருந்து வருவாள். மனைவியின் ஊர் 15 கி.மீக்குள் இருக்கும்.*

**துலாத்தில் சுக்கிரன்:** *ஜாதகனின் மனைவி செல்வாக்கான குடும்பத்தில் பிறந்தவள் தூய்மையானவள் பொறுமையானவள் குடும்பத்தை பொறுப்புடன் பார்த்துக் கொள்வாள். கலைதுறையில் நாட்டமுறையவள். கௌரவமான குடும்பத்தில் பிறந்தவள். மேற்கு திசையில் இருந்து வருவாள். அவள் பிறந்த ஊர் 15 கி.மீ.க்குள் இருக்கும். அதே போல் சுக்கிரன் குறிக்கும். உடல் பாகங்கள் எவை என பார்ப்போம் கன்னம், முகம், கரப்பை, கருமுட்டை, விந்து ஆகும்.*

*பொதுவாக சுக்கிரனை மையப்படுத்தி பலன்கள் எடுத்துரைக்கும்போது சில நேரங்களில் சில பேருக்கு அந்த பலன் கிடைப்பது இல்லை. அல்லது நடப்பது இல்லை. இது ஏன் என்று பார்க்கும்போது எதிரிடையான நட்சத்திரங்கள் என்று ஒரு பிரிவு உள்ளது. அதை நாம் மறந்துவிட்டு பலன் கூறினால் சரியாக வருவது இல்லை. குறிப்பாக ஒருவரின் பிறந்த ஜாதகத்தில் சுக்கிரன் எந்த நட்சத்திரத்தில் அமர்ந்துள்ளதோ அந்த நட்சத்திரத்தில் இருந்து எண்ணிப் பார்க்கும்போது எதிரிடையான நட்சத்திரங்கள் ஏதாவது ஒன்றில் ஜாதகரின் ஜென்ம நட்சத்திரம் அமையுமானால்*

ஜாதகருக்கு சுக்கிரனால் கிடைக்கக்கூடிய பலன்கள் கிடைக்காது. சுக்கிரனின் எதிரிடையான நட்சத்திரத்தில் இலக்கினம் அமைவது அந்த ஜாதகரின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்காது. சுக்கிரன் அவரவர் ஜாதகத்தில் எந்த பாவத்திற்கு அதிபதியாக நிற்கின்றாரோ. அந்த பாவாதிபதி சுக்கிரனின் எதிரிடையான நட்சத்திரத்தில் இருந்தால் அப்பாவத்திற்கு சுக்கிரனின் மூலம் கிடைக்கக்கூடிய பலன்கள் கிடைக்காது.

## உங்கள் பார்வைக்கு சுக்கிரனின் எதிரிடையான நட்சத்திரங்கள் இதோ

| வ.எண் | சுக்கிரன் நின்ற நட்சத்திரம் | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|
| 1 | அஸ்வினி | பூராடம் | திருவோணம் | சதயம் |
| 2 | பரணி | உத்திரம் | அவிட்டம் | புரட்டாதி |
| 3 | கார்த்திகை | திருவோணம் | சதயம் | உத்திரட்டாதி |
| 4. | ரோகிணி | அவிட்டம் | புரட்டாதி | ரேவதி |
| 5. | மிருகசீரிஷடம் | சதயம் | உத்திரட்டாதி | அஸ்வினி |
| 6. | திருவாதிரை | புரட்டாதி | ரேவதி | பரணி |
| 7 | புனர்பூசம் | உத்திராடம் | அஸ்வினி | கார்த்திகை |
| 8 | பூசம் | ரேவதி | பரணி | ரோகிணி |
| 9 | ஆயில்யம் | அஸ்வினி | கார்த்திகை | மிருகசீரிடம் |
| 10 | மகம் | பரணி | ரோகிணி | திருவாதிரை |
| 11 | பூரம் | கார்த்திகை | மிருகசீரிஷம் | புனர்பூசம் |
| 12 | உத்திராடம் | ரோகிணி | திருவாதிரை | பூசம் |
| 13 | அஸ்தம் | மிருகசீரிடம் | புனர்பூசம் | ஆயில்யம் |
| 14 | சித்திரை | திருவாதிரை | பூசம் | மகம் |
| 15 | சுவாதி | புனர்பூசம் | ஆயில்யம் | பூசம் |
| 16 | விசாகம் | பூசம் | மகம் | உத்திரம் |
| 17 | அனுஷம் | ஆயில்யம் | பூரம் | அஸ்தம் |
| 18 | கேட்டை | மகம் | உத்திராடம் | சித்திரை |
| 19 | மூலம் | பூரம் | அஸ்தம் | சுவாதி |
| 20 | பூராடம் | உத்திரம் | சித்திரை | விசாகம் |
| 21 | உத்திராடம் | அஸ்தம் | சுவாதி | அனுஷம் |
| 22 | திருவோணம் | சித்திரை | விசாகம் | கேட்டை |
| 23 | அவிட்டம் | சுவாதி | அனுஷம் | மூலம் |
| 24 | சதயம் | விசாகம் | கேட்டை | பூராடம் |
| 25 | பூரட்டாதி | அனுஷம் | மூலம் | உத்திராடம் |
| 26 | உத்திரட்டாதி | கேட்டை | பூராடம் | திருவோணம் |
| 27 | ரேவதி | மூலம் | உத்திராடம் | அவிட்டம் |
| | பொதுவான பலன்கள் | ஒற்றுமை இல்லா, வாழ்வு, பிரச்சனை, காதல் பயம், பீதி, சண்டை சச்சரவு பற்றற்றவன் வாழ்க்கை, சொல்ல முடியாத துன்பம். | எப்போதும் பிரச்சினை சோதனையுடன் வேதனை, உடல் சுகம் கிடைக்காது இரகசிய மர்ம வியாதி, தடைகள், திருமணம் தள்ளிப்போதல் கால தாமத திருமணம் | வாழ்க்கையை வெறுக்கும் நிலை எல்லாவற்றையும் வெறுத்து துறவு கொள்ளும் நிலை. விரக்தியான மனப்பான்மை திருமண தடை கணவன் மனைவி பிரிவினை |

# அப்பாவின் தொழிலை தப்பாமல் செய்ய வைக்கும் கிரக நிலைகள்



கொடிக்கம்பம் ஜோதிடர்
எஸ்.பி. சோமசுந்தரம்
செல் 94424 37251

தீராத காதலுடன் ஒரு வேலையை செய்யும்போது அதன் ஒவ்வொரு நிலையையும் மற்றவர்களால் தோல்வி என்று பேசப்பட்டாலும் அதன் தாக்கம் எதுவுமின்றி வெற்றியின் அருகில் வந்துவிட்ட உணர்வுடன் ஈடுபாட்டோடும் செயல்படும் போது மற்றவர்களின் பரிகாசம் மரித்து போகும்.

ஒருவரின் இலக்கு ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தை உருவாக்குவதாக இருக்கலாம். அல்லது ஒரு தொழிலைத் தொடங்கி அதில் கொடி கட்டிப் பறக்க நினைக்கலாம். மாளிகை போல் வீடு கட்டி மகிழ்ச்சியோடு வாழ நினைக்கலாம். பெரும் புகழோடும் செல்வத்துடன் வளர்ந்து ஓங்க ஆசைபடலாம். ஆசையோடு காதலித்த பெண்ணை கரம்பிடித்து கண்ணியத்தோடு காலம் பூராவும் ஆனந்தமாய் வாழ நினைக்கலாம். இலக்கு எதுவாக இருந்தாலும் அதை, அடைவதற்கான எந்த தடயமும், தகவலும் தெரியாமல் அறியாமல் இருக்கலாம். ஆனால் அதற்காக எடுக்கும் முயற்சியை அடங்காத தாகத்துடன் தீராத காதலுடன் செயல்படுத்துகிறபோது கண்ணுக்குள் தெரியும் கனவு கைக்குள் வரும். இது வெற்றியாளர்களின் அரங்கம் எங்கும் எதிரொலிக்கும் அனுபவ உரைகளின் வீச்சாகும்.

காலம் நேரம் பார்க்காமல் கஷ்டப்பட்டு இரவு பகல் பாராமல் இஷ்டப்பட்டு எளிமையாய் தொடங்கி வலிமையாய் வளரும் வரை கடுமையாய் உழைத்து உருவாக்கிய நிறுவனத்தை (தொழிலை) தனக்கு பின்னால் தன்னுடைய வாரிசு பார்த்துக் கொள்ள வேண்டும். பராமரித்துக் கொள்ள வேண்டும். என்று எண்ணாத தந்தை இருக்க முடியாது.

என் கஷ்டம் என்னோடு போகட்டும். எனது வறுமை என் தலைமுறையோடு ஒழியட்டும். எனக்கு மகனாக பிறந்த ஒரே காரணத்துக்காக என் தொழிலையே கற்றுக் கொண்டு காலம் பூராவும் வறுமைக்கும் சிறுமைக்கும் ஆளாக வேண்டாம் என்று எண்ணி தன் மகனை வேறு வேலைக்கு (அ) தொழிலுக்கு அனுப்பி வைக்கும் தந்தையும் இந்த தரணியில் உண்டு.

அப்பாவின் தொழிலைத் தப்பாமல் செய்ய வேண்டும் என்கிற தீராத வேட்கையுடன் அப்பாவின் தொழில் சம்பந்தமாக அறிவைத் தேடி ஆர்வத்துடன் கற்றுத் தெளிந்து அப்பாவை விட அதிக அளவில் வெற்றியையும், புகழையும் செல்வத்தையும் ஈட்டிய மகனும் உண்டு.

தந்தையின் தொழில் மீது ஈடுபாடும் விருப்பமும் சிறிதுமின்றி தன் அறிவுக்கும் ஆர்வத்திற்கும் ஏற்ப ஒரு துறையை தேர்ந்தெடுத்து அதில் முழு கவனத்தையும் செலுத்தி தனக்கு என்று ஒரு பார்முலாவை உருவாக்கி தந்தையின் தொழிலுக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்கிற பாணியில் வாழும் மகனும் உண்டு.

காலத்தின் கட்டாயம் நேரத்தின் நிர்பந்தம் சூழ்நிலையின் கைதி என்கிற பாணியில் விருப்பமே இல்லாமல் தந்தையின் தொழிலில் ஈடுபட்டு, நாளடைவில் அதில் அதீத விருப்பம் ஏற்பட்டு எதிர்காலத்தில் அப்பாவின், பாரம்பர்ய பெயரை காப்பாற்றி வாழும் மகனும் வையகத்தில் வாழ்வாங்கு உண்டு.

உயர்ந்த அந்தஸ்து நிறைந்த குடும்பத்தில் பிறந்த மகன்களுக்கு தனது குடும்பத் தொழிலை செய்யும் ஆர்வம் இளமையிலேயே வந்து விடும். எனினும் ஒரு டிகிரி படித்ததும் அப்பாவின் தொழிலை பார்த்துக் கொள் என்கிற பாணியில் வளர்த்து விடுவார்கள். இளமை விருப்பம் இறுதி காலம் வரை நீடிக்கும் என்பது நடைமுறை உண்மையாகும்.

தந்தை விரும்பினாலும், அல்லது மகன் விரும்பினாலும், அப்பாவின் தொழிலை தப்பாமல் மகன் செய்வதற்கு அவனது பிறந்த ஜாதகத்தில் அதற்குரிய கிரகநிலைகள் இருக்க வேண்டும். வலிமையாக அமைந்து விட்ட கிரகங்கள் பெற்றோர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் , மகன் வெறுத்தாலும் அப்பாவின் தொழிலை செய்ய வைத்துவிடும்.

ஒருவரின் பிறந்த ஜாதகத்தில் எந்த கிரகங்கள் தந்தை தொழிலை மகனும் செய்ய அனுமதிக்கும். எப்படிப்பட்ட, கிரக சேர்க்கைகள் வெற்றி வாகை சூட வைக்கும் என்பதை ஒவ்வொன்றாய் பார்ப்போம்.

ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் அதிபதி சூரிய பகவானாக வந்தாலும், அல்லது 10ஆம் வீட்டில் அமர்ந்து இருந்தாலும் அவர் சாரம் பெற்றவர் 10ஆம் இடத்திலிருந்தாலும் அப்பாவின் தொழிலை தப்பாமல் செய்வார். எப்போதும் வெற்றி வாகை சூடுவான்.

ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் இடத்து அதிபதி 9ஆம் இடத்தில் அமர்ந்து அவர் சூரிய பகவானின் சாரம் பெற்றாலும் அல்லது சூரிய பகவானுடன்

இணைந்து இருந்தாலும் ஜாதகன் அப்பாவின் தொழிலை தப்பாமல் செய்வான். ஜெயித்தும் காட்டுவான்.

ஒருவரின் ஜாதகத்தில் 9ஆம் அதிபதியும் 10ஆம் அதிபதியும் கூடி 4இல் இருந்து 10ஆம் வீட்டைப் பார்த்தாலும் 10ஆம் வீட்டிலேயே இருந்தாலும் ஜாதகன் அப்பாவின் தொழிலை தப்பாமல் செய்வான். தந்தை வர்க்கத்தாரின் ஆதரவையும், அனுசரணையும் பெற்று ஆற்றலோடு திகழ்வான்.

ஒருவரின் ஜாதகத்தில் 9ஆம் அதிபதி 10இல் அமர்ந்தாலும் 10ஆம் அதிபதி 9இல் அமர்ந்தாலும் அல்லது இருவரும் ஒருவர் சாரத்தில் ஒருவர் அமர்ந்தாலும் இந்த இருவரில் ஒருவர் சூரிய பகவானாக வந்தாலும் ஜாதகன் அப்பாவின் தொழிலை தப்பாமல் செய்வான்.

ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் அதிபதி சூரியன் சாரம் பெற்று சூரிய பகவானுடன் இணைந்து 4ஆம் இடத்தில் இருந்தாலும் 10ஆம் இடத்திலிருந்தாலும் அப்பாவின் தொழிலை ஜாதகன் தப்பாமல் செய்வான். தொழில் மூலம் பெரும் செல்வம் தேடுவான்.

ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் அதிபதி 6இல் நின்று அவர் சூரியன் சாரம் வாங்கினாலும் சூரியனுடன் கூடினாலும் ஜாதகன் அப்பாவின் தொழிலை தப்பாமல் செய்வான். தொழில் போட்டியை வென்று வெற்றி நடைபோடுவான்.

ஒருவரின் ஜாதகத்தில் 6ஆம் அதிபதி சூரியனாக வந்து அவர் 10இல் அமர்ந்து 10ஆம் அதிபதியின் தொடர்பும் இருந்து விட்டால் அவர் அப்பாவின் தொழிலை தப்பாமல் செய்வான்.

தொழிலில் பங்காளிகளின் தலையீடும் தொல்லையும் உண்டானாலும் எதையும் தீயாய் பொசுக்கி விட்டு மேலே வந்து விடுவான்.

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினாதிபதியும் 9ஆம் அதிபதியும் இணைந்து நல்ல இடங்களில் அமர்ந்து அவர்களை 6ஆம் அதிபதியோ, 10ஆம் அதிபதியோ பார்த்து விட்டால் தந்தைக்கும் மகனுக்கும் நல்லுறவு இருக்கும். ஜாதகன் தந்தையின் வழிகாட்டுதலை கடைபிடித்து தந்தை தொழிலை தப்பாமல் செய்வான்.

ஒருவரின் ஜாதகத்தில் சூரிய பகவானும் சனி பகவானும் இணையாமல் இருந்து இலக்கினாதிபதிக்கும் சூரியன் பகை கிரகமாக வராமல் இருந்து விட்டாலும் தந்தைக்கும் மகனுக்கும் இணக்கமான உறவு எந்நாளும் இருக்கும். அப்பாவின் அறிவுரையை அப்படியே ஏற்றுக் கொண்டு அவர்வழியில் பின் தொடர்வான்.

ஒருவரின் ஜாதகத்தில் 6ஆம் அதிபதியும் 9ஆம் அதிபதியும் ஒருவராக வந்து அவர் 10இல் அமர்ந்து 10ஆம் அதிபதியும் அவருடன் இணைந்து விட்டால் ஜாதகன் தொழிலை அப்பா செய்வார். ஜாதகனின் வளர்ச்சிக்கு அப்பாவின் ஒத்துழைப்பு அதிகபட்சமாகவே இருக்கும்.

ஒருவரின் ஜாதகத்தல் 5ஆம் அதிபதி 10இல் அமர்ந்து அவருடன் இலக்கினாதிபதி இணைந்து 2ஆம் அதிபதி தொடர்பும் இருந்து விட்டால் ஜாதகன் தன் மகனுடைய தொழிலை பிரியமுடன் செய்வான் ஒருவருக்கு ஒருவர் அனுசரித்து அந்நியோன்யமாக செயல்படுவார்கள். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

ஒருவரின் ஜாதகத்தில் தந்தை தொழிலை மகன் செய்வதற்கும் மகன் தொடங்கும் தொழிலை தந்தை கவனித்துக் கொள்வதற்கும் கிரகங்களின் ஒத்துழைப்பு அவசியம் இருக்க வேண்டும். அப்போது தான் இருவருக்கும் இணக்கமான சூழ்நிலையை தந்து வெற்றிகரமாக தொழிலை நடத்தி பெரும் பொருளாதாரத்தை ஈட்ட முடியும்.

இந்த கருத்து எனது ஆய்வுக்கும் அனுபவத்துக்கம் சரியாக வருகிறது இந்த கருத்தின்படி அமைந்த ஓர் உதாரண ஜாதகத்தைப் பார்ப்போம்.

பிறந்ததேதி = 9.3.1984

பிறந்த நேரம் = PM 2.50

பிறந்த நஷ்சத்திரம் = சதயம்

ஜெனன கால இராகு திசை பாக்கி 8—10—03

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| சந் | இராசி ஆண் | | |
| | | | சூரி புத |
| ல / குரு | செவ் கேது | சனி | சுக் |

| | | | |
|---|---|---|---|
| சனி ராகு | | சுக் | குரு புத |
| சந் | அம்சம் | | |
| | | | |
| ல / செவ் | சூரி | | கேது |

இந்த ஜாதகர் சதயம் நக்ஷத்திரம் கும்ப இராசி தனுசு இலக்கினத்தில் பிறந்து உள்ளார். இலக்கினாதிபதி இலக்கினத்தில் ஆட்சி பெற்று ஹம்ஸ யோகத்தில் வலிமையுடன் அமர்ந்துள்ளார். மேலும் இராசி அதிபதி சனி பகவான் இராசிக்கு 9இலும் இலக்கினத்திற்கு 11இல் உச்சம் பெற்று பலமாக அமர்ந்துள்ளார். ஜாதகம் வலிமையானது என்பது சான்றாகிறது.

இலக்கினத்துக்கு 3இல் சந்திர பகவான் நிற்பதாலும் 6ஆம் அதிபதி சுக்கிர பகவான் 10இல் அமர்ந்து இருப்பதாலும், 10ஆம் அதிபதி புதன் பகவான் கேதுவின் சாரம் பெறுவதாலும், இந்த ஜாதகருக்கு மெரீட்டில் மருத்துவ சீட் கிடைக்க வைத்தது. இன்று மருத்துவ படிப்பு முடிந்து மருத்துவராக பணிபுரிகிறார்.

இவரின் தந்தை புகழும், செல்வாக்கும் பெற்ற மருத்துவர். 9க்கு உரிய சூரிய பகவானும் 10ஆம் அதிபதியும் இணைந்து 9இல் பலம் பெற்றுள்ளனர். தந்தைக்கு 10ஆம் அதிபதி ஜாதகனுக்கு 10ஆம் இடத்தில் அமர்ந்து உள்ளார்.

முக்கியமாக ஒருவரின் ஜாதகத்தில் 9ஆம் அதிபதியும், 10ஆம் அதிபதியும் சூரியனும் சம்பந்தப்பட்டாலும் 10ஆம் அதிபதி 6இல் இருந்தாலும் 6ஆம் அதிபதி 10இல் இருந்தாலும் 10இல சூரிய பகவான் நின்றாலும் அப்பாவின் தொழிலை தப்பாமல் ஒருவர் செய்வார் என்கிற எனது அனுபவ கருத்தை ஆதாரத்துடன் வழங்குகிறேன். ■

காலத்தின் கோலத்தைக் கோடிட்டு காட்டிடும்

# கோட்டைச் சக்கரம்

9



● ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
P.D. ஜெகதீஸ்வரன்

கோட்டைச் சக்கரத்தில் ஸ்தம்ப பாகத்தில் சுப கிரகங்கள் நிற்கும் போது மனம் சார்ந்த அனைத்து விதமான நன்மைகளும் ஏற்படுகின்றன.

ஸ்தம்ப பாகத்தில் சுப கிரகங்களின் சூழுகைகள்

| | |
|---|---|
| குரு+சுக்+புதன் | சுக்+புதன் |
| குரு | குரு+சுக்கிரன் |
| சுக்கிரன் | குரு+புதன் |
| புதன் | |

மனிதன் தான் விரும்பியது கிடைத்தால் தான் சந்தோஷம் அடைய முடியும் என்று தன் மனதில் வரையறை வகுக்கிறான். இது ஒரு தவறான எண்ணம். தான் விரும்பியது கிடைத்தது போல பாவிக்கும் போது, அந்த எண்ண அலையானது சக்தி ஊட்டபட்டு நாம் விரும்பியதை நம்மிடம் சேர்க்கும். இது ஒரு நேர்மறையான எண்ணம். நாம் விரும்பியது கிடைக்கவில்லை என்பது எதிர் மறை எண்ணம். எதிர் மறை எண்ணம் நமது சக்தியை குறைத்து நம்மை பலவீனபடுத்தும் நேர்மறையான எண்ணம் நமது சக்தியை அதிகப்படுத்தும்.

ஒரு மாணவன் அதிக மதிப்பு எடுக்க வேண்டும் என்று நினைக்கிறான். ஆனால் அவனது மனதில் மதிப்பு எடுக்க முடியும் என்ற என்னத்தை விட எடுக்க முடியாமல் போகுமோ என்ற பயம் அதிகமாக உள்ளது. இந்த பயமானது ஒரு எதிர் மறை எண்ணம். அது அவனது சக்தியை குறைத்துவிடுகிறது. இதே மாணவன் நேர் மறையாக சிந்தித்து இருந்தால் அவனது மனதின் சக்தி சேமிக்கபட்டு அவன் விரும்பியதை அடைய உதவி இருக்கும். எதிர் மறை எண்ணங்கள் நம்மை கவனக் குறைவிலிருந்து காப்பவையாக இருக்க வேண்டுமே அல்லாமல் நம்மை அழிப்பவையாக இருக்கக் கூடாது. “தங்களுடைய திறமைகள் மீது நேர் மறை அணுகுமுறைகள் உள்ளவர்கள் எளிதில் விரக்தியடைவதில்லை; எதிர் காலத்தின் மீது நம்பிக்கையுடன் இருப்பவர்கள்; எதையும் விடாமுயற்சியுடன் தொடர்வார்கள்.

இப்படிப்பட்டவர்களால் மனஅழுத்தத்தை வெற்றிக்கொள்ள முடிகிறது. மாறாக, தங்களைப் பற்றிய கீழான மதிப்பீட்டினையும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையற்ற எதிர்மறை அணுகுமுறையையும் கொண்டவர்கள், அவர்களுக்குச் சாதகமான சூழ்நிலைகள் நிலவும்போது கூட, மனச்சோர்வுக்கு ஆளாகிவிடுவார்கள்” என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நாம் எதை நினைக்கிறோமோ அதாகவே ஆகிவிடுகிறோம் என்று உளவியல் நிபுணர்கள் கூறுவது இதைத்தான். தியானம் செய்வது மிகவும் நல்லது. அத்தகைய தியானத்தில் நமது எண்ணங்களை ஒருநிலைப்படுத்துவது மிகவும்

கடினம். தியானம் செய்பவர்கள் தங்களுடைய எண்ணங்களை எப்படி வைத்து கொள்வது? என்பதை பற்றி பார்க்கலாம்.

ஓர் அறையில் அமைதியான சூழ்நிலையில் ஏகாந்தமாக அமரவும். நம்முடைய எண்ணங்களில் பின்வருமாறு கூறப்பட்டுள்ள அனைத்தையும் கொண்டுவர வேண்டும். அதாவது வெளியில் உள்ள ஏதும் என்னை வசீகரிப்பதில்லை, உடலிலிருந்து நான் மெதுவாக விடுபடுகிறேன், எனது மனதினை என் நெற்றியின் நடுவில் ஒரு முகப்படுத்துகிறேன், நான் இந்த உடலிலிருந்தும், சுற்றுப்புறச் சூழ்நிலையில் இருந்தும் விடுபடுவதை உணர்கிறேன்.... என் உள்ளம் என்னை சுற்றி உள்ள அமைதியை அனுபவிக்கிறது, அமைதி என்னை ஊடுறுவுகின்றது, அமைதி அலைகள் என்னை மெதுவாக தாலாட்டுகின்றது, என் மனக்கவலைகள் என்னைவிட்டு விலகுகிறது.

இந்த ஆழ்ந்த அமைதியில் மிகுந்த கவனம் செலுத்துகிறேன், நான் அமைதி சொரூபமானவன் என்பதை அனுபவிக்கிறேன், அமைதியே என்னுடைய இயற்கையான உள் உணர்வு ஆகும், இந்த அமைதியை நான் அனுபவம் செய்து ஆனந்தம் அடைகிறேன்.... இத்தகைய எண்ணங்களை அவரவருக்கு ஏற்றவாறு மனதில் தொடர்ந்து உருவாக்குங்கள். குறைந்தது ஒரு நாளைக்கு இருமுறையாவது செய்தால் தான் இதன் பலனை ஓரளவு அனுபவிக்க முடியும்.

இது போன்ற நேர்மறை எண்ணங்களை வளரச் செய்தால் ஸ்தம்ப பாகத்தில் உள்ள பாவ கிரகங்கள் கூட ஓரளவு நல்ல பலன்களைத் தருவதை அனுபவத்தில் பார்க்க முடிகிறது.

ஸ்தம்ப பாகத்தில் இருக்கும் கிரகங்கள்தான் ஒரு மனிதனுக்கு குணங்களைத் தோற்று விக்கின்றன. அமைகின்ற கிரகங்களைப் பொறுத்து மூன்று வித குணங்கள் ஏற்படுகின்றன. அவற்றைப் பற்றி சிறிது பார்ப்போம்.

### சத்வ (சாத்வீகம்) குணம்

சத்வகுணத்திலிருந்து தோன்றும் இயல்புகள்— நற்காரியங்களில் மனதைச் செலுத்தும் குணம், மன அடக்கம் (சமம்), புலன் அடக்கம் (தமம்), துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு (சகிப்புத் தன்மை), விவேகம், வைராக்கியம், தவம், வாய்மை, கருணை, மகிழ்ச்சி, நம்பிக்கை, பாவம் செய்வதில் கூச்சப்படுதல் தன்னிலேயே மகிழ்ந்திருத்தல் (ஆத்மரதி), தானம், பணிவு மற்றும் எளிமை.

### சத்வ குண பலன்கள்

சத்வ குணத்திலிருந்து தர்மச்செயல்கள்; தன் செயல்களைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்து விடுவது; பலனில் ஆசையில்லாமல் செயல்கள் செய்வது சாத்வீக குணமாகும். சத்வ குணமுடையோன் தெய்வத்தன்மையும், நிவிருத்தி மார்க்கமும்; விழிப்பு நிலையும் மற்றும் மேலுலகங்களை அடைகிறான்.

### ரஜோ (இராட்சதம்) குணம்

ரஜோ குண இயல்புகள்— ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தானம், கல்வி, ஆசை, முயற்சி, இறுமாப்பு, வேட்கை, திமிர், தெய்வங்களிடம் செல்வங்கள் வேண்டுவது, வேற்றுமை எண்ணம், புலனின்பப் பற்று, சண்டைகளில் உற்சாகம், தன் புகழில் ஆசை, மற்றவர்களை எள்ளி நகையாடுவது, பராக்கிரமம், பிடிவாதத்துடன் ஒரு முயற்சியை மேற்கொள்ளுதல். பயனில் விருப்பம் கருதி செய்யும் செயல்கள் ராஜசமாகும்.

### ரஜோ குண பலன்கள்

ரஜோ குணத்திலிருந்து இன்பப் பற்று; ரஜோ குணப் பெருக்கினால் அசுரத்தன்மையும், செயல் புரிவதில் ஆர்வம், கனவு நிலையும், இறப்பிற்குப்பின் மனித உடலையும் அடைகிறான்.

### தமோ (தாமசம்) குணம்

தமோ குண இயல்புகள்— காமம், வெகுளி, மயக்கம், கலக்கம், கோபம், பேராசை, பொய் பேசுதல், இம்சை, யாசித்தல், வெளிவேசம், சிரமம், கலகம், வருத்தம், மோகம், கவலை, தாழ்மை, உறக்கம், அச்சம், சோம்பல், காரணமில்லாமல் பிறரிடம் பொருட்களை எதிர்பார்த்தல் மற்றும் பிறர்க்கு கேடு விளைவிக்கும் செயல்கள் செய்வதும், பகட்டுக்காக செய்யப்படும் செயல்கள் தாமச குணங்கள் ஆகும்.

### தமோ குண பலன்கள்

தமோ குணத்திலிருந்து, சோம்பல் உண்டாகிறது. தமோ குணப்பெருக்கினால் இராட்சசத் தன்மையும், மோகமும் அதிகரிக்கின்றது. தமோ குணத்தினால் தூக்கநிலையும் உண்டாகிறது. தமோ குணத்தால் மறுபிறவியில் விலங்கு, மரம், செடி, கொடி போன்ற தாழ்வான நிலை பிறப்பு உண்டாகிறது.

எம்பெருமான் தன்னுடைய கீதோபதேசத்திலே மூன்று விதமான குணங்களைக் காட்டிக் கொடுக்கிறார். — சத்வ குணம், ரஜோ குணம் மற்றும் தமோ குணம் — என்று. நம் எல்லோரிடத்திலும் இந்த முக்குணங்கள் ஆட்சி புரிகின்றன. ஆனால் அந்தந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப இந்த குணங்களின் ஆதிக்கம் மாறி மாறி அமைந்து விடுகிறது.

நாம் எதற்காக இந்த மூன்று குணங்களைப் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டும் — எந்த நோக்கத்தில் எம்பெருமான் இந்த முக்குணங்களைப் பற்றி விளக்கி இருக்கிறார் — நாம் எந்த குணத்தின் ஆதிக்கத்தில் தற்போது வாழ்ந்துக் கொண்டு இருக்கிறோம் — என்று தெரிந்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது. இன்றியமையாதது. எம்பெருமானை

அடைவதுற்குண்டான மார்க்கத்தில் பயணம் செய்ய இந்த ஞானம் மிகவும் துணை புரியும்.

ஒருவர் ஆடம்பரமான முறையிலே, மிகுந்த விளம்பரம் செய்து அவருக்கு பெருமை தேடிக் கொள்ளும் வகையிலே ஒரு யாகம் செய்கிறார். அந்த யாகத்தின் நோக்கமே அதில் பங்கு பெறும் அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டும் — என்பது தான். இதற்காக குறிப்பிட்ட சில தேவதைகளை வேண்டி வணங்கி இந்த யாகம் நடைபெறுகிறது. பொதுவான கண்ணோட்டத்தில் பார்க்கும் போது இந்தச் செயல், மிக உயர்ந்ததாகக் கருதப் படுகிறது. ஆனால், எம்பெருமான் கண்ணன், தன்னுடைய உபதேசத்திலே " ரஜோ குணம் " — என்று இதை விவரிக்கிறார். இதேபோல, சாஸ்திர விதிகளைக் கடைப்பிடிக்காமல், நம்பிக்கை இல்லாமல், வேத மந்திரங்களை உச்சாடனம் செய்யாமல் செய்யப்படும் யாகங்களை " தமோ குணத்தைச் " சேர்ந்ததாக விளக்குகிறார்.

சாஸ்திரங்கள் சொன்ன விதிகளுக்கு உட்பட்டு, எந்த விதமான பலனையும் எதிர்பாராமல் செய்யப் படும் யாகமே — சத்வ குணத்தைச் சேர்ந்தது. இப்படிச் செய்யப்படும் யாகத்தின் பலனாக அந்த எம்பெருமானின் உள்ளம் உவக்கிறது. மனம் மகிழ்கிறது.

அடுத்தது ஆகார நியமம். ரஜோ குணத்தைச் சேர்ந்தவர்கள், மிகுந்த காரமான, மிகுந்த உப்பான, கசப்பான, புளிப்பு நிறைந்த, உலர்ந்த, எரிகின்ற உணவுகள் உண்பதாகக் குறிப்பிடுகிறார். இன்று நம் சமுதாயத்திலே மிக வேகமாகப் பரவி வரும் — fast food — வேக உணவுக் கலாச்சாரம் இந்த ரஜோ குணத்தின் பிரதிபலிப்பாக விளங்குகிறது. இந்த உணவை உண்பவர்கள் மிகுந்த வலியையும், துக்கத்தையும் அடைவது மட்டுமன்றி, கடும் வியாதிகளிலும் தள்ளப் படுகிறார்கள்.

உண்பதற்கு மூன்று மணி நேரம் முன்பே சமைத்த உணவு, சுவையற்றது, ஊசிப் போனது, பழையது மற்றும் தூய்மை இல்லாத உணவை உண்பவர்கள் " தமோ குணத்தைச் " சேர்ந்தவர்கள்.

சதவ குணத்தைச் சேர்ந்த உணவு, ஒருவனுடைய வாழ்க்கைக் காலத்தை நீடிப்பதாகவும், தூய்மையானதாகவும், இனிமையாகவும் அமைகின்றன. இந்த உணவை உட்கொள்ளும் போது நம் உடலுக்கு சுவையும், பலமும் தருவதோடு, நம் மனத்திற்கு திருப்தியையும், மாறாத மகிழ்ச்சியையும் தரக் கூடியது.

மூன்று விதமான தவங்களை எம்பெருமான் நமக்கு உபதேசிக்கிறார். ஒன்று உடல் சார்ந்தது. முழு முதற்கடவுளாகிய எம்பெருமானையும், அவனை நமக்குக் காட்டித் தரும் ஆசாரியர்களையும், பாகவதர்களையும், தன்னுடைய தாய், தந்தை மற்றும் பெரியவர்களை வணங்குவது. தூய்மையும், எளிமையும் கொண்டு மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாது வாழ்தல் — உடல் சம்மந்தப்பட்ட தவமாக சத்வ குணத்தைச் சேர்ந்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

பேசுகின்ற பேச்சில் முழுமையான உண்மை இருக்க வேண்டும். தனக்கும், மற்றவர்களுக்கும் அந்த பேச்சினால் மிகுந்த நன்மை பயக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, யாருடைய மனதுக்கும் துன்பம் ஏற்படாத வண்ணம் அந்தப் பேச்சு அமைய வேண்டும். இந்தக் கட்டுப்பாட்டை " வாக்குத் தவம்" என்று எம்பெருமான் உபதேசிக்கிறார்.

இறுதியாக மனம் சார்ந்த தவம். சாந்தமுடன் விளங்குவது, எளிமையாக வாழ்தல், கம்பீரம், சுய கட்டுப்பாடு, மனத்தில் எப்பொழுதும் தூய்மையான எண்ணங்கள்.

இந்த மூன்று தவங்களையும் கடைப்பிடிக்கும் சத்வ குணவானுடைய நெஞ்சங்களிலே அந்த எம்பெருமான் எப்போதும் நித்யமாக வாசம் செய்து கொண்டு இருக்கிறான்.

இதற்கு மாறாக, ஆணவம், அகந்தை, கோபம், பலனை மட்டும் குறிக்கோளாக வைத்து காரியமாற்றுவது, மற்றவர் மனம் புண்படும் படி பேசுவது மற்றும் அசுத்தமான எண்ணங்களை மனதில் சுமந்து கொண்டு திரியும் பாவிகளை — ரஜோ குணம், தமோ குணத்தைச் சேர்ந்தவர்களாக எம்பெருமான் நமக்கு அடையாளம் காட்டுகிறார்.

முக்குணங்களுடைய குணாதிசயங்களைப் பற்றி அறிந்து கொண்ட பின், அடுத்த கட்டமாக, ஓர் ஆத்ம பரிசோதனை செய்ய வேண்டும். நமக்குள் ஒளிந்து கிடக்கும் ரஜோ, தமோ குணங்களின் ஆதிக்கத்தைக் கண்டறிந்து, அவற்றை சத்வ குணத்தின் பக்கம் திருப்ப முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

சத்வ குணம் மிகுந்து கிடக்கும் பாகவத உத்தமர்களைக் கண்டறிந்து நெருங்கிய சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆசாரியனை அணுகி, குண மாற்றத்துக்கும், வாழ்வின் ஏற்றத்துக்கும் வழி காண வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த விஷய ஞானத்தை அடுத்த தலைமுறையாகிய நம் பிள்ளைகளிடத்தில் விளக்கம் செய்து அவர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக வாழ்ந்துக் காட்ட வேண்டியது நம் கடமையாகும். கோட்டைச் சக்கரம் இவ்வளவு விஷயங்களையும் ஆழமாகச் சொல்லி நம்மை ஒரு முழுமையான மனிதனாக மாற்றுகிறது. வாசகர்கள் இந்தக் கருத்துக்களை எல்லாம் சிந்தித்துச் செயல்பட்டால் நிச்சயம் ஒரு மாற்றம் வருவதை உணர முடியும்

ஓம் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தி புகழ் ஓங்கட்டும்!!!

(தொடரும்...)

ஸ்ரீ விஷ்ணு பகவான் துணை

# அற்புத வசிய மூலிகைகள்

## ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல்' மூலிகை சித்தர் ஞானகுரு

**அனைத்து மூலிகைகளும் சித்தர் முறைப்படி உயிருடன் எடுத்து உங்களுக்காக 48 நாட்கள் அதற்குண்டான உரு ஏற்றி உயிரோட்டமாக உங்களது ஆயுட்காலம் வரையில் பலன் பயன் அளிக்கக்கூடியது.**

**1. தெய்வீக மூலிகை ரூ.15,000/–** உங்களது குலதெய்வம் அல்லது இஷ்ட தெயவம் எது வேண்டுமோ இந்த மூலிகையை சிவப்பு பட்டுத்துணியில் சுற்றி மரப்பலகை மேல் வைத்து தினமும் தெய்வத்தின் யந்திரம் வைத்து அதற்குண்டான மந்திரங்கள் தினமும் காலை, மாலை முழு நம்பிக்கையுடன் ஊதுவத்தி காண்பித்து வந்தால் அந்த தெய்வம் உங்களுக்கு காட்சி தந்து உங்களுடனே இருந்து உங்களது எல்லாக் காரியத்தையும் வெற்றி அடையச் செய்யும்.

**2. வெள்ளை விஷ்ணுகிராந்தி மூலிகை தாயத்து ரூ.10,000/–** சகல ஐஸ்வர்யமும், சகல வசியம், எடுத்த காரியம் அனைத்து ஜெபம் உண்டாக்கி கடைசி காலம் வரையில் சகல செல்வாக்கு, செல்வம் உண்டாக்கும். தொழில் வெற்றி, குடும்பத்தில் ஒற்றுமை.

**3. சகலரும் வசியமாகும் தொட்டாற்வாடி மூலிகை தாயத்து ரூ.5000/–** ஆண், பெண் வசியமாக்கும் மிகச்சிறந்த மூலிகை

**4. பகைவரையும் நண்பனாக்கும் சங்கிலிக்கொடி மூலிகை தாயத்து ரூ.5000/–** உங்களது பகைவர்கள, எதிரிகள், உங்கள் மேல் பாசம் உண்டாக்கி நீங்கள் சந்தோஷமாக இருப்பீர்கள்.

**5. அதிர்ஷ்ட ரக்ஷிணி மூலிகை தாயத்து ரூ.5000/–** திடீர் காரியசித்தி உண்டாக்கும் புத்ரதோஷம், அனைத்து துன்பங்களையும் விரட்டி அடிக்கும் வல்லமை உள்ளது.

**6. செய்வினை, தீயசக்தி குடும்பத்தில் ஒற்றுமை குடும்பத்தில் சந்தோஷம் உண்டாக்கும் மூலிகை பவுடர் ரூ.10,000/–** இந்த மூலிகை பவுடரை பூஜையில் சாம்பிராணி போல் தினமும் 2 வேளை மனமுறுக போடவும்.

**7. கணவன் – மனைவி ஒற்றுமை மூலிகைப் பவுடர் ரூ.10,000/–** கணவன் – மனைவி ஒற்றுமை இல்லாமை, கணவன் – மனைவி பிரிந்து கோர்ட், கேஸ் விவகாரம் முற்றிலும் நீங்கும். இருவரும் சேர்ந்து சந்தோஷமாக இருப்பீர்கள்.

**8. ஏறு சிங்கி ரூ.10,000/–** 21 இன்ச் அளவுள்ளதில் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணி சுற்றி உங்களது பூஜையில் மரப்பலகையின் மேல் வைத்து ஊதுவத்தி காண்பித்து மனதார வேண்டினால் நலிவடைந்த தொழில், வியாபாரம் மீண்டுச் செழிக்கும். கடன் பிரச்சனை நீங்கி சகல ஐஸ்வர்யமும் உண்டாகும்.

**9. நினைத்ததை நடத்தும் ஸ்ரீபைரவர் யந்திரம் ரூ.7,500/–** தீயசக்தி, செய்வினைகள், காரியத்தடை, அப குணங்கள், பங்காளிகள் பிரச்சனை, வழக்கு, திருமணத் தடை, குழந்தை பாக்கியம், எதிர்பார்த்த உத்யோகம், உத்யோக உயர்வு, வெளிநாட்டுப் பயணம், எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் லாபம் தரும் மகாசக்தி பைரவர் யந்திரம் சித்தர் முறைப்படி 6X6 கடினமான செப்புத் தகட்டினால் கையினால் எழுதி உங்களது பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். இத்துடன் பைரவர் வழிபாட்டு முறை வழங்கப்படும்.

**10. தொழில் வியாபாரம், பணவரவு சிறக்கும் ஸ்ரீகாமதேனு யந்திரம் ரூ.7,500/–** தொழில் மந்தம், வியாபாரத் தடை, ஊழியர் பிரச்சனை, கடன் தொல்லை அனைத்தும் விலகி எதிர்பார்த்தபடியே தொழில் சிறப்பாக நடக்கும். வியாபராம் செழிப்பாக மாறும். எதிர்ப்பார்த்தபடியே தொழிலாளர் பிரச்சனை விலகும். கடன் தொல்லைகள் விலகி எதிர்பார்த்த பணவரவு, ஐஸ்வர்யம் உண்டாக்கும் மகாசக்தி ஸ்ரீ காமதேனு யந்திரம் சித்தர் முறைப்படி 6x6 கடினமான செப்புத் தகட்டில் கையினால் எழுதி உங்கள் பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். ஸ்ரீகாமதேனு வழிபாட்டுமுறை கட்டுரை வழங்கப்படும்.

**11. வசிய அஞ்சனம் ரூ.5,000/–** உங்களது இருபுருவத்திலும் வைத்து தினமும் 21 தடவை "ஓம் ரீம் ஐயும் கிலியும் சவ்வும் சர்வலோக வசியமாக ஸ்வாஹா" சொல்லவும். இதனால் ஆண்/பெண் வியாபாரம் வசியம் ஆகும்.

**12. வசிய மருந்து ரூ.2000/–** இந்த மூலிகை பவுடருடன் உங்களது 5 இடத்து அழுக்கு எடுத்து 4 வேளை சாப்பாடு குழம்பு, வருவலில் கலந்து உங்களது பேச்சை கேட்க வேண்டும் என்பவருக்கு கொடுக்கவும். இதனால் கணவன், மனைவி, பிள்ளைகள் உங்களது பேச்சைக் கேட்பார்கள்.

**13. வசிய எண்ணெய் ரூ.5000/** இந்த எண்ணெயுடன் உங்களது ரத்தம் 2 சொட்டு கலந்து ஒரு வாரம் வைத்து இருந்து விரும்பியவருக்கு உச்சந்தலையில் சிறிது 3 தடவை தடவுவம். மேலும் அவர்கள் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயில் கலந்து விடவும். இந்த எண்ணெய் உபயோகிக்கும் கணவன், மனைவி, பிள்ளைகள், மாமியார், நாத்தனார், எதிரிகள், காலம் முழுவதும்ட உங்களுக்கு வசியமாவார்கள்.

**14. மூலிகைக் கட்டு ரூ.3000/–** இதன் மேல் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணியால் பூஜையில் பலகைமேல் வைப்பதால் தீயசக்திகள, வெளியேறி, செல்வச்செழிப்பு, சுபநிகழ்ச்சிகள், சந்தோஷம், பணவரவு, ஐஸ்வர்யம் பெருகும்.

**15. ஞாபக சக்தி படிப்பில் முன்னேற்றம் மூலிகைப் பவுடர் பாக்கெட் ரூ.500/–** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும். இதனால் படிப்பில் பிள்ளைகள் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**16. செய்வினை, கிரகதோஷம், தீயசக்தி, கண்திருஷ்டி, சூன்யம் நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/–** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும்.

17. மூட்டுவலி, மூலிகை தைலம் பாட்டில் ரூ.300/– கை, கால், இடுப்பு, மூட்டுவலி, இரத்தக்கட்டு சுளுக்கு, தொடைவலி, எலும்புமுறிவுக்கு இரவு படுக்கும்போது நன்றாக தேய்த்து உறங்கவும். ஒரே நாளில் பலன் தெரியும்.

**18. ஜன்னி, தலைவலி, சைனஸ், அலர்ஜி நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.1000/–** பவுடரை நல்லெண்ணையுடன் சிறிது கலந்து சூடுபடுத்தி தலைக்கு தேய்த்து குளிக்கவும். தேய்த்து மூழ்கியவுடன் ரசம் சாதம் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் தூங்கவும்.

**19. வாகன விபத்து ஆபத்து நீக்கும் வெள்ளி மோதிரம் ரூ.3500/–** எதிர்பாராதவிதமாக ஏற்படும் வாகன விபத்து, ஆபத்து மனித வாழ்க்கையில் ஏற்படும் ஆபத்துக்கள் தடுக்கும் அபூர்வ வெள்ளி மோதிரம்.

**20. வியாதி, தீயசக்தி விலக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/–** ஒரு பாக்கெட்டுடன் 100 கிராம் நெய் கலந்து தினமும் பூஜையில் குறைந்தது 48 நாட்கள் தீபமேற்றவும். வியாதிகள் குணமாகி தீய சக்திகள் வெளியேறும்.

**21. அபூர்வ மூலிகைகள் DVD ரூ.1500/–** இதுவரையில் மூலிகைப் புத்தகத்தில் மூலிகையின் பெயர், புகைப்படம் மட்டும் பார்த்து இருப்பீர்கள். அனைத்து அபூர்வ மூலிகைகள், அற்புத மூலிகைகள், சஞ்சீவி மூலிகைகள் மற்றும் புல்லுருவிகள் அனைத்தும் DVD மூலம் காணும் வாய்ப்பு மூலிகைகளின் பயன் மற்றும் பலன், உபயோகிக்கும் முறை தெளிவாகச் சொல்லப்படும். DVD வீட்டில் இருந்தால் மூலிகையின் நல்ல அதிர்வுகள் மூலம் வீடே சுபிட்ஷமாக இருக்கும்.

**22. குபேர கண்ணாடி ரூ.600/–** தினம் காலையிலும், வெளியே செல்லும்போதும் குபேர கண்ணாடியை பார்த்துச் சென்றால் மேலும் குபேர மந்திரத்தை 21 முறைச் சொல்லவும். காரிய ஜெயம், அதிர்ஷ்டம், செல்வம், செல்வாக்கு, பணவரவு உண்டாகும்.

- வசிய மூலிகைகளின் மேல் நம்பிக்கையும், விருப்பம் இருந்தால் மட்டுமே போன் செய்து விட்டு நேரில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது தேவையான பொருட்களின் விவரம்ட தெளிவான விலாசத்துடன் செல் நம்பருடன் "ஞான குரு" என்ற பெயருக்கு மணிஆர்டர் அனுப்பவும். அல்லது R.GNANASEKARAN என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்க டி.டி. அனுப்பவும். பொருட்கள் கூரியரில் அனுப்பி வைக்கப்படும்.
- நம்பிக்கை, இல்லாமல், தேவையில்லாத கேள்வி கேட்பதை கண்டிப்பாக தவிர்க்கவும்.
- எப்படிப்பட்ட செய்வினை, ஏவல், தொழில் வியாபாரம், கல்வி, உத்யோகம் கணவன், மனைவி பிரச்சனை, விரும்பியவரை மணக்க மற்றும் அனைத்துப்பிரச்சனைக்கும் சித்தர், முறையில் பரிகாரங்கள் உத்திரவாதத்துடன் செய்யப்படும்.



முன் அனுமதிக்கும் தொடர்புக்கும் : **95002 19209**

**ஜெயா TV புகழ்' பரிகாரச் செம்மல் சித்தர் ஞானகுரு**

**பியூட்டி மூன் லாட்ஜ், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, டவ்ட்டன்**

**புரசைவாக்கம், சென்னை – 600 007. ( டவுட்டன் சிக்னல் அருகில் )**

ஜெயா டி.வி.யில் காலை மலரில் சிறப்பு விருந்தினராக நான் கலந்து கொண்ட நிகழ்ச்சியைக் காண எனது WEBSITE பார்க்கவும் www.sidharmiracleherbals.com

# யோகி, அவயோகி, அனுயோகி

யோகி என்பது பஞ்ச அங்கங்களில் வரக்கூடிய யோகத்தின் அடிப்படையில் எடுக்கும் முறையாகும்.

யோகியாக வரும்கோள் ஒருவரின் ஜாதகத்தில் வாழ்நாள் முழுவதும் ஏற்படக்கூடிய நன்மைகளைக் கூறுவதாகும்.

அவயோகியாக வரும்கோள் ஒருவரின் ஜாதகத்தில் வாழ்நாள் முழுவதும் ஏற்படக்கூடிய நன்மைகள் தடைபெறுவதைக் காட்டும்.

அனுயோகி என்பது யோகிக்கு துணைநின்று செயல்படுவதாகும். (அனுயோகி- Duplicate Yogi)

யோகி, அவயோகி, அனுயோகி கணிக்கும் முறை:

யோகி: யோகம்:

(12.07.15-07.00 மாலை, இடம்: கோவை)

சந்திரன் ஸ்புடம் + சூரியன் ஸ்புடம்

43 + 85 = 128

128-120 (ஒரு ராசி 30$^{\circ}$. 4 இராசிக்கு 120$^{\circ}$) = 8$^{\circ}$

4 இராசி கடந்து 5வது இராசியில் உள்ள மகத்தில் யோகம் அமைகிறது.

மகம்-கண்ட யோகம்

யோகி:

யோகத்துடன் 93.20$^{\circ}$ ஐ கூட்ட வேண்டும். (பூசம் 93.20$^{\circ}$)

128+93.20 = 221.20

221.20-210 (ஒரு இராசி 30$^{\circ}$.7 இராசிக்கு 210$^{\circ}$)= 11.20$^{\circ}$

(7 இராசி கடந்து 8வது இராசியில் உள்ள அனுஷத்தில் யோகி அமைகிறது. அனுஷ நட்சத்திரத்தின் அதிபதி சனி)

சனி யோகி: செவ்வாய் அனுயோகி

180$^{\circ}$அமைந்துள்ள நட்சத்திரம் ரோகிணி அவயோகி சந்திரன்

யோகி நின்ற நட்சத்திரத்திலிருந்து 6வது நட்சத்திர அதிபதி அவயோகி அல்லது 180$^{\circ}$இல் அமைந்த நட்சத்திர அதிபதி அவயோகி இவ்வாறு இரண்டு முறைகள் உள்ளது. இதில் 180$^{\circ}$இல் அமைந்த நட்சத்திர அதிபதியை எடுக்கும் முறை சாலச்சிறந்தது.

யோகி நின்ற வீட்டிற்கு அதிபதி டியூப்ளிகேட் யோகி (அனுயோகி)

யோகி-நன்மை, அவயோகி-தீமை, அனுயோகி-துணைபுரிதல்

**சூரியன்:** சூரியன் யோகியாக வரும்பட்சத்தில் இவருக்கு அரசு அதிகாரிகள், அரசாங்க ஊழியர்கள், அரசியல்வாதிகள் போன்றவர்களின் உதவிகள் எளிதாக கிடைக்கும். அரசியல்வாதி அரசாங்க ஊழியராக இருந்தால் அவர்கள் இருக்கும் துறையில் மேன்மேலும் வளர்ச்சியும், பதவி உயர்வும் பெறுவார்கள். நேர்மையாக செயல்படுவார்கள். நிர்வாகத் திறமையுடையவர்கள். இந்தப் பிறப்பில் அவர் ஒரு தூய ஆத்மாவாக பிறப்பெடுத்திருப்பார். மருத்துவராகவோ அல்லது மருத்துவ பொருட்களை உற்பத்தி செய்பவராகவோ இருந்தால் இவர் செய்யும் செயல் மிகப்பெரிய வெற்றிடையும். இவர்கள்

**R.செல்வம் MA., DAS**
**ஜெமினி ஸ்கூல் ஆஃப் அஸ்ட்ராலஜி**
**செல்: 90036 19181**

| | | | |
|---|---|---|---|
| | | ரோகிணி சந்திரன் (அவயோகி) | |
| | | | |
| அனுஷம் (யோகி சனி) விருச்சிகம் (அனுயோகி) | | | |
| | | | |

ஒரு நபருக்கு மருந்து கொடுத்தாலும், சிகிச்சை அளித்தாலும் நோய்கள் எளிதில் குணமடையும். தந்தையின் உதவிகள் கிடைக்கும். அரசாங்க ஒப்பந்தம் சம்பந்தமான தொழில் செய்தாலும் நல்ல வெற்றி கிடைக்கும்.

சூரியன் அனுயோகியாக வரும்பட்சத்தில் மேற்கண்ட பலன்கள் கிடைக்க அனுயோகி துணைபுரியும். சூரியனின் திசாபுத்தி காலங்களில் இந்த யோகம் பரிணமிக்கும்.

சூரியன் அவயோகியாக வரும்பட்சத்தில் மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் ஜாதகர் எளிதில் அனுபவிக்க முடியாது. தடை, தாமதம் ஏற்படும்.

**சந்திரன்:** நல்ல நீர் கிடைக்கும். உணவுத்தொழில், விளைநிலங்கள், கலைத்தொழிலின் மூலம் பிரபலடைவார். தாயின் ஆதரவு கிடைக்கும். பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும்.

சந்திரன் அனுயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் கிடைக்க துணைபுரியும். சந்திரனின் திசாபுத்தி காலங்களில் இந்த யோகம் பரிணமிக்கும்.

சந்திரன் அவயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் ஜாதகர் எளிதில் அனுபவிக்க முடியாது. தடை, தாமதம் ஏற்படும்.

**செவ்வாய்:** நல்ல நிலம் அமையும். உடல்வலு பெறுவர். சகோதரர் மூலம் நன்மை. இராணுவம், போலீஸ்துறையில் வெற்றி அடைவார். அவரிடம் இருக்கும் இயந்திரம் மூலம் நன்மை கிடைக்கும். நல்ல அறுவை சிகிச்சை மருத்துவராக செயல்படுவார்.

செவ்வாய் அனுயோகியாக இருந்தால மேற்கண்ட பலன்கள் கிடைக்க துணைபுரியும். செவ்வாய் திசாபுத்தி காலங்களில் இந்த யோகம் பரிணமிக்கும்.

செவ்வாய் அவயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் ஜாதகர் எளிதில் அனுபவிக்க முடியாது. தடை, தாமதம் ஏற்படும்.

**புதன்:** கல்வி, எழுத்தின் மூலம் புகழடைவர். மாமன் மற்றும் நண்பர்கள் உதவி புரிவர். பத்திரிக்கைத் துறை, வியாபாரத்தில் வளர்ச்சி அடைவர். பேச்சுத்திறமை அவரிடம் நன்றாக இருக்கும்.

புதன் அனுயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் கிடைக்க துணைபுரியும். புதன் திசாபுத்தி காலங்களில் இந்த யோகம் பரிணமிக்கும்.

புதன் அவயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் ஜாதகர் எளிதில் அனுபவிக்க முடியாது. தடை, தாமதம் ஏற்படும்.

**குரு:** ஜாதகரிடம் ஒழுக்கமும், சுயகௌரவமும், பாரம்பரியமும், தெய்வ நம்பிக்கையும், மரியாதையும், பக்தியும் இருக்கும். உயர்ந்த குணமுடைய மனிதராகத் திகழ்வார். இவருக்கு பொருளாதார வளர்ச்சி இருக்கும். பெரியோர்களின் ஆசிர்வாதமும், தேவதைகளின் அனுகிரகமும் கிடைக்கும். நல்ல குழந்தைகள் அமையும்.

குரு அனுயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் கிடைக்க துணைபுரியும். குரு திசாபுத்தி காலங்களில் இந்த யோகம் பரிணமிக்கும்.

குரு அவயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் ஜாதகர் எளிதில் அனுபவிக்க முடியாது. தடை, தாமதம் ஏற்படும்.

**சுக்கிரன்:** மனைவி, சகோதரி, பெண்குழந்தைகள் மூலம் நன்மை ஏற்படும். நல்ல வீடு, வாகனம் அமையும். சினிமா, அழகு, கலைத்துறையில் சிறப்பான நிலைக்கு வருவார்கள். பொருளாதார வளர்ச்சி இருக்கும். மற்ற எல்லா கிரகங்களையும் விட சுக்கிரன் யோகியாக வரும்பட்சத்தில் அனைத்து சுகங்களையும் பெற்று தன்மையாக வாழ்வார்கள்.

சுக்கிரன் அனுயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் கிடைக்க துணைபுரியும். சுக்கிரன் திசாபுத்தி காலங்களில் இந்த யோகம் பரிணமிக்கும்.

சுக்கிரன் அவயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் ஜாதகர் எளிதில் அனுபவிக்க முடியாது, தடை, தாமதம் ஏற்படும்.

**சனி:** நல்ல வேலையாட்கள், இரும்பு மற்றும் தாதுபொருட்கள் மூலம் நன்மை அடைவார்கள். ஆயுட்காலம் மிகும்.

சனி அனுயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் கிடைக்க துணைபுரியம். சனி திசாபுத்தி காலங்களில் இந்த யோகம் பரிணமிக்கும்.

சனி அவயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் ஜாதகர் எளிதில் அனுபவிக்க முடியாது. தடை, தாமதம் ஏற்படும்.

**இராகு:** மிக நன்மையான பலன்கள் ஏற்படும். லோகத்தில் இருக்கும் அத்தனை செல்வம் மற்றும் சுகங்களை தனக்கு தேவையான அளவு அனுபவித்துக் கொள்வார்கள். மற்ற யோகிகளைக் காட்டிலும் இராகுவை யோகியாக பெற்ற ஜாதகர் பெரிய வெற்றி அடைவார்கள். வெளிநாட்டின் மூலம் நன்மை அடைவார்கள். அந்நிய தேசத்தில் குடியிருப்பவர்கள் இவருக்கு பெரும் உதவி புரிவார்கள்.

இராகு அனுயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் கிடைக்க துணைபுரியும். இராகு திசாபுத்தி காலங்களில் இந்த யோகம் பரிணமிக்கும்.

இராகு அவயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் ஜாதகர் எளிதில் அனுபவிக்க முடியாது. தடை, தாமதம் ஏற்படும்.

**கேது:** நல்ல ஆன்மிகவாதி. இக்கியங்கள், பழமையான சிந்தனை உடையவர். தெய்வத்தின் அருள் நன்றாக கிடைக்கப் பெறுவர். மரணத்திற்குப்பின் நற்கதியடைவார்.

கேது அனுயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் கிடைக்க துணைபுரியும். கேது திசாபுத்தி காலங்களில் இந்த யோகம் பரிணமிக்கும்.

கேது அவயோகியாக இருந்தால் மேற்கண்ட பலன்கள் அனைத்தையும் ஜாதகர் எளிதில் அனுபவிக்க முடியாது. தடை, தாமதம் ஏற்படும்.

யோகியாக வரும் கிரகங்கள் நல்ல ஸ்தானங்களில் இருக்க வேண்டும். ஏனென்றால் எந்த கிரகமும் தான் எந்த ஸ்தானத்தில் இருக்கிறாரோ அந்த ஸ்தானத்தின் மூலமே பலனை அளிப்பார்கள். தீய கிரகங்களின் பார்வையோ, சேர்க்கையோ இருக்கக்கூடாது.

அவயோகி ஆட்சி, உச்சம் பெற்றிருந்தால் யோகி நன்மையான பலன்களை குறைத்துக் கொள்வார். யோகிப்புள்ளி எந்த இடத்தில் வருகிறதோ அந்த இடத்திற்கு குரு, சுக், இராகு வரும்போது நன்மை அளிப்பார்கள். சனி, கேது அந்தப்புள்ளிக்கு வரும்போது யோகியின் பலன் தடைபெறும்.

யோகியாக எந்தகிரகம் வருகிறதோ அந்த கிரகத்தின் காரகத்துவ பொருளை தானம் தரக்கூடாது. யோகியாக எந்த கிரகம் வருகிறதோ அந்த கிரகத்தின் அதிதேவதையை வழிபாடு செய்ய வேண்டும் அல்லது அந்த கிரகத்தின் வசியம் (உபாசனை) செய்வதன் மூலம் நன்மை ஏற்படும். யோகியின் நவரத்தினக் கற்கள் அல்லது துணைக்கற்களை பயன்படுத்தினால் மேலும் மேலும் யோகம் கூடும்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சதயம் (யோகி ராகு) கும்பம் சனி அனுயோகி | சிவகார்த்திகேயன் 17.02.1985 12.30 மதியம் சிவகங்கை | | பூரம் சுக் (அவயோகி) |
| | | | |
| | | | |

**உதாரணம் 1:** இது நடிகர் சிவகார்த்திகேயனின் ஜாதகம். இராகு யோகி. யோகியின் திசையான இராகுதிசை 2003 முதல் 2021 வரை இந்த திசையில் சினிமாத்துறையில் எதிர்பாராத புகழ் பெறுபவர்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| ரேவதி புத (அவயோகி) | செல்வி.ஜெயலலிதா 24.02.1948 02.34 மதியம் மைசூர் | | |
| | | | |
| | | | அஸ்தம் யோகி சந் கன்னி புத (அனுயோகி) |

**உதாரணம் 2:** இது தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதாவின் ஜதாகம். யோகி சந்திரன். 1977 முதல் 1987 வரை சந்திர திசை. இவருக்கு சந்திரன் 3ஆம் பாவத்தில் இருக்கிறது. இக்காலகட்டத்தில் அரசியலில் நுழைகிறார். யோகியின் திசையான சந்திர திசையில் அரசியலுக்கு வந்ததால் இன்றுவரை அரசியலில் பிரமாண்டமாக நிற்கிறார்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | சஞ்சய் காந்தி 14.12.1946 09.27 காலை டெல்லி | | பூசம் (யோகிசனி) கடகம் சந் (அனுயோகி) |
| திருவோணம் சந் (அவயோகி) | | | |
| | | | |

**உதாரணம் 3:** இது சஞ் சய்காந்தியின் ஜதாகம். சந்திரன் அவயோகி. அவயோகியான சந்திர திசை 1974 முதல் 1983 வரை இந்த திசையில் விமான விபத்தில் மரணமடைந்தார்.

# பொன்னான விற்பனைக்கு பொற்பதம் தந்திட்ட எமது வாசகர்களுக்கு மனமார்ந்த நன்றி

இப்போது விற்பனையில்

# திருவருள் சக்தி




ஆன்மிகச் சுவடுடன் அறிவார்ந்த முழுமையான ஜோதிட மாத இதழ்...

**தவறாமல் படித்து தரமான வாழ்வு பெறுங்கள்**

## செப்டம்பர் 2015 இந்த இதழில்...

- செல்வம் செழித்து சுபீட்சத்தை கொடுத்திடும் நவராத்திரி
- தீமைகளை நீக்கி நன்மைகள் நல்கிடும் தீப எண்ணெய்
- கோடீஸ்வரனாக்கும் குபேர இரகசியங்கள்
- தரித்திரம் நீக்கி குபேர ஸம்பத்துக்களை வாரி வழங்கும் ஸ்வர்ணாகர்ஷண பைரவர்
- தொட்டது துலங்க, நினைத்தது நிறைவேற ஸ்ரீ சக்ர பூஜைப் பலன்கள்
- சகல பாக்கியங்களுடன் புண்ணியம் தரும் புரட்டாசி மாதம்
- தீய சக்திகளை தீக்கிரையாக்கிடும் மூலிகைகள்
- இராஜயோகம் அள்ளித்தரும் ஸ்ரீஇராகு பகவான்
- நல்வழிகாட்டும் ஆன்மிக பொக்கிஷங்கள்